குறித்த ஒரு இனக்குழுவானது காலங்காலமாகத் தன்னடையாளமாகப் பேணிவரும் விடயங்களும் பொருட்களும் "மரபு" எனும் வகைப்பாட்டினுள் உள்ளடங்குகின்றன. இலங்கையின் வடபிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணத்தின் ஒரு பிரதேசமே வட்டுக்கோட்டை. காலனித்துவ காலத்தில் வடபிராந்தியத்தில் அமைக்கப்பட்ட முதற் கல்லூரி *(1823)* இப்பிரதேசத்திலேயே அமைக்கப்பட்டு, கிறிஸ்தவ, ஆங்கில வாழ்க்கைமுறை பிரசாரப்படுத்தப்பட்டது. அரச உத்தியோகமும் புதிய மத்தியதரவர்க்க உருவாக்கமும் வெகுவாக பரவலாக்கமுற்றன. இங்கு தொன்மைக் காலந்தொட்டு நிலைபெற்றிருந்த சைவமும் தமிழும் தமிழர்தம் கலைமரபும் ஒடுக்கு முறைக்குள்ளாயின. பின்காலனிய காலமான இன்று அங்கு இருக்கின்ற சைவத்தின் ஆலயங்கள், வழிபாடுகள், கலைகள் என்பவற்றில் காணப்படுகின்ற மரபார்ந்த தன்மைகள் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றங்கள் என்பன இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. வட்டுக்கோட்டை பிராந்தியத்தின் பெயருருவாக்கம், சமூக, சமயப் பண்மைத்துவம், இங்கு காணப்படுகின்ற சைவாலயங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சைவாலயங்களானவை கிராமிய ஆலயங்கள், மேனிலையாக்கம் பெற்ற ஆகமக் கோயில்கள், இருமரபும் ஒருங்கே துய்க்கப்பெற்ற ஆலயங்கள் என மூவகைத்தன்மை உடையவையாகக் காணப்படுகின்றன. கிராமியக் கோயில்கள் தவிர்ந்த இருமரபுக் கோயில்களும் கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளை உடையனவாகவும் திகழ்கின்றன. கூத்துக்கள் நடைபெற்றுள்ளன. இக்கலை மரபுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த ஆய்வு முதன்மைப்படுத்தி கவனத்திற் கொள்கின்றது. இக்கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு மரபுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், மரபார்ந்த தன்மைகளையும் பிரித்தறிந்து அவற்றுக்கான பின்னணியை ஆய்வுக்குட்படுத்துகிறது. வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் உள்ள ஆலய வழிபாட்டு மரபுகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றனவா? என்பது இங்கு ஆய்வுப்பிரச்சனையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. வட்டுக்கோட்டை பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆலய அமைப்புகள், கலைகள், வழிபாடுகள், பாரம்பரியமாக பேணப்பட்டு வந்தமரபுகள் முதலானவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், அம்மாற்றங்கள் எவற்றால் நிகழப்பெற்றன என்பவற்றை இனங்கண்டு அதன் விளைவுகளை வெளிக்கொணர்வதே ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்வின் எல்லையாக வட்டுக்கோட்டைக் கிராம அலுவலர் பிரிவுகளான வட்டு கிழக்கு- J/157, வட்டு வடக்கு- J/158, சங்கரத்தை - J/159, வட்டு தெற்கு J/165, வட்டு தென்மேற்கு - J/166, வட்டு மேற்கு - J/167 ஆகிய பிரிவுகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சமூக மேனிலையாக்கம் மற்றும் பின்காலனியச் சூழல் இன்றைய சமயவியயலில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களை கவனத்திற் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள் அங்கு நடைபெறும் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை அறிய இவ்வாய்வு துணைபுரியும்.

**திறவுச்சொற்கள் :** சைவாலயங்கள், மரபு, மாற்றம், வழிபாடு, கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மாழ்வார் பிரபந்தங்களில் விஷ்ணுபரத்துவம்

**தஷாந்தினி, இ.,சுகந்தினி, சி,**
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Thanuabi0417@gmail.com

வைதீகதருமத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படும் வைணவத்தின் பெருமைகளை உலகுக்கு அறிவித்தவர்களாக பன்னிரு ஆழ்வார்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் ஒருவரான நம்மாழ்வாரால் பாடப்பட்ட பிரபந்தங்களாக திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன விளங்குகின்றன. இவற்றிலே விஷ்ணுவின் சிறப்பியல்புகள் தொடர்பிலான பல்வேறு செய்திகள் இனங்காணப்பட்டுள்ளன. நம்மாழ்வார் பிரபந்தங் களில் விஷ்ணுபரத்துவம் எனும் தலைப்பிலமைந்த இவ்வாய்வானது நம்மாழ்வார் பிரபந்தத்தில் விஷ்ணுவின் பரத்துவத்தினை இனங்கண்டு அடையாளப் படுத்தலை நோக்கமாகக் கொண்டது. இந்துமக்களிடையே இழையோடியுள்ள விஷ்ணு வழிபாட்டினை வெளிப்படுத்தலை உபநோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றது. விவரணஆய்வுமுறை, வரலாற்றுஆய்வுமறை, பகுப்பாய்வு முறைகள் ஊடாக இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. நம்மாழ்வார் தொடர்பிலான வரலாறு எனும் வகையில் அவர் வாழ்ந்த காலம், இவருக்கு வழங்கப்பட்ட பெயர்கள் அதற்கான காரணங்கள் என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் இவர் இயற்றிய பிரபந்தங்களினது இலக்கிய வகைகள் அவற்றின் தொகைகள் போன்றன கூறப்பட்டுள்ளது. விஷ்ணுபரத்துவம் என்பது விஷ்ணுவின் சிறப்பியல்புளையே குறித்து நிற்கின்றன. இவ்சிறப்பியல்புகள் காரணமாகவே விஷ்ணு பகவானுக்கு பல நாமங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதனை அறியமுடிகின்றது. விஷ்ணுவின் வியாபகத் தன்மை என்பது குணம், செயல் என்பவற்றினை குறித்து நிற்கின்றது. விஷ்ணுவின் திருக் கல்யாணகுணங்கள் எண்ணிறந்தவை அவற்றுள் சிறப்பாக ஆறு திருக்கல்யாண குணங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அதனையடுத்து இறைவனின் ஐந்து நிலைகள் பற்றியும் அவற்றிலே இறைவனின் பண்பு எத்தகையது என்பதனை நம்மாழ்வார் பாடல்கள் மூலம் இந்த ஆய்வு அறியமுற்பட்டுள்ளது. வைணவசமயத்திலே அவதாரம் என்பது இறைவனின் மேலுள்ள நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டமைந்தது. வேறெந்த சமயத்திலும் இல்லாத இறைவனின் சிறப்பியல்பாக அவதாரம் காணப்படுகின்றது. நம்மாழ்வார் பிரபந்தத்திலே மச்சய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, இராம, பலராம, கிருஷ்ண, கல்கி அவதாரங்கள் இனங்காணப்பட்டு அவற்றினை புராண இதிகாச கதைமரபுச் செய்திகளினூடாக நோக்கப்பட்டுள்ளது. மேலும் அவதார நோக்கம் தர்மத்தை நிலைநாட்டுவதே என்பதும் இந்த ஆய்வில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் இங்கு அவதாரத்துவமும் கூறப்பட்டுள்ளது. இவர் விஷ்ணுவை எவ்வாறு வழிபடலாம் என்பதையும் வழிகாட்டி நிற்கின்றார். இவ்வாய்வானது நம்மாழ்வரின் பிரபந்தங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு பரத்துவத்தினை வெளிக்கொண்டு வருவதால் ஏனைய இலக்கியங்கள் வழிநின்று விஷ்ணுபரத்துவத்தினை ஆய்வுசெய்வோருக்கும், நம்மாழ்வார் பிரபந்தத்தினை பிறிதொரு ஆழ்வார் பிரபந்தத்துடன் இலக்கியத்துடன் ஒப்பிட்டு நோக்க முயல்வோருக்கும், விஷ்ணுவின் மகிமையினை அறிந்துகொள்ள விரும்புவோருக்கும் இவ்வாய்வு துணைநிற்கும்.

**திறவுச்சொற்கள் :** நம்மாழ்வார், விஷ்ணுபரத்துவம், அவதாரம், வியாபகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுதாய வரலாற்றில் வர்ணக்கோட்பாடு பற்றிய கருத்தாடல்கள் – ஒரு மதிப்பீடு

**நிவேதா, கை., முகுந்தன், ச.**

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

nivenatha6@gmail.com

இந்து சமூகத்தவர்களால் புராதன காலம் தொடக்கம் பின்பற்றப்பட்டு வருகின்ற நான்கு அடுக்குகளைக் கொண்ட சமூகக் கட்டமைப்பு என்று வர்ணக்கோட்பாட்டைக் கூறலாம். "வர்ணம்" என்ற பதம் நிறம், வெளிவடிவம், தோற்றம், ஒளி எனப் பல பொருள்படும். ஆரியப்பண்பாட்டைக் கொண்ட மக்கள் தம்மை மற்றையோரிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ள இச்சொல்லாடலை முதலில் கையாண்டனர். அதன் பின்னர் சமூகம் முழுவதிலும் வாழ்ந்த மக்கள் தொழில், நிறம், குணம் என்ற அடிப்படைகள் வகுக்கப்பட்டு காலப்போக்கில் பிறப்பின் அடிப்படையில் என்று கருத்துருவாக்கம் வலுப்பெற்றது. பிற்பட்ட காலத்தில் வர்ணம் பிறழ்வுநிலை அடைந்து பல சாதிகளும், உபசாதிகளும் தோற்றம் பெற்றன. மக்கள் மத்தியில் தவறான புரிதலும், விமர்சனங்களும் ஏற்படத்தொடங்கின. இவ்வாய்வு இந்து சமுதாயத்தில் வர்ணக்கோட்பாடு தொடர்பான கருத்தாடல்களை மதிப்பீடு செய்து வெளிக்கொணர்தலை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது வரலாற்றியல் ஆய்வு, மற்றும் விவரண ஆய்வு முறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்டு தரவுகள் உய்த்தறிவாய்வு, தொகுத்தறிவாய்வு முறையியலினை அனுசரித்தும் ஆய்வின் தேவை கருதி ஒப்பீட்டு ஆய்வு முறை மூலமும் உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன. இந்து சமய வரலாற்றிலே நால்வகை வர்ணமும் வேதகாலத்தில் விராட புருடனுடைய வேள்வியில் இருந்து தோற்றம் பெற்றவகை, அது பின்னர், கருத்துருவாக்கம் பெற்ற முறை என்பன வடமொழி, மற்றும் தமிழ்மொழி மூலங்களை ஆதாரமாகக் கொண்டு எடுத்தியம்பப்பட்டுள்ளது. மனுதர்ம சாஸ்திர காலத்திற்குப் பின்னர் வர்ணப் பிறழ்வால் தோற்றம் பெற்ற சாதிகளால் சமூகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளை கண்டித்து பல சித்தர்கள், வடஇந்திய பக்திநெறியாளர்கள், நவீன சீர்திருத்த சிந்தனையாளர்கள், சமகால சீர்திருத்த சிந்தனையாளர்கள் என்போர் தமது செயற்பாடுகள் மூலமும், பனுவல்கள் வாயிலாகவும் பல கண்டனங்களையும், விமர்சனங்களையும் காலத்திற்குக் காலம் முன்வைத்து வருகின்றனர். இவை தொடர்பான பல விடயங்களும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. சமகாலத்தில் வர்ணம் உருமாறிப் போனதால் அதன் மூலம் தோற்றம் பெற்ற சாதி பற்றியும் சமகால நோக்குநிலையில் சாதியின் தாக்கம் மற்றும் சாதி ஒழிப்பிற்கான தீர்வுகள் என்பனவும் முன்வைக்கப்பட்டுள்ளன. வர்ணத்திற்கும், சாதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பற்றியும், பிறப்பின் அடிப்படையில் சாதி அமைவதல்ல என்ற விளக்கம், சமகாலத்தில் வர்ணக்கோட்பாட்டின் பிரதிபலிப்புக்கள் என பலவிடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவை வர்ணக் கோட்பாட்டு பற்றிய ஒரு பரிமாணத்தை அறிந்து கொள்ளப் பயன்படுவதோடு சமகாலத்தில் இக்கோட்பாடு தொடர்பாக இந்து சமய நூல்களின் மீதும், இந்துசமுதாய பெரியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் குறித்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளவும் துணைபுரிகின்றது. இக்கால சூழ்நிலையில் இந்து சமுதாய புலத்தில் வர்ணம் தொடர்பாக காணப்படுகின்ற தவறான புரிதல்களுக்கும், விமர்சனங்களுக்கும் விடை பகர்வதுடன் ஏற்றத் தாழ்வுகளை அரிதாக்கி இந்து சமூகத்தில் வர்ணக்கோட்பாட்டை சிறப்புறச் செய்யவும் இந்த ஆய்வு காத்திரமாக அமையும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** இந்து, சமுதாயம், வர்ணம், கோட்பாடு, பிறழ்வு, விமர்சனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆகமம் சாராத வழிபாடும் சடங்கு முறைகளும்

**அர்ஜனா, க., பவநேசன், வி.**

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

narjana94@gmail.com

மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஆகமம் சார்ந்த வழிபாடும், ஆகமம் சாராத வழிபாடும் நிலவி வருகின்றன. இரு வகையான வழிபாடுகள் இடம்பெறுகின்ற போதும் ஆகமம் சாராத வழிபாடே அதிகளவில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆகமம் சாராத வழிபாட்டின் சிறப்பினையும் சடங்கு முறைகளையும் ஆராய்வதே இந்த ஆய்வினுடைய பிரதான நோக்கமாக உள்ளது. இப்பிரதேசத்தில் பயில் நிலையில் உள்ள ஆகமம் சாராத வழிபாடு மற்றும் சடங்கு முறைகள் இப்பிரதேசத்திற்கே உரியவை. இங்கு நிகழ்த்தப்படுகின்ற ஒவ்வொரு சடங்கு முறையும் தெய்வத்திற்குத் தெய்வம், கிராமத்திற்கு கிராமம் வேறுபட்டும் தனித்துவமிக்கவையாகவும் விளங்குகின்றன. இங்கு ஆகமம் சாராத சக்தி வழிபாட்டு முறைகள் மட்டக்களப்புப் பிரதேசத்திற்கேயுரிய வழிபாட்டு நூல்களான பத்தாசிகளை அடியொற்றி நிகழ்த்தப்படுவது இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பத்தாசி கோயில்களுக்குக் கோயில் வேறுபடுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அநேக ஆலயங்கள் ஆரம்பத்தில் ஆகமம் சாராத முறையில் தற்காலிகப்பந்தல் அமைக்கப்பட்டு அதன் பின்னர் ஆகம முறையிலான ஆலயக் கட்டுமானங்களாக வளர்ச்சியடைந்தமை புலப்படுகின்றது. ஆகம மரபிலான கட்டிடக் கலை மரபுகள் அங்கு அமைந்து விளங்குகின்ற போதும் அவ்வாலயங்களில் ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளே இன்றும் நடைமுறையில் உள்ளமை இந்த ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஆகமம் சாராத வழிபாட்டில் சாதிக்குரிய தெய்வங்கள் என்ற ஒரு வழக்க முறைமை காணப்படுவதும் சில சாதியினர் சில தெய்வங்களை வணங்குவதில்லை என்பதும் இந்த ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** மட்டக்களப்பு, சடங்கு, பத்தாசி வழிபாடு, ஆகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி பாடல்களில் சாக்த வைணவ சிந்தனைகள்

**பிரகான், க., ரமணராஜா,சி.**

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

skpirahan94@gmail.com

ஆங்கிலேய காலனித்துவத்தின் ஊடாக ஆசிய நாடுகளில் நவீனத்துவச் சிந்தனைகள் முதன்மை பெறத் தொடங்கின. அதனூடாக நவீன கல்வி, ஆங்கிலமொழி, அரச உத்தியோகம், புதிய வர்க்க உருவாக்கம், கிறிஸ்தவ ஆதிக்கம் என்பன அறிமுகமாயின. அதேவேளை சுதேச பாரம்பரிய உணர்வு, தேச விடுதலை போன்றனவும் வீறுபெற்றன. ஆங்காங்கே கலகங்களும் நடைபெறத் தொடங்கின. இதற்கு தமிழகமும் விதிவிலக்கல்ல. இவ்வாறான சமூகக் கொதிநிலைச் சூழலில் பிறந்தவரே சுப்பிரமணியபாரதியார் ஆவார். பாரதி யுகம் எனக் கருதுமளவுக்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சூழல் பாரதியின் கவிதைகளாலும், சிந்தனைகளாலும், வீறார்ந்த சொற்களாலும் சூழப்பட்டிருந்தது. பாரதி கவிதை, கதை, கட்டுரை, ஊடகம் எனப் பல்பரிமாணமுடைய சிந்தனையாளராயினும் அவரது அடையாளம் கவிதையே. அதனால் தான் அவர் மகாகவி எனப்படுகின்றார். பாரதியின் கவிதைகள் தேசியம், சமூக, பெண் விடுதலை, சமயம், தத்துவம், மொழி, இயற்கை, காவியக் கதைகள், சுயசரிதம் எனப் பல்வேறு கருத்தியல்கலால் ஆனவை. ஆயினும் எல்லாக் கவிதைகளுக்குள்ளும் தெய்வீக அல்லது ஆன்மிக உணர்வு இழையோடியிருந்தது. அதிலும் குறிப்பாக பாரதி சக்தி உபாசகனாக இருந்தார். அத்தோடு கண்ணனை பலவாறு கண்டு வழிபட்டார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு கட்டமைக்கப் பட்டுள்ளது. பாரதி பாடல்களில் சாக்த, வைணவ சிந்தனைகள் பற்றியதாக இந்த ஆய்வு அமைகிறது. பாரதியின் பாடல்களை சமயம், தத்துவம் எனப் பன்முக நிலையில் பலர் ஆய்வு செய்திருப்பினும் சாக்த, வைணவ நெறிசார்ந்து சமய தத்துவவியல் தளத்தில் ஆய்வுகள் அரிதாகவே வெளிவந்துள்ளன. பாரதி பாடல்களில் காணப்படுகின்ற சாக்த, வைணவ நெறி சார்ந்த சமய, தத்துவ சிந்தனைகளை கண்டறிந்து வெளிக்கொண்டு வரும் நோக்கில் வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு முறை ஆகிய ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது பாடல்கள் முதல்நிலை மூலங்களாகவும் அவரது படைப்புகளை முன்னிறுத்தி வெளிவந்த ஆய்வு நூல்கள், கட்டுரைகள், இணையப்பக்கங்கள் என்பன துணைநிலை மூலங்களாகவும் கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சமய தத்துவத்தளத்தில் பாரதியை நோக்க முற்படுபடுபவர்களுக்கு இவ்வாய்வு துணைபுரியும் என நம்பப்படுகின்றது.

**திறவுச்சொற்கள் :** பாரதி, சக்தி, விஷ்ணு, கவிதைகள், ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் தீவிரமடையும் மதமாற்ற முயற்சிகளும் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களும்

**லினுஜா, ர., ரமணராஜா, சி.**
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
linuja1997@gmail.com

மக்கள் நல்லொழுக்க நெறியில் நின்று நன்மை அடைதல் வேண்டும். இதற்கு கடவுளின் துணை இன்றியமையாதது. எவ்வுயிர்க்கும் துணையாய் கடவுளை வணங்கி நலமடையவே மதங்கள் ஏற்பட்டன. இவ்வகையாய் கூறுமிடத்து மதங்கள் பலவானதேன் என்ற வினா நம்மிடையே எழலாம். அதாவது மெய்யறிவு பெற்றோர் தத்தமது நாட்டின் கல்வி, அறிவு, ஒழுக்கம், விருப்பங்களுக்கேற்றபடி மதங்களை ஏற்படுத்தினர். அந்த வகையில் உலகில் தோன்றிய புராதன மதங்களில் இன்றும் வாழ்ந்துகொனண்டிருக்கும் ஒரே ஒரு மதம் இந்து மதம் எனலாம். வேற்று மதங்கள் சிலவற்றின் நடவடிக்கைகளால் இந்து மதத்திற்கு கால ஓட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறாக சமகாலத்தில் இந்து மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறுகின்ற இந்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காலனித்துவம் எனப்படும் குடியேற்ற ஆட்சிமுறை மறைந்துவிட்டாலும் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களே இவ்வாறான மதமாறும் மற்றும் மதமாற்றும் செயற்பாட்டில் செல்வாக்கு செலுத்துகின்றன. அந்த வகையில் காலனித்துவ காலப்பகுதி முதல் சமகாலம் வரையான மதமாற்றத்திற்கான காரணிகளை வெளிக்கொணர்ந்து அதனால் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வானது மேற் கொள்ளப்படுகிறது. இவ்வாய்வு விபரண ஆய்வு முறை வரலாற்று ஆய்வு முறை எனும் ஆய்வு முறையியலுக்கமைய கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இவ்வாய்வில் கள ஆய்வினை மையப்படுத்தி மதமாற்றத்திற்கான காரணிகளை கண்டறிவதை மட்டும் ஆய்வின் எல்லை யாகக் கொண்டுள்ளது. சமகாலத்தில் அதிகளவிலான மதமாற்றச் செயற்பாடுகள் நடைபெறு கிறது என்பதும் அதற்கான பல உத்திகள் மதமாற்றிகளால் கையாளப்பட்டு வருகின்றன என்பதும் மதமாற்றத்தினால் இந்து சமூகத்தினர் பல சவால்களைச் சந்திக்கின்றனர் என்பதும் இதைத் தடுப்பதற்காக பல வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்வழி பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்க முடிகிறது. சமூகப் பணிகளைச் செய்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தல், மூடநம்பிக்கைகளைக் களைத்தல் வேண்டும். வழிபாடுகளை தமிழில் இயற்றுதல், சாதிப்பாகுப்பாட்டை களைத்தல், இந்து தொண்டர் நிறுவனங்களை உருவாக்குதல், இந்து மத நூல்களை கற்க தூண்டுதல், அறக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களை ஊக்குவித்தல், இந்துச்சஞ்சிகை சிறப்பாக வெளியிடல், ஆன்மீக விசுவாசிகள் சமய ஞானமும் நாட்டமும் உள்ளவரை நியமித்தல், இந்து மத நூல்களில் உள்ள சிக்கல் தன்மையை நீக்க வேண்டும். இவ்வாறு இவ்வாய்வானது மதமாற்றம் பற்றி ஆராய முயல்பவர்களுக்கும், இந்து என்ற முறையில் மதமாற்றத்தை தடுத்து நிறுத்த முயல்வதற்கும் பயனுடையதாய் அமையும்.

**திறவுச்சொற்கள் :** மதம், இந்து சமூகம், இந்து, மதம்மாற்றிகள், விழிப்புணர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலையகம் 200":
# கிறிஸ்தவ சமூக போதனைகளின் பின்னணியில் ஒரு பார்வை

**யோவான், மு., மேரி வினிபிரிடா, சு.**

கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

muruyowan@gmail.com

இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் 1823ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். 2023ஆம் ஆண்டுடன் இவர்கள் இலங்கைக்கு வருகை தந்து இருநூறாவது ஆண்டு நிறைவடைகின்றது. இலங்கையின் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கிய இவர்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் கௌரவிக்கப்பட வேண்டும். ஆயினும் மலையகத்தைச் சார்ந்த இம்மக்கள் இலங்கையில் வாழ்ந்த இந்த இரு நூற்றாண்டு கால நினைவையும் ஒரு துக்ககரமான வாழ்வியலாகவே நோக்குகின்றனர். இதற்கான காரணம் என்ன? என்பதே ஆய்வுத்தேடலிற்கு வழியமைத்தது. ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட உணர்வுடன் வாழும் மலையக மக்களின் வாழ்க்கைப் பின்னணியைக் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் எடுத்துரைப்பது ஆய்வின் மைய நோக்காகும். இதற்கென கிறிஸ்தவ சமூக போதனைகளை மையப்படுத்தி, அதன் எடுத்துரைப்புகளுக்கு அமைய மலையக மக்களின் வாழ்வு, மனித உரிமை, மனித மாண்பு எவ்வாறு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை முன்வைக்கும் விதத்தில் ஆய்வு அமையப் பெற்றுள்ளது. திருவிவிலியம், திரு அவையின் சமூக போதனைகளில் வெளிப்படும் மனித உரிமை, சமூக நீதி தொடர்பான விடயங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு தொகுத்தறிவு முறையியலைக் கையாண்டு விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு அவற்றோடு தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றின் தரவுகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து இலங்கையின் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட மேற்பார்வையாளர்கள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், மலையகம் 200 ஆவது வருடத்தை மையப்படுத்திச் செயற்படும் தலைவர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள் போன்றவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலம் ஆய்வுக்குத் தேவையான சமகாலப் பின்னணிக்குரிய தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வில் மலையக மக்கள் இருநூறு வருட காலமாக எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளான வீடு மற்றும் காணி உரிமை சார் பிரச்சினைகள், வாழ்வுரிமை அடையாளம் தொடர்பான பிரச்சினைகள், அடிப்படை வசதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, பெண்களுக்கு எதிரான வன்முறை, அரசியல், தொழில், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, இயற்கை அனர்த்தங்களில் ஏற்படும் உயிர்ச் சேதங்கள் என்பனவும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. மலையக மக்களின் வரலாற்றில் அவ்வப்போது அவர்களுக்கான சலுகைகள் உரிமைகள் வழங்கப்பட்டாலும் அவர்களின் அடிமைத்தனத்தை நிறுத்தும் செயற் திட்டங்கள் இன்றைவரை முன்வைக்கப்படவில்லை என்பது ஆய்வினூடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்களினூடாக சில பரிந்துரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் வாழ்விற்குத் தேவையான முன்னெடுப்புக்களையும் அவர்கள் அனுபவித்து வரும் கொடுமைகளையும் பதிவு செய்வதன் மூலம் வெளியுலகின் உதவியை நாடுவதற்கான வாய்ப்பு ஏற்படும். மலையக சமூகத்தை இலங்கையின் ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக அங்கீகரிப்பதன் மூலம் அவர்களின் அடிப்படைத் தேவைகள் மனித மாண்புடன் நோக்கப்படும். இதன் மூலம் அவர்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு ஏனைய சமூகத்தவரோடு அவர்கள் சமமான அங்கீகாரம் பெற்று வாழ வாய்ப்பு ஏற்படும். இவ்வருடம் (2023) "மலையகம் 200" என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் பன்முக நிகழ்வுகளை ஆவணப்படுத்தி பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வித்திட்டங்களிலும் ஆய்வுகளிலும் அவற்றை உள்வாங்குவதன் மூலம் மலையக மக்களின் மாண்பைப் பேணும் மனநிலை சமூகத்தில் உருவாகும். சுபீட்சமான சமூக உருவாக்கத்தில் கல்வி மிக முக்கிய அங்கம் வகிக்கின்றமையால் மலையக சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு அரசு போதிய உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இலங்கையிலுள்ள சமயங்கள் தன்னுடைய சமூகச் செயற்பாட்டுத் திட்டங்களில் சுவையான தேநீர் கோப்பைக்குள் புதைந்து போயுள்ள மலையக மக்களின் துன்பங்களின் வடுக்களை நீக்கவும் பல சமூகச் செயற்திட்டங்களை முன்னெடுத்தல் சம மாண்பு, உரிமைக்கு வழிவகுக்கும்.

**திறவுச் சொற்கள்:** உரிமை, சமூகப் போதனை, திரு அவை, மலையக மக்கள், மனித மாண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திரு அவையின் திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல்: வாகரைப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஒரு பார்வை

**நிலோஜினி, அ., போல் றொகான், யோ. கி.**

கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

nilonilojini@gmail.com

திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல் என்பது மண்ணிற்குரிய மகத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விடயமாகும். அதனடிப்படையில் கத்தோலிக்கத் திரு அவையின் திருவழிபாட்டுக் கூறுகள் ஒவ்வொரு பிரதேசங்களினதும் சூழமைவையும் அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டுமயமாக்கலிற்கு உட்பட்டுள்ளன. இத்தகைய பண்பாட்டுமய மாக்கலின் தேவையை இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆழமாக உணர்ந்து கொண்டது. அதன் வாயிலாக உலகின் அனைத்துப் பகுதிகளிலும் கிறிஸ்தவம் தன்னை சூழலிற்கேற்ப தகவமைத்துக் கொண்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னரான காலப் பகுதிகளில் கத்தோலிக்கத் திரு அவைத் திருவழிபாட்டில் எவ்வாறு பண்பாட்டுமய மாக்கல்கள் நிகழ்ந்துள்ளன என்பதையும், அவற்றின் வாயிலாக எவ்வாறான நன்மை, தீமைகள் விளைந் துள்ளன என்பதனையும் அறிந்து கொள்ளுதலை நோக்கமாகக் கொண்டு "கத்தோலிக்கத் திரு அவையின் திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல்" என்ற ஆய்வு செய்யப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட வாகரைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பண்பாட்டுமயமாக்கல் பற்றிய விடயங்களை எடுத்துரைத்தும் அதன் தாக்கம் இன்னும் வாகரைப் பிரதேசக் கத்தோலிக்கத் திரு அவைத் திருவழிபாட்டில் போதியளவு வேர் கொள்ளவில்லை என்பது ஆய்வின் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு திருவழி பாட்டில் பண்பாட்டு மயமாக்கல் பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரைகள் எடுத்துரைக்கப்பட்டு, அவை வாகரைப் பிரதேசக் கத்தோலிக்கத் திரு அவைத் திருவழி பாட்டில் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்பதனைக் கண்டறிந்து, அவற்றின் வாயிலாக விளைந்த சாதக, பாதக நிலைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதன்படி இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரைகள் தொகுத்துணர் முறையிலும், வாகரைப் பிரதேசக் கத்தோலிக்கப் பண்பாட்டு, வரலாற்று அம்சங்கள் வரலாற்று முறையிலும், பண்பாட்டுமயமாக்கலின் சாதக, பாதக விளைவுகள் விளக்க உய்த்துணர் முறையிலும் நோக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வினூடாக இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் பண்பாட்டுமயமாக்கல் கத்தோலிக்கத் திரு அவை எங்கும் பரவலாகக் காணப்படுகின்றது என்பது முன்வைக்கப்படுவதோடு, அதன் விளைவாக வாகரைப் பிரதேசக் கத்தோலிக்கர் மத்தியில் திருவழிபாட்டினை மையப்படுத்திய பல நன்மைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றது. மேலும் இவ் ஆய்வானது திருவழி பாட்டின் ஆழமான அர்த்தத்தையும் உன்னதத் தன்மையையும் புரிந்து கொள்வதற்கு பண்பாட்டுமயமாக்கல் அவசியம் என்பதனை எடுத்துரைப்பதோடு, தாய்த் திரு அவையின் திருவழிபாட்டின் முறைமைகளை அர்த்தமுள்ள முறையிலும், வழங்கப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு களைச் சரியான முறையிலும் எதிர்காலத்தவர்க்கு இட்டுச் செல்லவும், ஆன்மீக மற்றும் ஒழுக்கவியல்களையும் திரு அவையின் பண்பாட்டுமயமாக்கல் ஊடாக சமுதாயத்திற்கு அர்த்தப்படுத்தவும் உதவுகின்றது.

**திறவுச்சொற்கள்:** மறைப்பரம்பல், சடங்குகள், திருவழிபாடு, கலைகள், பண்பாட்டுமயமாக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அவையின் சமூகப் போதனைகளின் பின்னணியில் "அரகலய" மக்கள் எழுச்சிப் போராட்டங்கள்: ஒரு நோக்கு

**மேரி ஜெறிலா, ஜெ., இரவிச்சந்திரன், ம.வி.இ**

கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

jerila1997@gmail.com

இலங்கையில் ஊழல் மோசடிகள், பொருளாதார நெருக்கடி, சமத்துவமின்மை, பாரபட்சத்தன்மை, இன உரிமை மறுப்பு மற்றும் சமூக அநீதிகளுக்கெதிராக மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மக்களின் உரிமைக்கான குரலாகவே போராட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டத்தின் இலக்கு அநீதியை எதிர்ப்பதாக அமைகின்றது. 2022ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டமானது ஆய்வின் தேடலைத் தூண்டியது. போராட்டங்களின் போது மக்கள் மத்தியில் வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டு மனித மாண்பற்ற ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள் மத்தியில் சமூக அநீதிகள் அதிகரிக்க பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமெனவும் தமது உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரகலய போராட்டமானது அறுபத் தொன்பது இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை பதவி விலகச் செய்து அரசியல் மாற்றத்தினைக் கொணரக் காரணமாக அமைந்தது போராட்டத்தினால் ஏற்பட்ட வெற்றி தோல்வியினைப் பற்றிய தெளிவினைப் பெறுதலே ஆய்வுப் பிரச்சனையாக குறிப்பிடப் படுகின்றது. போராட்டங்களின் போது மக்கள் எதிர்நோக்கிய சவால்கள், மக்களுக்கு கிடைத்த நன்மை, தீமையான விடயங்கள், இடம்பெற்ற அரசியல் மாற்றங்கள் தொடர்பான விடயங்கள், போராட்டங்களின் போது திரு அவையின் பங்களிப்புத் தொடர்பான விடயங் களும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. போராட்டங்களின் வெற்றியானது ஒன்றிணைவுகள் மூலமாகவே சாத்தியப்படுகின்றன. எனவே நீதிக்காக, மனித உரிமைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களின் போது திரு அவை அங்கத்தவர்கள் பார்வையாளராக இராமல் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்து கலந்து கொண்டு நீதிக்காக குரல் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இவ் ஆய்வானது உணர்த்தி நிற்கின்றது. மேலும் மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் தொடர்பாக திரு அவைக்கு உள்ள பொறுப்பையும் அவற்றிற்கு திரு அவையின் சமூகப்போதனைகளின் பங்களிப்பையும் சுட்டிக்காட்டுகிறது. இவ் ஆய்வில் திருவிவிலியம் மற்றும் திரு அவையின் சமூக நீதிக் கருத்துக்கள் தொடர்பான விடயங்களைப் பெற்றுக் கொள்ள நூல்கள் பயன்படுத்தப்படுவனால் உய்த்தறிவு முறை பிரயோகிக்கப்படு கின்றது. மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மத்தியில் திரு அவையின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள சான்றுவழி ஆதாரமுறை பயன்படுத்தப் படுகின்றது. இவ் ஆய்வில் திரு அவையின் சமூகப் படிப்பினைகள், மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த உதவுகின்றன. திரு அவையில் நீதிசார் செயற்பாடுகள் திருவிவிலியத்தின் அடிப்படையிலே உணரப்படுவதனால் திரு அவையானது நற்செய்தியை ஏழைகளுக்கு அறிவித்து ஒடுக்கப்பட்டோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தையும் துயருறுவோருக்கு மகிழ்வையும் கொடுப்பதையே அழைத்தலாகக் கொண்டு செயற்படுகின்றது. எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்பதால் சகோதரத்துவத்தின் அடிப்படையில் சமத்துவ, சுதந்திர உரிமைகள் பிறக்கின்றன. இவ் உரிமைகள் மீறப்படும் போது நீதியோடு கூடிய சமாதானத்துக்காக உழைப்பது திரு அவையின் கடமையாகும். இயேசு போராட்டங்களும் மோதல்களும் முரண்பாடுகளும் நிறைந்த சமுதாயச் சூழலோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வாறாக திரு அவையும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் போது இடம் பெறும் மனித மாண்பற்ற செயல்களுக் கெதிராக நீதிக் குரல் கொடுக்க முன் வர வேண்டும். அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத்துறைகளில் ஏற்றத்தாழ்வுகள் நிலவும் போது அவை மக்கள் மத்தியிலே போராட்டங்கள் எழுவதற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. எனவே திரு அவையானது மக்கள் மத்தியிலே ஏற்றத்தாழ்வுகள் நிலவும் போது அவர்களுக்கு உதவ முன் வர வேண்டும் எனும் விடயங்கள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** திரு அவையின் சமூகப் போதனைகள், மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், சமூக நீதி, மக்களின் உரிமை, அநீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சில்லாலைக் கிராமத்தில் மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்களின் பணித்தொடக்கம்: ஒரு வரலாற்றுப் பார்வை

**கெலன் வேளாயினி, அ., போல் றொகான், யோ. கி.**

கிறிஸ்தவ. இஸ்லாமிய நாகரிகங்கள் துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ahelanvelayini97@gmail.com

இலங்கையின் வடபகுதியிலுள்ள சில்லாலைக் கிராமம் பாரம்பரியக் கத்தோலிக்க மரபை கொண்டதாகக் கருதப்படுகின்றது. வரலாற்று ரீதியான சான்றுகளின்படி போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திலேயே கத்தோலிக்க மரபு சில்லாலைக் கிராமத்திற்கு சென்றிருந்ததாகக் கருதப்பட்டாலும், போர்த்துக்கேயர் வரவுக்கு முன்னரே சில்லாலையில் கத்தோலிக்க மரபு நிலைபெற்றிருந்திருக்கலாம் என்பது பல வரலாற்றாய்வாளர்களின் உத்தேசமாகும். போர்த்துக்கேயரையடுத்து வருகைதந்த குடியேற்ற வாதிகளான ஒல்லாந்தர் இலங்கை முழுவதிலும் கத்தோலிக்க மரபைத் தடை செய்தனர். ஆயினும் சில்லாலைக் கிராமத்தில் கத்தோலிக்க மரபு மறைமுகமாகப் பேணப்பட்டது. இப்பின்னணியில் இந்தியாவின் கோவாப்பகுதியைச் சேர்ந்த மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்களின் வருகையானது இலங்கை மக்களின் கத்தோலிக்க மரபைப் பாதுகாக்கத் துணை செய்தது. அவரது இலங்கைப்பணி சில்லாலைக் கிராமத்திலேயே ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்கள் சில்லாலைக் கிராமத்தில் ஆற்றிய பணி பற்றிய தரவுகளை வரலாற்றுரீதியாக ஆவணப்படுத்தும் முனைப்புடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கையில் மறைப்பணியாற்ற வந்த யோசவ்வாஸ் அவர்களின் பணிக்குச் சில்லாலைக் கிராமம் ஆரம்பப் புள்ளியாக அமைந்தமைக்கான காரணங்களைக் கண்டறிவதும் இவ்வாய்வின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். இக்கிராமத்தில் யோசவ்வாஸ் அவர்களின் மறைப்பணி பற்றிய பல பாரம்பரியச் சான்றுகளும், செவிவழிக் கதைகளும் ஆவணப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. அவற்றைச் சேகரித்து, உண்மைத் தன்மையை அறிந்து தொகுப்பதிலுள்ள சிக்கல் ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கப்படு கின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வில் இலங்கைக் கிறிஸ்தவ வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மக்களின் நிலை, மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், அவரை இலங்கைக்கு மறைப்பணியாற்ற வருவதற்கு உந்திய காரணங்கள் ஆகியன முன்வைக்கப்பட்டு, சில்லாலைக் கிராமத்தில் அவர் ஆற்றிய பணிகள் என்பன ஆய்வுக்குட்பட்டுள்ளன. இலங்கையில் கத்தோலிக்கர்களின் நிலை பற்றிய வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொள்ள வரலாற்று ஆதார முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்களின் குடும்பப் பின்னணி பற்றிய தரவு களைத் தொகுப்பதற்கு தொகுத்தறிவு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சில்லாலைக் கிராமத்தில் யோசவ்வாஸ் அவர்களின் பணி பற்றிய ஆவணப்படுத்தப்படாத தகவல்கள் காணப்படுகின்றமையினால் இவற்றின் உண்மை தன்மையை அறிந்து கொள்ள உய்த்தறிவு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு தொடர்பான தரவுகள் மூல நூல்கள், துணை நூல்களிருந்தும், நேர்காணல்கள், அவதானிப்பு முறை மூலமாகவும் பெறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாய்வின் ஊடாக மறைப்பணியாளர் யோசவ்வாஸ் அவர்களின் பணியின் தனித்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அவர் பணியாற்றிய காலத்தில் சில்லாலைக் கிராமமக்கள் கத்தோலிக்க மரபுமட்டில் கொண்டிருந்த உறுதிப்பாட்டையும் புறவயரீதியில் அறிந்து கொள்ள முடிகின்றது. செவிவழியாகப் பேணப்பட்டு வரும் தகவல்கள் அழிந்து போகாமல் வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என்ற கருதுகோள் மெய்ப்பிக்கப்படுகிறது. இவ்வாறு ஆவணப்படுத்தப்படும் விடயங்கள் சமகால மறைப்பணியாளர்களுக்கும் பொதுநிலையினருக்கும் அவர்களின் பணிபற்றிய நோக்கை உணர்ந்து கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

**திறவுச் சொற்கள்:** கத்தோலிக்கம், கல்வினிசம், செவிவழிக்கதைகள், மறைப்பணி, ஆவணப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பிறழ்வு நிலைகள் பற்றிய கிறிஸ்தவ அணுகுமுறை: தெரணியகலப் பங்கின் பொன்விழாவுக்கு பிற்பட்ட காலத்தினை மையப்படுத்திய ஒரு பார்வை

**அந்தோனியம்மா, ஞா., இரவிச்சந்திரன், ம. வி. இ.**

கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்;

gnanamanikkamvino@gamil.com

படைப்பின் சிகரமான மனிதர்கள் இன்று பல்வேறு சமூகப் பிறழ்வுகளை சந்தித்து வருகின்றார்கள். இன்று குடும்பம் மற்றும் இளைஞர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள் சமூகத்தில் அதிகளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் இயல்பாகவே விசேட மாண்பும், உயர்ந்த தன்மையும் உரித்தாகிறது. எனவே கடவுள் வேறுபாடுகளின்றி எல்லோருக்கும் சமமான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். ஆனால் மனிதர்கள் இன்று தமக்கு கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு சமூக அநீதிச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள். இதன் பின்னணியில் தெரணியகலப் பங்கில் வாழும் குடும்பங்கள் மற்றும் இளைஞர்களிடத்தில் சமூகப் பிறழ்வுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய பிரச்சினைகளுக்கான காரணம் என்ன? இதனால் இவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? இவற்றுக்கு எவ்வாறு கிறிஸ்தவ நோக்கில் தீர்வு காணலாம்? என்பது தொடர்பான விடயங்களை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு "சமூகப் பிறழ்வு நிலைகள் பற்றிய கிறிஸ்தவ அணுகுமுறை" எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சமூகப் பிறழ்வு நிலைகள் தொடர்பான விடயங்களை திருவிவிலியம் மற்றும் திரு அவையின் சமூகப் போதனைகளின் பின்னணியில் உய்த்துணர்ந்து, அவதானிப்பு முறையினூடாக தெரணியகலப் பங்கில் கடந்த **2017** தொடக்கம் **2023** ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெறுகின்ற சமூகப் பிறழ்வுகளை இனங்கண்டு, இறுதியாக சான்றுவழி ஆதார முறையினூடாக தொகுத்தறியக் கூடிய வகையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதற்கான நோக்கத்துடன் கூடிய எழுமாற்று முறையின் அடிப்படையில் ஐம்பது இளைஞர்களுக்கும் ஐம்பது குடும்பங்களுக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டு அதன்மூலம் பெறப்பட்ட தரவுகளும், பங்குத்தந்தையுடனான நேர்காணல் வாயிலாகப் பெறப்பட்ட தரவுகளும் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி கணவன், மனைவிக்கிடையில் நிலவும் புரிந்துணர்வின்மை, போதைப்பொருள் பாவனை, வெளிநாட்டுத் தொழில் மோகத்தின் தாக்கங்கள், பொருளாதாரச் சிக்கல், ஆன்மீகப் பின்னடைவு, தொலைத்தொடர்பு சாதனங்களின் முறையற்ற பாவனை, பெண் தலைமைத்துவ குடும்பங்களில் நிலவும் பிரச்சினைகள் போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைப்பாட்டுக்கு மக்கள் வாழ்கின்ற சூழமைவும் அவர்கள் சந்திக்கின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் வீண் ஆசைகளுமே காரணமாக கண்டறியப்பட்டுள்ளன. எனவே இவற்றைத் திருவிவிலியத்தின் பின்னணியிலும் திரு அவையின் சமூகப் போதனைகளின் பின்னணியிலும் திறனாய்வுக்குட்படுத்தித் தீர்வுகாண முடியும் என இவ்வாய்வில் பரிந்துரைக்கப்படுகின்றது. மேலும் குடும்பம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞருக்கான வழிக்காட்டலில் பங்குத்தந்தையின் பணியின் அவசியம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இத்தகைய விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது சமூகப் பிறழ்வு நிலைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு முன்வைத்து, கிறிஸ்தவ அறநெறி போதனைகளினூடாக மக்களின் நல்வாழ்வுக்கும் அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் ஏற்ற தீர்வினை வழங்க முடியும் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றது.

**திறவுச் சொற்கள்** : இளைஞர், குடும்பம், திருவிவிலியம், திரு அவையின் சமூகப்போதனை, பிறழ்வு நிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தி தரும் இயேசுவின் போதனைகளின் விவசாயப் பின்னணி: துணுக்காய்ப் பிரதேச விவசாயப் பின்புலத்தை மையப்படுத்திய ஒரு பார்வை

**சிந்துஜா, வி., மேரி வினிபிரிடா, சு.**
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகங்கள் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Jehovasamma93@gmail.com

நாட்டினுடைய அபிவிருத்திக்கான முதுகெலும்பாக விவசாயம் காணப்படுகிறது. மனிதன் வெள்ளம், புயல், வறட்சி, இடப்பெயர்வு என்பன உண்டாகும் போதே உணவின் பெறுமதியை அறிகின்றான். எனவே நாடுகளின் அபிவிருத்தியில் விவசாயத் துறைக்குப் பங்குண்டு. குறிப்பாக இலங்கையின் அபிவிருத்தியிலும் விவசாயத் துறையானது பாரிய அங்கம் வகிக்கிறது. இலங்கை பாரம்பரியமாக உணவு உற்பத்தியில் தன்னிறைவுடன் விளங்குவதைப் போன்று இயேசு வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீனாவிலும் விவசாயம் முக்கிய அங்கம் பெற்றிருந்தது. குறிப்பாக ஏழைகள் மத்தியிலிருந்த உணவின் தேவை இயேசுவின் விவசாயம் சார்ந்த போதனைகளுக்கு முகவரியாக அமைந்தது. இதனடிப்படையில் திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டின் லூக்கா நற்செய்தியில் இடம்பெறும் இயேசுவின் போதனைகளே ஆய்விற்கு மையமாகும். திருவிவிலியத்தில் "கடும் உழைப்பையும் உழவுத் தொழிலையும் வெறுக்காதே இவை உன்னத இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை" *(சீ.ஞா.7:15)* எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு வலுச் சேர்ப்பதாக இயேசுவினுடைய விவசாயம் சார்ந்த போதனைகள் அமைந்துள்ளன. லூக்கா நற்செய்தியிலுள்ள விவசாயத்தை மையப்படுத்திய விடயங்கள் துணுக்காய்ப் பிரதேச விவசாயப் பின்னணியோடு ஒப்பிட்டு நோக்கப்படாமை ஆய்வுத் தேடலிற்குக் களம் அமைத்தது. இப் பின்னணியில் துணுக்காய்ப் பிரதேச விவசாயமானது சமகாலச் சூழலில் இறைத் திட்டத்திற்கு ஏற்றதா? அல்லது முரணானதா? என்பது ஆராயப்பட்டுள்ளது. துணுக்காய்ப் பிரதேச விவசாயத்தை இயேசுவின் விவசாயம் சார்ந்த போதனைகளுடன் ஒப்பிட்டுத் துணுக்காய்ப் பிரதேசத்தில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பரிந்துரைகளை முன்வைப்பதே ஆய்வின் நோக்கமாகும். லூக்கா நற்செய்தியின் விளக்கவுரைகள், சஞ்சிகைகள், நூல்கள் ஊடாக இயேசுவின் போதனைகளில் வெளிப்படும் விவசாயம் சார்ந்த விடயங்கள் உய்த்துணர் முறை மூலம் ஆராயப்பட்டுள்ளன. இதனடிப்படையில் துணுக்காய்ப் பிரதேச விவசாயிகள் மற்றும் விவசாயத் திணைக்களப் பொறுப்பதி காரிகளிடம் நேர்காணல், வினாக்கொத்து, கள ஆய்வு என்பவற்றின் வழியாகத் துணுக்காய்ப் பிரதேச விவசாயம் சார்ந்த தரவுகள் சேகரிக்கப் பட்டுள்ளன. லூக்கா நற்செய்தியில் எடுத்துரைக்கப்படும் விவசாயம் சார்ந்த விடயங் களையும் துணுக்காய்ப் பிரதேச விவசாயம் சார்ந்த விடயங்களையும் ஒப்பீட்டு முறையில் கண்டறிந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்குத் தொகுத்துணர் முறை கையாளப் பட்டுள்ளது. லூக்கா நற்செய்தியின் சமவெளிப் போதனைகள் *(லூக்.6:20-26)*, விதைப்பவன் *(லூக்.8:4-8)*, அறிவற்ற செல்வன் *(லூக்.12:13-21)*, கொடிய குத்தகைக்காரர் *(லூக்.20:9-16)* போன்ற உவமைகளில் காணப்படும் விவசாயம் சார்ந்த குறிப்புக்களானது பாலஸ்தீன விவசாய முறைகளையும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டு நிலையில் கருத்துக்களை முன்வைப்ப தற்காகத் துணுக்காய்ப் பிரதேச விவசாயிகளிடமிருந்து வினாக்கொத்து வழியாகத் தரவுகள் பெறப்பட்டன. இந்த ஆய்வானது துணுக்காய்ப் பிரதேச விவசாயத்தின் முக்கியத்துவம், இயற்கை வளங்களின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அழிவைத் தடுக்கும் செயன்முறைக்கு அறைகூவல் விடுக்கிறது. துணுக்காய்ப் பிரதேசத்தில் சுற்றுச்சூழல் அமைப்புக்கள் விரிவாக்கப்பட்டு விவசாயம் சார்ந்த விடயங்கள் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும். அத்துடன் விவசாயிகள் அனைவரும் இதில் அங்கத்துவம் பெற வேண்டும். காடுகளை அழித்தல், நவீன உரங்களைப் பாவித்தல், ஆற்றுமணல் அகழ்வு என்பனவற்றைத் தடை செய்தல் இயற்கை வளங்களை நுண்மதியுடன் பயன்படுத்தல், எதிர்காலச் சந்ததியினருக்கு வளமான பூமியைப் பெற்றுக் கொடுத்தல் என்னும் உயரிய சிந்தனைகளை நடைமுறைப் படுத்தும் பரிந்துரைகள் ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** இயற்கை. துணுக்காய். நற்செய்தி. போதனைகள். விவசாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன் போல் சார்த்தர் மற்றும் மிஷெல் பூக்கோவின் சுதந்திரம் பற்றிய சிந்தனைகளும் தற்கால உலகில் அவற்றின் பொருத்தப்பாடும்

**ஐஸ்வரியா, சு., நிரோசன், சி.**

மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

iswariya0197@gmail.com

ஐரோப்பிய தத்துவ மரபில் அதிகம் பேசப்பட்ட எண்ணக்கருவாக சுதந்திரம் காணப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் இருப்பியல்வாத சிந்தனையாளரான ஜீன் போல் சாத்தர் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பின்நவீனத்துவ சிந்தனையாளரான மிஷல் பூக்கோ போன்றவர்கள் சுதந்திரம் பற்றிய கருத்தாடல்களை வெவ்வேறுபட்ட கோணங்களில் எடுத்துரைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். சுதந்திரம் என்பது உண்மையில் அனைவராலும் விரும்பப்படும் விடயம். சுதந்திரத்தின் பெறு மானங்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. ஆனால் சுதந்திரத்தை நாம் எவ்வாறு வரையறுக்கிறோம் என்பதனை கருத்தில் கொள்ளவேண்டும். உலகம் முழுமையாக இருப்பதால் நமக்கு வரம்பற்ற சுதந்திரம் இருப்பதாகவும், எமது மதிப்புகளை தேர்ந்தெடுப்ப தற்கும் நாம் விரும்பும் உலகத்தை உருவாக்குவதற்கும் எமக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது என்றும் சாத்தர் கூறுகின்றார். நாம் தெரிவுசெய்வதற்கான உரிமையைப் பெற்றுள் ளோம் எனவும் அதேநேரம் அதற்குரிய பொறுப்புக்களையும் நாமே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். அந்த பொறுப்புக்களிலிருந்து விடுபட நினைக்கும் மனிதன் தனக்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றான் என்றார். சாத்தரின் கருத்துக்களில் இருந்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவராக பூக்கோ விளங்குகின்றார். பூக்கோவின் கருத்தில் மனிதர்கள் சுதந்திரமானவர்கள் அல்ல. அவர்கள் அதிகாரத்தின் உரையாடலால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள் என்றார். அறிவுலகமானது தனி உலகமாக நின்று மனித விமோசனத்திற்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகுடன் கைகோர்த்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கின்றது என்கின்றார். அதிகாரமும் சுதந்திரமும் ஒன்றை ஒன்று விலக்கிக் கொண்டு, ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்பதில்லை. இது மிகவும் சிக்கலான விளையாட்டு. அந்த விளையாட்டில் சுதந்திரம் என்பது அதிகார இருப்புக்கான ஒரு நிபந்தனையாக உள்ளது என்றார். மனிதனின் சிந்தனை, தெரிவு, விருப்பம், அடையாளம் என அனைத்துமே அதிகாரத்தின் உரையாடலால் தீர்மானிக்கப் படுகின்றன. தெரிவுகூட கட்டமைக்கப்பட்ட வரையறைக்குள் அமைந்ததேயன்றி, சுதந்திரம் என்பது அவனுக்கு இல்லை என்கின்றார். எனவே இவ்விரு வெவ்வேறுபட்ட கருத்துக்களின் தற்காலப் பொருத்தப்பாட்டை ஆராய்வதோடு, சுதந்திரம் பற்றிய தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வின்படி தனிமனிதனுடைய தேட்டத்தையும் அவனது விருப்பையும் ஆதாரமாகக் கொண்டு ஆராய்கின்றபோது எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாத தேர்வுச் சுதந்திரம் மனிதனுக்கு அவசியமானதாகத் தோன்று கின்றது. இருப்பினும் நடைமுறையில் எந்தவொரு கட்டுப்பாடுகளும் இல்லாத அதிகார வரம்புகளுக்கு அப்பாற்பட்ட சுதந்திரம் என்பது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் வெளிப்படுத்துகின்றது. இந்த ஆய்விற்கான தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன, ஒப்பீட்டு முறை, பகுப்பாய்வுமுறை, விவரண முறை, எண்ணக்கருப்பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுள்ளன.

**திறவுச்சொற்கள் :** இருப்பு, இன்மை, தெரிவுச்சுதந்திரம், அதிகாரம், அறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளேட்டோவின் கலை, அழகியற் சிந்தனைகளும் சமகால உலகில் அவற்றின் பொருத்தப்பாடும்

**பிறிஸ்கா, பி., நிரோசன், சி., திலீபன், தி.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
priskafrancis0@gmail.com

மெய்யியலில் கலை, அழகியல் குறித்துக் காலத்துக்கு காலம் பல்வேறுப்பட்ட வகையில் அறிஞர்கள் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்தி வருகின்றனர். அந்தவகையில் கிரேக்க சிந்தனையாளரான பிளேட்டோ கலை, அழகியல் பற்றிய தனது சிந்தனைகளை வெளிப்படுத்தி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதன்படி கலைகளை உண்மைப் பொருளின் விம்பமாகக் கருதுவது மட்டுமன்றி உண்மை மற்றும் அழகுடன் ஒழுக்கத்தினை இணைத்துப் பார்ப்பதனூடாக உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலைகளையும் கலைஞர்களையும் பற்றிப் பேசுகிறார். மேலும் மனித உணர்ச்சிகளைத் தூண்டும்வகையில் கலைகளை உருவாக்கும் கலைஞர்களை ஒழுக்கத்திற்கு முரணானவர்களாகக் கருதி, அவ்வாறான கலைஞர்களை நாடுகடத்த வேண்டும் என்கிறார். இவ்வாறு பிளேட்டோவின் நோக்கில் கலைகள் எப்பொழுதும் சமூகநன்மை என்கின்ற இலட்சிய நோக்கை அடிப் படையாகக் கொண்டதாக செயற்பட வேண்டுமெனவும் அவை ஒழுக்கத்தைப் போதிப்பன வாக அமைய வேண்டுமெனவும் கருதுகிறார். இருப்பினும் இன்றைய நவீன உலகில் காணப் படும் கலைப்படைப்புகளான கவிதை, இசை மற்றும் ஓவியம் போன்றவை ஒழுக்கம் மற்றும் கலாசார எல்லைகளைக் கடந்து தமது அடையாளம், பிரதிநிதித்துவம் மற்றும் பன்முகத் தன்மை என்பவற்றை மையப்படுத்தி உருவாக்கப்பட்டவையாக அமைகின்றன. இவ்வகைக் கலைகளில் பிளேட்டோவின் சிந்தனைகள் பிரதிபலிக்கின்ற தன்மைகளைத் தெளிவுபடுத்து வதோடு, அவரது கருத்துக்களை உள்வாங்கியவாறான போக்கில் சம காலக் கலைகள் அமைவதனைத் தெளிவுபடுத்துவதாகவும் இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த வகையில் இன்றைய சமகால உலகில் இலாப நோக்கத்திற்காகவும் ஏனைய நோக்கங்களுக் காகவும் உருவாக்கப்படும் கலைகள் பற்றிய சிந்தனைகளுடன் பிளேட்டோவின் சிந்தனைகள் எவ்வகையில் பொருத்தப்பாடுடையவையாக விளங்குகின்றன என்பது ஆய்வின்மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் பிளேட்டோ விட்டுச்சென்ற கலை, அழகியல் பற்றிய கருத்தாக்கங்கள் இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமுடையதா? இல்லையா? என்பதும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இன்றைய கலையுலகில் புதிய நுணுக்கங்களும் நுட்பங்களும் உள்வாங்கப்பட்டாலும், ஒழுக்கவியலைப் பொறுத்தவரையில் பிளேட்டோவின் சிந்தனை கள் மீள்வாசிப்புக்குட்படுத்தப்பட்டு பின்பற்றப்படலின் அவசியமானது முடிவாகப் பெறப் பட்டுள்ளது. அத்தோடு ஒழுக்க செயன்முறைகளை நடைமுறைப் படுத்தும் வகையிலான அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இவ்வகை யில் பிளேட்டோ வின் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு இரண்டாம் நிலைத் தரவுகள் இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டுள்ளதோடு, வரலாற்று ரீதியான அணுகு முறைகளை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு, ஒப்பீட்டு ரீதியாக ஆய்வு செய்து பெறப்பட்ட பெறுபேறுகள் விமர்சனப் பகுப்பாய்விற்கு உட்படுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** ஒழுக்கம், கலைப்பண்பு, சமூக நலன், பொது நன்மை, கலை இயக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டவிழ்ப்புவாதமும் கூத்துக்கலை மரபும் : மட்டக்களப்பு மண்முனைமேற்கு பிரதேச நாட்டுக்கூத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**டேனிஷா, ச., நிரோசன், சி.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
denishanmugam@gmail.com

இவ் ஆய்வானது பின்நவீனத்துவ சிந்தனையாளரான டெரிடாவின் கட்டவிழ்ப்பு வாத சிந்தனைகள் பழந்தமிழ் மரபியல் சார்ந்த நாடகக்கலையான கூத்துக்கலையில் பிரதிபலித்துக் காணப்படுகின்றதா? என்பதனையும் மற்றும் இச்சிந்தனை கூத்துக்கலைக்கு அவசியமானதா? என்பதனையும் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. ஏற்கனவே அனைவராலும் பழக்கப்பட்ட, நியமிக்கப் பட்ட, மரபுவழியான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு புதிய கருத்தாக்கம் நோக்கி அழைத்துச் செல்லும் ஒரு சிந்தனையாக, மரபாக டெரிடாவின் கட்டவிழ்ப்புச் சிந்தனை அமைகிறது. இக் கட்டவிழ்ப்புவாதமானது பெருங்கதையாடல்களை நிராகரித்தல், வாசகனை முதன்மைப் படுத்திய சிந்தனை, இரட்டை எதிர்நிலைகளினை நிராகரிக்கின்ற போக்கு, விளிம்புநிலைக் கருத்துக்கள் மீது கவனம் செலுத்துதல், குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்குமான உறவு மாறக் கூடிய தன்மை, மீள்வாசிப்பிற்கு உட்படுத்தல், பாரம்பரியத்தினை சிதைவாக்கல் போன்ற பண்புகளைக் கொண்டதாக விளங்குகின்றது. கூத்துக்கலையானது பாரம்பரியமாக அதனுடைய ஒவ்வொரு அம்சங்களிலும் பல்வேறு கட்டுக்களைக் கொண்டதாகக் காணப்படு கின்றது. குறிப்பாக அரங்க அமைப்பு, ஆடை அணிகலன், ஒப்பனை, ஒளியமைப்பு, ஆட்ட முறை, ஆயுதங்கள் போன்ற கூத்தின் ஒவ்வொரு அம்சமும் இத்தகைய கட்டுக்களைக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் கூத்தினுடைய போக்கினை, அது தொடர்பான கூத்துக் கலைஞர்களுடைய நிலைப்பாட்டினையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்து கின்ற போது கூத்தினுடைய ஒவ்வொரு கூறுகளும் கட்டவிழ்ப்பினுடைய பண்புகளை உள்வாங்கியிருப்பதனை கண்டுகொள்ளலாம். இதனை வெளிக்கொணர்வதாக இவ் ஆய்வு அமைகின்றது. எனவே இன்றைய காலகட்டத்தில் மருவிவரும் கலைகளில் ஒன்றான இக்கூத்துக்கலை கட்டவிழ்ப்பினுள் உள்வாங்கப்பட்டுள்ள தன்மையை, மீள்வாசிப்பு செய்யப் பட்டுள்ளமையையும் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் நாட்டுக்கூத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குவதாக இவ் ஆய்வு அமைகிறது. இவ் ஆய்விற்கான தரவு களாக முதலாம்நிலைத் தரவு, இரண்டாம்நிலைத் தரவு என்பன சேகரிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் முதலாம்நிலைத் தரவுகள் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் சில கூத்துக்கலைஞர்களின் நேர்காணல் வாயிலாகவும், இரண்டாம்நிலைத் தரவுகள் பின்னவீனத்துவத்தில் கட்டவிழ்ப்பு சிந்தனை மற்றும் நாடக அரங்கியல் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வேடுகள் வாயிலாகவும் சேகரிக்கப்பட்டன. மேலும் இவ் ஆய்வில் பகுப்பாய்வு முறை, விபரண முறை, வரலாற்று முறை, ஒப்பிட்டாய்வு முறை போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** அண்ணாவியார், பாரம்பரியம், மீள்வாசிப்பு, சிதைவாக்கல், களரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால சமூகத்தில் வர்த்தகமயமாகிய கலையும் கலைஞனின் நிலைப்பாடும்: மார்க்ஸிச சிந்தனையினை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆய்வு

**சாருகா,செ., திலீபன்.தி.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sharukasharu25@gmail.com

கலை என்பது மனிதனின் அக அனுபவங்களைக் குறியீடுகள் மூலமும் அதேசமயம் உடலாலும் உள்ளத்தினாலும் ஒருங்கிணைந்து செயல்படுகின்ற ஒரு நுட்பமான திறனாகும். சிற்பம், ஓவியம், நடனம், கட்டிடக்கலை, இசை, நாடகம், கவிதை போன்ற அனைத்தும் கலை என்ற அகன்ற வரையறையுள் அடங்கும். பண்டைய காலங்களில் கலையென்பது தனக்கான அழகியல் விதிகளுக்கு அமைய செயற்பட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கலைகள் பெரும்பாலும் சமூகத்துடன் இணைந்து செயல்படுகின்ற ஒன்றாகக் காணப் பட்டது. மனிதனுடைய கற்பனைத்திறனைப் போதிப்பதாகவும் அதேசமயம் மனித வாழ்க்கைக்கான ஒழுக்க நெறிகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன. இருப்பினும் காலப்போக்கில் கலைகள் தனக்கான அழகியல் விதிகளிலிருந்து மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. மனிதன் தனது தேவைகளையும் விருப்பங்களையும் அடிப்படையாகக்கொண்டு கலைகளைத் தனக்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்துக்கொள்கின்றான். மனிதனால் ஆக்கப்பட்ட கலையே தற்பொழுது முதலாளித்துவவர்க்கம் என்கின்ற மனித சமூகத்தினால் வர்த்தகமயமாக்கப்பட்டு விற்பனைப்பண்டமாக மாற்றமடைகிறது. இம்மாற்றங்கள் நடைபெறுவதற்கு நுகர்வோரின் வகிபங்கு முக்கியமான ஒன்றாகக் காணப்படு கின்றது. குறிப்பாக நுகர்வோரினை மையப்படுத்தி கலைகளை வெளிக்கொணருகின்ற வேளையில் அவை தமக்கான அழகியல் விதிகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மார்க்ஸிச சிந்தனைகளின் அடிப்படையில் கலையானது முதலாளித்துவ உற்பத்தி முறையின் ஆளுகைக்கு உட்பட்டு தன்னியல்பிலிருந்து அன்னியப்பட்டு விற்பனைப் பண்டமாக எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனை தற்காலத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்துகின்ற ஆய்வாக இவ் ஆய்வு அமைகிறது. இந்நிலையில் கலைகளின் செல்நெறிப்போக்கு, கலை மாற்றத்திக்கான காரணங்கள், கலைஞனுடைய நிலைப்பாடு மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் வகிபங்கு என்பன பற்றி தெளிவுபடுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது. மார்க்ஸினடிப்படையில் கலைகள் விற்பனைப்பண்டமாக மாற்றப்படக்கூடாது என்ற கருத்து, கலைகள் மனிதத்தேவையின் அடிப்படையில் தோற்றம்பெற ஆரம்பித்தபோதே மீறப்பட்டுவிட்டது. முதலாளித்துவ வர்க்கத்தினரின் செயல்பாடுதான் கலை மாற்றத்திற்கான காரணம் என்ற போக்கினைத் தாண்டி, நுகர்வோரின் எதிர்பார்ப்பும், கலைகளின் நிலையான தன்மையினைப் பேணுவதற்காக நவீனமய மாக்கப்பட்ட ஊடகங்களின் உட்படுத்தலும் கலைகள் வர்த்தகமயமாக்கப்பட்டதற்கான காரணங்களாக அமைகின்றன. இங்கு கலைஞனுடைய நிலைப்பாட்டினை பார்க்கின்ற பொழுது, பரிணாம வளர்ச்சியினை எதிர்பார்க்கின்றவனாக இருப்பினும் கலைகளினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு மாற்றத்தை ஏற்கமறுக்கின்றவனாக காணப்படுகின்றான். இந்தவகையில் இவ்வாய்விற்கான முதல் நிலைத் தரவுகள், தற்கால அழகியல் கலைஞர்களுடனான கலந்துரையாடல் மூலமும், இரண்டாம் நிலை தரவுகள் கலை மற்றும் முதலாளித்துவவர்க்கம் தொடர்பாக எழுந்த நூல்கள், ஆய்வு கட்டுரைகள் மற்றும் இணையதளப் பதிவுகள் என்பவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** கலை, தற்காலப்போக்கு, வர்த்தகமயம், மார்க்ஸிய சிந்தனைகள், கலைஞனுடைய நிலைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால இலங்கையில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கல்வித் தத்துவ சிந்தனைகளின் பொருத்தப்பாடு

**விராஜினி காயத்திரி, இரா., நிரோசன், சி.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
vgrajendran96@gmail.com

கல்வி பற்றிய எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்வதாகக் கல்வித் தத்துவம் காணப்படுகின்றது. கல்விக் கொள்கைகள், சிந்தனைகள் என்பவற்றை உருவாக்குபவர்களாக கல்வித் தத்துவ சிந்தனையாளர்கள் விளங்குகின்றனர். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி ஒரு தத்துவ அறிஞர் ஆவார். அவரின் தத்துவ சிந்தனைகள் மிகவும் ஆழமானவையாகும். அந்தவகையில் அவரின் கல்வித் தத்துவ சிந்தனைகள் கல்வியின் நோக்கம், கல்வியில் ஒழுக்கம், ஆசிரியர் மாணவர்களுக்கிடைலான உறவுமுறை, சுதந்திர மான கல்வி, கல்வியில் உளவியலின் முக்கியத்துவம், இயற்கையூடான கல்வி முறை போன்ற எண்ணக்கருக்களை வெளிப்படுத்துகின்றன. சமகால இலங்கையின் கல்விச் செயற்பாடுகள் கொள்கைகள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இருப்பினும் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. அதனடிப்படையில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கல்வித் தத்துவ சிந்தனைகள் சமகால இலங்கையில் எவ்வாறானதொரு பொருத்தப்பாடுடையனவாய் உள்ளன என்பதனைப் பரிசீலனை செய்து, கிருஷ்ணமூர்த்தியின் கல்வி தத்துவ சிந்தனைகளிலிருந்து உள்வாங்கப்பட வேண்டிய பொருத்தமான விடயங்களை சீர்தூக்கிக் காட்டுவதே இந்த ஆய்வின் நோக்க மாகும். அந்த வகையில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கல்வி தத்துவ சிந்தனைகளானவை சமகால இலங்கை நடைமுறைகளுக்கு பொருத்தமான ஒன்றாகவும் அவசியமான ஒன்றாகவும் காணப்படுகின்றன. ஏனெனில் சமகால இலங்கையில் தனிமனிதன் முதல் முழுநாடு வரையிலும் பல்வேறுப்பட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டுதான் உள்ளார்கள். தனிமனிதன் தான் தன்னை உணர்ந்து தனது சிந்தனையை தெளிவுபடுத்தி தான் செய்யும் வினைகள் சரியா? தவறா? என உணரும் பட்சத்தில் சமூகத்தில் சிறந்ததொரு மாற்றத்தை உருவாக்கலாம். அவ்வாறு ஒரு தனிமனித சிந்தனை முதிர்ச்சியானது கல்வியின் மூலமே ஏற்படுத்தப்பட வேண்டும் கல்வியானது சரியான முறையில் வழங்கப்படும் பட்சத்தில், சரியான முறையில் கல்வியை கற்கும் ஒவ்வொரு தனி மனிதனும் சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும், மாற்றத்திற்கான முன்னோடியாகவே காணப்படுவார். அந்த வகையில் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என ஒவ்வொருவரும் தன்னிலையை உணரும் வகையிலேயே கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனது கல்வி தத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். மனிதப் பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும், ஒரு கல்விமுறை சமகால இலங்கைக்கு அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. மெய்யறிவு என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு கல்வி செயற்பாடும் இருத்தல் சமகாலத்தில் அவசியமானதொன் றாகும். தனிமனித சிந்தனை முகிழ்ச்சியே ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கல்வித் தத்துவ சிந்தனையின் வெளிப்பாடாகும். இச்சிந்தனைகள் சமகால இலங்கைக்கு அவசியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பொருத்தமான தத்துவ சிந்தனையாக உள்ளன. இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகளான ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி எழுதிய நூல்களையும், இரண்டாம் நிலை தரவுகளான ஜிட்டுக் கிருஷ்ணமூர்த்தியின் கல்வித் தத்துவம் தொடர்பான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளையின் அதிகாரபூர்வ வலைத் தளங்களின் வீடியோக்கள், ஒளிப்பதிவுகள் என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது வரலாற்றுமுறை, விவரணமுறை மற்றும் பகுப்பாய்வுமுறை என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள் :** கல்வித் தத்துவம், இலங்கை, பாடசாலை, ஆசிரியர்கள், மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவோரப் புகைப்படவியல்: யாழ்ப்பாணப் பிராந்தியத்தை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஒழுக்க மெய்யியல் ஆய்வு

**கம்சாயினி, .பி., நிரோசன், சி.**

மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

kamsajini09@gmail.com

புகைப்படவியலின் ஒருவகையே தெருவோரப் புகைப்படவியலாகும். அது தெரு மற்றும் தெருசார்ந்த இடங்களில் இடம்பெறும் அன்றாட வாழ்க்கையைப் புகைப்படம் எடுப்பதாக அமைகின்றது. இதில் பல்வேறுபட்ட ஒழுக்கவியல் பிரச்சனைகளும் எழுகின்றன. ஒருவரின் அனுமதி இன்றிப் புகைப்படம் எடுத்தல், அவற்றைப் பதிவிடுதல், தனிஉரிமை மீறல், கலா சாரச் சீர்கேடுகள், இணையவழி மிரட்டல்கள், தவறான எண்ணம் மற்றும் அவற்றை தவறாக பயன்படுத்துதல், தொந்தரவாக இருத்தல் என்பன தெருவோரப் புகைப்படங்களில் இருக்கும் ஒழுக்கவியல் பிரச்சினைகள் ஆகும். யாழ்ப்பாணத்திலும் இத்தெருவோரப் புகைப்படவிய லானது வளர்ந்துவரும் துறையாக காணப்படுவதோடு அதிலும் மேற்குறிப்பிட்ட ஒழுக்கச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் யாவும் யாழ்ப்பாணத் தெருவோரப் புகைப் படவியலில் எழுகின்றனவா அல்லது யார் இவ்வகையான தெருவோரப் புகைப்படங்களை எடுக்கின்றனர் என்பதைப் பொறுத்துத்தான் இவை ஒழுக்கவியல் சிக்கல்களாக எழுகின்றனவா என்பதை இவ்வாய்வு ஆராய்கின்றது. இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத் தரவுகள் அவதானித்தல் மூலமும் நேர்காணல் மூலமும் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையதளக் கட்டுரைகள் போன்றன மூலமும் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டு முறை, விபரண முறை ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வானது யாழ்ப்பாணத் தெருவோரப் புகைப்படத்தினால் எழும் ஒழுக்கவியல் பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துவதோடு, தெருவோரப் புகைப்படம் எடுப்பவர்களின் ஒழுக்கம் குறித்த விழிப்புணர்வு பற்றியும் ஆராய்கின்றது. யாழ்ப்பாண மக்கள் போர் சூழலினால் அதிகள வாகப் பாதிக்கப்பட்டதனால் அவர்கள் இத்தெருவோரப் புகைப்படவியலை மதிக்காத ஒரு சந்தர்ப்பமும் இருந்துவருகின்றது. யாழ்ப்பாணத்தில் தெருவோரப் புகைப்படவியலின் உள்ளடக்கத்தைக் காட்டிலும் யார் அத் தெருவோரப் புகைப்படங்களை எடுக்கின்றார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவை ஒழுக்கவியல் சிக்கலாக நோக்கப்படுகின்றன என்பதனையும் அறியக்கூடியவாறு இருக்கின்றது. குறிப்பிட்ட ஒருவர் தன்னுடைய புகைப்படத்தை எடுக்க அனுமதி வழங்காவிட்டாலும் அதனை ஏற்கும் மனப்பாங்கினை தெருவோரப் புகைப்படக் கலைஞர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும், யாழ்ப்பாணத்தில் தெருவோரப் புகைப்படவியலிலிருக்கும் ஒழுக்கவியல் சிக்கல்களைக் குறைப்பதற்கு மங்களாக்குதல் (Bluring) என்ற ஒரு விடயமும் முதன்மை யளிக்கின்றது. அனுமதி கேட்கும் நபரை மாத்திரமே நாம் புகைப்படம் எடுக்க முடியும் அப் புகைப்படத்தில் பின்னணியில் இருக்கும் நபர்களை நாம் மங்களாக்கம் செய்யமுடியும். இத்தகைய முடிவுகளை வெளிக்கொண்டு வருவதாக இவ் ஆய்வானது அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** புகைப்படம் எடுத்தல், ஒழுக்கவியல் பிரச்சினைகள், தனியுரிமை மீறல், கலாசாரச் சீர்கேடுகள், சுரண்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Language Literature and Arts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தோர் சமூக அனுபவங்களின் வெளிப்பாடாக சந்திரகௌரி சிவபாலனின் படைப்புக்கள் பன்முகப்பார்வை

**ஜெனா, யோ., செரஞ்சன், எஸ்.**
தமிழ்த் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Yoharatnamjena@gmail.com

புலம்பெயர் எழுத்தாளர்களில் ஒருவரான சந்திரகௌரி சிவபாலனுடைய படைப்புக்களில் சமூக அனுபவ வெளிப்பாடுகளை விமர்சன நோக்கில் ஆராய்வதாக இந்த ஆய்வு அமை கின்றது. இதற்கு சந்திரகௌரி சிவபாலனின் கவிதைத் தொகுப்பாகிய "பனிக்குடம்", சிறு கதைத் தொகுதியாகிய "வெள்ளையுடைக்குள் கரையும் பருவம்" மற்றும் நாவலாகிய "என்னையே நானறியேன்" ஆகியன ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. புலம் பெயர்ந்தோர் எனப்படுவோர் **1970**களை அடுத்து ஈழத்தில் நிலவிய இனமுரண்பாட்டுச் சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்கு அகதிகளாகப் புலம்பெயர்ந்து சென்றோராவர். இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் தாம் அனுபவித்த இனப்பிரச்சினை சார்ந்த சிக்கல் களினையும் அவற்றினால் அடைந்த வலிகளினையும் தாம் எதிர் கொண்ட புதிய பண்பாட்டு மாறுதல்களினையும் இலக்கியங்கள் வழி பேசமுனைந்தனர். அப்படைப்புகள் வாழ்க்கை அனுபவத்தின்வழி, தாயக மற்றும் புகலிடச் சமூக, பண்பாட்டு, அரசியல் முறைகளைப் பேசுகின்றன. குறிப்பாகக் கூறின் இவை புலம்பெயர்ந்தோரின் சமூக அனுபவத் திரட்சிகளாக விளங்குகின்றன. சந்திரகௌரி சிவபாலனின் படைப்பிலக்கியங்களைக் கோட்பாட்டு ரீதியில் பன்முகவாசிப்புக்கு உட்படுத்தி, அவற்றின்வழி அவரின் புலம்பெயர்ந்த தனிமனித - சமூக அனுபவங்களை விளங்கிக் கொள்ள முனவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். மேலும் சமூக அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறான எடுத்துரைப்பியல் முறையினை அவர் கையாண்டிருக்கின்றார் என்பது பற்றியும் இங்கு நோக்கப்படுகின்றது. இவ்வாய்வில் விவரணமுறை, விமர்சனமுறை மற்றும் ஒப்பீட்டுமுறை என்பன பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவரின் படைப்புக்களின் ஊடாக புலம்பெயர் மற்றும் தாயகச் சமூக - பண்பாட்டு விடயங்களை நோக்கும்போது, சமூகவியல், பண்பாட்டியல், வரலாற்றி யல் அணுகுமுறைகளும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அவரின் படைப்புக்கள்சார் எடுத்துரைப்பியலைப் பேசுகின்றபோது, அழகியல் முறைத்திறனாய்வு பயன்படுத்தப்படு கின்றது. அவருடைய படைப்புகளில் பெண்ணியம் முதன்னிலைப்படுத்தப்படுவதால் பெண்ணியக் கோட்பாடும் தேவையான இடங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் சந்திரகௌரி புலம்பெயர் தேசங்களில் ஈழத்தவர்கள் எதிர்கொள்கின்ற சமுதாயப் பிரச்சினைகளினையும் சமூக, பண்பாட்டு மாறுதல்களினையும் எவ்வாறு தாக்கமாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது. மேலும் பல ஆண்டுகளாக நிலவி வந்த புலம்பெயர் தேசத்து மக்களின் சொல்லமுடியாத துயரங்களினையும் அவர்கள் எதிர் நோக்கிய சவால்களினையும் அவர் எவ்வாறு கலைத்துவமாகப் பேசியுள்ளார் என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** சந்திரகௌரி சிவபாலன், புலப்பெயர்வு, சமூக அனுபவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர். கலாநிதி.எஸ்.ஜெபநேசனின் தமிழ்ப்பணிகள் – ஓர் ஆய்வு

அனெற்ஜெனா, றொ., விசாகரூபன், கி.
தமிழ்த்துறை
anetjenaj@gmail.com

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் சிறப்பையும் தனித்துவத்தையும் வெளிக்கொணர உழைத்த ஆய்வாளர்கள் பலர். அவர்களுள் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கியத்துவத்தினைத் தனது ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தியவர் பேராயர். எஸ் ஜெபநேசன். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கதொரு காலகட்டமாகும். அது சமூக, அரசியல், பொருளா தாரம், சமயம், இலக்கியம் எனப் பல்வேறு தளங்களிலும் மாற்றமுற்றுத் தனித்துவம் பெற்றிருந்தது. குறிப்பாக, அமெரிக்க மிசனுடைய தமிழியல் வளர்ச்சி சார்ந்த பணிகளைத் தொகுத்துக்காட்டல், ஆவணப்படுத்தல் ஊடாகப் பெரும்பணி புரிந்தவராகப் பேராயர் விளங்குகின்றார். இவர் முன்மாதிரியான ஆய்வுகளைப் பல தளங்களிலும் செய்துள்ளார். சமயம், சமூகம், தமிழ்மொழி என மூன்று தளங்களில் அவரது பணிகள் விரிந்துள்ளன. ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கு வலுச்சேர்க்கும் வகையில் பேராயர் கலாநிதி.எஸ்.ஜெபநேசன் ஆற்றிய தமிழ்ப் பணிகள் பற்றியதாக இந்த ஆய்வு அமைகின்றது. பல தளங்களிலும் அவர் ஆற்றிய தமிழ்ப் பணியையும் படைப்பிலக்கியங்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்ற பேராயர் கலாநிதி. எஸ். ஜெபநேசனின் ஆய்வு நூல்களையும் மொழிபெயர்ப்பு சார்ந்த படைப்புகளையும் கட்டுரை முதலான ஏனையவற்றையும் ஆய்வுக்குட்படுத்தி ஈழத்து இலக்கிய ஆய்வு வரலாற்றில் அவருக்குரிய தனித்துவம் எத்தகையது என்பதை இனங்கண்டு வெளிக்கொணர்வது இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேராயர் பற்றித் தொகுக்கப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் ஒழுங்கமைத்து பகுப்பாய்வு செய்து தொடர்புகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து விவரண ஆய்வு முறையின் ஊடாக ஆழமாக நோக்கப்படுகிறது. இந்த ஆய்வின் மூலமாகப் பேராயரின் பன்முக ஆளுமையினை அறிய முடியும். அத்துடன் அவரது இலக்கிய ஆய்வுப் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்ளலாம். மேலும் இதன் மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் அவரது ஆளுமையினை மதிப்பீடு செய்யவும் முடியும்.

**திறவுச் சொற்கள்:** எஸ். ஜெபநேசன், பத்தொன்பதாம் நூற்றாண்டு, தமிழ்ப் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிய நோக்கில் உமாமகேஸ்வரியின் சிறுகதைகள் ஓர் ஆய்வு

**கஜனி, த., குமரன், ஈ.**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thavarasakajani@gmail.com

சமூகத்தில் ஆண்களுக்கு நிகரான முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்குகின்ற பெண்களினுடைய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் மலர்ந்த கோட்பாடாகப் பெண்ணியம் விளங்குகின்றது. இது பிரான்சில் தோற்றம் பெற்று காலப்போக்கில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிற்கும் பரவி வளர்ச்சியடைந்ததுடன், எண்பதுகளில் தமிழ்நாட்டில் கால்பதித்தது. இக்காலத்தில் அம்பை, காவேரி, திலகவதி, சிவகாமி, பாமா, அனுராதா, உஷா சுப்பிரமணியன், உமாமகேஸ்வரி, தமயந்தி போன்றோர் பெண்ணியப் படைப்பாக்க முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களுள் குடும்பம் என்ற தளத்தினை மையமாகக் கொண்டு தமது பெண்ணியக் கருத்தியலை, கவிதை, நாவல், சிறுகதை ஆகிய படைப்பாக்கங்களின் மூலம் வெளிப்படுத்தியவராக உமாமகேஸ்வரி விளங்குகின்றார். "மரப்பாச்சி", "தொலை கடல்", "அரளி வனம்", "வயலட் ஜன்னல்" ஆகியன இவரது சிறுகதைத் தொகுப்புக்களாகும். உமாமகேஸ்வரியின் சிறுகதைகள் குறித்து ஒரு சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. எனினும் அவை அவரது சிறுகதைகளின் ஊடாக வெளிப் படுத்தப்படுகின்ற பெண்ணியத் தத்துவத்தின் தாக்கத்தினை அதன் விளைவுகளைச் சரியான வகையில் மதிப்பீடு செய்யவில்லை. உமாமகேஸ்வரியின் சிறுகதைகளினூடாக வெளிவரும் பெண்ணியக் கருத்துக்களை அடையாளம் கண்டு, அவற்றின் கனதியினையும், முக்கியத்து வத்தினையும் மதிப்பீடு செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வில் விபரண ஆய்வு மற்றும் பெண்ணிய ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் படைப்பாளியின் சிறுகதைகளை நுணுகி ஆராய்வதற்கு பகுப்பாய்வு, ஒப்பீட்டு அணுகுமுறை களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முதனிலை ஆதாரங்களாக, உமாமகேஸ்வரி யின் சிறுகதைத் தொகுதிகளும், துணைநிலை ஆதாரங்களாக, அச்சிறுகதைத் தொகுதிகள் பற்றி ஏலவே வெளிவந்த கட்டுரைகளும், அறிமுகக் குறிப்புக்களும், விமர்சனங்களும் கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் உமாமகேஸ்வரியின் படைப்பாளுமை, ஏனைய பெண்ணிய எழுத்தாளர்களிலிருந்து அவர் தனித்துவமாக விளங்கும் வகை, பெண்ணியக் கருத்தியல் வெளிப்பாட்டில் அவரது சிறுகதைகளின் இடம் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** உமாமகேஸ்வரி, பெண்ணியம், பெண்ணிய எழுத்தாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமகன் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு

**நிதர்சனா, ந., அஜந்தகுமார், த.**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
prempreman01@gmail.com

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் அதன் இன்னோர்கட்ட வளர்ச்சியாகவும் புலம்பெயர் படைப்புக்கள் அமைகின்றன. ஈழத்தைப் பொறுத்தவரை ஈழத்தின் புலப்பெயர்வு என்பது வெவ்வேறு காலகட்டங்களில் இடம்பெற்றிருந்தாலும் இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற புலப்பெயர்வுகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் இனமுரண்பாடு தலைதூக்கியதால், ஈழத்தமிழர்கள் உயிர்ப்பாதுகாப்புத் தேடி உலகின் பல பாகங்களுக்கும் புலம்பெயர்ந்து சென்றார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்கள் தமது ஆற்றாமைகளை இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வருகின்றனர். ஈழத்து தமிழர்களின் புலப்பெயர்வு தமிழ் இலக்கிய உலகில் புலம்பெயர் இலக்கியம் என்னும் ஒரு புதிய பிரிவைத் தோற்றுவித்துள்ளது.. ஈழத்துத்தமிழ் இலக்கியம் இதுவரை எதிர் கொள்ளாத, அறிந்திராத புதிய அனுபவங்களை இது வெளிப் படுத்தியது. மேலும் ஏனைய கலை இலக்கியங்களிலிருந்து வேறு பிரித்துப் பார்க்கக்கூடிய தனித்துவமான சமூக, பண்பாட்டு மற்றும் அழகியல் அடிப்படைகளைக் கொண்டுள்ளது. புலம்பெயர் படைப்பனுபவத்தை ஈழத்து இலக்கியப்பரப்பில் விரிவு செய்பவராக கோமகன் விளங்குகின்றார். யாழ்ப்பாண மாவட்டத்தின் கோப்பாய்க் கிராமத்தை சொந்த இடமாகக் கொண்ட இவர் 1980களில் தாயகத்தில் நிலவிய நெருக்கடியான சூழலில் தொடர்ந்து வாழமுடியாத நிலை உருவானபோது புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று அங்கு செவ்வரன் (sevran) பகுதியில் வாழ்ந்து வந்தார். 1990களில் எழுத்துலகில் கால்பதித்த இவர் கோமகன் என்னும் புனைபெயரில் படைப்புக்களை எழுதத்தொடங்கினார். சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய இதழ்கள் என்பவற்றில் எழுதி வந்தார். இவரது சிறுகதைகள் தொகுக்கப்பட்டு இரு தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. கோமகனின் தனிக்கதை என்ற முதலாவது தொகுப்பில் 16 சிறுகதைகள் அடங்கியுள்ளன. இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு முரண். இதில் 9 சிறுகதைகள் அடங்கியுள்ளன. கோமகனது சிறுகதைத் தொகுப்புக்களை சமூக மற்றும் அழகியல் அடிப்படையில் நோக்கி ஈழத்துத் தமிழ் சிறுகதை உலகில் இவரது சிறுகதைகளின் இடத்தினை மதிப்பீடு செய்வதே இவ் ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வினை மேற்கொள்வதன் மூலம் ஈழத்து சிறுகதைகளில் அதிலும் குறிப்பாக ஈழத்து புலம்பெயர் சிறுகதைகளில் கோமகன் என்ற படைப்பாளியின் பங்களிப்பை அறிந்துகொள்ள முடியும். மேலும் கோமகனது சிறுகதைகளின் அழகியல் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுகின்றது. இவரது சிறுகதைகள் தாயக வாழ்வு, புலப் பெயர்வு, அடையாள நெருக்கடி, பயண அவலம் என்பவற்றை முன்னிறுத்திப் பேசுகின்றமை யால் தமிழ் மக்கள் வாழ்வியலின் ஒரு காலப்பகுதியை அறிந்துகொள்ளவும் முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** புலம்பெயர்தேசம், தாயகம், சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமேகலைக் காப்பியமும் தேவகாந்தனின் மேகலைகதாவும் ஓர் ஒப்பீட்டாய்வு

**மேரி யஸ்ரலா, கி., குமரன், ஈ.**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
marymaryjastala@gmail.Com

தமிழ் மொழியில் தோற்றம் பெற்ற ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாக மணிமேகலை காணப்படுகின்றது. இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். மணிமேகலைக் காப்பியம் கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலையின் கதையினைக் கூறுகின்றது. செய்யுள் நடையில் அமைந்த மணிமேகலைக் காப்பியத்தின் கதைப் பொருளை இருபத்தோராம் நூற்றாண்டு வாசகனுக்கு ஏற்ற வகையில் உரைநடையில் மீளச் சொல்லியுள்ளார் தேவகாந்தன். அதுவே மேகலைகதா என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது. தேவகாந்தன் கனடாவில் வாழ்ந்து வரும் ஈழத்து எழுத்தாளர். புனைகதை, திரைப்படம், பத்திரிகை எனப் பல துறைகளிலும் ஆர்வங்காட்டி வருபவர். குறிப்பாக தமிழில் பல நாவல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. மணிமேகலைக் காப்பியத்தினை தேவகாந்தன் உரைநடை வடிவிலே வெளிப்படுத்தி இருக்கும் முறையை அறிந்து கொள்ளுதல், காவியமொன்றை உரைநடை வடிவில் மாற்றுவதற்கு அவர் கையாண்டிருக்கும் கலை நுட்பங்களை புரிந்து கொள்ளுதல் என்பன இந்த ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன. இந்த ஆய்வின் முதனிலை ஆதாரமாக சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்ட மணிமேகலைக் காப்பியமும் தேவகாந்தனால் எழுதப்பட்ட மேகலைகதாவும் விளங்குகின்றன. இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலில் மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு ஒப்பீட்டு ஆய்வு ஆகையால் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையும் மணிமேகலை மற்றும் மேகலைகதா என்ற இரு நூல்களையும் பகுத்தாராய்வதற்கு பகுப்பாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் தேவகாந்தன் மணிமேகலைக் காப்பியத்தின் கதைப்பொருளை மீளக் கூறியுள்ள இடங்களை அறிந்து கொள்ள முடிவதுடன் காவியம் ஒன்றின் கதைப்பொருளை உரைநடை வடிவில் மீளச் சொல்லுவதற்கு அவர் கையாண்டிருக்கும் கலை நுட்பங்களையும் அறிந்து கொள்ளலாம். மேலும் மணிமேகலை காவியத்தின் கதைப்போக்கு மேகலைகதாவில் மாறுபடும் இடங்களையும் அடையாளங் கண்டு கொள்ளலாம்.

**திறவு சொற்கள் :** மணிமேகலை, மேகலைகதா, தேவகாந்தன், சீத்தலைச்சாத்தனார், காப்பியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்நிலை வேறுபாட்டைக் கட்டமைப்பதில் இலக்கணத்தின் வகிபங்கு: தொல்காப்பியப் பொருளதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்ட வாசிப்பு

**சுகன்யா, கோ., அருந்தாகரன், க.**
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
gsuganya;gmail.com

இந்த ஆய்வானது தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஊடாக வெளிப்படும் பால்நிலை வேறுபாடு சார்ந்த விடயங்கள் குறித்து ஆராய்கின்றது. குறிப்பாக ஆண்-பெண் பால் நிலை சார்ந்த வேறுபாடுகளைக் கட்டமைப்பதில் இலக்கணத்தின் பங்களிப்பு எத்தகையது என்பதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்க முனைகின்றது. இலக்கண ஆக்கம் என்பது இயல்பானதன்றி அது சமூக மொழியின் ஒழுங்கமைவினால் கட்டமைக்கப்பட்டதாகும். ஒரு சமூக அமைப்பின் கூட்டுப் பிரக்ஞையின் வடிவான மொழியே அதன் ஆதார அம்சமாகும். பிரதானமாக அம்மொழி யின் மூலமே குறித்த சமூகம் தன்னை அடையாளப்படுத்த முனைகின்றது. இத்தகு மொழியை ஆதாரமாகக் கொண்டு தோற்றம் கொள்ளும் இலக்கண ஆக்கம் என்பது அது தோன்றிய காலத்தில் அதிகாரப்பட்டிருந்த ஆதிக்க சமூகங்களின் ஆழமைவு மற்றும் மேலமைவு சார் கருத்து நிலைகளின் வெளிப்பாடாக அமைவது போன்றே அச்சமூகத்தில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் சமூக வேறுபாடுகளையும் அதிகார ஒடுக்கு முறைகளையும் மற்றும் அடக்குமுறைகளையும் வெளிக்காட்டி நிற்கின்றது. தமிழர் சமூகத்தினைப் பொறுத்த வரையில் அது ஆண் முதன்மை பெற்ற சமூகமாகவே காணப்படுகின்றது. அவ்வாறானதொரு சமூக அமைப்பினில் தோற்றம் கொண்ட தொல்காப்பியப் பிரதியும் ஆணாதிக்க அரசியலின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே அமைகின்றது. இத் தொல்காப்பியப் பிரதியினூடாக வெளிப்படும் பெண்நிலை சார்ந்த கருத்துக்கள் அவை பெண்களை ஒடுக்குதலிற்கும் அதிகாரத்துக்கும் உட்படுத்த முனையும் ஆணாதிக்க சட்டங்களின் ஒட்டுமொத்த தொகுதி யாக விளங்குகின்றன. இவ்வாறு ஆண்களின் ஆதிக்க சிந்தனையிலிருந்து வெளிப்படுத்தப் பட்ட அக்கருத்துருக்களின் தாக்கம் இன்றளவும் பெண்களின் உணர்திறன்களிற்கு எட்டாத வகையில் சமூகத்தில் நிலைபெற்றுவிட்டவையாகவே விளங்குகின்றன. இவ்வேறுபாட்டு அம்சங்களின் இயங்குகைக்கு ஆதிக்க சமுதாயத்தின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் தத்துவார்த்தக் காரணிகளும் தாக்கம் செலுத்தியுள்ளன. மரபார்ந்த சிந்தனை முறையின் தொடர்ச்சியாக அமையும் இவ் ஆதிக்க செயல்பாட்டின் சமூக நிலைத்திருப்பிற்கு அடிகோலியதாக தமிழரின் பழமையான தொல்காப்பிய இலக்கணப்பிரதி விளங்குகின்றது. இலக்கணம் என்பது மொழிக்குரிய விதிமுறைகளை உரைப்பது என்பதற்கும் அப்பால் அது சமூக வேறுபாட்டினை கட்டமைக்கும் காரணிகளுள் ஒன்றாகவும் விளங்குவதனாலேயே ஆண் -பெண் பால்நிலை சமத்துவம் என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. இதில் பதிவாகியுள்ள கருத்துக்கள் அவை பால்நிலை பற்றிய புரிதலை உண்டு பண்ணுவதற்குத் தடையாக அமைவதோடு பால்நிலைசார்ந்த முரண்பாடுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. எனவே தொல்காப்பியப் பிரதியினை கட்டவிழ்த்து அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்நிலை வாசிப்பிற்கு உட்படுத்தி ஆண்- பெண் வேறுபாட்டிற்குரிய அம்சங்களையும் அதற்கான காரணங்களையும் இனங்கண்டு கொள்வதன் வாயிலாக அசமத்துவங்களைக் கடந்த பால்நிலை சமத்துவம் கொண்ட சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கான அறிவார்ந்த பகுதியாக தொல்காப்பியப் பிரதியினை எவ்வாறு வாசிக்கலாம் என்பது தொடர்பான வாசிப்பு வெளியைத் தோற்றுவிக்க முனைவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** தொல்காப்பியம், கட்டவிழ்ப்பு, பால்நிலை வேறுபாடு, பெண்ணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Impact of Modern Technologies in Enhancing Listening Skills

**Najla, M.N.F., Paranthamanan, V.**
Department of English Language Teaching, University of Jaffna
najlaniyas9@gmail.com

As we are living in 21st century, Modern Technologies have taken our lives into them. It is a valuable tool to enhance our skills. Nowadays listening skill is increasingly affected by technology. The study aims to focus on the impact and importance of modern technologies in enhancing listening skills. The topic of this study is to explore the impact of modern technologies in enhancing listening skills. Recognizing the evolving landscape of education and the pervasive use of technology, this study employs a mixed methods approach to provide a comprehensive understanding of the impact of modern technologies on listening skills. The instruments used throughout this research are questionnaires, informal interviews and pre-test and post-test. The quantitative phase involves administering pre-test and post-test to a diverse sample of undergraduate participants of faculty of arts university of Jaffna. This was conducted to objectively measure the changes in listening proficiency. A structured questionnaire was employed to collect quantitative data on participants' technology use & listening proficiency level. Qualitative method involves informal interviews with participants. Through open-ended discussions, this aspect of study seeks to capture nuanced perspectives and experiences related to the use of modern technologies in enhancing and developing listening skills. the data collected from the questionnaires, informal interviews, pre-test and post-test were evaluated and statistically analyzed. This research study has proved that using modern technologies in developing listening skills would be more effective than traditional way of conducting listening activities. Preliminary findings suggest a positive impact between the modern technologies and improvements in listening skill.

**Keywords:** Enhancement, Informal interview, Listening skill, Modern technology, Questionnaire, Pre-test, Post-test



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Problems encountered in teaching English for primary students of Thenmaradchi zonal education office.

**Viththahee, E., Paranthaman, V.**
Department of English Language Teaching, University of Jaffna.
Januviththu@gmail.com

This research investigates critical issues hindering effective English language instruction in primary schools in Thenmaradchi Zonal Education Office in Sri Lanka. In general, the ESL performance of undergraduate students is considered to be low in the areas of reading comprehension and proper vocalisation and vocabulary issues due to lack of motivation and lack of involvement etc. What would be the causes of these problems in adulthood? The undergraduate students' primary education was not well developed. These bottom-up issues have to be automated when the children are **young**. People may think that these matters in the teaching second language can be introduced when children become adults but, practically it seems to be very difficult, because adults' brain cells are not very capable enough to acquire everything easily when compared to brains of the children. If the government of Sri Lanka doesn't provide the appropriate learning conditions in the primary level, they will find it very difficult to access the language skills even in their adulthood. However, English seems to be **'Nobody's Baby'** in the primary level in rural Sri Lanka. It is a major issue not only in Thenmaradchi education office area but also in many other zonal education office areas in Sri Lanka where English is taught as a second language. The study found that there are only **five** primary teachers appointed in the Thenmaradchi Zone despite the fact that there are 53 primary schools and 4,218 students. This means that English is often taught by English teachers appointed to the **secondary level** or by the teachers of **other subjects** who do not have the necessary skills or qualifications to teach the subject effectively. This uneven distribution of teachers results in the absence of English in certain school timetables, hindering the development of students' foundational language skills. Despite the provision of workbooks and administration of term tests, the shortage of primary English teachers impedes effective English language education and this impacts students' cognitive development in their formative years. This research employed a mixed-methods approach, utilising surveys, interviews and classroom observations to gather data from teachers, students and parents. The research recommends the administration of a new Language **Proficiency Exit Level Examination** akin to Sri Lanka's Grade Five Scholarship Examination. This proposed examination would foster healthy competition among teachers, students and parents to address the disparities observed in English language education within the Thenmaradchi Zonal Education Office area. The findings highlight the urgency of addressing teacher distribution issues and implementing comprehensive assessments to ensure a more equitable and effective English education for primary students in the region.

**Keywords:** English Language Teaching; Primary education; Teacher shortage



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Challenges Encountered in Enhancing the Reading Comprehension Monitoring Competence Level of Pre Secondary Students (Grade 09)

**Thushanthica, S., Paranthaman, V.**
Department of english language teaching, University of Jaffna.
bobithasosai16@gmail.com

This study investigated the effectiveness of *comprehension monitoring strategies (cmc)* in improving the reading comprehension monitoring competence level of pre-secondary (grade 9) students at MN st. Anne's National college, mannar. The research questions explored the most common challenges faced by students with reading comprehension difficulties, effective strategies for improvement, and potential differences in effectiveness for various challenges. Previous literature review reveals that vocabulary limitations and lack of motivation are the most prevalent challenges hindering RCMC development. Building upon prior research by Hezam (2022), Hidyati (2018), Chua & Sulaiman (2012), and Satriani, this study proposes an intervention program incorporating reading comprehension modules and monitoring strategies. Employing a mixed- method design, this investigation utilizes both quantitative and qualitative data. An experimental control research design was chosen to address the research questions. Participants were randomly assigned to an experimental group (receiving the intervention) and a control group (receiving conventional teaching). Two primary research tools were employed: reading comprehension tests and questionnaires. Data collection procedures included: an intervention program for the experimental group, conventional teaching for the control group, student perception questionnaires, and student observation. Data analysis involved frequency data distributions and descriptive statistics. The findings of the study demonstrate the efficacy of the intervention. The experimental group, having received the comprehension monitoring strategies, significantly outperformed the control group on the post-test, indicating improved rcmc. This study concludes that implementing comprehension monitoring strategies can significantly improve RCMC in pre-secondary students by activating their prior knowledge, enhancing vocabulary, fostering self-monitoring skills, and promoting positive reading habits. The findings suggest that these strategies can be effectively utilised to support students with diverse reading comprehension challenges, ultimately leading to improved reading comprehension and academic success.

**Keywords**: Comprehension monitoring strategies; Quantitative; Qualitative ; Monitoring competence level ; Mixed method design; Reading comprehension.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Implementation of Learner-Centered- Classroom : A Comprehensive Study Based on the Secondary ESL Classrooms in Thenmaradchi zone

**Sivappirintha, S., Paranthaman, V.**
Department of English Language Teaching, University of Jaffna.
pirunthaa981@gmail.com

This study discusses the implementation of learner-centered classroom, especially in the aspect role of teachers & students. This qualitative descriptive study aims to describe the implementation of learner-centered teaching by the English teacher in the classroom and the English teacher's barriers to implement learner-centered teaching in the classroom. In particular five school teachers in different status of schools (National/Urban, Rural/1AB) were analyzed by doing classroom observation and Discussion. The researcher interviewed them to support the data in order to describe teachers' barriers in implementing learner-centered teaching. Based on the findings and the discussion, the teachers used group discussion, games, role play as the main activities to implement learner-centered teaching. The teachers asked the students to memorizing and answer question, also There is no room for peer interaction. When the researcher asked to define the L-C-C, their perspective is conducting games, group activities and Role play were the main activity. It indicates that the teachers are not always implementing learner-centered teaching in every aspect. There are several barriers that are found by the researcher, which are lack of knowledge about learner-centered teaching, the situation in reality is not same as lesson plan, how to handle the difference students' personalities and capabilities. From this study, it is expected that the ESL teachers have to implement L-C-C to develop students Autonomy and speaking fluency.

**Keywords:** Learner-centered teaching, Teacher's role, Implementation, Students autonomy, Barriers in implementing L-C-C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Impact of Introducing A/L English to Students in Sri Lanka

**Stelinraj, S., Paranthaman, V.**
Department of English Language Teaching, University of Jaffna.
segaranstelinraj@gmail.com

This study explores the quantitative implications of introducing Advanced Level (A/L) English at J/Arunodaya College in the Valikamam Zone, Sri Lanka, with a specific focus on the General English program. The research investigates challenges faced by students, emphasizing factors contributing to their lack of interest and lower performance in G.C.E (A/L) examinations. Analysis of G.C.E (A/L) results from 2020 to 2022 at J/Arunodaya College reveals a troubling trend, with a significant number of students failing to meet proficiency standards in General English. The research identifies key issues such as a lack of motivation, insufficient foundational English skills, and traditional teaching methods contributing to this decline. The methodology chapter outlines a quantitative survey approach, utilizing a questionnaire to collect data from 25 A/L students in the Arts stream. Results indicate a prevailing lack of interest among students, attributed to prioritizing other main subjects, a deficiency in foundational English skills, and dissatisfaction with teaching methodologies. In conclusion, this research, emphasizing quantitative aspects, provides insights into challenges faced by students at J/Arunodaya College and proposes recommendations to revitalize interest and enhance proficiency in A/L English, contributing to the broader discourse on quantitative analysis in English language education in Sri Lanka. Additionally, the study will analyze the role of the University Grants Commission (UGC) in addressing these challenges and fostering improvements in A/L English education.

**Keywords** : A/L English; Curriculum; Pedagogical practices; Sri Lanka; Student disinterest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Learning English as a Second Language through Digital Platforms : A comprehensive study based on undergraduate level young learners -Faculty of Arts, University of Jaffna

**Rifna, R.S., Pranthaman, V.**
Department of English Language Teaching, University of Jaffna.
rsrifna4455@gmail.com

Emergence of improved technology and digital platforms have reshaped the way of language learning in an easy way. Thus, technology-based language learning gained extensive attention by young learners, as they are actively engaging to the digital platforms for various domains of purposes. This study aims to examine the efficiency and benefits of digital platforms in English language enhancement, as a second language learner, specifically focused on reading and writing skills developments, emphasizing utilisation of digital platforms as a tool for language learning. The study used a mixed method of qualitative and quantitative research designs by collecting data from 25 ESL learners from Faculty of Arts, University of Jaffna, in social sciences group. Informants were selected randomly from the group to answer a questionnaire survey and to respond formal, informal and semi-structured interviews and discussions.The data collected through those methods were analysed statistically. The results revealed that students showed high level of interest and moderate level of literacy skills as well as the understanding level of utilisation of digital platforms as a tool for second language acquisition. The findings showed a positive significance of the correlation between learning English and digital platform for learning purposes. This study contributes significantly to identify the possibilities and availability of learning English as a second language learner. The results recommend for the investigations in addressing factors that involved and motivated the efficient utilisation of digital platforms.

**Keywords:** Digital platforms, Technology based language learning, ESL young learners, Literacy skills, positive correlation, efficient utilisation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Identifying Different Strategies to Enhance Writing Skills in the Second Language Classroom.

**Nushla., H.D.F., Shriganeshan, K.**
Department of English Language Teaching, University of Jaffna.
nusla2018@gmail.com

This paper presents the action research undertaken by the researchers as a part of model teaching practice, one of the core subjects offered in the Third year Second semester at the Department of English Language Teaching at the University of Jaffna. The teaching practice was carried out at the University of Jaffna with a group of second year students following English for Humanities. The aim of the research was to use adjectives to describe people by using Grammar Translation Method. The author's teaching approach centered on the topic of "Describing people ".The researcher conducted the lesson with simple, practical and effective strategies in order to make the lesson interesting. The visual aids used in the action research enhanced the students' understanding and the guessing game and other activities  to enhance the active participation of the students. The explanation, group activity and the individual activities gave them good knowledge about the lesson. The research tools were questionnaires, interviews with the participants and the lecturer in charge and classroom assessments. At the end it was found out that the strategies adopted worked well and showed progress and the students gained good knowledge about the lesson and were motivated to learn the English language with more interest.

**Keywords**: Grammar Translation  Method, Approach, Strategies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Error Correction in Writing Skill : A Study Carried Out among the Pre-Secondary Level Students of J/Victoria College in the Northern Province of SriLanka

**Mathusha.S., Paranthaman.V.**

Department of English Language Teaching, University of Jaffna.

mathusritharan22@gmail.com

This research investigates and addresses writing errors among Grade 9B students at J/Victoria College in the Northern Province of Sri Lanka, with a specific focus on challenges related to the simple present tense. This study identifies prevalent errors, rooted in the inter language system of the students, and introduces targeted teaching interventions to rectify these issues. Through a quantitative research design, pre and post-tests were administered to assess changes in students' proficiency, emphasizing subject-verb agreement, omission, addition, and misordering. The findings reveal a significant reduction in errors following the teaching intervention, showcasing an overall improvement in the students' ability to use the simple present tense accurately. The mean scores in the post-test indicate enhanced proficiency levels, highlighting the effectiveness of the proposed interventions. The study also differentiates between errors and mistakes, emphasizing the systematic nature of errors and the need for targeted correction strategies. This research contributes to the broader understanding of error correction in ESL writing, offering practical insights and recommendations for educators, curriculum developers, and policymakers. The proposed interventions, ranging from curriculum enhancements to technology integration, aim to address the identified gap in ESL writing instruction. As language education continues to evolve, these findings provide a foundation for future longitudinal studies and collaborative efforts to refine approaches for improving writing skills among pre-secondary level students, ultimately fostering effective communication in diverse linguistic and cultural settings.

**Keywords**: Error Correction; Inter language System; Pre-Secondary Level; Simple Present Tense; Writing Skill.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Status of ESL in Rural Schools: Challenges & Opportunities : A Comparative Study Based on Thenmaradchi Educational Zone

**Piriyanka. R., Paranthaman. V.**
Department of English Language Teaching, University of Jaffna
piriya549@gmail.com

In this comprehensive research, the status of English as a Second Language (ESL) in rural schools within the Thenmaradchi educational zone was examined through a comparative study with urban counterparts. The investigation delves into various aspects, categorizing them into students, teachers, infrastructure facilities, and family background. By addressing research problems and gaps, the study sheds light on the challenges faced by rural ESL learners and educators, who often grapple with inadequate resources and support. Research questions guided the exploration, examining the current status, challenges, opportunities, resource allocation, and attitudes toward ESL in rural settings. The objectives encompassed assessing ESL education, investigating long-term outcomes, and proposing enhancements. The literature review underlines the global context, emphasizing challenges and opportunities faced by ESL learners and teachers, drawing parallels with the Sri Lankan landscape. The methodology, adopting a mixed-method approach, combines surveys, case studies, observations, interviews, and discussions, providing a holistic view. Data collection involved the Thenmaradchi Zonal Education Office, secondary schools, and ESL students at the University of Jaffna. The subsequent analysis incorporated both qualitative and quantitative methods, utilizing descriptive statistics, comparative analysis, data visualization, interpretation, and thematic analysis. Findings emerged across five key categories: student perspectives, teacher viewpoints, analysis of the Sri Lankan ESL curriculum, allocation disparities of infrastructure facilities and resources, and the impact of family backgrounds. The identified challenges and opportunities pave the way for a set of 20 recommendations, ranging from teacher training and curriculum enhancement to promoting bilingual education and implementing continuous monitoring mechanisms. The study concludes by emphasizing the necessity of addressing the identified challenges in rural ESL education and providing equitable opportunities for students and teachers. Overall, the research contributes to understanding the nuanced dynamics of ESL education in rural Sri Lankan schools and offers practical recommendations for improvement.

**Keywords:** Curriculum; Family background; Infrastructure facilities; Students; Teachers



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழி பேசும் மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைப் பயன்படுத்தும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**ஆரபி.க., விமல்.சா.**

மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

arabiganeshanathan@gmail.com

இலங்கை மும்மொழி பேசுகின்ற மக்களைக் கொண்ட நாடாகும். யாழ்ப்பாணப் பிரதேசமானது தமிழர் அதிகம் வாழும் பிரதேசமாகக் காணப்படுவதனால் இங்கு தமிழ் மொழியே அதிகம் பயன்பாட்டில் உள்ளது. இங்கு காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ் மொழி பேசும் மக்கள் சமூகத்தைக் கொண்டதாகும். இங்கு கல்வி பயில்வோர் தமிழ் மற்றும் சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாவார். இவர்கள் இருவரும் சேர்ந்து கல்வி பயிலும் துறைகளில் இவர்களுக்கான மொழி மூலம் ஆங்கிலமாகும். சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்களுக்கு விரிவுரைகள் தவிர்ந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உட்சூழலிலும், வெளிச்சூழலிலும் தங்களுடைய தேவைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டிய தேவையே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் போது இவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் ஆய்வுப் பிரச்சினையாகும். இவ்வாறான பிரச்சினைகளை மொழியியல் ரீதியாக ஆய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாகும். சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை பயன்படுத்திக்கொள்ளும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விளக்கமாக ஆய்வு செய்வதால் இது விளக்கமுறை ஆய்வுப்பிரிவில் அடங்குகின்றது. மேலும் ஆய்வு தொடர்பான தரவுகளானவை நூல்கள், சஞ்சிகைகளில் இருந்தும் நேர்காணல், கலந்துரையாடல், ஒலி, ஒளிப்பதிவுகள் போன்றவற்றின் மூலமாகவும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் சிங்கள மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை பயன்படுத்தும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இரண்டாம் மொழி கற்றல் கற்பித்தலுக்கும் இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் உறுதுணையாக அமையலாம்.

**திறவுச் சொற்கள் :** தாய்மொழி, இரண்டாம் மொழி, தமிழ் மொழி, சிங்கள மொழி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிடையே பொதுப் பேச்சு பதகளிப்பு

**நிமல்டா, சி., அபிராமி, இ.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sathukamsa@gmail.com

*பொதுப் பேச்சு பதகளிப்பு என்பது ஓர் உளவியல் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்றல் மட்டுமல்ல பொதுவில் பேசுகின்ற திறனும் முக்கியமானதாக காணப்படுகின்றது. இவை கற்கின்ற காலப்பகுதியிலே வளர்க்கப்பட வேண்டியதொன்று. ஆனால் பல மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்கினாலும், பொதுப் பேச்சுக்கென்று வரும் போது பதகளிப்பு அடைபவர்களாக காணப்படுகின்றனர். இதற்குத் தடையாக மாணவர்களிடம் காணப்படுகின்ற ஓர் உளவியல் பிரச்சினையாக பதகளிப்பானது காணப்படுகின்றது. அந்தவகையில் மாணவர்கள் பொதுவில் பேசுகின்ற போது* (Presentation, Speech) *பயம், பதற்றம் அடைகின்றார்கள். எனவே மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற பொதுப் பேச்சு பதகளிப்பானது இவ்வாய்வில் சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவிற்கு உட்பட்ட நான்காம் வருட மாணவர்களில் எளிய எழுமாற்று மாதிரி நுட்பத்தை பயன்படுத்தி 200 பேர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் பெண் மாணவர்களில் 114 (57%) மாதிரிகளும், ஆண் மாணவர்களில் 86 (43%) மாதிரிகளும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ் ஆய்விற்கான தரவுகள் ஆய்வாளனால் விருத்தி செய்யப்பட்ட தனிப்பட்ட விபரங்களை கொண்ட பகுதி* I *உடன், பகுதி* II *இல்* McCroskey *(1970) இனால் விருத்தி செய்யப்பட்ட* Personal Report of public speaking Anxiety (PRPSA) *வினாக்கொத்து மாணவர்களிடம் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இவ் ஆய்விற்கு* T. Test , Regression Analysis, Correlation, ANOVA *போன்ற பகுப்பாய்வு கருவிகள் பயன்படுத்தப்பட்டு, புள்ளி விபரவியல் மென்மொபொதி 21 வது பதிப்பில்* (Statistical Package For The Social Science IBM SPSS 21) *பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதன் முடிவின் படி பொதுப் பேச்சு பதகளிப்பில் 5% ஆனவர்கள் அதிகளவான பதகளிப்பையும், மிதமான பொதுப் பேச்சு பதகளிப்பு 54% ஆகவும், குறைவான பொதுப் பேச்சு பதகளிப்பு 40% ஆகவும் காணப்படுகின்றது என்பது ஆய்வின் முடிவிலிருந்து கண்டறியப்பட்டது. பொதுப் பேச்சு பதகளிப்பில் தாக்கம் செலுத்தும் காரணியில் அதிகளவு விரிவுரையாளர்களின் விமர்சனம் பற்றிய பயம், சக மாணவர்களின் விமர்சனம் பற்றிய பயம், வெட்கம், மற்றவர்கள் மதிப்பிட்டுக் கொள்வார்கள் என்ற பயம் போன்றன அதிகளவில் தாக்கம் செலுத்துவது கண்டறியப்பட்டது. மாணவர்களிடம் காணப்படும் பொதுப் பேச்சுப் பதகளிப்பானது மதிப்பிடப்பட்டு அதற்கான காரணங்கள், அறிகுறிகள் மற்றும் அதனால் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் கண்டறியப்பட்டு இவை மாணவர்களின் கற்றல் சார் அடைவுகளிலும், எதிர்கால தொழிலை பெற்றுக் கொள்வதில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு, அவற்றிற்கான முடிவுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** பயம், பதற்றம், பதகளிப்பு, பொதுப் பேச்சுப் பதகளிப்பு, விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா மாவட்டத் தனியார் பாடசாலைகளில் ஆங்கில மொழிக் கற்றல் ஊடகத் தெரிவால் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள்

**லிந்துஜா, செ., செந்தூரன், சி**
மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
stlindu@gmail.com

மொழி மனித சமுதாயத்தின் இன்றியமையாத ஆக்கக்கூறு. மொழி ஒருவரின் சிந்தனை களையும் கருத்துக்களையும் மற்றொருவருக்கு தெரிவிக்கும் மிகச் சிறந்த ஊடகமாகும். பல்லின சமூகமாக மட்டுமன்றி பன்மொழியச் சமூகத்தைக் கொண்ட இலங்கையில் சிங்கள இனம் பெரும்பான்மை இனமாகவும் தமிழர்கள், முஸ்லிம்கள், வேடர்கள், பேகர்கள், காப்பிலியர்கள் போன்றோர் சிறுபான்மை இனமாகவும் குறிப்பிடப்படுகின்றன. இங்கையில் அரச கரும மொழிகளாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளும் சர்வதேச இணைப்பு மொழியாக ஆங்கில மொழியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் இருமொழிய பிரதேசமாக காணப்பட்டாலும் மும்மொழி பேசும் மக்கள் கூட்டத்தினரைக் கொண்ட பிரதேசமாகவும் தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழக்கூடிய சமுதாயமாகவும் நுவரெலியா மாவட்டம் காணப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவான தனியார் பாடசாலைகளின் செல்வாக்கு இன்றும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படக் கூடியதாக உள்ளது. பெற்றோரின் விருப்பின் அடிப்படையிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையிலும் அநேகமான தமிழ்மொழி மாணவர்கள் தனியார் பாடசாலைகளில் கல்விக் கற்று வருகின்றனர். அந்த வகையில் தனியார் பாடசாலைகளில் ஆங்கில மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு தமிழ்மொழிப் பாடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடங்களும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் கீழ் ஆங்கில மொழி மூலம் இடம் பெறுவதால் தமிழ்மொழி மாணவர்கள் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் பல்வேறான சிக்கல்களை எதிர்க்கொள்கின்றனர். தமிழ்மொழிப் பாடம் தாய்மொழியில் கற்பிக்கப் பட்டாலும் மாணவர்களின் பின்னணியை அல்லது சுற்றுச் சூழல் தாக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு அதிகமானோர் வீட்டுச் சூழலில் ஆங்கில மொழியைத் தொடர்பாடல் மொழியாகக் கொண்டிருப்பதால் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஆங்கில மொழியின் தாக்கம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளின் போது ஆங்கில மொழிச் சொற்பதங்களையே தாய்மொழிக் கற்பித்தலிலும் பிரயோகிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் நுவரெலியா மாவட்ட நகர்ப் பகுதியில் அமைந்திருக்கும் தனியார் பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் தமிழ்மொழி மாணவர்களது தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாறானதோர் ஆய்வு இடம்பெறவில்லை என்ற அடிப்படையில் ஆய்வு இடைவெளியை குறைநிரப்புவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலாதாரங்களினைப் பயன் படுத்தி பிரயோக மொழியியல் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு விவரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு முறையினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, அவதானம், கலந்துரையாடல், மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் மூலமும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் தமிழ்மொழி மாணவர்கள் தாய்மொழிக் கற்றலில் ஆர்வமின்மை, எழுதுதல் மற்றும் வாசித்தல் போன்றவற்றில் சிக்கல்கள், விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் என்பன மொழியியல் ரீதியாக வகைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளதுடன் ஆசிரியர்களது கற்பித்தல் முறைகளில் உள்ள குறைப்பாடுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டு அவற்றுக்கான காரணங்களும் பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** மொழிக் குறுக்கீடு, தாய்மொழி, இருமொழியம், இரண்டாம் மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOSS AND GAIN IN TRANSLATION: EXAMINING THE PROBLEMS IN TRANSLATING POLITICAL-HISTORICAL TEXT FROM ENGLISH TO TAMIL

A study based on the translation of the book *'A Vision of Sri Lanka for the 21st Century'*

**Dhivia, S., Kannathas, S.K., Sheliyna, S.**

Department of Translation Studies, University of Jaffna

dhiviasritharan@gmail.com

The study seeks to investigate the problems involved in translating political-historical text from English into Tamil and relates to the concepts of 'Loss' and 'Gain' investigates the issue of untranslatability, and provides an analysis of how it might be encountered with the concepts in translation theory and practice, with a focus of overcoming such problems using strategies of translation. The primary data for this study were collected using content-analysis methodology. The validation of the text was done from two main sources: the source text 'A Vision of Sri Lanka for the 21st Century' (1985) and the target text '21 ஆம் நூற்றாண்டுக்கான இலங்கையின் தொலைநோக்குப்பார்வை (2023)'. According to the study, problems were analysed as (1) analysis of linguistic untranslatability on lexical and syntactic losses and gains, (2) analysis of cultural untranslatability on losses and gains of culture-specific terminology, religious phrases, idioms and proverbs, metaphors and slogans, and (3) losses and gains due to miscellaneous problems. The findings of this research provide valuable insights into dealing the linguistic untranslatability by applying amplification, expansion, generalization strategies, functional equivalence and structure shift, whereas cultural untranslatability with cultural substitution, notes, modulation, paraphrasing and addition and the functional equivalence strategy was used for miscellaneous problems. The study suggested a tendency to translate political-historical texts by identifying specific strategies that can help overcome linguistic and cultural problems. This research provides valuable insights for both trainee translators and undergraduates of the translation studies in translators' decision-making processes, aiding in the development of theories and enhancing text quality.

**Keywords**: Equivalence, Problems, Strategies, Translation, Untranslatability



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Practical Issues in Producing Appropriate Equivalence of Medical Terminologies from English to Tamil: A Study Based on the Translation of the Book 'Hypertension- The Silent Killer'**

**Thilaxci T., Kannathas, S.K., Sheliyna, S.**
Department of Translation Studies, University of Jaffna.
thilaxci0406@gmail.com

This study investigates practical issues in producing appropriate equivalence of Medical Terminologies from English to Tamil and the application of the appropriate methods, techniques or strategies used to overcome the problems for experts and laymen. This research fills the gap by examining and discovering the most successful equivalence in Tamil. This study applied a qualitative research approach. It has been done based on the method of Content analysis. The first phase in a qualitative content analysis process is selecting a book and completing translation work. Accordingly, this study typically collects information from the sourcebook "HYPERTENSION- The Silent Killer" by comparing-the translation titled "உயர் இரத்த அழுத்தம்- மெல்ல கொல்லும் விஷம்". The problems were categorized as Problems in specialized Medical Terminology, translating the names of devices, translating the names of drugs, dosages and units, translating affixations, translating Acronyms and abbreviations, translating polysemy and word choice at the linguistic level and translating Metaphors and cultural words. The findings of the study are as follows: (1) Borrowing, descriptive equivalents are the most suitable procedures used to translate specialized medical terminologies. (2) Medical devices have to be transliterated because laymen are also familiar with those words. (3) Drug names should be transliterated because they are brand names. (4) Transference, borrowing, transcription, and descriptive equivalence can be used in translating abbreviations. (5) Compile a list of standard abbreviations and acronyms to be used by medical professionals. (6) To give proper equivalence for cultural terms cultural equivalent should be applied rather than paraphrasing as much as possible. (7) Instead of choosing denotative meaning one should seek for connotative meaning for metaphors. This study will help undergraduates of Translation Studies and researchers about the understanding and need for appropriate equivalence in Medical Translation.

**Keywords:** Appropriate; Healthcare Communication, Methods, Procedures of Translation, Technique, Transliteration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு நிலவுருவின் மீளெழுகையும் இருப்பும்: முல்லைத்தீவு முள்ளியவளை கோவலன் கூத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**யாழினி, ந., நவதர்சினி, க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
haarunkeerththan@gmail.com

இந்த ஆய்வானது "பண்பாட்டு நிலவுருவின் மீளெழுகையும் இருப்பும்: முல்லைத்தீவு முள்ளியவளை கோவலன்கூத்து" என்னும் தலைப்பை அடிப்படையாகக்கொண்டு அமைகின்றது. ஒரு நிலம் பாரம்பரியக்கலையான இக் கோவலன் கூத்தின் நிலைத்திருப்பால் அதன் அடையாளத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பேணுகின்றது என்பதும், ஈழத் தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை நிலவுருவின் அடிப்படையில் பண்பாட்டு நிலவுருவாக வரையறுத்துக்கொள்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு முள்ளியவளை கிராமத்தை பொறுத்தவரையில் கூத்தானது அவர்களது வாழ்வியலுடன் தொடர்புபட்டே காணப்படுகிறது. பாரம்பரியமாக பரம்பரை பரம்பரையாக கைக்கொள்ளப்படும் இவர்களது வழக்காறுகள், சடங்குகள் அதனோடு சேர்ந்த நம்பிக்கைகளின் அடியாகவே கோவலன்கூத்து ஆற்றுகை செய்யப்படுகின்றது. கோவலன் கூத்திற்கும் காட்டாவிநாயகர் ஆலயத்திற்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் அறாத்தொடர்பு காணப்படுகின்றது. ஒரு சமூகமாக இக் கூத்தை இம் மக்கள் எவ்வாறு கைக்கொள்கிறார்கள் என்பதும் அதனால் கூத்தின் நிலைபேறு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதும் கூத்தின் தொடர்ச்சியான பயிலுகை ஒரு நிலவுருவை எவ்வாறு பண்பாட்டு நிலவுருவாக அடையாளப்படுத்துகின்றது என்பதையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. ஈழப்போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும் போர் அச்சுறுத்தல்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தபோதும் மக்களின் மீளெழுகையோடு அம் மக்களின் பண்பாடும் மீளெழுந்தது எனலாம். திட்டமிடப்பட்ட முறையில் ஒரு இனத்தை அழிக்கும் கருவியாகவே போர் காணப்பட்டது. இருப்பினும் இம்மக்கள் போரினால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து மீண்டெழுந்து தமது அடையாளத்தையும் தம் மண்ணின் அடையாளத்தையும் பேணுகின்றனர். இக்கூத்து நிலைத்து நிற்பதற்கு அம்மக்கள் தமது பாரம்பரியத்தை கைக்கொண்டு பண்பாட்டு தொடர்ச்சியை பேணுவதே காரணம் எனலாம். பல்வேறு கூத்துக்குழுக்கள் உருவாகினாலும் அத்தனை குழுக்களும் கூத்து ஆடவேண்டும் என்றே நிற்கிறார்களே தவிர அதை விட்டுவிடும் எண்ணம் கொள்ளவில்லை. இதற்கு காரணம் கூத்தின் மேலுள்ள ஈடுபாடு என்றே கூறமுடியும். முல்லைமோடி கூத்து தொடர்பான நேர்காணல் மூலம் பெறப்பட்ட முதலாம்நிலை தரவுகளையும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையம் மூலம் பெற்றுக்கொண்ட இரண்டாம்நிலை தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டு பண்புசார் முறைகளை பயன்படுத்தி பாரம்பரிய அடையாளங்களை முனைப்புறுத்த கூத்து எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது? சடங்கிற்கும் கூத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது? சமூக கூட்டுணர்வு எவ்வாறு ஆற்றுகையூடாக வெளிப்படுத்தப்படுகின்றது? போர் மற்றும் இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட சாதக பாதக காரணிகள் எவை? கூத்து தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகை செய்வதற்கான காரணங்கள் என்ன? புவியியல் நிலவுரு ஒன்று பண்பாட்டு நிலவுருவாக மாறப் பாரம்பரிய ஆற்றுகையின் பங்களிப்பு என்ன? போன்ற ஆய்வு வினாக்களைக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டது. பாரம்பரிய ஆற்றுகையான கூத்து இடப்பெயர்வுகள் மற்றும் போரும் போருக்கு பிந்திய காலங்களிலும் குறித்த சமூகத்தின் கூட்டுணர்வு, பண்பாடு, அடையாளம் என அவர்களது பாரம்பரியத்தை எப்படி பாதுகாக்கிறது அல்லது அதன் இருப்பை தக்கவைத்துக்கொள்கின்றது என்பதே இவ் ஆய்வுப்பிரச்சினையாகக் காணப்படுகிறது. இவ்வாய்வின் நோக்கமானது கூத்தின் இருப்பானது புவியியல் நிலவுரு ஒன்றை எப்படி பண்பாட்டு நிலவுருவாக அடையாளப் படுத்துகின்றது என்பதை கண்டறிவது ஆகும். இதனைக் கண்டறிவதன் ஊடாக பண்பாடும் பாரம்பரியமும் அழிந்து போகாமல் இருக்க கூத்துக்கள் கைக்கொள்ளப்படவேண்டும் என்றும் அழியாது பயில்நிலையில் இருக்கவேண்டும் என்பதுமே ஆகும். இவ் ஆய்வுக் கட்டுரை நூலாக வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் ஆய்வாளர்களும் மாணவர்களும் இத் துறைசார்ந்தவர்களும் பயன்பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**திறவுச்சொற்கள் :** சடங்கு, பண்பாடு, கூட்டுணர்வு, பண்பாட்டு நிலவுரு, அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் கோட்ட பாடசாலைகளில் நலிவுற்ற சிறுவர் அரங்கு

**தேனுஜா, அ., ரதிதரன், க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை
amuthuthenu2@gmail.com

*இவ் ஆய்வானது சிறுவர் நாடகம் ஆற்றுகை செய்வதன் வீழ்ச்சிக்கான காரணங்களை தேடுவதாக காணப்படுகின்றது. உடுவில் கோட்ட பாடசாலைகளில் நலிவுற்ற சிறுவர் அரங்கு எனும் தலைப்பில் ஆரம்பப் பிரிவு சிறுவர் அரங்குடன் தொடர்புடையவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது அண்மைக் காலங்களில் மனித ஏற்றத்தாழ்வுகள், அதிகாரம், பதவிக்கு முதன்மை, கொலைகள், துஷ்பிரயோகம் போன்றவற்றால் முரண்பட்ட சமூகமாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இந்நிலையை மாற்றும் விதமாக சிறுவர்களை மகிழ்வாக வைத்திருத்தல், உற்சாக நிலையைத் தூண்டுதல் என்பவை முக்கியமாகக் காணப்படுகிறன. எனவே சிறுவர்களை சரியான முறையில் வழியமைத்துச் செல்லும் கருவியாக சிறுவர் அரங்கு காணப்படுகிறது. ஆகவே இச்செயற்பாடுகளை சிறுவர்கள் கல்வி கற்கும் ஆரம்பப் பிரிவில் இருந்து மேற்கொள்வதன் மூலமாக சாதகமான விளைவை உண்டுபண்ணுவதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் தற்போது வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட உடுவில் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் நாடகப் போட்டிகளோ, நாடக அரங்கச் செயற்பாடுகளோ மேற்கொள்ளாது காணப்படுவது பெரும் குறைபாடாக உள்ளது. எனவே இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு ஆரம்பத்தில் இவ்வலயத்தில் சிறுவர் அரங்க செயற்பாடுகள் காணப்பட்டமையும் பின்பு மிகவும் சொற்பமாகி தற்போது இல்லாமல் போனதற்கான காரணம் என்ன என்பதை கண்டறிவதும் இச் செயற்பாடுகளை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு மேற்கொள்ளும்போது ஏற்படும் இடர்பாடுகள் எவை, அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக பண்புசார் முறையியலில் இவ் ஆய்வு காணப்படுகிறது. அந்த வகையில் இவ்வாய்வின் நோக்கமாக சிறுவர் அரங்கில் பல்பரிமாணத் தன்மையை தெளிவுபடுத்தி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிற்கு பரவலாக்கி ஆரம்பப் பிரிவு மாணவர்களது சிறுவர் நாடக ஆற்றுகைகளை மீண்டும் மேற்கொள்ளல் என்பதாகும். எனவே இவ் ஆய்வினை மேற்கொள்வதனூடாக ஆரம்ப பிரிவு மாணவர்களது கற்பனைத்திறன், கல்விச் செயற்பாட்டில் விருத்தி, இரசனை, நடிக்கும் திறன், நல்லவற்றை பின்பற்றக்கூடிய மனப்பாங்கு, குழுவாக செயல்படும் தன்மை போன்ற நற்பண்புகளை விருத்தி செய்வதுடன் சமூகத்தில் சிறுவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க இவ் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் பெரிதும் பங்களிப்பதுடன் சிறுவர்கள், ஆசிரியர்கள், அரங்கத் துறை சார்ந்தோர்களிற்கும் இவ் ஆய்வானது பயனுள்ளதாக அமையும்.*

**திறவுச்சொற்கள்:** ஆரம்பப்பிரிவு சிறுவர்கள், மகிழ்ச்சி, கற்றல் விருத்தி, சிறுவர்நாடகம், சிறுவர் அரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன் கூத்து புலப்பெயர்வின் வரலாற்றுத் தடத்தினை அறிதல் : வன்னிப்பிராந்திய பரசன்குளத்தினை அடிப்படையாகக் கொண்ட விரிவான ஆய்வு

**சரண்யா, சி., நவதர்சினி, க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
saranyasivarasa68@gmail.com

இந்த ஆய்வானது காமன் கூத்தின் புலப்பெயர்வின் வரலாற்றுத் தடத்தினை வன்னிப் பிராந்திய பரசன்குளத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்குவதாக அமைகின்றது. 1823ம் ஆண்டு தென்னிந்தியாவில் இருந்து தோட்டத் தொழில்களுக்காக மக்கள் இலங்கையின் மலையக பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர். 1984ம் ஆண்டு ஈழத்தில் ஏற்பட்ட ஜீலை கலவரம் காரணமாக மலையகத்திலிருந்து இலங்கையின் பல்வேறு இடங் களுக்கு இந்த மக்கள் புலம்பெயர்ந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் மன்னார் பரசன்குள பிரதேசத்திலும் குடியமர்ந்தனர். குடியமர்ந்த மக்கள் அவர்களுடைய கலைகள், சடங்குகள், கலாசாரம், பண்பாடுகளைத் தங்களுடனே கொண்டு வந்தனர். அவர்களுடைய கலைவடிவங்களில் காமன் கூத்தும் ஒன்றாகும். கண்டி பிரதேசத்தில் எவ்வாறு காமன் கூத்து ஆற்றுகை செய்யப்பட்டதோ அதே தன்மையோடு பரசன்குள பிரதேசத்திலும் ஆற்றுகை செய்யப்பட்டது. காமன் கூத்து என்பது சடங்குடன் இணைந்த கூத்து வடிவமாக இருந்தாலும் மலையக, பரசன்குள மக்களது பண்பாட்டு வாழ்வியலில் ஓர் அம்சமாக இருக்கிறது. குறிப்பாகச் சமயப் பண்பாட்டு வடிவங்களில் காமன் கூத்து ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. பரசங்குள மக்கள் காமன் கூத்து ஆற்றுகை செய்யும்போது இந்தியாவின் தஞ்சாவூரில் இருந்து பிடிமண் எடுத்துக்கொண்டு வந்து ஆற்றுகையில் ஈடுபட்டார்கள். இந்தியாவிற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டபோது அவர்கள் கண்டியில் இருந்த மண்ணினை எடுத்து வந்து காமன் கோவில் அமைத்து ஆற்றுகை செய்தார்கள். பரசன் குளத்துக்குப் புலம்பெயர்ந்து மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் வாழ்ந்தாலும் தமது பாரம்பரிய, பண்பாடுகளையும் கலைகளையும் பேணி வந்தார்கள். இவர்களால் பரசன்குளப் பிரதேசத்தில் காமன்கூத்து நீண்டகாலம் ஆற்றுகை செய்யப் பட்டது. பரசன் குளத்தில் கூத்தானது நிலைத்திருக்காமைக்கான காரணங்களை கண்டறிவதால் மீண்டும் கூத்து ஆடுவதற்கான சாத்தியப் பாடுகளை அறிதல் என்பனவே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வின் மூலம் பரசன்குளம் காமன் கூத்தின் தனித்துவத்தினையும், அது அப்பிரதேச மக்களின் வாழ்வியலுடனும் பண்பாட்டுடனும் பிணைந்துள்ள வகை என்பவற்றை விளங்கிக் கொள்ள முடியும். அத்துடன் அதை மீண்டும் ஆடுவதற்கான உத்வேகத்தையும் ஏற்படுத்த முடியும்.

**திறவுச் சொற்கள்:** காமன்கூத்து, புலப்பெயர்வு, வளர்ச்சி, சமூக கட்டமைப்பு, நிலைதில்லாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறுபட்ட நெறியாள்கை அணுகுமுறைகளும் நெறியாள்கை நோக்கு நிலையும் : யாழ்ப்பாண அரங்க ஆற்றுகைகளினை அடிப்படையாக கொண்ட ஆய்வு

**கீதாஞ்சனா, ஜெ., ரதிதரன், க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
keethajeyam@gmail.com

*ஈழத்து தமிழ் நாடக அரங்கில் எழுந்துள்ள நாடகங்களின் நெறியாள்கை முறைமையில் காலவோட்டத்தில் நெறியாளர்களினால் மாற்றங்கள் ஏற்படுத் தப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வானது, ஈழத்து தமிழ் நாடக அரங்கில் சம கால அரங்கப் படைப்புகளில் நெறியாள்கை முறைமையின் போதாமையை பிரச்சினையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமகால நாடக நெறியாள்கை முறைகள் எவை? நெறியாள்கையில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன? ஏன் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? என்ற ஆய்வு வினாக்களுக்கான பதில்களை தேடுவதாக ஆய்வானது அமையப்பெற்றுள்ளது. மேலும் வேறுபட்ட நெறியாள்கை முறைகளினை ஆராய்ந்து, அதற்கான காரணங்களைக் கண்டறிவதன் மூலம் அரங்க ஆற்றுகைகள் எழுந்த ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழ்ந்துள்ள ஆற்றுகைகளை இனங்கண்டு அவற்றின் நெறியாள்கை முறைமைகளை அறிவதுடன், சமகாலத்தில் அரங்கு எவ்வாறு இயங்குகின்றது என்பதனையும் ஆராய்வதாக இது அமைந்துள்ளது. இது பண்புசார் அணுகுமுறையில் நோக்கப்பட்டு, நேர்காணல் மற்றும் ஆற்றுகைகளை அவதானிப்பு என்பன மூலம் தரவுகளைத் திரட்டி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஈழத்து தமிழ் அரங்க ஆற்றுகைகளின் நெறியாள்கையினை ஆராய்கின்ற போது பாரம்பரிய அரங்கில் நாடகமானது இலக்கியமாக எழுதப்பட்ட நிலையில் கொண்டு வரப்படுகின்றது. அவ்விலக்கியமானது எழுத்துருவாக்கப்பட்டு, நாடகமாக மேடையேற தொடங்கியதி லிருந்து, எழுத்துருக்களினை அடிப்படை யாகக் கொண்ட நெறியாள்கை முறைமையே ஈழத்துத் தமிழ் நாடக அரங்கிலே காணப்பட்டது. அம்முறைமையானது கால வோட்டத்திலே மாற்றமடைந்து வருவதினை அவதானிக்க முடிகிறது. நாடகத்திற்கான எழுத்துருக்கள் உருவாக்கப்படுகின்ற முறையிலே மாற்றங்கள் ஏற்படுவதுடன், சமகால நாடக நெறியாள்கையில் பல புதிய விடயங்கள் இணைக்கப்பட்டும், சில விடயங்கள் தவிர்க்கப் பட்டும், நெறியாள்கை முறையானது மாற்றமடைந்து வருவதினையும் அவதானிக்க முடிகிறது. நாடக நெறியாள்கை முறையிலே எழுத்துரு நீக்கப்பட்ட நெறியாள்கையானது சமகால நெறியாளர்களினால் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. அது சார்ந்த தகவல்களும் காரணங்களும் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, ஆய்வினூடாக பெறப்பட்ட பெறுபேறாக வேறுபட்ட நெறியாள்கை முறைகளினை ஆராய்ந்ததன் மூலம் காலப்பின்னணி நெறியாள்கை முறையில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான முக்கியமான ஒரு காரணியாக அமைப்பெற்றுள்ளமையினையும் காலத்தின் தேவையும் பார்வையாளர்களுக்கு அவசியமானது எது என்பதனையும் நோக்கியே நெறியாளர்களது நாடக நெறியாள்கை முறைமைகள் நகர்ந்துள்ளன என்பதையும் கண்டறிய முடிகின்றது. இதனை அடித்தளமாக கொண்டு எதிர்காலத்தில் நாடகங்களை அடுத்தகட்ட நிலைக்கு கொண்டுசெல்வதற்கு இவ் வாய்வானது துணை புரிவதுடன், அரங்க ஆற்றுகைகளை நெறிப்படுத்தும் நெறியாளர் களுக்கும் நாடக கலைஞர்களுக்கும் ஈழத்து அரங்க வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களினை இனங்காட்டுவதாக இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** அரங்கு, அளிக்கைமுறை, செயல்முனைப்பு, படைப்பாக்கம், தீராத்தேடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History, Heritage and Culture

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலனறுவைக்கால சந்திரவட்டக்கற்கள் – ஓர்ஆய்வு

**மதுஷா, சி. , சாந்தினி, அ.**

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

smathu648@gmail.com

இலங்கையின் கலைப் பாரம்பரியமானது வரலாற்று உதய காலத்திற்கு முன்பே தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றாகும். இந்தியாவிற்கு அண்மையில் இலங்கை காணப்படுவதால் அங்கு தோற்றம் பெற்ற சமய கோட்பாடுகளும் தத்துவங்களும் நடைமுறைகளும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட கலை வளர்ச்சியும் இலங்கையிலும் செல்வாக்கு பெற்றிருந்தது. இலங்கைக்கு பௌத்தசமயத்தின் செல்வாக்கு ஏற்படுவதற்கு முன்னர் இருந்தே கலைவடிவங்கள் வளர்ந்துவந்த வரலாற்றைத் தொல்லியல் ஆதாரங்கள் எமக்குக் காட்டுகின்றன. மரம், கற்களை வழிபடும் மரபிலிருந்து விடுபட்டு பௌத்தத்தின் வருகையைத் தொடர்ந்து தாதுகோபங்கள், விகாரைகள் என்பவற்றுடன் சிற்ப,சித்திரகலைகளும் வளர்ச்சியுற்றன. இதன்பின்னணியில் உருவாகியதே இலங்கையின் சிற்பக்கலை வளர்ச்சியாகும் அவ்வகையில் இலங்கையின் கலை வரலாற்றில் சுதேச பாரம்பரியங்களும் விழுமியங்களும் முற்று முழுதாக பிரதிபலிக்கும் நிலையில் வளர்த்தெடுக்கப்பட்ட சிற்பக் கலை கூறுகளில் ஒன்றாக சந்திரவட்டக்கற்கள் கலைமரபு அடையாளம் காணப்படுகின்றது. சந்திரவட்டக்கல் கலை மரபானது பலதரப்பட்ட முறையில் பல கோணங்களில் ஆட்சி மாற்றங்களாலும் பல்வேறு கலைமரபின் செல்வாக்கினாலும் தனக்கென்று ஒரு தனித்துவத் தோடு வளர்ச்சி கண்டு வந்துள்ளது. முதன்முதலில் சந்திரவட்டக்கற்கள் அலங்காரத்திற்காக அமைக்கப்படவில்லை உருவங்களைக் கொண்டு ஏதோ ஒரு காரணத்தை விளங்க வைப்பதற்காக அமைக்கப்பட்டன. காலமாற்றத்தின் பின்னர் அவை அலங்காரகற்களாக மாறியிருக்கின்றன. சந்திரவட்டக்கல்லானது ஒரு பௌத்த வழிபாட்டுத்தலத்தின் வாயிலிலோ அல்லது புத்தர் சிலையகத்தின் முன்போ அல்லது ஸ்தூபியின் வாயிலிலோ, அரண்மனையிலோ படிகளின் அடித்தளத்தில் அரைவட்ட வடிவம் உடையதாக காணப்படும் ஒரு கற்பலகை என அடையாளம் காணலாம். இக்கல்லின் மத்தியில் ஒரு அரைவட்ட தாமரை உருவமும் சுற்றிவர ஒழுங்காக வளைந்து செல்லும் கோடுகளிடையே பலவகை மிருக, பறவை உருவங்கள் வரிசையாக செதுக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள உருவங்கள் காலப்போக்கில் மிகவும் பிரம்மாண்டமான உருவில் செதுக்கப்படலாயின. இவை சிங்களவரின் கலைத்திறனை எடுத்துக்காட்டுவதுடன் அதன் மூலமாக அக்கால அரசியல்,பொருளாதார, சமூக, பண்பாட்டை அறிந்துகொள்ளவும் உதவுகின்றன. இக்கலை மரபின் வளர்ச்சிக் கட்டமானது அனுராதபுரக்காலம், பொலனறுவைக்காலம், கம்பளைக் காலம், கண்டிநகர் காலம் என்ற அடிப்படையில் அமைகின்றன. இவற்றில் பொலனறுவைக் கால சந்திரவட்டக்கற்கள் முக்கியமானவை. இன்றைய காலத்தில் சந்திரவட்டக்கற்கள் தொடர்பான தேடல்கள் குறைவாக உள்ளமையும் பொலனறுவைக்கால சந்திரவட்டக்கற்கள் பற்றிய செய்திகள் குறைவாக உள்ளமையும் வரலாற்றினூடாக அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக அவற்றைப் பற்றியும் அவை வெளிப்படுத்துகின்ற அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களையும் கண்டறிதல் மற்றும் பௌத்த சமய கலை பின்னணியுடன் பிணைக்கப்பட்டு இருந்த அனுராதபுரகால சந்திரவட்டக்கற்களில் இருந்து இந்து சமயப் பின்னணியில் பிணைக்கப்பட்டுள்ள பௌத்தசமயம் சார் சந்திரவட்டக்கற்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப்பற்றியும் ஆராய்வது இவ்வாய்வின் பிரதான நோக்கமாக உள்ளது. வரலாற்று ஆய்வு அணுகுமுறை மற்றும் கலை வரலாற்றுஆய்வு அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வாய்வு அமைந்துள்ளதுடன் முதற் தரமற்றும் இரண்டாம் தர ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலமாக இலங்கையின் சந்திரவட்டக்கற்களை வரலாற்றில் பொலனறுவைக்கால சந்திரவட்டக்கற்கள் தனித்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதுடன் இதுவரை காலமும் இல்லாத வகையில் இந்து சமயப்பின்னணியுடன் பினணக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஆகவே பொலனறுவைக்கால சந்திரவட்டக்கற்கள் ஏனையகால சந்திரவட்டக் கற்களின் மரபிலிருந்து தனித்துவமாக காணப்படுவதுடன் அக்கால அரசியல், பொருளாதார, சமூக, சமய அம்சங்களை வெளிப்படுத்துகின்றமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**திறவுச்சொற்கள் :** கலை, பண்பாடு, சமயம், மரபு, விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்களின் ஆட்சியில் திருகோணமலை ஒரு வரலாற்றாய்வு

**டிலக்சிகா, யோ., கிருஷ்ணராஜா, செ.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
dilaksika973@gmail.com

இவ்வாய்வானது "சோழர்களின் ஆட்சியில் திருகோணமலை ஒரு வரலாற்று ஆய்வு" என்ற தலைப்பில் அமைகின்றது. தென்னிந்திய பேரரசுகளுள் கடல் கடந்த பேரரசாக காணப்பட்டவர்கள் சோழப் பேரரசு ஆகும். கி.பி பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சோழப் பேரரசினை கடல் கடந்து விரிவடையச் செய்த சோழப் பேரரசர்களாக முதலாம் இராஜராஜன் மற்றும் அவன் மகன் முதலாம் இராஜேந்திரன் போன்றோர் காணப்படுகின்றனர். இவர்களின் கடல் கடந்த பேரரசுக் கொள்கையின் போது இலங்கை முக்கிய கேந்திர மையமாக விளங்கியதுடன் திருகோணமலைத் துறைமுகம் ஓர் முக்கிய தேவையாகவும் காணப்பட்டது.இதன் விளைவாக சோழப் பேரரசர்களின் ஆதிக்கத்திற்கு இலங்கை முழுவதும் உட்பட்டதுடன் திருகோணமலையை மையப்படுத்தி அவர்களின் அரசியல், நிர்வாக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் யாவும் காணப்பட்டன. இதனைச் சோழர்கால சான்றுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த ஆய்வின் நோக்கங்களாக திருகோணமலைப் பகுதியில் சோழர் ஆதிக்கம் ஏற்பட்ட இடங்களை அடையாளப்படுத்தல், தொல்லியல் மூலாதாரங்களை அடையாளப்படுத்தல், திருகோண மலைத் துறைமுகம் பெற்ற முக்கியத்துவத்தை ஆராய்தல், சோழர் ஆட்சியில் திருகோணமலையை மையப்படுத்திய அவர்களின் அரசியல், நிர்வாக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளையும் அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளை வெளிப்படுத்தல் போன்றன உள்ளடங்குகின்றன. இவ் ஆய்வின் அணுகுமுறையானது வரலாற்று அணுகுமுறை, விபரணவியல் அணுகுமுறை, கள ஆய்வு முறை போன்ற அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் முதல் நிலை தரவுகளாக சோழர் காலம் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுச் சான்றுகளும் பாளி இலக்கியங்கள், தென்னிந்திய சான்றுகளும் இரண்டாம் நிலை தரவுகளாக வரலாற்று ஆய்வாளர்களின் நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்தரவுகள் போன்றவற்றின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் சோழர்களின் இலங்கை மீதான ஆதிக்கத்தின்போது திருகோணமலையை மையப்படுத்தியே அவர்களின் அதிகமான நடவடிக்கைகள் காணப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** சோழர்கள், திருகோணமலை, தென்னிந்தியப்பேரரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரசாலைக் கிராமத்தின் மறக்கப்படாத மரபுரிமை அம்சங்கள் – ஓர் ஆய்வு

**கிருத்திகா, சி., புஸ்பரட்ணம்.ப**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kirikirish10@gmail.com

*மரபுரிமையானது ஓர் குழுவால், சமூகத்தால் பின்பற்றப்பட்டதும், நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினருக்கு கொடுக்கப்பட வேண்டியதுமாகும். இம்மரபுரிமைகள் கடந்த காலத்தை பற்றி அடையாளப்படுத்துப வையாய் உள்ளன. பொதுவாக 100 வருடங்களுக்கு மேற்பட்ட அனைத்தும் மரபுரிமை வளங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பிரதேசமும் தமக்கே உரிய, தனித்துவமான பல்வேறு மரபுரிமை அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றன. இம்மரபுரிமை அம்சங்கள் ஒரு சமுதாயத்தின் உண்மையான வரலாற்றை எடுத்துக் கூறுவதாய் உள்ளன. இவை இயற்கை மரபுரிமை, கலாசார மரபுரிமை என இரண்டாக வகைப்படுகின்றன. இயற்கையாக அமைந்த அம்சங்கள் இயற்கை மரபுரிமையாகவும், நினைவுச்சின்னங்கள், கட்டிடங்கள், வரலாற்று சின்னங்கள், தொல்பொருட்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், கலையம்சங்கள் போன்றன கலாசார மரபுரிமையாகவும் அமைகின்றன. இத்தகைய மரபுரிமை அம்சங்கள் ஒரு இனக்குழுவின், சமுதாயத்தின் வாழ்வியலைப் பிரதிபலித்தல், கடந்த காலத்தை அறிந்து எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப உதவுதல், ஒரு இடத்தின் வரலாற்றுப் பெறுமதியை அதிகரித்தல், மூதாதையினரின் கடந்தகால வாழ்க்கை முறை, கலையம்சங்கள் பற்றி அறிய முடிதல், ஒரு இனம், சமூகம் தனது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துதல், சுற்றுலாத் துறையின் விருத்திக்கு முதுகெலும்பாக அமைதல், சமூக ஒருங்கிணைப்பு, பல்லினப் பண்பாடு, தேச, கலாசார ஒருங்கிணைப்புக்கு உதவுதல் போன்ற காரணங்களால் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இம்மரபுரிமை அம்சங்களானவை நகர்ப்புற வாழ்க்கை முறை, அரசின் அசமந்த போக்கு, தொழில்நுட்ப சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சி, மக்களிடையே மரபுரிமை சின்னங்கள் தொடர்பான விழிப்புணர்வு காணப்படாமை, பாரம்பரிய பொருட்களை உபயோகிப்பது அநாகரிகமானது எனக் கருதுதல், வெளிநாட்டு பண்பாடு, பாரம்பரியம் மீதான மோகம், போதிய அளவு நேரமின்மை, பொருளாதார மேன்மை, கல்வி நிலை உயர்வு, அரச சார்பற்ற உத்தியோகங்களில் பணிபுரிதல், பாரம்பரிய மரபுரிமை சின்னங்கள் பாவனைப் பொருட்களை விலைக்கு விற்றல், மக்கள் இயந்திர வாழ்க்கைக்கு பழக்கப்படல், பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை கைவிடல், சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனை, இயற்கை அனர்த்தங்கள், யுத்த நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் இன்று அழிவடைந்து வருகின்றன. அந்த வகையில் இவ்வாய்வுப் பிரதேசமான தென்மராட்சியில் அமைந்துள்ள சரசாலைக் கிராமத்தின் தனித்துவமான மரபுரிமை அம்சங்களினை ஆராய்ந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு, அவற்றை ஆவணப்படுத்துவதும், அவற்றை பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இக்கிராமத்தில் மறக்கப்பட்டு வரும் மரபுரிமை அம்சங்களையும், மறக்கப்பட்டு வருவதற்கான காரணங்களையும், பேணிப் பாதுகாத்து வருவதற்கான காரணங்களையும் இனங்காண்பதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும். இவ்வாய்வு நோக்கத்தினை நிறைவு செய்யும் பொருட்டு, ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வின் ஊடான நேரடி அவதானிப்புகள் ஊடாகவும், நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்வதன் ஊடாகவும் பெறப்பட்டுள்ளன. மேலும் இரண்டாம்நிலைத் தரவுகள் ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய கட்டுரைகள், நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. இந்தவகையில் இக்கிராமத்தில் குருவிக்காட்டு இயற்கைக் கண்டல் தாவரப் பகுதி, பாரம்பரிய வீடுகளான நாற்சார் வீடுகள், தலைவாசல் வீடு, திண்ணை வீடு, ஆவுரஞ்சிக் கற்கள், பாரம்பரிய வேலியமைப்பு முறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத ஆலயங்கள், பழக்கவழக்கங்கள், பேச்சுவழக்கு மொழிநடைகள், நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள் போன்றனவற்றை தனித்துவமான மரபுரிமை அம்சங்களாக அடையாளப்படுத்தமுடிகின்றது. அவ்வகையில் பாரம்பரிய பாவனைப் பொருட்கள் மற்றும் பண்பாட்டு அம்சங்களின் முக்கியத்துவங்களை உணர்த்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களாக கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் என்பவற்றை மேற்கொள்ளுதல். மரபுரிமை அம்சங்கள் பற்றிய முக்கியத்துவங்களை மாணவர்களிடையே கொண்டு சேர்த்தல், பாடசாலைக் கல்வியில் மரபுரிமைகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான பாடத்திட்டங்களை அரசு கொண்டுவருதல், இங்குள்ள இயற்கை சார்ந்த, கலாசாரம் சார்ந்த மரபுரிமை அம்சங்களை அழிவடையாது பேணிப் பாதுகாத்து, அவற்றை சுற்றுலா ரீதியாக அணுகுதல், மரபுரிமைப் பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்கி அவற்றின் ஊடாக மரபுரிமைப் பாதுகாப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக இக்கிராமத்தின் தனித்துவமான மரபுரிமை அம்சங்களினை ஓரளவேனும் பாதுகாக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** சரசாலை, மரபுரிமை அம்சங்கள், பராம்பரிய பண்பாடுகள், குருவிக்காடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாவிற்கான வளங்களும் வாய்ப்புக்களும் - ஓர் ஆய்வு
# வழுக்கையாற்றுப் படுக்கையினை அடிப்படையாகக் கொண்டது

**ஜெனீபன், ஜெ., சிவகுரு, ச.**

வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Jenipan3994@gmil.com

*வழுக்கையாற்றுப் படுக்கையினை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாவிற்கான வளங்களையும் வாய்ப்புகளையும் அடையாளப்படுத்தும் முகமாக அமைந்த இவ் ஆய்வானது. யாழ் மாவட்டத்தின், வலிகாமத்தில் காணப்படுகின்ற பருவகால ஆறாகிய வழுக்கையாற்றினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு சுற்றுலாவிற்கான வளங்களையும், வாய்ப்புகளையும் ஆய்வு செய்கின்றது. வழுக்கையாறும் அதோடு இணைந்த நிலங்களும் பண்டுதொட்டு யாழ் மண்ணின் பண்பாடு உருவாவதற்கு பங்களிப்புச் செலுத்தியவையாகும். இங்கே காணப்படுகின்ற கந்தரோடை தொல்லியல் மையமானது அனுராதபுரம், பொலனறுவை ஆகியவற்றிற்கு நிகரான தொல்லியல் மையமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. வலிகாமம் வடக்கிலுள்ள மயிலிட்டி, ஆனைக்கோட்டை யில் காணப்படும் மனிதப்புதைபடிமங்கள் ஆகியன இப்பகுதியின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்புவனவாக அமைகின்றன. யாழ்ப்பாணச் சுற்றுலாவில் காணப்படுகின்ற சுற்றுலாத் தளங்களுக்கான பற்றாக்குறையினை நீக்கும் நோக்கிலும், புதிய முதலீடுகளை சுற்றுலாவில் ஊக்கப்படுத்தும் நோக்கிலும் ஒரு புதிய வளவாய்ப்பினைக் கண்டறிவதற்கான முனைப்போடு வழுக்கையாற்றுப் படுக்கையில் காணப்படுகின்ற இயற்கை மற்றும் பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்தி அவற்றில் எவ்வாறான சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கான திட்டமிடல்களை இவ் ஆய்வின் மூலம் முன்வைக்கின்றேன். இவ் ஆய்வினை முன்னெடுக்கும் முகமாக பல்வேறு மூலங்களில் இருந்து தரவுகளைப் பெறவேண்டியிருந்தது. அந்தவகையில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கள அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொண்டதோடு, இப்பகுதியின் பல்வேறு விதமான இடங்களை அடையாளம் காண்பதற்கும், அளவுகளை மேற்கொள்வதற்கும் வரைபட வேலைப்பாடுகளை மேற்கொண்டதோடு, தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த நூல்களில் இருந்து எனது ஆய்வுப் பகுதியின் பண்பாட்டுப் பின்புலங்களை பெற்றுக்கொண்டிருந்தேன். எதிர்காலத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு புதிய திட்டமிடல் முறைகள் பற்றிய இணையவழித் தரவுகளையும் பெற்றுக்கொண்டேன். இவ் ஆய்வின்பொழுது சுற்றுலாவிற்கான வள வாய்ப்புகளாக இவ் ஆய்வுப்பிரதேசத்தில் பருவகாலங்களில் மேற்கொள்ளக்கூடிய படகுச் சவாரி மற்றும் பறவைகளைப் பார்வையிடுதல், வயல் நிலங்களின்மீதான சுற்றுலா நடவடிக்கைகள் ஆகியவற்றை அடையாளப்படுத்தியதோடு பண்பாடு சார்ந்து காணப்படுகின்ற மிக முக்கியமான இந்து ஆலயங்கள், ஐரோப்பியர்கால கட்டமைப்புகள், பாரம்பரியமான சந்தைகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் மடப்பண்பாட்டிற்குரிய கட்டுமானங்கள் ஆகியவற்றையும் அடையாளப்படுத்தி, அவற்றை பார்வையிடுவதற்கான வழித்தடத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வுப்பிரதேசம் பரந்த ஒன்றாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றமையால் வழுக்கையாற்றுப் படுக்கையில் காணப்படுகின்ற தனித்துவமான தாவரப்பல்வகமை மற்றும் இந்து ஆலயங்களின் பண்பாட்டுச் சிறப்புகள் மற்றும் ஆய்வு செய்யப்பட வேண்டிய தொல்லியல் மையங்கள், வழுக்கையாற்றின் சமதரை வடிகாலமைப்புமுறை, அதன் தற்போதைய நிலை ஆகிய பல்வேறு கோணங்களில் எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தேவை காணப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:-** பருவகால ஆறு, மயிலிட்டி, மடப்பண்பாடு, சமதரை வடிகாலமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பண்பாட்டு உருவாக்கத்தில் வணிக கணங்களின் வகிபாகம் – கி.பி 09 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டு வரை

**லியானா, கா. , கிருஷ்ணராஜா, செ.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
liyana30.1997@gmail.com

*இலங்கையானது பன்னெடுங்காலமாக கடல்சார் வர்த்தகத்திலும், பண்பாட்டிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இந்நிலையில் காலத்துக்கு காலம் இலங்கையின் அமைவிட முக்கியத்துவத்தின் காரணமாக பல நாடுகளும் இந்நாட்டுடன் தொடர்பினை ஏற்படுத்தி வந்துள்ளதை காணலாம். குறிப்பாக இந்தியா, சீனா, கிரேக்கம், உரோம் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இந்நிலையில் இலங்கையின் அயல்நாட்டு தொடர்பானது இங்கு பண்பாடு விரிவடைய காரணமானது. இலங்கையின் பண்பாடு பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை உடையதாக இருந்ததாலும் இதற்கு அடித்தளமாக அக்கால வர்த்தகமே அடிப்படையாக அமைந்து கொண்டது. இலங்கைக்கு அண்மையில் இந்தியா காணப்படுவதால் இந்திய நாட்டுடன் அதிகளவான வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டுக் கொண்டன. இவ் வர்த்தக தொடர்பில் வணிக கணங்களின் செல்வாக்கு ஒரு அடித்தளமாக காணப்பட்டது. இவ் வணிக கணங்களின் வர்த்தகத்தில் மட்டுமல்லாது பண்பாட்டிலும் ஒரு வித தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இந்தியாவில் பல்லவருடைய ஆட்சியில் ஏற்பட்ட கடலாதிக்க கொள்கையின் விளைவாக இலங்கைக்கு வணிக கணங்களின் செல்வாக்கு ஏற்பட்டதை தொடர்ந்து இலங்கையில் சோழராட்சியின் உச்ச வளர்ச்சி யடைந்து ஒரு ஸ்திரமான இடத்தைப் பெற்றுக் கொண்டது. குறிப்பாக நானாதேசிகர், வீரவலஞ்சியர், ஐந்நூற்றவர், திசையாயிரத்து ஐந்நூற்றவர், மணிக்கிராமத்தார் போன்ற வணிக குழுக்களும் வேறு பல வணிக குழுக்களும் இலங்கையின் அரசியல், பொருளாதார பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. இவற்றுள் வர்த்தக நோக்கத்தை மையப்படுத்திய பண்பாட்டு விருத்தியானது பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய காலமாக கி.பி 09ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி விளங்குகின்றது. இதனை தொல்லியல் சான்றுகளும், ஆரம்ப கால இலக்கிய குறிப்புக்களும் எடுத்துக் காட்டுகின்றன. அதன் அடிப்படையில் இலங்கையில் பண்பாட்டு வளர்ச்சியில் வணிக கணங்கள் ஏன் ஆர்வம் காட்டினார்கள் என்பதை கண்டறிய வேண்டியது அவசியமானதாகும். இதன் பின்னணியில் வர்த்தகத்தை மையப்படுத்தி காணப்பட்ட வணிக கணங்களின் செல்வாக்கினைப் பண்பாட்டு அடிப்படையில் எடுத்துக்காட்டல், அவ் வணிக கணங்களால் இலங்கையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை கண்டு கொள்ளுதல் இவ் ஆய்வினுடைய நோக்கங்களாகும் இவற்றை முதல்நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று அணுகுமுறைசார்ந்த பண்புசார் ஆய்வு முறையில் இலங்கைப் பண்பாட்டில் வணிக கணங்களின் வகிபாகம் என்ற அடிப்படையில் இவ் ஆய்வானது அமைகின்றது.*

**திறவுச்சொற்கள் :** வணிக கணங்கள், பண்பாடு, வர்த்தகம், இலங்கை, சோழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசழமைச் சட்டக்கோவையினால் அறியப்படும் பெண்களது உரிமைகளும் நடைமுறைகளும் – ஓர் ஆய்வு

**சிவறஞ்சினி, இ., கிருஷ்ணராஜா, செ**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rasathuraisivaranjini@gamil.com

தென்னாசியாவில் நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையானது ஏறக்குறைய 450 வருட கால அந்நியராட்சிக்கு உட்படுத்தப்பட்டு மேலைத்தேய முலாமிடப்பட்ட நாடாகும். இதனால் இலங்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டன. அவ்வகையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்ட தேசவழமைச் சட்டம் முதன்மையானதாகும். இலங்கையில் வாழும் மக்கள் பல்வகைச் சட்டங்களால் ஆளப்பட்டு வருகின்ற போதும் வடமாகாணத் தமிழர்கள் அறிந் திருக்க வேண்டிய விசேட சட்டங்களில் ஒன்றாகச் தேசவழமைச் சட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாண இராசதானி காலத்தில் நிலவிய வழமைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்ததை அவதானித்த போர்த்துக்கேயர் அவற்றை ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தனர். ஒல்லாந்தர் காலத்தில் தேசவழமை டச்சு மொழியில் கோவைப்படுத்தப்பட்டு தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் பின்பற்றப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. தேசவழமைச் சட்டத்தில் வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் முதுசம், சொத்துரிமை, சீதனம், தத்தெடுக்கும் சட்டங்கள், அடிமைச் சட்டங்கள், விவாகரத்து போன்றன சம்பந்தமான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கியமாகப் பெண் உடைமைகள், உரிமைகள் பற்றியும் விபரமாக வரையறை செய்கின்றது. தேசவழமைச் சட்டத்தில் குறிப்பிடப்படும் பெண்களது உரிமைகளையும் நடைமுறைகளை யும் முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வுக்கு முதலாம்நிலைத் தரவுகளாக தேசவழமைச் சட்டக் கோவையினுடைய மூலப்பிரதி, தேசவழமைச் சட்டம் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் அறிக்கைகள், நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் ஆகியனவும் இரண்டாம்நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் அரசாங்க வெளியீடுகள் இணையத்தளக் கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. இது வரலாற்று அணுகுமுறையில் அமைந்த விபரண ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது. தேசவழமைச் சட்டமானது வடஇலங்கைத் தமிழ் மக்களின் முக்கிய அங்கமாக விளங்குவதுடன் பெண்களுக்கான உரிமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. இச்சட்டம் பெண்களை இழிவுபடுத்துவதாகப் பலராலும் விமர்சிக்கப்படு கின்ற போதிலும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் நடைமுறை யிலுள்ளது என்பதனை இவ் ஆய்வின் ஊடாக அறிய முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** தேசவழமை,சட்டம், பெண், சொத்து, உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்களின் பங்களிப்பு – அநுராதபுர மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டது.

**செல்வி நூர் மொஹமட் பாத்திமா றிபானா, அருந்தவராஜா,க.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**rifananoori97@gmail.com**

இலங்கையில் இஸ்லாமியர்களின் வரலாறானது நீண்டகாலத்தினைக் கொண்டுள்ளது. இவர்கள் தமது சமூக, கலாசார மற்றும் கல்வி நிலை வளர்ச்சிக்கு தங்களுக்கெனச் சொந்தமான நிறுவனங்களினை உருவாக்கியுள்ளனர். மார்க்கத்தைப் பற்றிய நுண்ணறிவும், போதனையும், பயிற்சியும் மற்றும் உலகக்கல்வியினையும் வழங்கும் தளமாக மத்ரஸா எனும் ஸ்தாபனமானது உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை இஸ்லாமியர்கள் இஸ்லாத்தின்மீது கொண்டிருந்த பற்றும், தமது கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்குச் சமயத்தைப் பேணுவதே ஒரே வழி என்று அவர்கள் சிந்தித்தமையும் அவர்களிடையே இம் மத்ரஸாக்கள் செல்வாக்குப் பெறக் காரணமாகியதெனலாம். இலங்கையில் மத்ரஸாக்களின் தோற்றத்துக்கு இந்தியாவில் காணப்பட்ட மத்ரஸாக்கள் பாரிய தாக்கம் செலுத்தியுள்ளன. முஸ்லிம்களின் ஆதிக்குடியேற்றத்திலிருந்து இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே நிலவிய கலாசார உறவுகளையும், வர்த்தகத் தொடர்புகளையும் வரலாற்றுப் பின்னணியையும் நோக்கும்போது இதனை அறியலாம். இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்ரஸாக்களின் எழுச்சி ஏற்பட்டது. இதற்கு முன்னர் முறைப்படுத்தப்பட்ட பாடப்போதனைகளும், நிர்வாக அமைப்புக்களும் காணப்படவில்லை. இவ்வாறு இருக்க இலங்கை வரலாற்றில் முதல் மத்ரஸாக் கல்வி நிலையமாக "மத்ரசத்துல் பாரியே" உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் எல்லா நகரங்கள், கிராமங்களிலும் இவை தோற்றம்பெற்று முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களத்தில் அவை பதிவு செய்யப்பட்டு, அரச அங்கிகாரம் பெற்ற மத்ரஸாக்களாக இன்று வரை தமது பணியைத் தொடர்ந்து வருகின்றன. இதுவரை இலங்கையில் 250 மத்ரஸாக்கள் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 400இற்கும் அதிகமான மத்ரஸாக்கள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தில் மத்ரஸா என்ற அமைப்பானது ஆரம்பத்தில் காணப்படவில்லை. நல்லதோர் இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணப் பாங்கின் விளைவாக 1995 இல் முதல் மத்ரஸாவான ஜமாலியா ஆண்கள் மத்ரஸா உருவாக்கப்பட்டது. தொடர்ந்து தற்காலம் வரை அநுராதபுர முஸ்லிம் மாணவர்களிடையே ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் தாக்கத்தால் சுமார் 15க்கும் மேற்பட்ட மத்ரஸாக்கள் அங்கே தோன்றி வளர்ந்து வந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. அநுராதபுர மாவட்ட இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்களின் பங்கானது பிரதான இடத்தைப் பெறுகின்றது. மத்ரஸாக்கல்வி முறையினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குப் பங்காற்றியவர்களின் சேவைகளும் போற்றத்தக்க ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. குறிப்பாக அநுராதபுர மாவட்டத்தில் ஆரம்பத்தில் பெண்களுக்கான மத்ரஸாக்கள் வழங்கிய கல்வி நிலையிலும் பார்க்க முன்னேற்றம் கண்டதொரு நிலை காணப்படுகின்றது. அத்துடன் அவை பல சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றன. அதனால் அவற்றுக்கான தீர்வுகள் அநுராதபுர மாவட்ட உலமாசபை ஒன்றியம் எடுக்கவேண்டும். அரசும் இதற்குப் போதிய உதவிகளை வழங்க வேண்டும், மத்ரஸாக்களும் தகுதியானவர் களைத் தெரிவுசெய்து கற்பித்தல் செயற்பாடுகளினை மேற்கொள்ள வேண்டும், மார்க்கக் கல்வியோடு இணைந்து செயற்பட பாடசாலைக்கல்விக்கான சம சந்தர்ப்பங்களினை அதிகம் வழங்க வேண்டும் மற்றும் பெண்களின் நிலை மேலும் உயர்த்த வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறாக சீரமைப்பதனூடாக முன்னேற்றத்தைக் காணலாம். இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த விவரண ஆய்வாகக் காணப்படுவதோடு இவ்வாய்வில் முதல்தர மற்றும் இரண்டாம்தர ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய அநுராதபுர மாவட்ட இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்கள் ஏற்படுத்திய செல்வாக்கை விரிவாக ஆராய்வதே இவ் ஆய்வினது பிரதான நோக்கமாக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** மத்ரஸாக்கள், கல்வி வளர்ச்சி, ஆலிம்கள், ஹாபிழ்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவகிராமம் அளிக்கம்பை மக்களின் வரலாறும் பண்பாடும்

தனுஜா, க., சாந்தினி,அ.
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tthanuja@gmail.com

உலகில் நாகரிகத்தின் தொடக்கம் நதிக்கரையோரங்களில் இருந்து உருவாக்கம் பெற்றது. நாகரிக உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள வளங்கள் குறைவதனாலும் இயற்கையான அனர்த்தம் ஏற்படும் சூழ்நிலையிலும் பல நாகரிகங்களும் அங்குள்ள மக்களும் அழிந்து போனதை வரலாற்றில் காணலாம். அவ்வாறான சூழ்நிலையில் எஞ்சிய மக்கள், குழுவாக வேறு இடங்களுக்கு இடப்பெயர்வது இயல்பான ஒரு விடயமாக காணப்படுகின்றது. இலங்கைக்கு ஆரம்பத்தில் இந்தியாவின் பல திசைகளில் இருந்தும் மக்கள் குடியேறியதை காணக்கூடியதாக உள்ளது. இலங்கை வரலாற்றின் ஆரம்பகால முதல் இன்று வரை இந்தியத் துணை கண்டத்தில் இருந்தோர் வணிகம், நகரமயமாக்கம், (அரசியல்) குடியேற்றங்களை ஏற்படுத்தி எல்லையினை விஸ்தரிப்பு செய்தல், மன்னர்களின் திருமண தொடர்பு போன்ற பல்வேறுபட்ட முறைகளின் ஊடாக மக்களுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர். அவ்வகையில் இலங்கையில் தெலுங்கு மொழி பேசுகின்ற மக்கள் இந்தியாவில் இருந்து 15ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் வருகை தந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதனை உறுதி செய்கின்ற வகையில் சான்றுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வகையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேசப் பிரிவிற்குட்பட்ட தேவக்கிராமம் அளிக்கம்பை எனும் இடத்தில் தெலுங்கு மொழியை தாய் மொழியாகக் கொண்ட சமூகம் வாழ்ந்து வருகின்றது. ஆரம்பக் காலங்களில் நிலையான இடமின்றி வாழ்ந்த இவர்கள் 1950 ஆம் ஆண்டிற்கு பின்னரே ஒரு மதத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகமாக நிலையான இடத்தில் வாழ ஆரம்பித்தனர். இவர்கள் இலங்கைத் தமிழர் என்று இலங்கை அரசால் பதிவு செய்யப்பட்டவராகக் காணப்பட்டாலும், தங்களுக்குள் சுதேச மொழியைப் பேசாமை யினால் மற்றவர்களின் பார்வையில் வேற்று இனமாகவே காணப்பட்டனர். இம்மக்கள் பற்றிய எழுத்து மூலச் சான்றுகள் மிகக் குறைவாகும். இக்கிராம மக்களின் வரலாறு, அவர்களின் பண்பாட்டு என்பவற்றை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** இடப்பெயர்வு, தெலுங்கு, இலங்கைத் தமிழர், வனக்குறவர், மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஊற்றுப்புலம்” ஒரு தொல்லியல் நோக்கு

**லோஜிகா, இ., புஸ்பரட்ணம்,ப**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rasanayagamlogika@gmail.com

ஒரு நாட்டின் வரலாற்றை அறிவதற்கு முக்கிய ஆதாரமாக பார்க்கப்படுவது தொல்லியல் சான்றுகளாகும். இவற்றில் கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், கட்டிட அழிபாடுகள், மனித எச்சங்கள் என்பன சம்பவம் நடை பெற்ற காலப்பகுதியோடு நேரடியாக தொடர்பு கொண்டிருப்பதனால் உண்மைத் தன்மையான வரலாற்றை எழுதுவதற்கான உறுதியான சான்றாதாரமாகப் பார்க்கப்படுகின்றது. 125000 ஆண்டுகளுக்கு முன்னர் மனித பரிணாமம் நிகழ்ந்ததிற்கான சான்றுகள் இரணைமடு பகுதிகளில் கிடைக்கப் பெற்றதன் மூலம் வன்னி நிலப் பரப்பு பல ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீட்சியுடைய தொன்மையான வரலாற்றைக் கொண்டு விளங்கியமை உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு உயிர் நாடியாக அமைவது குளத்து நீர்பாசனமாகும். இவை பண்பாட்டுநாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டன. கலகலப்பாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த புதுமுறிப்புக்குளமானது ஊற்றுப்புல பிரதேசத்தின் நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டது. தமிழர்களின் வரலாற்று தொன்மையை புலப்படுத்தும் பல இடங்கள் இன்றுவரை ஆய்வுகளிற்கு உட்படுத்தப்படாமல் உள்ளன. அவ்வாறான இடங்களில் ஒன்று தான் கிளிநொச்சியில் உள்ள ஊற்றுப்புலப் பிரதேசமாகும். ஐந்தடி அல்லது ஆறடி ஆழம் கொண்ட கிணற்றில் நீர் ஊற்றெடுத்து வழிந்தோடிக் கொண்டிருப்பதனால் ஊற்றுப்புலம் எனப்பட்டது. இங்குள்ள மலைகளின் உச்சியில் செங்கட்டிகள் மற்றும் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிட அழிபாடுகள், மட்பாண்ட சிதைவுகள், தூண்கள், இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட கல்வட்ட ஈமைச் சின்னங்கள், கைவிரல் படிவுள்ள ஓட்டுத்துண்டங்கள், நாக வழிபாட்டு ஆலயங்கள் என தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரியத்தை, தமிழர்களின் மதங்களையும் வெளிச்சமிட்டு காட்டும் பிராந்தியமாக இப்பிராந்தியம் விளங்குகிறது. பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த தமிழர்கள் பௌத்த மதத்தை ஆதரித்ததை புலப்படுத்தும் அதேவேளை இந்து மதத்திற்கு முன்னோடியாக இருந்த குறியீடுகளும் தமிழர் இனக்குழுவாக வாழ்ந்ததையும் இயற்கையான நீரூற்றுக்கள் கொண்டிருந்ததன் பின்னணியில் பொருளாதார நடவடிக்கைக்கு சாதகமான காரணிகள் தொடங்கி விடப்பட்டதையும் இதன் பின்னனியிலே உயர்ந்த சமூகம் வாழ்ந்ததை இங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பகுதியானது தொல்லியல் மையமாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் விரிவான ஆய்வுகள் மேற் கொள்ளப் படாமையினால் தொல்லியல் சின்னங்கள் அழிவடைந்து வருகின்றன. இதனை தடுக்கும் முகமாக இத் தொல்லியல் மையம் தொடர்பாகவும் தொல்லியல் சின்னங்கள் தொடர் பாகவும் விழிப்புணர்வூட்டி தொல்லியல் மையத்தையும் தொல்லியல் சின்னங்களையும் வெளியுலகிற்கு கொண்டுவந்து ஆவணப்படுத்துவதாக இவ் ஆய்வு அமைகிறது. இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்விற்கான தரவானது சங்க இலக்கியங்களில் இருந்தும் கள ஆய்வுகள், நேர்காணல்கள், மற்றும் இரண்டாம் தரவுகளில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இம் மையத்தில் உள்ள தொல்லியல் சின்னங்கள் நடுநிலைமையுடன் ஆராயப்பட வேண்டும். இதனூடாக இப் பிராந்தியத்தின் தொன்மையினை புரிந்து கொள்ள முடியும். சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் இப்பிரதேசத்தினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்போது மரபுரிமை சின்னங்கள் பாதுகாக்கப்படும் என்பது எனது பரிந்துரைகளாக உள்ளன.

**திறவுச்சொற்கள்:** ஊற்றுப்புலம், தமிழர்கள், தொல்லியல் சின்னங்கள், ஆய்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மயிலிட்டி பிரதேசத்தில் காணப்படும் மரபுரிமைச் சின்னங்களின் நிலை – ஓர் ஆய்வு

**திருச்செல்வம், நி. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
thiruselvamthiru524@gmail.com

*மரபுரிமை என்பது ஓர் இனத்தினுடைய தனித்துவத்தினை அடையாளப்படுத்திக் காட்டும் விலைமதிக்க முடியாத சொத்து ஆகும். இது கடந்தகால மக்களுக்கும் நிகழ்கால மக்களுக்கும் இடையிலான ஊடகமாகச் செயற்பட்டு எதிர்காலத்தை தீர்மானிக்கவும் வழிநடாத்தவும் உதவுகின்றது. ஈழத்தமிழர்களின் மரபுரிமை அம்சங்கள் தனித்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. ஈழத்தில் ஏற்பட்ட முப்பது ஆண்டு கால யுத்தத்தினால் ஈழத்தமிழரின் மரபுரிமை அம்சங்கள் பல அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறான மரபுரிமைகளில் அழிவினை சந்தித்த பிரதேசமாக மயிலிட்டி பிரதேசம் காணப்படுகின்றது. **1990** யூன் **15** ஆம் திகதி ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக இப் பிரதேசத்தில் பல மரபுரிமை அம்சங்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக, மயிலிட்டி பிரதேச மானது வரலாற்று உதயகாலம் தொடக்கம் பல்லவர்காலம், சோழர்காலம், யாழ்ப்பாண இராச தானிகாலம், ஐரோப்பியர்காலம் என தொடர்ச்சியான வரலாற்றினை கொண்டமைந்த துறைமுக நகராக விளங்குவதால் இங்கு பல மரபுரிமைகள் காணப்படுகின்றன. இந்நிலை யில் மயிலிட்டியின் தொன்மை வரலாறு, இங்கு காணப்படுகின்ற மரபுரிமைச் சின்னங் கள், அழிடைந்த மரபுரிமைச்சின்னங்கள் போன்றவற்றினை ஆராய்ந்து அதன் ஊடாக மயிலிட்டி பிரதேசத்தின் தொன்மையினையும் தனித்துவத்தினையும் வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குரிய தரவுகள் நூல்களிலிருந்தும், சிதைவடைந்த மரபுரிமைச் சின்னங்கள், மீள் உருவாக்கப்பட்டுவரும் மரபுரி மைச் சின்னங்கள் என்பவற்றை ஆராய்ந்தும், மேலாய்வுகள் ஊடாகவும் மற்றும் மக்களுடனான நேர்காணல், கலந்துரையாடல், அவதானிப்பு போன்றவற்றினூடாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. மயிலிட்டிப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில், யாழ்ப்பாண இராசதானிகாலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள், ஆவுரஞ்சிக்கற்கள், ஐரோப்பியர்கால தேவாலயங்கள், புகையிரத பாதை எச்சங்கள், பாடசாலைகள், ஆயுதக்களஞ்சியசாலை, புழங்குபொருட்கள், பெருங்கற்கால சின்னங்கள், கலைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்ற பல மரபுரிமைச்சின்னங்கள் அழிவடைந்துள்ளன. நீண்டகால இடைவெளியின் **2018** இன் பின்பு மீள் குடியேற்றப்பட்ட சூழலில் எஞ்சிக்காணப்படும் மரபுரிமை அம்சங்கள் மீளுருவாக்கப்பட்டும் வருகின்றன.*

**திறவுச்சொற்கள் :** மயிலிட்டி, மரபுரிமைகள், இடப்பெயர்வு, மீள்குடியேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்களின் பங்களிப்பு – குருநாகல் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டது

**மொஹம்மது இஸ்மாயில் ஹில்மியா, அருந்தவராஜா, க.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
hilmiya07@gmail.com

*இஸ்லாமிய சமயமானது கி.பி ஏழாம் நூற்றாண்டில் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து அதனைப் பேணிப்பாதுகாப்பதற்கு பல சமய நிறுவனங்கள் தோன்றின. அவற்றில் இன்றுவரை நிலைத்து நிற்பவையாக மத்ரஸாக்கள் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பிலிருந்தே இலங்கைக்கு அரேபியர் வருகைதந்து குடியேற்றங்களை அமைத்திருந்தமையாலும், இந்தியாவிற்கு அண்மையில் இலங்கை அமைந்து காணப்படுகின்றமையினாலும் மத்ரஸாக்கல்வி நிறுவனமானது இலங்கையில் கி.பி 19ஆம் நூற்றாண்டளவில் தோன்றியது. அம்மத்ரஸாக்கள் முஸ்லிம் மக்களுக்கு மார்க்க விளக்கங்களை வழங்கி இலங்கையில் இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு காரணமாகத் திகழ்ந்தன. தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் 1870 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது மத்ரஸா அமைக்கப்பட்டது. மாத்தறை மாவட்டத்தின் வெலிகம எனும் இடத்தில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்பவரால் மத்ரஸதுல் பாரி எனும் மத்ரஸாவானது 1884 ஆம் ஆண்டு முறைப்படுத்தப்பட்ட பாடப்போதனை களுடனும், நிர்வாக அமைப்புக்களுடனும் முதலாவது மத்ரஸாவாக உருவாக்கப்பட்டது. தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் 300 இற்கும் மேற்பட்ட மத்ரஸாக்கள் உருவாகிக் கொண்டன. அவை முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இன்றுவரை தமது கல்விப் பணியைத் தொடர்ந்து வருகின்றன. வடமேல் மாகாணத்தின் குரு நாகல் மாவட்ட முஸ்லிம்கள் குருநாகல் மாவட்டத்தில் மத்ரஸாக்கள் உருவாக்கப்படுவதற்கு முன்பு இந்தியா மற்றும் இலங்கையின் வெளி மாவட்டங்களுக்குச் சென்று மார்க்கக்கல்வி யைக் கற்றுக்கொண்டனர். அவ்வாறு கற்ற மார்க்க அறிஞர்களால் மத்ரஸாக்கல்வி முறையானது குருநாகல் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. அந்தவகையில் குருநாகல் மாவட்டத்தில் 1961 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முதலாவது மத்ரஸாவாக இலாஹியா பெண்கள் அறபுக் கல்லூரியானது காணப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து சுமார் 25 மத்ரஸாக்கள் குருநாகல் மாவட்டத்தில் உருவாகிக்கொண்டன. குருநாகலில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக பல கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றபோதிலும் மத்ரஸாக்கள் மார்க்கக்கல்வியுடன் இணைந்த வகையில் பொதுக்கல்வியையும் கற்பிப்பதனால் முஸ்லிம் களின் ஈருலக வாழ்க்கைக்கும் அவை பங்களிப்புச்செய்கின்றன எனலாம். அந்தவகையில் வரலாற்று அணுகுமுறைகளுடன் கூடிய விபரண ஆய்வாக அமைந்திருக்கும் இவ்வாய்வில் முதல்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்களும் ஆய்வின் தேவை கருதிப் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதற்கமைய எனது ஆய்விற்குட்பட்ட குருநாகல் மாவட்டத்திலுள்ள 15 மத்ரஸாக்களின் கல்வி நிலையானது வளர்ச்சியடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. இன்றைய கால கட்டத்தில் நவீன கற்பித்தல் முறைகளுடன் பொதுக் கல்விக்கும் அதிகளவு முக்கியத்துவம் வழங்கி கற்பிப்பதன் மூலமாக இஸ்லாமிய சமூகத்தில் இன்னும் அதிகளவான மார்க்க அறிஞர்களை உருவாக்க முடியும்.*

**திறவுச்சொற்கள் :** மத்ரஸா, இஸ்லாமியர்கள், குருநாகல் மாவட்டம், கல்வி, அறபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகள் – ஓர் ஆய்வு

**தர்சிக்கா,த., சாந்தினி, அ.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tharshithaya74@gmail.com

இலங்கையானது இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமையப்பெற்றுள்ளமையால் ஆசியாக்கண்டத்தின் தெற்கு, தென்மேற்கு, கிழக்காசிய நாடுகளை இணைக்கும் கேந்திரநிலையம் என்ற வகையில் இது முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளானது கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டது. அதன்பின்னர் அரேபியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அராபிய கோத்திரத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் தென்கிழக்காசியாவை நோக்கி கடல்மார்க்கமாக வந்து தென்னிந்தியாவின் சில பகுதிகளிலும் இலங்கையிலும் வந்து குடியேறினார்கள். இவ்வாறு வந்த இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என 08 இடங்களில் குடியேறி இலங்கையின் பொருளாதாரத்திலும் முக்கியத்துவம் பெற்றுக்காணப்பட்டார்கள். இந்தியாவில் இவர்களது தொடர்பானது இலங்கையில் ஏற்பட்டது போன்று குடியேற்றங்கள் மூலம் ஏற்படவில்லை மாறாக படையெடுப்புக்கள் மூலமே ஏற்பட்டுக் கொண்டது. படையெடுப்புக்கள் மூலம் ஏற்பட்டுக்கொண்ட இவர்களது இந்தியத்தொடர்பானது வெறுமனே படையெடுப்போடு மட்டும் நின்றுவிடாது படிப்படியாக இந்தியாவில் இஸ்லாமியப்பேரரசொன்று தாபிக்கப்பட்டு வளர்ச்சியடைவதற்கு வித்திட்டுக்கொடுத்தது. இதன் பின்னணியில் முஸ்லிம்களுடைய வர்த்தக நடவடிக்கைகளானது உச்சநிலையை அடைந்ததென்றே கூறலாம். அதன்பின்னர் இவர்கள் இலங்கையிலிருந்து முத்துக்கள், யானைகள், யானைத்தந்தங்கள், இரத்தினக்கற்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் இன்னும் பல பொருட்களை ஏற்றுமதி செய்ததுடன் வெளிநாடுகளிலிருந்து பட்டுகள், சந்தனக்கட்டைகள், அகில், துணிவகைகள், அரேபியாவிலிருந்து குதிரைகள் போன்றவற்றை இறக்குமதியும் செய்தார்கள். இவ்வாறு இலங்கையின் வர்த்தகத் துறையில் பெரும்பங்கு கொண்டிருந்த அராபிய முஸ்லிம்கள் வர்த்தகத்துறையினூடாக இலங்கையின் பொருளாதாரத்துறையை வளர்ச்சியடையச் செய்திருந்தார்கள். இவர்களுடைய இந்த வர்த்தக நடவடிக்கைகளினால் இலங்கையின் புராதன காலத்திலிருந்த துறைமுகங்கள் மட்டுமன்றி புதிய துறைமுகவசதிகளும் புத்தெழுச்சிபெறத்தொடங்கியதுடன் இந்துசமுத்திரத்தின் வர்த்தக நிலையிலும் இவர்கள் முன்னணி பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளினை அடுத்து இலங்கைப்பண்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாக இலங்கையுடன் அராபிய முஸ்லிம்கள் கொண்டிருந்த தொடர்பினை இனங்காணுதல், இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளை வெளிக்கொணர்தல், அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கை களினால் இலங்கைப்பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுதல் போன்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. வரலாற்றியல் அணுகுமுறை மற்றும் விபரணவியல் அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வாய்வு அமைந்துள்ளதுடன் முதற்தர மற்றும் இரண்டாம்தர ஆதாரங்கள் இவ் ஆய்வின் தேவைகருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தகத்தொடர்பு என்பது ஆரம்பகாலம் முதற்கொண்டே இலங்கையின் பொருளாதாரத்துறையில் சிறப்பிடம் பெற்றிருந்தது.

**திறவுச்சொற்கள் :** அராபியமுஸ்லிம்கள், வர்த்தக நடவடிக்கைகள், ஏற்றுமதி, இறக்குமதி, பொருளாதாரம், பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வாய்மொழி வரலாற்றுக் கதைகளும் கலை வடிவங்களும்– ஓர் ஆய்வு

**கோகிலவாணி, க. , சிவரூபி,ச.**

வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

kokilavany03@gmail.com

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க பிரதேசங்களில் ஒன்றாக வடமராட்சி கிழக்குப் பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தொன்மையான மக்கள் குடியேற்றங்கள், பண்பாடுகள் தோற்றம் பெற்ற இடங்களில் வடமராட்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும் என்பதனை வரலாற்று இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் என்பன உறுதிப்படுத்தி நிற்கின்றன. குறிப்பாக நாகர்கோவில், செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, குடாரப்பு, உடுத்துறை, முள்ளியான், மணற்காடு, குடத்தனை போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் இப்பிரதேசத்தின் தொன்மையினை உறுதிப்படுத்தவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் இப்பிரதேசத்தின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பினை பிரதிபலிப்பதில் இங்குள்ள நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கு முக்கிய பங்குண்டு. எனினும் இவ்ஆலயத்தின் பூர்வீக வரலாறானது முறையான வகையில் ஆவணப்படுத்தப்படாது புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தொன்மை பற்றிய குறிப்புக்கள் கையேடுகள், மலர்களாக வெளிவந்த போதிலும் முறையான ஆவணப்படுத்தல் ஊடாக இவ்வாலயத்தின் தொன்மைச் சிறப்பினை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவசியமாகின்றது. குறிப்பாக நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் தொன்மைச் சிறப்பினை வெளிப்படுத்துவதன் ஊடாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும். இந்தவகையில் இவ்வாய்வின் நோக்கங்களாக, வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் அமையப்பெற்ற நாகர்கோவில் எனும் தொன்மை மிகுந்த கிராமத்தினையும், அக்கிராமத்தில் அமைந்துள்ள பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தினதும் தொன்மைச் சிறப்பினையும் வெளிப்படுத்தலும், மற்றும் நாகதம்பிரான் ஆலயத்தின் தொன்மை மிகுந்த வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தனித்துவமான மரபுகளையும், தனக்கே உரிய பாரம்பரியமான திருவிழாக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமையால் அவற்றினை ஆவணப்படுத்தல் என்பன அமைகின்றன. இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வு அடிப்படையிலான நேரடி அவதானிப்பின் ஊடாகவும், நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் சேகரிக்கப்பட்டன. அத்துடன் இவ்வாய்வுடன் தொடர்புபட்ட இலக்கியங்கள், நூல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு, களவாய்வு தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இந்தவகையில் ஒரு சமூகத்தின் மரபுகளே அந்தச் சமூகத்தின் அடையாளங்களாக விளங்குகின்றன. வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கிராமத்தினதும் நாகதம்பிரான் ஆலயத்தினதும் வழக்காறுகளும் மரபுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாற்றங்களுக்கு ஏற்ப அருகியும் அழிந்தும் செல்லும் நிலையில் குறித்த பிரதேசத்திற்குரிய பாரம்பரிய மரபுகளையும் ஆலயவரலாற்றையும் இவ்வாய்வு ஆவணப் படுத்தியுள்ளது. குறிப்பாக இவ்வாலயம் தொடர்பான கர்ணபரம்பரைக் கதைகளையும் வியத்தகு அற்புதங்களையும் ஆலயத் தோற்றப்பாடுகளையும் அதனுடைய கலையம்சங் களையும் அறிந்து கொள்ள இவ்வாய்வு உதவுவதுடன், நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயமானது வடமராட்சி கிழக்கின் தொடர்ச்சியான வரலாற்றை மேலும் உறுதிப் படுத்துவதாகவும் அமைந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**திறவுச்சொற்கள் :** பூர்வீக நாகதம்பிரான் ஆலயம், ஆலய வாய்மொழி வரலாறு, கலைவடிவங்கள், வடமராட்சிக கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் தொடர்பான வாய்மொழி, வரலாற்று, ஐதீகக் கதைகளும் போருக்கு முந்திய ஆலயத்தின் கலையம்சங்களும் – ஓர் ஆய்வு.

**மீரா, க. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**ganendranmeera@gmail.com**

*தென்னாசிய நாடுகளின் வரலாறானது ஐரோப்பியரது ஆட்சிக்கு முன்னர் வாய்மொழி, வரலாற்றுக் கதைகள், ஐதீகங்கள், புராண, இதிகாச மரபுகளை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றிருந்தது. இலங்கையிலும் இத்தகைய அம்சங்களே வரலாற்று மரபின் தோற்றத்தில் பெரும்பங்கு வகித்திருந்தது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்து தொல்லியல் ஆய்வுகள் தோற்றம் பெற்றிருந்தாலும் அவை பெரிதும் வாய்மொழி, ஐதீகக் கதைகளைத் தழுவி எழுந்த பாளி இலக்கிய நூல்களில் இடம்பெற்ற செய்திகளை உறுதிப்படுத்தும் விதமாகவே அமைந்திருந்தது. வரலாற்று, ஐதீகக் கதைகள் வழியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் கூட அக்கதைகளின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் வகையில் அமைந்திருந்தன. இக்கதைகள் மிகைப்படுத்தப்பட்ட நம்ப முடியாத கற்பனைக் கதைகளாக இருந்தாலும் மக்களின் நம்பிக்கைகளுடன் இரண்டறக் கலந்து விட்டன. அந்தவகையில் வடஇலங்கையிலுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமானது பல்வேறு வாய்மொழி, ஐதீக, புராண, இதிகாச, வட்டார வழக்குக் கதைகளுடன் தொடர்புபட்டதாகும். இதிகாச கதைகளான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் கதாநாயகர்களான இராமர் மற்றும் அர்ஜுனன் போன்றோர் கீரிமலையின் சாகரசங்கம தீர்த்தத்தில் நீராடி இறைவனை தரிசித்தார்கள் என்றும் இராவணனின் வீணையைக் கவர்ந்து வந்த சுசங்கீதன் என்ற கந்தர்வன் கீரிமலைச் சாரலில் இருந்து வீணை மீட்டி இறைவனது ஆசியைப் பெற்றான் என்றும் கூறப்படுகிறது. மற்றும் நளன், முசுகுந்தன் போன்றோரும் கீரிமலைக்கு வந்து தீர்த்தமாடி இறைவனின் ஆசி பெற்றார்கள் என்ற செய்தியை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. பாளி இலக்கியங்களில்க் குறிப்பிடும் இலங்கையின் முதல் மன்னனான விஜயனின் வருகையுடன் தொடர்புபடுத்தியும் நகுலேஸ்வரத்துடன் தொடர்புபட்ட ஐதீகக் கதைகள் காணப்படுகின்றன. மேலும் நகுல முனிவர், கதிரைமலையின் மன்னன் எனக் கூறப்படும் உக்கிரசிங்கன், சோழ இளவரசி மாருதப்புரவிகவல்லி போன்றோருடன் தொடர்புபடுத்தப்பட்ட ஐதீக, வாய்மொழிக் கதைகளும் இவ்வாலயத்தை மையப்படுத்திக் காணப்படுகின்றன. அத்துடன் இவ்வாலயம் பாசுபத சமயப் பிரிவுக்குரிய ஆலயம் என்றும் ஒரு கருத்துண்டு. அந்தவகையில் திருத்தம்பலேஸ்வரம் என்று குறிப்பிடப்பட்ட முதலாவது கீரிமலை சிவன் கோயில் கடற்கோளால் கடலுள் அமிழ்ந்து விட்டது என்றும் இரண்டாவது ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடித்தழிக்கப்பட்டது என்றும் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. மூன்றாவது ஆலயம் ஆறுமுகநாவலரின் தூண்டுதலால் 1895 இல் மீள அமைக்கப்பட்டது. அவ்வாலயம் 1990 ஆம் ஆண்டு யுத்தத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி மீள அமைக்கப்பட்டு 2012 இல் நான்காவது ஆலயம் சீரமைக்கப்பட்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1990 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்திற்கு முன்னர் ஆலயம் 100 ஆண்டுகளுக்கு முன்னரான கலைமரபைக் கொண்டு காணப்பட்டிருந்தது. அங்கு நகுலேஸ்வரத்துடன் தொடர்புடைய ஐதீக, செவிவழிக் கதைகள் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் தீட்டப்பட்டிருந்தன. போருக்கு முந்திய கலையம்சமாக தற்போது காணப்படுவது ஆலயத்தின் தென்புறத்தில் பூங்கா என்ற பிரதேசமாகும். இங்கு சிவபெருமான் உமாதேவியுடன் கூடிய சிற்பத் தொகுதியும் மற்றும் தொட்டியை சுற்றியுள்ள தூண்களில் ஆறு சிலைகளும் காணப்படுகின்றன. இச்சிலைகள் மாருதப்புரவிகவல்லி, உக்கிரசிங்கன், நகுலமுனிவரின் சிலைகள் போன்று தோற்றமளிக்கின்றன. இச்சிலைகள் அன்றைய கால சமூகநிலையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆடை அமைப்புகள், ஆபரணங்கள், பதக்கங்கள், காற்சலங்கைகள், கழுத்து மாலைகள், ஆண்களின் உடுபுடைவைகளின் தோற்றப்பாடுகள் என்பன அன்றைய கால சமூகக்கலை மரபை ஒத்ததாக இருந்தாலும் அவை உக்கிரசிங்கன் மாருதப்புரவிகவல்லியின் கதைகளை கூறுவனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு நகுலேஸ்வரம் பற்றிய கதைகள் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து விட்டன என்பது மறுக்க முடியாததாகும். அந்த வகையில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் ஒரு புராதன ஆலயம் ஆகும். அவ்வாலயம் தொடர்பான ஐதீகக் கதைகள் தொன்றுதொட்டு இன்று வரை மக்களால் செவிவழிக் கதைகளாகப் பேணப்பட்டு வருகின்றன. வாய்மொழிக் கதைகளாக உள்ள இவ்வாறான கதைகளை தொகுத்து ஆவணப் படுத்துதல் மற்றும் வட இலங்கையின் தொன்மையான வரலாற்றில் நகுலேஸ்வரத்தினை மையப்படுத்தித் தோற்றம் பெற்ற ஐதீகங்களின் வகிபங்கினை தெளிவுபடுத்தல் அத்துடன் உள்நாட்டுப் போரின் முன்னர் ஆலயத்தின் பழைய கட்டடக்கலை, அங்கிருந்த சிற்பங்கள், சிலைகள் போன்றவற்றின் கலை அம்சங்களை எடுத்துரைப்பதனூடாக அழிந்தவற்றையும், அழிந்துவருவனவற்றையும் அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வானது அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள்:** ஐதீகக் கதைகள், வலிகாமம் வடக்கு, நகுலேஸ்வரம், கலையம்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் பெருங்கற்கால குடியிருப்பு மையங்கள்: கிளிநொச்சி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு


**சுலக்சிகா, ஜெ. , புஸ்பரட்ணம், ப.**

வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**Sulaksikajeyanantham@gmail.com**



தென்னாசியாவில் நீண்ட தொன்மையான தொடர்ச்சியான வரலாற்று பாரம்பரியங்களை கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. இதில் வடஇலங்கையானது தமிழர்களுடைய பாரம்பரிய வரலாற்றினை கொண்டுள்ளதோடு இலக்கியங்களில் இதன் வரலாறானது புகைபடிந்த நிலையிலே காணப்பட்டு வந்த நிலையில் சமகால தொல்லியல் ஆய்வுகள் குறிப்பாக 1970 களின் பின்னரான ஆய்வுகள் தொன்மையான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதோடு தமிழர்களுக்கென பூர்வீக வரலாறு உண்டென்பதை வெளிச்சமிட்டு காட்டுகின்றது. இப் பின்னணியில் இப்பிராந்தியத்தின் பூர்வீக பண்பாட்டுத் தன்மை இருப்பதனை காணமுடிகிறது. வட்டார அடிப்படையில் பெருங்கற்கால பண்பாடு பற்றி பலர் ஆராய்ந்துள்ளனர் ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தினை தனியொரு பிராந்தியமாக கொண்டு இதுவரை ஆராயப்படவில்லை. எனவே பெருங்கற்கால குடியிருப்பு பண்பாட்டு மையங்கள் பற்றி ஆராய்ந்து ஆவணப்படுத்தி இப்பிராந்தியத்திற்கு ஆதிகாலம் முதற்கொண்டு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறுகள் இருப்பதனை வெளிப்படுத்தி இவ் ஆய்வின் மூலம் கிளிநொச்சியின் பூர்வீக மக்கள் தமிழர்கள் என்பதனை எடுத்துக் காட்டுவதும் இவ் ஆய்வின் ஊடாக பெருங்கற்கால பண்பாட்டின் தொடர்ச்சி நிலையினை தற்கால கிளிநொச்சி மாவட்ட மக்கள் இடையேயும் காணக்கூடியதாக உள்ளது. எனவே, அவற்றினை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோடு இவ் ஆய்வினை மேற்கொண்டு தமிழர்களின் பூர்வீக தொன்மை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியற் சான்றுகளை பாதுகாப்பதற்கு எவ்வாறான விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆராய்தல் இவ்வரலாற்றுப் பின்னணியில் வடஇலங்கையானது புராதன காலம் தொட்டு தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்து வருவதனை காணலாம். இதில் கிளிநொச்சி பிராந்தியமானது தனித்து அடையாளப்படுத்தப்படுவதற்கு மனித குடியிருப்புகளின் தொடக்கமே காரண மாகும். குறிப்பாக கிளிநொச்சி பிராந்தியத்தில் இரணைமடு பகுதியில் கற்கால மக்கள் (மேலைப்பழங்கற்காலம்) அவர்களைத் தொடர்ந்து நுண்கற்கால மக்கள் அவர்களை தொடர்ந்து பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளானது நாம் தென்னிந்திய திராவிடவழி வந்த தமிழர்கள் என்பதை அடையாளப்படுத்துவதுடன் இன்று பின்பற்றப்படு கின்ற தமிழர் மொழி, சமய நம்பிக்கைகள் தமிழர் பண்பாடு என்பன அதன் பின்னணியில் திராவிடர் வழி வந்தவர்களையே குறித்து நிற்கின்றது. எனவே கிளிநொச்சி பிராந்தியம் தனித்து அடையாளப்படுத்தப்படுவதற்கு மனித குடியிருப்புகள் அடையாளம் படுத்தப் பட்டமையே வெளிச்சமிட்டுக்காட்டுவதாக பெருங்கற்கால குடியிருப்பு மையங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்வீக மக்களான பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் பரவலாக வாழ்ந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சின்னங்களினை அடிப்படையாக கொண்டு அச்சான்றுகளினூடாக வெளிப்படுத்தப்படும் குடியிருப்புக்களின் தொன்மை, எழுத்து, மொழி, வாழ்வியல் அம்சங்கள், குறியீடுகள், தொழில் நடவடிக்கைகள், சமய நம்பிக்கை போன்றவற்றை ஆராய்ந்து அம்சங்களின் சிறப்பு அதன் தொன்மையான தொடர்ச்சித்தன்மை என்பற்றினை கிளிநொச்சி மாவட்டமக்களோடு தொடர்புபடுத்தி ஆராய்தல். இவற்றின் அடிப்படையில் கிளிநொச்சி பிராந்திய மக்களுக்கும் பெருங்கற்கால பண்பாட்டுமக்களுக்கும் இடையே ஓர் வரலாற்று தொடர்ச்சி தன்மை உண்டு என்பதனை வெளிச்சமிட்டுக் காட்டுவது எனது ஆய்வின் முக்கிய அம்சமாக காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** பெருங்கற்காலம், கிளிநொச்சிப் பிராந்தியம், வட இலங்கை, பண்பாடு, தமிழர்கள்
.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சுற்றுலாவில் பாரம்பரிய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் : அரியாலை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**மயூறிக்கா, செ., சிவரூபி, ச.**

வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

mayoo.s026@gmail.com

வட இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒரு அழகிய கிராமமே அரியாலை ஆகும். மருதம், நெய்தல், பாலை, முல்லை எனப் பண்டைய தமிழர் நிலவுடமைகளுடன் செழிக்கும் வயல்நிலம், கடற்கரையோரம், தென்னம் தோப்புக்கள், பனை மரக்காடுகள் போன்ற வளங்கள் நிறைந்திருக்கும் பிரதேசமே இதுவாகும். மரஅரிவு ஆலைகள் இருந்ததன் பின்னணியில் (அரிவு + ஆலை = அரியாலை) எனப் பெயர் பெற்றதாகவும், வைணவம் தழைத்தோங்கிய போது விஸ்ணு ஆலயம் இருந்ததன் காரணத்தினால் அரி என்பது விஸ்ணு என்பதை குறித்து நிற்கின்றதெனவும் (அரி + ஆலயம் = அரியாலையம்) என அழைக்கப்பட்டு "அம்" எனும் விகுதி மறைந்து பின்னாளில் அரியாலை என பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண தமிழரசர்கள் காலத்தில் வரலாற்று பெருமை மிக்கதொரு இடமாக இவ்விடம் காணப்பட்டதோடு அரசவழி தொடர்புகளும் போக்குவரத்துகளும் இப்பிரதேசத்தினூடாக இடம்பெற்றுள்ளதனை வரலாற்று இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்அரியாலைப் பிரதேசத்தில் பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளை அரியாலை பூம்புகார் பிரதேசத்தின் தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர்களால் பின்பற்றப்பட்ட மரபுகளே இன்று பாரம்பரியங்களாய் தோற்றம் பெற்றுள்ளன. தமிழ் மக்களுக்குரிய தனித்துவமான பாரம்பரியமான சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள் போன்றன தொன்று தொட்டு பண்டைய காலத்திலிருந்தே பேணப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தின் தனித்துவமான தொட்டுணர முடியாத மரபுரிமை அம்சங்களை உள்ளடக்கிய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் போன்றன இன்று முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. சமீப காலத்தில் அவை கைவிடப்பட்டு மாற்றமடைந்து அருகிச் செல்வதோடு, இவ்வளங்கள் சுற்றுலா நோக்கில் பார்க்கப்படவில்லை. இவ்வாய்வின் மூலம் இப்பிரதேசத்தின் தொட்டுணர முடியாத மரபுரிமைகளை ஆவணப்படுத்தி, பாதுகாப்பதற்கான வழிமுறை களையும் திட்டங்களையும் வகுக்க முடியும். மேலும் வட இலங்கை சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் நோக்கில் இங்குள்ள வளங்களினை மேம்படுத்துவது தொடர்பிலான தந்துரோபாயங்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** அரியாலை பிரதேசம், சடங்குகள், சுற்றுலா, நம்பிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் போத்துக்கேயர் ஆட்சியில் ஏற்பட்ட பண்பாட்டு மாறுதல்: தலைமன்னார் தொடக்கம் தோட்டவெளி வரையான பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**சுஜானிக்கா, செ. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sujanisacred96@gmail.com

தென்னாசியாவிலே பல்லினப்பண்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதற்கு வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து பல இன, பண்பாடுகள் கொண்ட மக்கள் பிற நாடுகளில் இருந்து இங்கு வந்து சென்றதும் அவர்கள் சில பண்பாட்டு மரபுகளை நிரந்தரமாக விட்டுச் சென்றதும் காரணமாக அமைந்துள்ளது. அந்தவகையிலே கி.பி 1505ஆம் ஆண்டு இலங்கைக்கு ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயர்கள் வந்தனர். இவர்களின் வருகையானது இலங்கையின் வடபகுதியிலே பல பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக வடபகுதியான யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளிலே இவர்களுடைய பண்பாட்டு மாற்றத்தினை அதிகம் காணக் கூடியதாக இருக்கின்றது. இவற்றில் மன்னார் பிரதேசத்தினை மையமாகக் கொண்டே இந்த ஆய்வுக்கட்டுரையானது அமைகின்றது. வரலாற்றுக்காலம் முதலே அரசியல், பொருளாதாரம், பண்பாட்டுச் செல்வாக்கு பெற்ற இடமாக இது காணப்படுகின்றது. அந்த வகையில் போர்த்துக்கேயரது வருகைக்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்துத் தமிழ்ப் பண்பாடு நிலவிய இந்த மன்னார் பிரதேசமானது காலப்போக்கில் போர்த்துக்கேயரின் வருகையின் விளைவாக முன்பிருந்த பண்பாட்டு முறைகள் நலிவுற்று போர்த்துக்கேயரின் பண்பாட்டு முறைகளினை பின்பற்றி வருவதாக மாற்றம் கண்டுள்ளது. இத்தகைய பண்பாட்டு முறை அரசியல், பொருளாதாரம், கலை, சமூகம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் மாறுதல்களினை ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தகைய பண்பாடடு முறைகளின் மாற்றத்தினை தொல்லியல், இலக்கிய சான்றாதாரங்களின் ஊடாக தொல்லியல் மற்றும் வரலாற்று அணுகு முறைகளினைப் பின்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்கான தரவானது பேரத்துகேய ஆவணங்களில் இருந்தும் கள ஆய்வுகள், நேர்காணல்கள், மற்றும் இரண்டாம்தர நூல்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இப்பிரதேசத்தில் உள்ள தொல்லியல் சின்னங்கள் நடுநிலைமையுடன் ஆராயப்பட வேண்டும். இதனூடாக இப் பிராந்தியத்தின் தொன்மையினை புரிந்து கொள்ள முடியும். .

**திறவுச்சொற்கள் :** பண்பாடு, ஐரோப்பியர், போர்த்துக்கேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் இராமாயணம் சார்ந்த சுற்றுலாவுக்கான இடங்கள் – கொடிகாமம் இராமாவில் பிரதேசத்தை சிறப்பாகக் கொண்டதோர் ஆய்வு

**பிரபாகர், நி., புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
pirapakar1995@gmail.com

உலகில் வளர்ச்சி கண்ட பெருந்துறையாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. சுற்றுலா மூலமாக நாட்டிற்கு அதிக வருமானம் கிடைப்பதனால் அத்துறையில் தொழில் வாய்ப்புகளும் பெருகி வருகின்றன. இவ்வாறு காலத்திற்கு ஏற்ப வளர்ந்து நிற்கும் சுற்றுலாத் துறையை மையமாகக் கொண்டு ஆன்மீக சுற்றுலா வளர்ச்சி கண்டுள்ளது. மக்கள் தற்காலத்தில் இராமாயணத்துடன் தொடர்புபட்ட சுற்றுலா மையங்களை பார்வையிடு வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்கள், விழாக்கள், கலைகள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை கண்டு களிப்பதற்காக இராமா யணச் சுற்றுலா மேற்கொள்ளப்படுகின்றது. வால்மீகியால் பாடப்பட்ட இராமா யணத்திற்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனால் இராமாயணத்துடன் தொடர்புபட்டதாக தென்னிலங்கையில் சீதை அம்மன் கோயில், இராவண எல்ல போன்ற பல இடங்கள் இருப்பது போல் வட இலங்கையிலும் இராமர் பாலம், தள்ளாடி, வில்லூன்றி, இராமாவில், நிலாவரை என பல இடங்கள் காணப்படுகின்றன. வடஇலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு வாழ்வியலில், கற்பு, ஒழுக்கம், சடங்கு, சமயம் மற்றும் இலக்கியம் என்பவற்றில் இராமாயணப் பண்பாடு இணைந்துள்ளது. அத்தோடு இராமாயணத்துடன் தொடர்புபட்ட ஐதீகக் கதைகள் கொண்ட பல மையங்கள் இங்கு காணப்படுகின்றன. எனினும் ஐதீகக் கதைகளுடன் தொடர்புடைய மையங்கள் மற்றும் இராமாயணப் பண்பாடுகள் என்பன முறையான ஆவணப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. அத்துடன் இம்மையங்கள் ஆன்மீக சுற்றுலா நோக்கில் ஆராயப்பட்டி ருக்கவில்லை என்பது இவ்வாய்வு எதிர்நோக்கும் பிரச்சினையாகும். எனவே இவ்வாய் வானது இராமாவில்ப் பிரதேசத்திற்கும் இராமாயணத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய ஐதீகக் கதைகள் மற்றும் வட இலங்கையில் உள்ள ஏனைய இராமாயணம் தொடர்பான மையங்களை இனங்கண்டு ஆவணப்படுத்தல் மற்றும் அம்மையங்களினை இராமாயணச் சுற்றுலா மையங்களாக கொண்டு வருவதற்குரிய தந்திரோபாயத் திட்டங்களினூடாக வெளிப்படுத்தி இம்மையங்களை இராமாயண சுற்றுலா மையங்களாக கொண்டு வருதலே ஆய்வின் நோக்கமாக அமைகிறது. இவ்வாய்வு நோக்கங்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு ஆய்வுக்கான முதன்நிலை தரவுகள் களஆய்வு மற்றும் நேர்காணல்கள் அடிப்படையில் திரட்டப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலை தரவுகள் இராமாயணம் மற்றும் இராமாயணத்தினை அடிப்படையாக கொண்டெழுந்த நூல்கள், ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றின் ஊடாக திரப்பட்டுள்ளன. முதன்நிலைத் தரவுகளூடாக திரட்டப்பட்ட விடயங்களை, இரண்டாம் நிலை தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது இவ்வாய்வினூடாக இராமாவில், சரசாலை, மயிலன் கூடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிசன்கூடல், தள்ளாடி போன்ற இராமாயணம் சார்ந்த இடங்கள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசமான இராமாவில் பிரதேசத்தை பற்றி ஆய்வு செய்யும் போது பல இராமாயணத்துடன் தொடர்புபட்ட பல ஐதீக கதைகள், நம்பிக்கைகளை அறிய முடிந்தது. இராமாவில் ஆலய வரலாறு, இராமாவில் குளம் பற்றிய வரலாறு, மக்களின் நம்பிக்கைகள் பற்றிய பல புதிய விடயங்களை அறிய முடிந்தது. குறிப்பாக இராமாவில் ஆலயத்தில் இராமபிரானால் ஊன்றப்பட்ட அம்பினை ஆரம்பத்தில் வைத்து வழிபட்ட தாகவும் பிற்காலத்தில் அது களவாடப்பட்டு விட்டதாகவும் அதன் பின்னர் இவ்வாலயம் முருகன் ஆலயமாக அம்பினை வேல் என்ற நினைத்து வழிபட்டு வந்ததாகவும் அறிய முடிகிறது. இவ்வாறாக வட இலங்கையில் இராமாயணம் சார்ந்த இடங்களில் இராமாவில் பிரதேசத்தையும் ஏனைய மையங்களையும் இராமாயண சுற்றுலா மையங்களாக்குவதற்கான திட்டங்கள் பற்றியும் ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** இராமாயணம், இராமாவில், ஐதீகங்கள், ஆன்மீக சுற்றுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை பிரதேசத்தில் காணப்படும் மரபுரிமை சின்னங்கள் பற்றிய வாய்மொழி வரலாற்றுக் கதைகள் ஓர் ஆய்வு

**கேசினி, தெ., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tkesini97@gmail.com

தென்னாசியாவில் தெற்கு பகுதியில் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் வட மாகாணத்தில் பாசுபத சமயத்தின் எச்சங்களைக் கொண்ட கீரிமலை நகுலஸ்வரர் ஆலயம் கடற்கரையுடன் அமைந்து காணப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட சித்தர்களின் ஜீவ சமாதிகளின் இருப்பிடங்களாகவும் இப்பிரதேசமானது காணப்படுகின்றது. இப் பிரதேசத்தையொட்டி கீரிமலை பிரதேச மரபுரிமை சின்னங்கள் தொடர்பான வாய்மொழி வரலாற்று கதைகள் பற்றிய ஆய்வாக இது அமைகின்றது. இவ்வாய்க்குரிய பிரச்சனையானது இப்பகுதியில் காணப்படுகின்ற மரபுரிமை சின்னங்கள் அழிவடைந்து வருவதுடன் தொன்மைமிக்க அப்பிரதேசத்தின் வரலாற்றுத்தொன்மை, மரபுரிமைகள், அவற்றின் முக்கியத்துவம் என்பன முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதாகும். இதனடிப்படையில் இப்பிரதேசத்தின் தொன்மையினை பிரதிபலிக்கும் வாய்மொழி கதைகளினையும், ஏனைய மரபுரிமைகளினையும் ஆவணப்படுத்துவதும், இப்பிரதேசத்தில் காணப்பட்ட அரச கட்டிடங்கள், விவசாய நிலங்கள், துறைமுகங்கள், மலைக் கோயில், கிருஸ்ணன் கோவில், சடையம்மா மடம், கவுணாவத்தை வேள்வி வைரவர் ஆலயம், என்பனவற்றின் தற்போதைய நிலையினையும், அதன் வரலாற்றினையும் வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும். அத்துடன் இப்பிரதேசத்தில் உள்ள இந்துக்களின் பாரம்பரிய தலங்கள் பற்றிய தெளிவினை நிகழ்கால சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வெளிப்படுத்தல் ஆய்வின் இன்னொரு நோக்கமாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்திற் குரிய பாரம்பரிய அடையாளங்களை பிரதிபலிக்கும் மரபுரிமைகள் அழிவடைந்து வருவத னால் அவற்றை இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்துவது அவசியமானதாகும். இவ்வாய் வினை மேற்கொள்வதற்கு முதல்நிலைத் தரவுகள் அவதானம் நேர்காணல் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டன. மேலும் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு தலைப்புடன் தொடர்பு டைய நூல்கள் கட்டுரைகள் என்பன கொள்ளப்பட்டன. இவ்களஆய்வு, நேர்காணல் ஊடாக திரப்பட்ட முதல்நிலைத்தரவுகளை, இரண்டாம் நிலை தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட வாய்மொழி தகவல்கள் ஆய்வுக்கு ஊட்டமாக அமைந்தன. மக்களிடமிருந்து பெறப்பட்ட வாய் மொழி தகவல்கள் மூலம் அதிக அளவில் இப்பிரதேசத்தின் முக்கிய மரபுரிமைகள் இருக்க கூடும் என நம்பப்படுகிறது. இவை பற்றிய வரலாற்று நூல்களோ வரலாற்று கதைகளோ இல்லாத பட்சத்தில் இவ்வாறான வாய்மொழித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த மரபுரிமை சின்னங்கள் உடைய உண்மை தன்மையை நம்பக்கூடியதாக உள்ளது. இதனூடாக எதிர்காலத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்வதற்கும் இந்த இடங்களை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கும் இந்த ஆய்வு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

**திறவுச்சொற்கள் :** கீரிமலை, சடையம்மா மடம், வாய்மொழி கதைகள், நகுலேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரோடையில் ஆதியிரும்புக்காலப் பண்பாடும் பௌத்தமதமும் – ஓர் ஆய்வு

**துஷல்யா, இ., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**shalyarasan@gmail.com**

இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் தமிழர்கள் பண்டைய காலம் தொட்டு செறிவாக வாழ்ந்து வரும் பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றினை கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் தொன்மையை வெளிப்படுத்துவதில் தொல்லியல் மரபுரிமைகளுக்கு முக்கிய பங்குண்டு. அந்தவகையில் காலத்துக்கு காலம் கந்தரோடையில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் கந்தரோடையினை இலங்கையின் முக்கிய தொல்லியல் மையமாக எடுத்துக்காட்டியுள்ளன. கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் மரபுரிமைகளில் பௌத்த மதம் சார்ந்தவைகளும் உள்ளடங்குகின்றன. எனினும் கந்தரோடையின் பௌத்தமத எச்சங்கள் தொடர்பாக உண்மையான வரலாற்றுப் பின்னனியினை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலையே நிலவுகின்றது. இலங்கையில் பல்லினப் பண்பாடானது சமயப் பண்பாட்டின் அடிப்படையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் எனப் பார்க்கப்பட்டாலும் காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட ஆய்வுகளில் பௌத்த மத எச்சங்கள் ஒரு இனத்துக்கு உரியனவாகவே நோக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் சிங்கள மக்கள் பௌத்த மதத்தை சார்ந்தவர்களாகவும் தமிழ் மக்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்களாகவும் தற்போது நோக்கப்படுகின்றார்கள். எனினும் இந்நிலையே வரலாற்றின் ஆரம்பகாலத்தில் இருந்து நிலவியது எனக் கொள்வது பொருத்தமற்றதாகும். குறிப்பாக வட இலங்கையில் பௌத்த மத எச்சங்கள் கிடைக்கப்பெறும் போது அவை ஒரு இனம் வாழ்ந்து விலகியதற்கான ஆதாரங்களாகவே காலத்திற்கு காலம் நோக்கப்படுகின்றன. இவ்வாறான போக்கிற்கு தொல்லியல் ஆய்வுகளில் சமகால அரசியல் சூழ்நிலைகள் ஏற்படுத்திய தாக்கங்களும் காரணமாக அமைந்திருந்தன. அந்தவகையில் கந்தரோடையில் கிடைக்கப்பெற்று வரும் பௌத்த மத மரபுரிமைச் சின்னங்களை ஒரு இனச்சார்பாக பார்ப்பது எந்தளவிற்கு பொருத்தமானது? யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் பௌத்தமத மரபுரிமைச்சின்னங்களின் வகிபாகம் எத்தகையது? மற்றும் கந்தரோடை மரபுரிமைச் சின்னங்கள் முறையாக பாதுகாக்கப்படுகின்றனவா? போன்ற ஆய்வு வினாக்களினை அடிப்படையாகக் கொண்டு, வடஇலங்கையின் பௌத்த மரபுரிமைகளினது வரலாற்றுப் பின்னணியை வெளிப்படுத்துதல், யாழ்குடாநாட்டு வரலாற்றில் கந்தரோடை மரபுரிமைச் சின்னங்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துதல் மற்றும் கந்தரோடையின் பௌத்த மத மரபுரிமைச்சின்னங்களை பாதுகாப்பதும் அதனை கலாசாரச் சுற்றுலா நோக்கில் பார்ப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்தல் போன்றன இவ்வாய்வுக்குரிய நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வு அடிப்படையிலும், இரண்டாம்நிலைத் தரவுகள் பௌத்தமதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாகவும், கந்தரோடை தொடர்பாகவும் உள்ள இலக்கியங்கள், நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு, மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக கந்தரோடையினது தொல்லியல் ஆய்வுகள் இத்தொல்லியல் மையமானது ஆதி இரும்புக்கால பண்பாட்டின் பின்னனியிலேயே முக்கியம் பெற்றிருப்பதனை வெளிப்படுத்தி யுள்ளன. அத்துடன் ஆதியிரும்புக்கால பண்பாட்டின் தொடர்ச்சியாகவே கந்தரோடையின் பௌத்த மத எச்சங்களும் அமைந்துள்ளன. ஆதலால் கந்தரோடையின் பௌத்தம் தொடர்புடைய எச்சங்களினை ஒரு மதத்திற்குரிய எச்சமாக பார்க்காது, ஒரு இனத்திற்குரிய எச்சமாகவே பார்க்க வேண்டும் என்பதை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

**திறவுச்சொற்கள் :** கந்தரோடை, பெருங்கற்காலம், பௌத்த மதம், தொல்லியல் ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால சுற்றுலா வளர்ச்சியில் உருத்திரபுரத்தின் வகிபாகம்

ஜகுமார், பா. , சிவரூபி, ச.
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
jakumarjakumar47@gmail.com

இலங்கையானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமையப்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாகும். இந்நாட்டை பல அந்நியர்கள் ஆட்சி செய்ததன் விளைவினை பிரதிபலிக்கும் வகையிலான பல தொல்லியல் எச்சங்களை காணமுடிகின்றது. இந்தவகையில் இலங்கையின் வடமாகாணத்தில் சோழராட்சிக்குட்பட்ட வரலாற்றுத் தொல்லியல் மூலங்களை கொண்ட பிரதேசமாக உருத்திரபுரம் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை எழில்கொஞ்சும் பசுமையான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வனவளம், நீர்வளம், நிலவளம் என இயற்கை வளங்களையும், இப்பிரதேசத்திற்கு உரித்தான பாரம்பரியமான விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, பாரம்பரிய உணவு வகைகள், பாரம்பரிய வீடமைப்பு முறைகள், பாரம்பரிய சடங்குகள், சம்பிரதாயம், விழாக்கள், நாட்டார் வழிபாடுகள், கூத்துகள் என இயற்கை சார்ந்தும் கலாசாரம் சார்ந்தும். தொட்டுணரக்கூடிய, தொட்டுணரமுடியாத தனித்துவமான மரபுரிமை அம்சங்களை கொண்டு விளங்குகின்றது. இவ்மரபுரிமை வளங்களினை சுற்றுலா நோக்கில் முறையாக பயன்படுத்துவதன் ஊடாக, இப்பிரதேசத்தினை ஒரு சுற்றுலா மையமாக மாற்றமுடியும். மேலும் இப்பிரதேசத்தின் வளங்களும் மரபுரிமைகளும் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினரும் நன்மை பெற முடியும். இதனடிப்படையில் இப்பிரதேசமானது பல்வேறு வளங்களையும், கலாசார மரபுரிமை அம்சங்களையும் கொண்டமையப்பெற்ற போதிலும் இதுவரை சுற்றுலா நோக்கில் கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தினை எதிர்கால சுற்றுலாவில் மேம்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது. இதனூடாக உருத்திரபுரம் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மற்றும் தனித்துவமான கலாசார பாரம்பரியங்களை அடையாளப்படுத்தி, அதனை சுற்றுலா நோக்கில் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வெளிப்படுத்துவதும், அதற்கான சவால்களை இனங்காண்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக் குரிய முதல் நிலைத் தரவுகள் களஆய்வு, நேர்காணல்கள் ஊடாக திரட்டப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகள் இப்பிராந்தியம் தொடர்பாகவும், சுற்றுலா தொடர்பாகவும் வெளிவந்த இலக்கியங்கள், நூல்கள், கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இதனூடாக உருத்திரபுரம் பிரதேசத்தினதும், அதன் சுற்றாடலிலும் காணப்படும் மரபுரிமை அம்சங்களும் அடையாளப்படுத்தப்படுவதுடன், இதுவரை மரபுரிமை அம்சங்கள் சுற்றுலாவில் முதன்மைப்படுத்தப்படாமைக்கான காரணங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கான தீர்வுகளை இனங்கண்டு இப்பிரதேசத்தை சுற்றுலா ரீதியாக வளப்படுத்தும் போது, இப்பிரதேசத்தின் மரபுரிமை வளங்கள் பாதுகாக்கப்படுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு, எதிர்கால சுற்றுலா வளர்ச்சியில் முக்கியம் பெற்ற பிரதேசமாகவும் இதனை மாற்றமுடியும். இதனூடாக இப்பிராந்தியம் சமூக, பொருளாதார அபிவிருத்தியினையும் அடைய முடியும்.

**திறவுச் சொற்கள்:** உருத்திரபுரம், சுற்றுலா, மரபுரிமை வளங்கள், உருத்திரபுரம் சிவன் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான கடல்சார் சுற்றுலா அபிவிருத்தியில் பூநகரி பிராந்தியம் பெறும் முக்கியத்துவம்

**சாரலன், தி., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
saralan1997922@gmail.com

வளங்களை சம அளவில் பங்கீடு செய்து சமூகம், சூழல், பொருளாதாரம் போன்றவற்றிற்கு பாதீடு செய்யாமல் எதிர்கால சந்ததியினரும் பயனடையக் கூடியவாறு அபிவிருத்திகளை மேற்கொள்ளும் போது சுற்றுலாத்துறையிலும் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். ஆகவே சுற்றுலாவினுடைய வளர்ச்சியில் மனிதனுடைய தேவை, நோக்கம், எதிர்பார்ப்பு போன்றவற்றில் பல சுற்றுலா அம்சங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றுள் மிகச்சிறந்த புத்துணர்ச்சியையும் அனுபவங்களையும் வழங்குவதில் கடல்சார்ந்த அம்சங்கள் இலக்கு மையங்களாக திகழ்வதனைக் காணலாம். இலங்கையினுடைய பண்பாட்டு பரிணாம வளர்ச்சியானது அதிகமாக கடல்வழித் தொடர்புகள் மூலமாகவே ஏற்பட்டதனை பல்வேறுபட்ட இலக்கிய, தொல்பொருட் சான்றுகள் ஊடாக அறிய முடிகின்றது. இந்தவகையில் எனது ஆய்வுப்பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிராந்தியம் காணப்படுவதனால் கடற்கரையினுடைய செல்வாக்கு இப்பிரதேசத்தின் தனித்தன்மையாக விளங்குகின்றது. பண்டு தொட்டு பூநகரி கடற்பிராந்தியம் தென்னாசியா, தென்கிழக்காசியா, ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக, வாணிப தொடர்புகளின் பின்னணியில் இணைக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. இத்துடன் அமைவிட ரீதியாகவும் கடல்நீரேரியுடன் தொடர்பு கொண்டுள்ளதனால் கடல்சார்ந்த சுற்றுலா வளர்ச்சியில் ஏனைய இடங்களை போன்று பூநகரியும் இயற்கை மற்றும் தொல்லியல், கலாசார சுற்றுலா வளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. எனினும் இங்கு சிறந்த திட்டமிடல்கள், முறையான நடைமுறைப்படுத்தல்கள் இல்லாதனால் அதிகமான சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுப்பது முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. மேலும் கடல்சார்ந்த பகுதிகளும் அதனோடிணைந்த பண்பாட்டுச் செல்வாக்குகள் தொடர்பான அடையாளப்படுத்தல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், தெளிவுபடுத்தல்கள் அதிகமாக மேற்கொள்ளாமையும் பல சுற்றுலா வழிகாட்டிகளுக்கு இப்பிரதேசம் பற்றிய தெளிவின்மையும் பிறிதொரு பிரச்சினையாக காணப்படுகின்றது. மேலும் போக்குவரத்து பாதைகள் சீர்செய்யப்படாமையால் விரைவானதும் இலகுவானதுமான போக்குவரத்தை மேற்கொள்வதில் இடர்பாடும் காணப்படுகின்றது. தென்னிலங்கையில் உள்ள மக்கள் எவ்வாறு தமது கலாசார பண்பாட்டம்சங்களை அழிவடையாமல் பாதுகாப்பதில் முன்னின்று செயற்படுகின்றார்களோ அந்தளவிற்கு நமது பிரதேசத்திலுள்ள அழிந்துபோன, அழிவடைந்து வருகின்ற மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்க எவரும் முன்வராமையும் குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. எனவே நிலையான கடல்சார் சுற்றுலா அபிவிருத்தியில் பூநகரி பிரதேசத்தை உள்வாங்கி சுற்றுலாவில் முதன்மைப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் பற்றி ஆராய்வதே இவ்வாய்வினுடைய நோக்கமாகும். இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் கள ஆய்வுகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்கள் அடிப்படையில் திரட்டப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலை தரவுகள் ஆய்வுப்பிரதேசம் தொடர்பாக கிடைக்கின்ற இலக்கியங்கள், ஆய்வுக்கட்டுரைகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தொல்லியல் திணைக்கள ஆய்வு அறிக்கைகள் என்பவற்றின் ஊடாக திரட்டப்பட்டுள்ளன. இதனூடாக சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான முறையில் நிலையான அபிவிருத்திகளும் அதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுற்றுலா ரீதியில் முக்கியம் பெறும் 5A (Attractions, Access, Accommodation, Amenities & Activities) அம்சங்களூடாக பூநகரி பிரதேச சுற்றுலா வாய்ப்பு ஆராயப்பட்டுள்ளன. முறையான முழுமையான ஆய்வுகளை மேற் கொள்ளுதல், பூநகரி பிரதேச சுற்றுலா அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல், சிறந்த பயண திட்டமிடல்களை உருவாக்குதல் போன்றனவற்றை நடைமுறைப்படுத்தும் போது பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

**திறவுச்சொற்கள்:** அபிவிருத்தி, திட்டமிடல், கலாசாரம், பூநகரி, சுற்றுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் இராமாயணம்சார் சுற்றுலா வளங்களும் வாய்ப்புக்களும் ஓர் ஆய்வு

**விஜயகுமார், அ., புஸ்பரட்ணம், ப.**

வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

revarukshani@gmail.com

இந்தியப் பெருநிலப் பரப்பின் பண்பாட்டு உருவாக்கத்தில் இதிகாச இலக்கியமான இராமாயணம் இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த இதிகாசத்தில் குறிப்பிட்டு சொல்லப்படும் சில முக்கிய இடங்களில் ஒன்றாக மன்னார் மாவட்டம் திகழ்கிறது. இலங்கையினுடைய பண்பாட்டுச் சுற்றுலா வளர்ச்சியில் இராமாயணம் சார் மரபுரிமைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் மன்னாரை அடிப்படையாகக் கொண்டு இராமாயண சுற்றுலாக்கான வளங்களும் வாய்ப்புகளும் என்ற நோக்கில் இவ்வாய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் அதிகமாக செறிந்து வாழும் மன்னார் மாவட்டத்தில் பாரம்பரிய மான பண்பாடுகள் குன்றிப் போகின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஏதேனும் ஒரு வகையில் பாரம்பரிய பண்பாடுகளை மீட்டெடுக்கும் நோக்கோடு இராமா யணம் சார் சுற்றுலா வளங்களைத் தேடி இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இதுவரை இராமாயணம் சார் பண்பாட்டு ரீதியில் எந்தவித ஆய்வுகளும் சுற்றுலாவின் நோக்கில் மேற்கொள்ளப்படாத நிலையில் இங்குள்ள இராமாயணம் சார் இடங்களான தலைமன்னார், தள்ளாடி மற்றும் திருக்கேதீஸ்வரம் போன்றவற்றை ஆவணப் படுத்துவதோடு, அவற்றை அபிவிருத்தி செய்யும் வழிமுறைகளைத் தேடி கண்டறிந்து முன்வைத்து சுற்றுலாவின் நோக்கில் அவற்றை அணுகுவதற்கான கருப்புலத்திலேயே இவ்வாய்வானது அமையப்பெறுகின்றது. இவ்வாய்வின் போது இராமாயணம் சார் இடங்களை மட்டுமல்ல இராமாயணம் சார் வரலாறு மற்றும் வாழ்வியல் அம்சங்களையும் பல இலக்கிய மூலாதாரங்களில் இருந்து தொகுக்க முடிந்தது. கள அவதானிப்புகள் மூலமும் நேர்க்காணல் மூலமும் முதலாம் நிலை தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாய்வு முன்னெடுப்புக்களில் இராமாயணம் சார் வாழ்வியல் நிலைகள் இன்றைய இந்து பண்பாட்டு சமூகங்களோடு எவ்வாறு நிலைத்திருக்கின்றது என்பதனை அறியும் நோக்கில் மன்னார் பிரதேசம் தவிர வேறு தமிழர் பகுதிகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாய்வின் பெறுபேறுகள் பற்றி பார்க்கும் பொழுது இராமாயணம் சார் வரலாறுகள் எமது இடப்பெயர்களோடு ஒத்தியம்புவதையும் இச்சரித்திரம் நிகழ்ந்ததாக கூறப்படும் பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அங்குள்ள வாழ்வியல் அம்சங்கள் இன்றும் தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் பின்பற்றப் படுவதனையும் ஆராய்ந்து அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் இவ்வாய்க்குரிய மையங்களாகிய தள்ளாடி, திருக்கதீஸ்வரம், தலைமன்னார், ராமர் பாலம், மாந்தை ஆகிய வற்றினை சுற்றுலாவில் பிரபலியப்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள் சாத்தியப்பாடுகள் என்பன கிடைக்கப்பெற்ற வளவாய்ப்புகளைக் கொண்டு இங்கு அடை யாளப்படுத்தப் பட்டுள்ளன. இதனூடாக மன்னார் மாவட்டத்தின் இராமாயணம் சார் இடங் களினை, இலங்கையின் ஏனைய இராமாயணம்சார் மையங்களுடனும், இந்தியாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணம்சார் மையங்களுடனும் இணைத்து சுற்றுலாவுக்குரிய திட்டங்களை முன்வைப்பதன் ஊடாக இலங்கையினையும் சுற்றுலா நோக்கில் மேம்படுத்த முடியும் என்பது அறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** மன்னார், இராமாயணம், ராமர் பாலம், மாந்தை, இராமாயணச் சுற்றுலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# State, Law, Governance and Media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Efficacy of Piercing the Corporate Veil in Sri Lanka: A Comparative Legal Analysis

**Hetti Mudiyanselage Iresha Anupama Kumari,Pradinath,K.**
Department of law, University of Jaffna
ireshaanu98@gmail.com

An essential dichotomy of legal concepts also exists in the field of company law. The lifting of the corporate veil can generally be lifted based on statutory provisions and judicial interpretations. However, it states that it can be pierced by the application of the terms of a statute or contract or in a broader view as a common law. However, the relative importance may vary depending on factors such as the completeness of the statute and the authority of the courts. In this background this study seeks to examine the concept of lifting the veil, which on the one hand, significantly recognizes separate legal personality, and on the other hand, tends to ignore the separate legal personality of a company. It is supposed to put a veil over the personality of the limited company which is often invisible to the court. But courts can often set aside the veil. They can often peel off the mask and see what lies behind. Under the inadequacy of Sri Lanka's constitutional provisions and case laws as compared to other jurisdictions, the concept of separate legal personality and veil piercing theory should be efficient and modernized. An attempt has been made to develop an implicitly accepted framework to elaborate the implementation of Sri Lanka's judicial and statutory instrument framework by uncovering the foundations and principles that enable the removal of the corporate veil by English common law. It is emphasized through this and attempts are made to establish Possible Recommendations and uniform rules to overcome the obstacles and practical problems arising in the use of each concept in the courts of Sri Lanka. This research was based on the mixed methodology, because this research is mostly based on the "positivist paradigm". A comparative analysis of veil piercing jurisprudence in the USA, UK and Germany as set out in the Companies Act No. 07 of 2007 and generally applicable. Finally, the author draws a conclusion by comparing the constitutional provisions supporting the lifting of the veil and studying current judicial trends under possible recommendations for establishing uniform laws for piercing the corporate veil in Sri Lanka. In order to build a strong economy free from fraud and corruption through a specific law, pointing out the social and legal practical values of establishing veil piercing jurisprudence in the laws of Sri Lanka.

**Keywords:** Lifting corporate veil, Separate legal personality, Limited liability, Grounds of lifting corporate veil, Sri Lankan company law, Economic crisis



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Critical Appraisal of Legal Framework Governing Limited Liability Partnership in Sri Lanka: A Way Forward

**Chandradas Iroshani, Pradinath, K.**
Department of Law, University of Jaffna.
**ciroshani123@gmail.com**

The research problem examines why has the concept of limited liability partnerships (LLPs) not been introduced in Sri Lanka, to enhance future business opportunities and investments despite the fact that Sri Lankan legislation provided for a legal framework for the establishment of the partnership business, . The goal is to determine the current legal framework for partnerships in Sri Lanka and compare it to the legal frameworks for partnerships in other countries, identifying the limitations of the current legal framework for partnerships in Sri Lanka and evaluate the potential benefits and challenges of introducing LLPs in the country, examining the experiences of other jurisdictions in implementing LLPs and identify best practices and lessons learned and to propose recommendations for reforming the existing laws on partnerships in Sri Lanka to accommodate LLPs, taking into account the needs and expectations of businesses and investors in the country. To achieve these objectives, research has first and foremost explant the current legal framework of partnership in Sri Lanka and apart from the comparative analysis have looked at the other countries generally to focus the practice on partnership. From that found out the advantages and disadvantages of our current legal framework relating to partnership and analyzes the implementation of Limited Liability partnership as an alternative for it. The advantages the study analyses and challenges of imposing it in our legal framework. India, Malaysia and Nigeria who practice Limited Liability Partnership in different ways with different provisions were considered to carry - out comparative analysis and lessons from their practices were endoresedi Through the analysis it is found that the inadequate development in the legal framework governing partnerships in Sri Lanka has resulted with many disadvantages and threats to the people who chose the partnership as the form of doing and carrying their business. Further comparing to other jurisdictions the limited liability partnership is carried alternatively for the fear of limited liability of partners and has been incorporated and secured through the provisions of the legislations. In conclusion to meet the development in the area of partnership and to mitigate the exsiting issues in partnership the implementation of Limited Liability Partnership in Sri Lanka is necessary. Therefore this research provides recommendations to accommodate the partnership in the form of limited liability partnership and provide protection to the partners of SriLanka who engage in the business with the goal of earning profit without any fear or any obstacles.

**Keywords:** Limited Liability Partnership, Partnership, Legislation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Leviathan Challenged: An Analysis of The Right to Revolt Demonstrated in the *Aragalaya* Movement

**Hasitha Perera, Kosalai Mathan**
Department of Law, University of Jaffna.
hasithawithanarachchi@gmail.com

REVOLUTIONS, although, almost invariably mark the darkest days of certain climacterics, the great consequences of some of such struggles, emancipating the common person from the shackles of absolutism and suffering, have resulted in great lionizations of some of them, while some, nonetheless, only see injustice and folly in them, and a grim reflection of this dichotomy of perceptions is visible in how Sri Lankans view the recent ARAGALYA movement; while it is hailed by some as a noble REVOLUTION, to some it is a base act of TERRORISM. In this light, this research attempts to understand the nature of ARAGALAYA, and to ponder under which categories from the above should it fall. In finding an answer, the research resorts to Hobbes's philosophy to digest the status of the Sri Lankan civil society, to see if they are entitled to revolt against their sovereign through REVOLUTIONS. The researcher concludes that the true sovereign of Sri Lanka, as defined by the 1978 Constitution, is the abstract entity found in THE PEOPLE, while the officials of the state are an APPARENT SOVEREIGN exercising the power entrusted to them by this TRUE SOVEREIGN. Although the civil society consisting various multitudes are bound to pay obedience to both sovereigns, they have not through the SOCIAL CONTRACT transferred their right to life. Researcher argues that when the right to life, even in its broadest sense, is violated the multitudes are entitled to revolt, discussing nonetheless why REVOLUTIONS should be a matter of last resort. It is, furthermore, seen that the line between TERRORISM and REVOLUTION is marked by violence against civilians and two criteria of legitimacy. This research, employing a doctrinal legal research methodology, studies Hobbes's body of work attempting to harmonize it with the 1978 Constitution. On these findings the researcher concludes that the ARAGALAYA is a justified REVOLUTION, albeit isolated acts of TERRORISM are seen in its unfolding. Nevertheless, the researcher demonstrates that the sense of self-preservation of persons would result in them circumventing having to revolt if they are given a truly lesser evil to resort to. To that end researcher recommends providing *socitas civilis* a legally identified method to revolt against their APPARENT SOVEREIGN, namely the recall referendum.

**Keywords:** Hobbes, Revolutions, Right to Resist, Sovereignty, Terrorism



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Critical Examination of the Data Protection Landscape in Sri Lanka: Identifying Challenges and Opportunities for Legal Reforms

**Rio Sangeeth, Pradinath,K.**
Department of Law, University of Jaffna
sangeethsatchi@gmail.com

The main goal of data protection and privacy regulations is to protect your data from unauthorized third parties' unauthorized access and theft. Although the phrases "data protection" and "privacy" are sometimes used interchangeably, these two standards differ significantly. Data protection offers measures and regulations that may be used to limit interdependence, whereas data privacy deals with the right to access data. Laws governing data protection and privacy have never been more crucial than they are now. Data security and privacy guarantee that data is protected against unauthorized third parties' illegal access and theft of the same. Data loss, theft, or corruption may be avoided with the use of a comprehensive data protection policy. It is clear that as information and communication technology advances daily, privacy concerns or dangers against people's personal data also grow. A government's need to implement appropriate privacy and data protection laws and regulations cannot be ignored at any time. It was noted as a significant legal gap in Sri Lanka as until very recently, there was no distinct legislation to address data protection and privacy. There are now a number of different laws that may be used to control certain areas of data protection and privacy in addition to the Personal Data Protection Act No. 09 of 2022. The purpose of this study is to determine if Sri Lanka's current legislative framework for data protection and privacy is sufficient and functional. This will be accomplished by contrasting Sri Lanka's legislative system with those of the UK and Singapore, two nations renowned for being leaders in the fields of data protection and privacy. The researcher's ultimate objective is to support efforts to ensure Sri Lankan citizens' right to privacy and data protection.

**Keywords**: Data protection, Privacy, Information Communications Technology, Personal data



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Artificial Intelligence and Its Impact on Human Right to Privacy

**Nuwanthi Madhubhashini Samarakoon, Nirojini, V.**
Department of Law, University of Jaffna.
nms.samarakoon.madhu@gmail.com

In the technological sphere, Artificial Intelligence (AI) is a great human intellectual invention. It lacks a proper definition. Defining artificial intelligence is not only difficult; it is also impossible, not least because we do not fully understand human intelligence. Artificial intelligence has a "hunger" for massive amounts of data, which goes against current privacy laws and culture. This begs the question, "How can artificial intelligence systems be used responsibly and ethically and gain the trust of users and society?" At the same time, while this newest technological creature, "AI," is critical to breakthroughs in healthcare, technology, and other industries, there are questions how data privacy is managed. The research focused on artificial intelligence and its threat to the right to privacy. This research looks at what the law's response would be if artificial intelligence violated the human right to privacy. A key gap in this research is determining whether the laws created by humans apply to machines or the individuals who created such machines. Since privacy legislation was created for humans and not for automated technological creatures, the main objective of this study is to find out whether there is any breach of privacy in cyberspace through AI algorithms and whether the burden and responsibility is placed on AI or to people who assist AI programs. In addition, this research highlighted the legal elements of privacy infringement by AI systems. The different kinds of AI systems that people use every day are scrutinized, as well as the risk that these AI systems acquire, access, or intercept data illegally. This research is based on a qualitative methodology and was designed and conducted using primary and primarily secondary sources of data and findings that were focused on multiple methods, including an interpretive, naturalistic approach to the topic. Based on the findings, ongoing research suggests alternative solutions to this problem based on lessons learned from India and the UK, as well as several case studies based on legislation created on the subject. Overall, this research is a preliminary analysis of the complex interplay between artificial intelligence and privacy rights. It needs further investigation to explore specific applications, legal implications and societal impacts to effectively mitigate the risks and harness the potential of AI while protecting individuals' privacy rights.

**Keywords:** Artificial Intelligence, Right to Privacy, Data privacy, Data Protection, Intellectual Property, Cyber Law



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களை மையப்படுத்திய உற்பத்திப் பொருட்களின் தொலைக்காட்சி விளம்பரங்களில் பால்நிலைசார் பிரதிநிதித்துவம்

**கஜேந்தினி, நி., அனுதர்ஷி, க.**

ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

kajenthininimalathasan@gmail.com

*அதிகமாகப் பலராலும் விரும்பப்படுவதும் நுகரப்படுவதுமான வெகுசன ஊடகங்களில் தொலைக்காட்சி முதலிடம் பிடித்துள்ளது. இன்றைய சூழலில் தொலைகாட்சி மிகவும் சக்தி வாய்ந்த சாதனமாக மக்களைத் தன் பக்கம் ஈர்த்து வைத்துள்ளது எனலாம். அந்த வகையில் தொலைக்காட்சி விளம்பரங்களும் அளப்பரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றன. சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என அனைத்து வகுப்பினரையும் இலக்காகக் கொண்டு தொலைக்காட்சி விளம்பரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் சிறார்களின் உற்பத்திப் பொருட்கள் சார்ந்த விளம்பர உள்ளடக்கங்களில் பால்நிலைச் சமத்துவம் பேணப்படுகின்றதா என்பதைக் கண்டறிதல் ஆகும். உள்ளடக்கப் பகுப்பாய்வில் எண்சார் ரீதியிலும் பெறுதிசார் ரீதியிலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நிகழ்தகவு மாதிரியில் எளிய எழுந்தமான மாதிரி தெரிவு செய்யப்பட்டு மாதிரிகள் வடிவமைக் கப்பட்டுள்ளன. இலங்கையில் இயங்குகின்ற தமிழ்மொழி மூலமான தொலைக்காட்சி அலைவரிசைகளான நேத்ரா தொலைக்காட்சி, சக்தி தொலைக்காட்சி, வசந்தம் தொலைக் காட்சி, டான் தொலைக்காட்சி மற்றும் கபிட்டல் தொலைக்காட்சி ஆகியவற்றில், சிறார் களை மையப்படுத்திய உற்பத்திப் பொருட்களின் விளம்பரங்கள் மாதிரிகளாக சேகரிக்கப் பட்டு ஆய்வாளரினால் அவதானிப்புமுறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் சிறார்களின் உற்பத்திப் பொருட்கள் சார்ந்த 34 விளம்பரங்களின் உள்ளடக்கங்களில் காணப்படும் கருப் பொருள், மொழிப்பாவனை, கதாபாத்திரங்கள், கமராக்கோணங்கள், குறியீடுகள் மற்றும் வர்ணங்கள் ஆகிய விடயங்களினூடாகப் பால்நிலைப் பிரதிநிதித்துவம் எவ்வாறு வெளிப் படுத்தப்படுகிறது என்பது பெறுதிசார்ந்த தரவாகவும் தொகுத்து தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில், நோக்கும் போது ஒப்பீட்டளவில் பெண் மைய பிரதிநிதித்துவத்தை விட ஆண் மைய பிரதிநிதித்துவம் உயர் அளவில் பேணப்படுவதை அவதானிக்க முடிகிறது. எண்சார்ந்த தரவின்படி நோக்கும் போது பெண் பாத்திர மையச் செயற்பாடுகளுக்கான நேர அளவு ஆண் பாத்திர மையச் செயற்பாடுகளுக்கான நேர அளவிலும் அதிகமாக ஒதுக்கப்படுகின்றது என்ற கருதுகோளை அடிப்படையாகக்கொண்டு ஒரு முடிவை நோக்கி இவ் ஆய்வானது பயணிக்கின்றது. பெறுதிசார்ந்த தரவினைத் தொகுத்து நோக்கும் போது கருதுகோளானது பகுதியளவில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எண் சார்ந்த தரவின்படி கருதுகோளானது மெய்ப்பிக்க முடியாத உண்மையாகக் காணப்படுகிறது.*

**திறவுச்சொற்கள்:** சிறார்கள், உற்பத்திப் பொருட்கள், தொலைக்காட்சி, விளம்பரங்கள், பால்நிலைப் பிரதிநிதித்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய மக்களின் வாழ்வியலில் வானொலி : நெடுங்கேணி, மாமடு கிராமசேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு

**சாருமதி. நா., யூட் டினேஸ் கொடுதோர்,சூ.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sharumathy2021@gmail.com

இன்றைய நவீன உலகில் ஊடகம் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. வானொலி ஊடகமானது செவிவழியாக செய்திகள், தகவல்களைச் சுவாரசியமான முறையில் கொண்டுபோய்ச் சேர்த்து நேயர்களைப் பெரிதும் மகிழ்விக்கும் ஊடகமாகத் திகழ்கின்றது. கற்பனை வழியே ஒரே நேரத்தில் மில்லியன் கணக்கான மக்களைத் தன்னுள்ளீர்க்கும் திறன் கொண்ட வானொலி, உழைக்கும் மக்கள் மத்தியில் தவிர்க்கமுடியாத இடத்தைப் பிடித்துள்ளது. தற்காலத்தில் நவீன ஊடகப்பாவனை அதிகரித்தமையால் வானொலியின் பயன்பாடு குறைந்து செல்வதாகக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவ்வாறிருக்க கிராமிய மக்களில் பெரும்பாலானவர்களுக்கு முக்கியமானதாக வானொலி இருப்பது அது கொண்டுள்ள பண்புகளின் காரணம் எனவும் கூறலாம். அந்தவகையில் மாமடு கிராம மக்கள் மத்தியில் தொழில் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் ஊடகத் தெரிவு என்று பார்க்கும்போது அதிகளவில் வானொலியைப் பயன்படுத்தும் தன்மையையே காணமுடிகின்றது. அதனடிப்படையில் கிராமிய மக்களின் வாழ்வியலில் வானொலியின் வகிபங்கு எவ்வாறு அமைகின்றது என்ற வினாவைக் கொண்டமைவதோடு வானொலி கேட்கும் மக்கள் பிரிவு, வானொலியைத் தெரிவுசெய்வதற்கான காரணம், வானொலி கேட்கும் கால அளவு, வானொலி கேட்கும் நேரம் வானொலி கேட்கப்பயன்படும் கருவி, கேட்கும் சந்தர்ப்பம், உள்ளடக்கத்தெரிவு, மக்களின் எதிர்பார்ப்பு, செய்தி மீதான நம்பிக்கைத்தன்மை, மொழியின் புரிதல், வானொலி அலைவரிசைத் தெரிவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதனூடாக கிராம மக்களின் வாழ்வியலில் வானொலி ஊடகத்தின் வகிபங்குகளை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வானது விடய ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. அதனடிப்படையில் முதனிலைத் தரவு சேகரிப்பிற்காக அவதானிப்பு, வினாக்கோவை, நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் ஆகியனவும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பிற்காக நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையக்கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நெடுங்கேணி, மாமடு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 390 மக்களில் 120 மாதிரிகள் எழுமாற்று முறையில் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வாளரால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 120 மாதிரிகளிலிருந்து வானொலி கேட்பதாக இனங்காணப்பட்ட 45 மாதிரிகளில் இயல்தகைமை அடிப்படையில் 18 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. கிராமிய மக்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முடிவுகள் பகுப்பாய்வு செய்யபட்டன. அதனடிப்படையில் கிராமிய மக்கள் அதிகம் பயன்படுத்துகின்ற ஊடகமாக வானொலி இருப்பதுடன் விவசாயம்சார் தொழில்களில் ஈடுபடும் அதிகமான வயதான ஆண்கள் தமது பொழுதுபோக்கிற்காக வானொலியைக் கேட்கின்றனர் எனும் ஆய்வு முடிவு பெறப்பட்டது. இவ் முடிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளரால் முன்வைக்கப்பட்ட கருதுகோளுடனும் கோட்பாட்டுச் சட்டகத்துடனும் வாய்ப்புப் பார்க்கப்பட்டது. அந்தவகையில் கிராம மக்கள் மத்தியில் வானொலிக்கான தேவை இருப்பதுடன் வானொலியின் வாழ்நாள் நீடிப்பு மக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்திலே தங்கியுள்ளது என்பதையும் அறியமுடிகின்றது.

**திறவுச்சொற்கள் :** வானொலி, கிராமிய வாழ்வியல், இலத்திரனியல் ஊடகம், விவசாயம், வானொலியின் பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்புதுமையினரும் சமூக ஊடகங்களும் : வாய்ப்புகளும் சவால்களும்

**சங்கீர்த்தனா, அ., அனுதர்ஷி, க.**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
skthanaa8@gmail.com

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமூக ஊடகத்தினைப் பயன்படுத்தாத நபர்களை விரல் விட்டு எண்ணி விடலாம் என்ற அளவிற்கு அதனுடைய வளர்ச்சி அபரிமிதமாகி விட்டது. ஒரு உடனடித் தகவலைப் பெற்றுக்கொள்ள சமூக ஊடகங்கள் தேவையான ஒன்றாகி விட்டன. சமூக ஊடகங்கள் பொதுவாக அநேக மக்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஊடகங்களாகும். பாரபட்சமின்றி தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் சமூக ஊடகங்களைப் பால்புதுமையினரும் அதிகம் பயன்படுத்துகிறார்கள். இந்த சமூக ஊடகங்களை பயன்படுத்தும் உயர் மக்கள் அதனூடாக வாய்ப்புகளையும் சவால்களையும் பெறுகின்றனர். “பால்புதுமையினரும் சமூக ஊடகங்களும் : வாய்ப்புகளும் சவால்களும்” எனும் இவ் ஆய்வானது யாழ் மாவட்டத்தில் வசிக்கும் பால்புதுமையினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அடையும் வாய்ப்புகளையும் சவால்களையும் ஆய்வு செய்கிறது. இதற்காக ஆய்வாளரால் வினாக் கொத்து, நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் ஆகிய முறைகள் மூலம் ஆய்விற்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வின் மாதிரிகளாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் பால்புதுமையினர் 50 பேர் பனிப்பந்து மாதிரி மற்றும் எழுந்தமான மாதிரி முறை மூலம் தேர்வு செய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் பால்புதுமையினர் அனைவரும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள். இதன் போது பொழுதுபோக்கு, விழிப்புணர்வு, பிரபலத்தன்மை, கல்வி போன்ற வாய்ப்புகளையும் ஆபாசமான கதைகள், புகைப்பட வன்முறை, ட்ரோலிங், தவறான கருத்துக்கள் போன்ற சவால்களையும் எதிர்கொள்வதாக ஆய்வாளரால் இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் பால்புதுமையினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதனால் அதிகமான சவால்களை எதிர்கொள்வதாக ஆய்வின் முடிவில் இனங்காணப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** பால்புதுமையினர், சமூக ஊடகங்கள், சவால்கள், வாய்ப்புகள், முகப்புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் முகப்புத்தகம் வழியான இணைய வன்முறை

**கிசோபனா, சு., யூட் டினேஸ் கொடுதோர்,சூ**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kisojerom98@gmail.com

இன்றைய இணைய உலகில் சமூக ஊடகங்கள் மிகக்குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்துள்ளன. அதிலும் முகப்புத்தகமானது பிரதான இடம் வகிக்கின்றது. தற்போது இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக ஊடகத்தளமாக முகப்புத்தகத்தினைக் குறிப்பிடலாம். அதேநேரம் சமகால சமூகத்தில் மிகமுக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக முகப்புத்தகம் வழியான இணைய வன்முறை காணப்படுகின்றது. இந்த ஆய்வின் நோக்கமானது முகப்புத்தகம் வழியாக இடம்பெறுகின்ற இணைய வன்முறையினை ஆராய்வதாகும். இவ் ஆய்விற்காக பெறுதிசார் மற்றும் எண்சார் நுட்பமுறைகளை கொண்டமைந்த இணைந்த நுட்பமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கான முதல்நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக முகப்புத்தகத்தள அவதானம், நேர்காணல் மற்றும் வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு, யாழ்ப்பாணத்தில் முகப்புத்தகம் வழியான இணைய வன்முறைக்குட்பட்ட முப்பது நபர்களை அடிப்படையாகக் கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான இரண்டாம்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகளாக ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையச் செய்திகள், முழு நீளத் திரைப்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் குறுந் திரைப்படங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில், ஆண்களைவிட அதிகளவில் பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவர் களே முகப்புத்தகம் வழியான பல்வேறு வடிவிலான வன்முறைக்குட்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வன்முறைக்குட்பட்டோர் தீங்கான உள்ளடக்கம், வெறுப்புப் பேச்சுக்கள் - பாலினக்காட்சி பகிர்வு, இழிவுபடுத்தும் சொற்பிரயோகம் (அவதூறான வார்த்தைப் பிரயோகம்), கேலி எனும் வடிவங்களில் வன்முறைக்குட்பட்டுள்ளனர். ஆண்கள் Doxing மற்றும் போலி அடையாளத்தை உருவாக்குதல் (Fake Id) எனும் இணைய வன்முறையினால் அதிகம் பாதிக்கப்பட, பெண்கள் மற்றும் மாற்றுப்பாலினத்தவர்கள் பாலியல் ரீதியான வன்முறையினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வன்முறையானது மீம்ஸ்கள், படங்கள், வீடியோக்கள் மற்றும் அவதூறான சொற்பிரயோக இடுகைகளின் மூலம் இடம்பெற்றதாக தரவின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே இணைய வன்முறை தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டதிட்டங்கள், மற்றும் அவற்றிற்கு எதிராக செயற்படக்கூடிய நிறுவனங்களது செயற்பாடுகள் தொடர்பில் மக்களை அறிந்திருக்கச்செய்வது அவசிய மாகும். இதன்மூலம் மக்கள் இவ் இணைய வன்முறைச் சம்பவங்களிலிருந்து விடுபடவும், அதற்கு எதிராகச் செயற்படவும் முடியும்.

**திறவுச்சொற்கள்:** முகப்புத்தகம், நிகழ்நிலை (Online) வன்முறைகள், சட்டங்கள், உளப்பாதிப்புக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக மக்கள் தொடர்பான புகைப்பட ஊடகவியல் : ஓர் ஆய்வு

டிலான் கிஷாந்தன், மை., ரகுராம், சி.
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
michealdilan8@gmail.com

ஊடகங்களே உலகின் மூன்றாவது கண்ணும் அரசின் பாதுகாவலனும் ஆகும்.இன்று ஊடகங்களானவை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றும் அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் தேசியளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக மக்கள் தொடர்பான செய்தி அறிக்கையிடல்களில் புகைப்பட ஊடகவியல் எவ்விதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, மலையக மக்கள் தொடர்பான புகைப்படங்களுக்கான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள விதம், செய்தி அறிக்கையிடலின் போது பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் ஊடக அறங்களுக்கு உட்பட்டுள்ளனவா, பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் உண்மைத் தன்மை மிக்கனவா முதலான விடயங்களை கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். குறித்த ஆய்வுச் செயற்பாடானது இலங்கையில் தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகள் குறிப்பிட்ட இரண்டு வாரங்களுக்குள் தரவு சேகரிப்புக்கு உட்படுத்தும் உள்ளடக்க ஆய்வாக மேற்கொள்ளப் பட்டமையோடு ஆய்விற்காக முதன்நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக நேர்காணல், நிகழ்நிலை கலந்துரையாடல் மற்றும் அவதான முறையும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பிற்காக செய்தித்தாள், சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வு கட்டுரைகள், இணைய கட்டுரைகள் வலைப்பூக்கள் போன்றன வும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் திரட்டப் பட்டு பண்புசார் முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் அனைத்துக்கட்டங் களிலும் ஆய்வு ஒழுக்கவியல் பின்பற்றப்பட்டது. தமிழ்த் தேசிய பத்திரிகைகளில் மாதிரி களாக தெரிவு செய்யப்பட்ட தினகரன், தினக்குரல், வீரகேசரி முதலான பத்திரிகை களினுடைய அச்சுப் பிரதிகள் அவதானிக்கப்பட்டு, தகவல்கள் திரட்டப் பட்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் ஆய்வின் முக்கிய முடிவுகளாக மலையக மக்கள் தொடர்பான புகைப்பட ஊடகவியலுக்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் ஏனைய செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் மலையக மக்களின் வாழ்வியல் கோலங்கள் அவற்றில் உண்மையாக பிரதிபலிக்கப்படவில்லை என்ற முடிவுகள் கிடைக்கப்பெற்றமையோடு பத்திரிகைகள் தங்களுடைய கருத்து நிலைச்சட்டகத்திற்கேற்ப தகவல்களை பரப்புவதோடு உண்மையான விடயங்களை மறைத்தே கருத்துக்களைப் பகிருகின்றன என்பதும் ஆய்வு முடிவாக வெளிவந்துள்ளது. எனவே இந்த ஆய்வு பத்திரிகை ஊடகங்களானவை ஒரு சமூகத்தை பற்றிய கருத்துக்களை வெளியிடும் போது அவற்றின் உண்மைத் தன்மையை அறிந்து வெளியிடுவதோடு எதிர்காலத்தில் இலங்கையில் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் தங்களது செய்தி அறிக்கையிடல்களில் மலையக மக்களினுடைய வாழ்விய லினை ஏனையோருக்கு எவ்வாறு எடுத்து கூற முயற்சிக்கின்றன என்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது முக்கியத்துவ மானது என்பதையும் பரிந்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** செய்தி அறிக்கையிடல், ஊடக அறம், வாழ்க்கைக் கோலம், தோட்டப்புற மக்கள், இலக்கு பெறுநர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புலன் வலுவிழந்தோரும் தகவல் தொழில்நுட்பவழித் தொடர்பாடலும்: வாய்ப்புக்களையும் சவால்களையும் அடையாளங்காணல்

ரிலக்ஷனா, ந,. பூங்குழலி, சி,. ரகுராம், சி
ஊடகக்கற்கைகள் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sinthushana97@gmail.com

தகவல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியினால் காலத்துக்கு காலம் தகவல் பரிமாற்றம் மாற்றமடைந்து செல்கின்றதோடு, தகவல் தொடர்பு சாதனங்களின் வருகையும் அதிகரித்துள்ளன. உடனுக்குடன் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியே காரணம். அதற்கமைவாக முன்பு ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தொழில்நுட்பங்கள் மேலும் மிக நெருங்கி ஒருங்கிணைந்து வளரும் போது ஒருமித்து உயர்தொழில்நுட்பமாக முன்னேறித் தொழில்நுட்பக் குவிகையாக வளர்ச்சியடைந்துள்ளன. தற்கால உலகிற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. உலகில் நாம் அனைவரும் பல்வேறு விடயங்களை பார்த்து இரசிக்கின்றோம். கண்களால் அல்லாது மனதால் இரசிக்கும் இரசனையும் அழகிய மனதையும் கொண்ட கற்பனைக்கும் எட்டாத இருள் சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றவர்களே விழிப்புலன் வலுவிழந்தோர்கள். இவர்கள் தம்மை நிலை நாட்டுவதற்காகவும், அடையாளப்படுத்துவதற்காகவும், திறன்களை வளர்த்துக் கொள்வதற்காகவும், தகவல்களினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் அதிக ஆர்வத்தினைக் காட்டி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில், விழிப்புலன் வலுவிழந்தோர் மத்தியில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த புரிதல் அவர்கள் அவற்றினை பயன்படுத்துவதற்கான காரணங்கள், பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பக் கருவிகள், அவற்றுக்கு உதவும் மென் பொருட்கள், அக்கருவிகள் மூலம் கிடைக்கும் வாய்ப்புக்கள் அவற்றினைப் பயன்படுத்தும் முறைமைகள் ஆகியவற்றினை கண்டறியும் பொருட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வகையில், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் விழிப்புலன் வலுவிழந்தோர் பல்கலைக்கழக மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், தனியார் தொழில் செய்பவர் கள், சுயதொழில் செய்பவர்கள், இல்லத்தரசிகள் என்போர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். 50 விழிப்புலன் வலுவிழந்தோர் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் தரவு களினைத் திரட்டுவதற்கு அவதானிப்பு, வினாக்கோவை மற்றும் நேர்காணல் முறையியல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்களினை பெறுநர் ஆய்வு முறையியலுக்கேற்ப எண்சார்ந்தும், பெறுதிசார்ந்தும் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டு, ஆய்வின் முடிவுகளாக, விழிப்புலன் வலுவிழந் தோர் தகவல் தொழிநுட்பத்தின் மூலம் அதிகமான வாய்ப்புக்களினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதுடன் தகவல் தொழில் நுட்பம் தொடர்பில் ஓரளவு புரிதலே விழிப்புலன் வலுவிழந்தோரிடம் காணப்படு கின்றமையும், தொடர்பாடல் மேற்கொள்ளல், பொழுதுபோக்கு, மற்றும் அறிவினை வளர்த்துக் கொள்ளல் போன்ற காரணங்களுக்காக அவர்கள் அதிகமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றமையும் ஆய்வாளரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காண முடிந்தது. மேலும், திறன்பேசி யினையே அதிகம் பயன்படுத்துகின்றனர் எனவும், மாதிரிக்குட்படுத்தப்பட்டோரில் அதிகமானோர் கணினியைப் பயன்படுத்துவதற்கு என்விடிஏ (மென்பொருளினையும் திறன்பேசி பயன்பாட்டிற்காக திரைவாசிப்பான் (Screen Reader), TalkBack, eSpeak, Access, Smart Lence, Google Home, Google Voice Assistant ஆகிய செயலிகளையும் மென்பொருட்களையும் பயன்படுத்துவதாகவும் ஆய்வாளரால் இனங்காணப்பட்டது. சவால்களினை விட வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்ற போதிலும் வாய்ப்புக்களினைப் பயன்படுத்துதல் குறைவாகவே காணப்படுகிறது என்பது ஆய்வாளரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

**திறவுச்சொற்கள் :** விழிப்புலன் வலுவிழந்தோர், தகவல் தொழில்நுட்பம், செயலிகள், வாய்ப்புக்கள், சவால்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா சமூக வானொலி : ஒரு வரலாற்றுப் பார்வை

**கனகேஸ்வரி, பா., யூட் டினேஸ் கொடுதோர்,சூ, பூங்குழலி, சி.**

ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

balakanagesh09@gmail.com

இலங்கையில் சமூக வானொலிகள் பல தோற்றம் பெற்ற போதிலும் அவற்றின் நிலைத்திருப்பு என்பது கேள்விக்குறியாகவே இருந்துள்ளது. வெகுஜன ஊடகங்கள் வெளிக் கொண்டு வராத பிரச்சினைகளை மலையகத்தில் பின்தள்ளப்பட்ட மக்களின் குரல்களின் மூலம் வெளிக்கொண்டு வருவதற்காக சமூக வானொலியின் அவசியம் உணரப்பட்டது. சமூக வானொலியாக ஊவா மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஊவா சமூக வானொலியின் வரலாற்றையும், வளர்ச்சிக் கட்டங்களையும் இவ் ஆய்வு ஆராய்ந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் குரல்களை வெளிக்கொண்டு வரும் முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறதா என்பதைக் கண்டறிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஊவா சமூக வானொலியின் வரலாற்றுப் பின்னணி என்ன? ஊவா சமூக வானொலியின் வளர்ச்சிக் காலக்கட்டங்கள் எவை? ஊவா சமூக வானொலி ஓர் சமூக வானொலிக்கான பண்புகளைக் கொண்டுள்ளதா? ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் எவ்வாறான சமூக வானொலிக்கான பண்புகள் காணப்படுகின்றன? சமூக வானொலியின் பண்புகளாக அடையாளப்படுத்தப்பட்ட பண்புகள் ஊவா சமூக வானொலியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன? சமூக வானொலி என்ற ரீதியில் ஊவா சமூக வானொலியின் சவால்கள் எவை? போன்றவை ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு வினாக்களாக அமைகின்றன. இந்த ஆய்வானது குரலற்ற மக்களின் குரலாக அமைதல், இலாப நோக்கமற்று செயற்படுதல், உள்ளூர் மொழி மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்துதல், பல்வேறு சமூக நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல், சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளித்தல், சமூகத்தின் கல்வி அறிவை மேம்படுத்தல், நல்லாட்சியை ஊக்குவித்தல், உள்ளூர் கலாசாரத்தை வெளிப்படுத்தல், உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகித்தல், சுயாதீனமாக இயங்குதல் ஆகிய பத்து பண்புகளை செயற்பாட்டு வரன்முறைகளாகக் கொண்டு பெறுதிசார் மற்றும் எண்சார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. முதல் நிலைத் தரவு திரட்டலுக்காக ஆய்வாளரினால் தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், ஆய்வின் நோக்கம் கருதி ஊவா சமூக வானொலியில் தொழில் புரியும் ஐவரிடமும், எளிய எழுந்தமான மாதிரி மூலம் இரண்டு வானொலி நேயர்களிடமும் பொதுமைப்படுத்தப்பட்ட வினாக்களைக் கொண்டு நேர்காணல் மேற் கொள்ளப்பட்டது. நூல்கள், இணையத்தளத் தரவுகள், ஆய்வறிக்கைகள் ஆகியன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக ஊவா சமூக வானொலி யுனெஸ்கோ அமைப்பின் உதவியுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஊவா மாகாண சபையின் அனுமதியின் கீழ் தோற்றம் பெற்றது. முதல் பத்து வருடங்கள் முழுமையான சமூக வானொலியாக செயற்பட்டு **2013** ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமூக வானொலி என்ற பண்பிலிருந்து விலகி செயற்படுகின்றது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா சமூக வானொலியின் வரலாற்றினை ஆராய்ந்ததனூடாக பெறப்பட்ட முடிவுகளாகும். நிதிப்பற்றாக்குறை, மற்றும் தொழில்நுட்ப கருவிகளின் வளங்கள் மிகக்குறைவாக காணப்படுகின்றமை, அரசியல் தலையீடுகள், களப்பயணங்களுக்கான மனித வளம் இன்மை, வானொலியின் அதிர்வெண் மாற்றம் போன்றவை முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி இயங்குவதற்கு சவாலாக அமைந்துள்ள காரணங்களாக ஆய்வின் முடிவில் அடையாளப்படுத்தப்பட்டன. ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சி உள்ளடக்கங்களில் சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் அதிகளவில் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டுள்ளன. புதன் மற்றும் வியாழக் கிழமைகளின் நிகழ்ச்சிகள் ஓரளவான சமூக வானொலிப் பண்புகளையும், திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளின் நிகழ்ச்சிகள் குறைந்தளவிலான சமூக வானொலிப் பண்புகளையும் கொண்டுள்ளன மிகக் குறைந்தளவி லான சமூக வானொலிப் பண்பினை செவ்வாய்க்கிழமை நிகழ்ச்சிகள் கொண்டுள்ளன. என்பதும் ஆய்வாளரினால் கண்டறியப்பட்ட ஆய்வின் முடிவுகளாகும்.

**திறவுச்சொற்கள் :** வரலாறு, நிகழ்ச்சி உள்ளடக்கம், ஊவா சமூக வானொலி, சமூக வானொலிப் பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே "டிக்டொக்" செயலியின் பயன்பாடு: முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**கல்கி, ஜெ., பூங்குழலி, சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kalkyj09@gmail.com

ஒரு கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவியே ஊடகமாகக் கருதமுடிகின்றது. சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்னணியில் உள்ளனர். குறிப்பாக 15-30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இன்று சமூக ஊடகங்களையே பயன்படுத்தி வருவதாக பெரும்பாலானவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில், இளைஞர்களுக்கும் சமூக ஊடகப் பாவனைக்குமிடையில் கணிசமானதொரு தொடர்பு காணப்படுகின்றது. சமூக ஊடகப் பாவனையில் "டிக்டொக்" செயலியை இளைஞர்கள் பயன் படுத்துவதால் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுவது இனங்காணப்பட்டதன் அடிப்படையில் இளைஞர்கள் "டிக்டொக்" செயலியை பயன்படுத்துவதால் எவ்வாறான தாக்கங்கள் ஏற்படு கின்றது என்பதனைக் கண்டறிவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகக் கொள்ளப் பட்டது. அதனடிப்படையில், முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைக்கக் கூடிய பகுதியாக விளையாட்டுக்கழகங்கள் காணப்பட்டமையினால் அவற்றில் செயற்பாட்டில் உள்ள பத்து விளையாட்டுக்கழகங்களிலுள்ள இளைஞர்கள் (333) தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்ஆய்வுக்காக அளவியல் மற்றும் பண்புசார் முறையில் தரவுகள் பெறப்பட்டன. விளையாட்டுக்கழகங்களில் உள்ள மாதிரிகள் ஒவ்வொரு துறைசார்ந்து டிக்டொக் செயலியில் காணொளிகளைப் பதிவிடுகின்றமையினால் முதலாம் நிலைப் பண்புத்தரவாக குவிமையக்கலந்துரையாடல்கள் மூலமும் அளவியல் தரவுகளாக வினாக்கொத்து (80) மூலமும் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக டிக்டொக் செயலி பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. முல்லைத்தீவு கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு இளைஞர்களிடையே காணப்படுகின்ற சமூக ஊடகப் பாவனையில் டிக்டொக் செயலியின் பயன்பாட்டினால் எவ்வகையான தாக்கங்கள் ஏற்படுகின்றன, இளைஞர்கள் டிக்டொக் செயலியைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள், ஏனைய சமூக ஊடகங்களோடு ஒப்பிடும் போது டிக்டொக் செயலியின் பயன்பாட்டு நேரம் எவ்வகையானது, இளைஞர்களிடையே டிக்டொக் செயலி எவ்வாறான சமூகத் தொடர்பாடலை ஏற்படுத்துகிறது போன்றவற்றினைக் கண்டறிதல் இவ் ஆய்வின் துணை நோக்கங்களாக ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டன. தரவுகளானது கணினி மூலம் எளிய புள்ளி விவரவியல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. முல்லைத்தீவு கரைதுறைப்பற்று இளைஞர்கள் டிக்டொக் செயலியைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாக விளம்பரப் படுத்தல், பிரபலமடைதல், வேலைப்பளு தொடர்பான மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல், வணிகம், பொழுதுபோக்கு, கல்வித் தேவை போன்றன அடையாளம் காணப்பட்டன. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளின் பெறுபேறாக கரைதுறைப்பற்று இளைஞர்கள், புதிய வகை செம்மையாக்கலை அறிந்து கொள்ளல், திறமைகளை வெளிக்காட்டல், பிரபலமடைதல், நண்பர் வட்டத்தை உருவாக்கல், தகவலைப் பெற்றுக் கொள்ளல், மக்கள் பிரச்சினையை வெளிக்கொணர்தல், சமூக உறவுகளை இணைத்தல் போன்ற நேரான தாக்கங்களையும், அன்றாட செயற்பாடு பாதிப்பு, மாணவர்களின் கல்வியில் கவனக் குறைவு, அதிக செலவீனம், போலிச் செய்தி பரப்பப்படுதல், வேலையில் கவனக் குறைவு, குடும்பத்தினருடனான உரையாடல் குறைவடைதல் போன்ற எதிர்மறையான தாக்கங்களை யும் எதிர்கொள்கின்றனர் என்பதனை ஆய்வின் முடிவில் உறுதிப்படுத்தப் பட்டன. இவற்றுடன் இளைஞர்கள் டிக்டொக் செயலியைப் பயன்படுத்துவதால் சமூகத்தொடர்பாட லானது குறைவான அளவில் மேற்கொள்ளப்படுகின்றதுடன், அதாவது சமூகப்பிரச்சினைகள் இடம்பெறும் போது அவை தொர்பான விடயங்களை இச் செயலியில் பதிவிடுகின்றனர் ஏனைய நேரங்களில் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதனையும் ஆய்வாளரால் கண்டறிய முடிந்தது.

**திறவுச் சொற்கள்:** சமூக ஊடகங்கள், இளைஞர்கள், டிக்டொக் செயலி, பயன்பாடு, தாக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குநர் மதிசுதாவின் "வெந்து தணிந்தது காடு": போர்க்கால வாழ்வியலின் சித்திரிப்புக் குறித்த பார்வை

**தேவஜனனி, ந., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
njanajanai@gmail.com

*வலிகளின் வாழ்விடமாகிப்போன ஈழத்தின் கதைகளை திரைப்படமாக்குவதென்பது மிகச் சவாலானதாகும். மக்கள் கதைகளை அவற்றின் யதார்த்தத்திற்குப் பங்கமேற்படாமலும், வலிகளிலிருந்து மீண்டவர்களையும், மீண்டு கொண்டிருப்பவர்களையும் மீண்டும் மீண்டும் அந்தந்த நினைவுச் சித்திரவதைகளுக்குள் சிறைப்பட வைக்காமலும், மண்ணுக்காய் மறைந்துபோனவர்களின் உறக்கத்தைக் கலைக்காமலும் மிகக் கவனமாக திரைக்காவியங்களாக உருவாக்குவது மிகவும் சிக்கலானதொரு விடயமாகும். இவ்வாறானதொரு முயற்சியென்பது ஈழத்தின் வலிநிறைந்த வாழ்வியலைத் தலைமுறை கடந்து எடுத்தியம்புவதற்கும், கடந்த காலத்தின் வாழ்வியற் கூறுகளை மீட்டிப் பார்ப்பதற்கும், எதிர்கால சந்ததியினர் போர்க்கால வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்குமான ஆவணமாகவும் அமைகிறது. அந்த வகையில் ஈழத்தின் போர்க்கால வாழ்வியல் தொடர்பாக ஆராயும் முகமாக இயக்குநர் மதிசுதாவின் "வெந்து தணிந்தது காடு" திரைப்படம் ஆய்வின் பிரதான மாதிரியாக எடுத்துகொள்ளப்பட்டது. இந்தத் திரைப்படத்தின் திரைக்கதை, வசனங்கள், காட்சி அமைப்புக்கள், கதைக்களம், கதாபாத்திரங்கள், போர்க்கால வாழ்வியல் ஆகியவற்றோடு, திரைப்படம் தொடர்பாக வெளிவந்த திறனாய்வுகளையும் உள்ளீர்த்து உள்ளடக்க ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இந்த உள்ளடக்க ஆய்வின்வழி போர்க்கால வாழ்வியலை "வெந்து தணிந்தது காடு" எவ்வாறு சித்திரித்துள்ளது என்பது ஆராயப்பட்டது. போர்க்காலத்தின் போது மக்களின் அனுபவங்கள், வாழ்க்கையின் பிரதிபலிப்பு, அச்சூழலில் வாழ்ந்த நபர்களின் உளவியல் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவற்றைத் திரைப்படம் சித்திரித்து முன்வைத்தவிதம், அவற்றின் துல்லியத்தன்மை அகியனவும் ஆராயப்பட்டன. இந்த திரைப்படத்தில் வரக்கூடிய பெரும்பாலான காட்சிகள் யதார்த்தத்தை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தமை ஆய்வின்வழி உறுதிப்படுத்தப்பட்டது. கதாபாத்திரங்கள், வசனங்கள், ஆகியவற்றோடு தொழில்நுட்பரீதியாக ஒளிப்பதிவும், ஒலிச்சேர்க்கையும் இதற்குப் பெருந்துணைபுரிந்துள்ளன. ஆனால், கதைக்களம் மற்றும் காட்சிகள் போர்க்கால வாழ்வியலை அச்சொட்டாகச் சித்திரிக்க முயன்றாலும், போரியல் வாழ்வு பற்றிய சில வலிந்த சேர்க்கைகளும் இணைந்ததாக இந்த திரைப்படம் அமைவதும் அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, இறுதிக்கட்டக் காட்சிகள் பதுங்குழி வாழ்வைக் காட்டும்போது படைப்பாளியின் கருத்தியலை முன்கொண்டுவர சற்று மிகைப்படுத்தப்பட்ட கால இணைப்புக்கள் ஒருசேர காட்சித்தொடராக வரிசைப்படுத்தப்பட்டிருந்ததும் உணரப்பட்டது.*

**திறவுச்சொற்கள்** : மதிசுதா, ஈழத் திரைப்படங்கள், போர்க்கால வாழ்வியல், சித்திரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் கிறிஸ்தவக் கூத்துக்களின் மீளுருவாக்கம் : ஏற்புடைமைகளும் எதிர்ப்புக்களும்

**துசியந்தி, ப., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thusithusipara@gmail.com

ஈழத்துப் பாரம்பரியக் கூத்துக்களில் கிறிஸ்தவக் கூத்துக்கள் முக்கியமானவை. இவை தனித்துவமான நிகழ்த்துமுறைமையினையும், அழகியல் நுட்பங்களையும், சமூகத்துடனான ஊடாட்டத்தையும் கொண்டுள்ளன. இவ்வாறு காலங்காலமாக ஆடப்பட்டு வந்த கூத்து முறைமையானது காலத்திற்குத் தகுந்தாற் போல மாற்றங்களை உள்வாங்கத் தலைப் பட்டுள்ளன. இந்தவகையில் தற்காலத்தில் பாஷையூர்ப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் கிறிஸ்தவக் கூத்துக்களானவை அவற்றின் கதை, களம், நேரம், கதாபாத்திரங்கள், ஆடை அணிகலன்கள், ஒப்பனை, இசை, மேடையமைப்பு, பார்வையாளர்களின் நிலை போன்ற விடயங்களில் மீளுருவாக்கம் அடைந்து நிகழ்த்தப்படுவதை அவதானிக்கலாம். சமகாலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி, ஊடகங்களின் பரவலாக்கம், உலகமயமாதலுக்குள் சிக்குண்ட சமுதாயம் போன்ற காரணிகளால் நொடிக்குநொடி மாற்றங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகிவிட்டது. இத்தகைய மாற்றங்கள் கிறிஸ்தவக் கூத்துக்களிலும் உள்வாங்கப்பட்டு, அவை மீளுருவாக்கமடைந்து நிகழ்த்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் இத்தகைய மீளுருவாக்கச் செயற்பாடு இடம்பெறுகையில், ஒருபுறமிருந்து அதற்கு ஆதரவான, அனுகூலமான நிலைமைகள் காணப்படுமிடத்து, மறுபுறமிருந்து அதற்கு எதிரான நிலைமைகளும் உருவாகின்றன. இதனடிப்படையில், இந்த ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தின் கரையோரப் பகுதியாகிய பாஷையூர்ப் பிரதேசத்தின் கிறிஸ்தவக் கூத்துக்களின் தற்போதைய நிலை, அவற்றில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கச் செயற்பாடுகள், அண்ணாவிமார், கூத்துக்கலைஞர்கள், கூத்துக்கலையை தற்காலத்தில் பயிலும் இளைஞர்கள், பார்வையாளர்களிடத்தில் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் என்பதைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், பாஷையூர்ப் பிரதேசத்தில் இன்றும் ஆடப்பட்டுவரும் தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியார், அந்தோனியார் ஆகிய கூத்துக்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யயப்பட்டன. கள ஆய்வு மற்றும் நேர்காணல்கள் மூலம் இந்தக் கூத்துக்களில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கம், அதன் தற்காலப் போக்குகள், அத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்பவர்கள், அதனை எதிர்ப்பவர்கள், பார்வையாளர்களுடைய நிலை ஆகியவற்றை உள்ளடக்கிப் பெறப்பட்ட பெறுமதிசார் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுப் பகுப்பாய்வில் கிடைக்கப் பெற்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, பாஷையூர்ப் பிரதேசத்தில் கிறிஸ்தவக் கூத்துக்களில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கச் செயற்பாடானது பெரும்பான்மையும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற முடிவு கிடைக்கப்பெற்றது. பாரம்பரியக் கிறிஸ்தவக் கூத்துக்கள் அவற்றின் அழகியல் தன்மையுடன் பேணப்பட்டு, அடுத்த தலைமுறையினரிடத்தில் கையளிப்படுவதற்கும் சமூக மாற்றத்துடன் அவற்றைத் தக்கவைப்பதற்கும் மீளுருவாக்கச் செயற்பாடானது சந்தர்ப்பம் தருவதாகவும் ஆய்வின்வழி தெரியவந்தது.

**திறவுச்சொற்கள் :** கூத்துக்கள், கிறிஸ்தவக் கூத்துக்கள், மீளுருவாக்கம், ஏற்புடைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பெண்களுக்கான சஞ்சிகைகள் : ஓர் உள்ளடக்க ஆய்வு

**துலக்ஷா, .பி., யூட் டினேஸ் கொடுதோர். சூ.**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
thulakshapremathas@gmail.com

தொடர்பாடலையும் ஊடகங்களையும் வேறுபிரித்து விட முடியாத வகையில் தொடர்பாடலை கட்டமைக்கும் அடிப்படைக்காரணிகளாக ஊடகங்கள் அமைகின்றன. இவ்வகையிலே வெகுஜன ஊடகங்களில் பழைமையான ஊடகமாக கருதப்படுவது அச்சு ஊடகமாகும். அச்சு ஊடகம் என்ற வகைப்பிரிப்பில் பொதுவாக பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ் வகையில் இவ் ஆய்வானது அச்சு ஊடகத்தில் ஒன்றாக விளங்கும் சஞ்சிகைகள் தொடர்பானதாக அமையப்பெற்றுள்ளது. இந்த ஆய்வானது இலங்கையிலிருந்து **1970- 2000** ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிவந்த பெண்களுக்கான சஞ்சிகைகள் என்ற வகையில் பெண்ணின்குரல், நங்கை, நிவேதினி, பெண் எனும் சஞ்சிகைகளை மாதிரியாகக் கொண்டும் அவற்றின் உள்ளடக்கத்தினை மையமாகக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ் ஆய்வானது உள்ளடக்க பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரின் பார்வையிலும் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு, எழுத்தாளர்கள் மற்றும் சஞ்சிகை வாசகர்களினை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆய்வில் முதனிலைத்தரவாக குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளிவந்த பெண்ணின்குரல், நங்கை, நிவேதினி, பெண் சஞ்சிகைகள் என்பனவும், சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு நபர்கள், எழுத் தாளர்கள், வாசகர்கள் என்போரின் நேர்காணல்களும் அமையப்பெற்றுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுடன் தொடர்புடைய ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், ஆய்வேடுகள் போன்றன அமைந்து காணப்படுகின்றன. ஈழத்தில் பெண்கள் சார்ந்து வெளிவரும் சஞ்சிகைகள் பற்றிய ஒரு தெளிவினையும், சஞ்சிகைகளில் பால்நிலை சார்ந்துபெண்கள் பற்றிய சமூகத்தின் கண்ணோட்டம் எவ்வாறு இருக்கின்றது என்ற தெளிவினையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்ஆய்வானது சஞ்சிகை களின் உள்ளடக்கம் என்னும் தன்மையில் சஞ்சிகைகளின் அட்டைப்பக்கங்கள், ஆசிரியர் தலையங்கங்கள், படைப்பாக்க விடயதானங்கள், பக்க வடிவமைப்புக்கள் என்பனவற்றினைப் பற்றிப் பேசும் தன்மையில் அமையப் பெற்றுள்ளதுடன் இந்த ஆய்வு எண்சார்ந்த முறையிலும் பெறுதிசார்ந்த முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண்சார்ந்த முறையில் சஞ்சிகைகளின் ஆசிரியர் தலையங்கங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. பெறுதி சார்ந்த முறையில் சஞ்சிகையின் உள்ளடக்க படைப்பாக்கங்கள் ஆராயப்பட்டன. இந்த வகையில் இவ் ஆய்வின் முடிவானது மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகள், சஞ்சிகைகளுக்குரிய பல்பரிமாண தன்மையான இயல்புகளை கொண்டுள்ளது என்பதனை சஞ்சிகைகளின் அட்டைப்பக்கங்கள், ஆசிரியர் தலையங்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு அவதானிக்க முடிகின்றது. பெண்களுக்கான பிரச்சினைகளை முதன்மைப்படுத்திய வகையில் நவநாகரிகப் போக்குகள் சார்ந்து பேசப்படும் விடயங்கள் குறைவானதாக இச்சஞ்சிகைகள் உள்ளமை இவ் ஆய்வின் முடிவாக கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** ஈழத்து சஞ்சிகைகள், பெண்களுக்கான சஞ்சிகைகள், உள்ளடக்கங்கள், பேசுபொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'OTT' தளங்களின் தற்காலப் போக்கு : சந்தைவாய்ப்புகளும் சவால்களும்

**ஸ்ரீவித்தியா, பி., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Sriviththi4@gmail.com

*உலகளாவிய ரீதியில் திரைப்பட இரசிகர்கள் மத்தியில் OTT தளங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அதிலும் கொரோனாக் காலத்தில் இதன் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. அதன் தாக்கம் இலங்கையிலும் அண்மைக் காலங்களில் பிரதிபலிக்கின்றது. OTT தளங்கள் வழியாக திரைப்பட இரசிகர்கள் திரைப்படங்களைத் தெரிவு செய்வது மற்றும் பார்ப்பது பற்றிய அதிகமான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான நிலையில் OTT தளங்கள் இலங்கையை மையமாகக் கொண்டு திரைப்படங்களை விநியோகிப்பது, இரசிகர்கள் பார்வையிடுவதற்காகச் சந்தர்ப்பங்களை வழங்குவது என்பது போன்ற பல வாய்ப்புக்களை கொண்டிருக்கும் அதேவேளையில் சவால்களையும் எதிர்கொள்கின்றன. மக்களின் மனோநிலை, திரையரங்குகளின் செல்வாக்கு, உள்ளகத் திரைத்துறையின் வளர்ச்சி போன்றனவும் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்வாறானநிலையில், இலங்கையில் OTT தளங்களின் உருவாக்கம் மக்களின் திரைப்பட நுகர்விலும், திரைப்படங்களை இரசிக்கும் பாணியிலும் மாற்றங்களை உருவாக்கியுள்ளதா என்பதனை வெளிக்கொண்டுவரும் நோக்கில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் உள்ள OTT தளங்கள், அவற்றின் அறிமுகம், அவற்றின் உத்திகள், OTT தளங்களின் திரைப்படக் கொள்வனவு, இலங்கையில் OTT தளங்களுக்கான சந்தை வாய்ப்புக்களும் அவற்றை தீர்மானிக்கும் காரணிகளும், இலங்கையில் OTT தளங்களின் சந்தைவாய்ப்புக்களில் உள்ள சவால்கள் என்பன ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்விற்காக OTT தளங்கள், அவற்றின் உரிமை நிறுவனங்கள் சார்ந்தோர், இலங்கை மற்றும் இந்தியத் திரைப்படத் துறையினர், பொதுமக்கள் போன்றோரிடம் இருந்து நேர்காணல்கள், வினாக்கொத்து, அவதானிப்பு, கலந்துரையாடல்கள் போன்றவற்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் பகுப்பாவிற்கு உட்படுத்தப்பட்டன. இதன்வழி, இலங்கையில் திரையரங்குகளின் செல்வாக்கு காணப்படுகின்றபோதும் OTT தளங்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் கணிசமான அளவில் காணப்படுவதோடு, OTT தளங்களுக்கான நுகர்வுவெளியும் இலங்கையில் பரந்தளவில் வியாபித்துவருகின்றது என்பது இவ் ஆய்வின் வழியாகக் கண்டறியப்பட்டது.*

**திறவுச்சொற்கள் :** OTT, திரைப்படம், இரசனை, இரசிகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் தெய்வ வழிபாட்டில் தொடர்பாடல் : மறவன்புலவு கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு


**றுக்ஷி வினோதா, அ., ரகுராம், சி., அனுதர்ஷி, க.**

ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

rukshyarulnesan21@gmail.com



நாட்டாரியலை ஓர் இன அல்லது சமூக குழுமம் பாரம்பரியமாகப் பேணிவரும் பண்பாடு, வழக்குகள் பற்றி ஆராயும் அறிவியல் எனக் கொள்ளலாம். நாட்டாரியலின் மிகக் குறிப்பிடத் தக்க அம்சமாகவே நாட்டார் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. மானுடவாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. சில நம்பிக்கைகள் பகுத்தறிவிற்கு ஒவ்வாததாக இருக்கும் போது அவை மூடநம்பிக்கைகளாகக் காணப்படும். நாட்டார் சூழலில் பல நம்பிக்கைகள் யதார்த்தத்திற்குப் பொருத்தமாக, காரணகாரியத் தொடர்பு களுடன் இருப்பதனையும் சில நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளின் பேறாக இருப்பதனையும் அவதானிக்கலாம். அந்தவகையில், ஆன்மீக நம்பிக்கையின் அடித்தளமாக நாட்டார் தெய்வ வழிபாடுகளும், கிராமிய தெய்வங்களும் காணப்படுகின்றன. மக்கள் அணுகக்கூடிய தாயிருக்கும் இக்கிராமிய தெய்வங்கள் மிக எளிமையானவையாகக் காணப்படும். மக்களுடன் மிக நெருக்கமான தொடர்பாடற் பண்புகள் சிறப்பாக அமைந்திருக்கும். அந்தவகையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள மறவன்புலவு கிராமத்தின் நாட்டார் தெய்வ வழிபாடுகளையும் அவற்றில் தொடர்பாடல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் மக்கள் எவ்வாறான ஈடுபாட்டுடன் அத்தொடர் பாடலில் ஈடுபடுகின்றனர் என்பதையும் கண்டறியும் நோக்கில் "நாட்டார் தெய்வ வழிபாடுகளில் தொடர்பாடல்" என்பதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் கள ஆய்வு, குவிமையக் கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட பெறுதிசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆளுள், ஆளிடை, குழு, ஆள்கடந்த, பிரசன்னமில்லாத் தொடர்பாடல் வகைகளோடு, வாய் மொழிசார் மற்றும் வாய்மொழிசாரா தொடர்பாடல் முறைமைகளும் மறவன்புலவு கிராமத்தின் நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இன்றும் விரவிக் காணப்படுவது ஆய்வின்வழி அடையாளப்படுத்தப்பட்டது. அதேவேளை, சாமியாடல், நேர்த்தியும் நிறைவேற்றமும், குறிசொல்லுதல், தீயபண்புகளை விலக்க மந்திரமிடல் போன்ற சிக்கலான தொடர்பாடல் அம்சங்கள் நிறைந்த சடங்குகள் மிக அருகிவருவதும் ஆய்வில் தெரியவந்தது. ஒருவகையில், நாட்டார் தெய்வ வழிபாட்டிற்கே உரித்தான தொடர்பாடற் சூழல் வாழ்வுமுறை மாற்றங்களுள் சிக்கற்தன்மையிலிருந்து இலகுநிலைக்கு நகர்வதும் பெரிதும் உணரப்பட்டது.



**திறவுச்சொற்கள்:** நாட்டாரியல், தெய்வ வழிபாடு, தொடர்பாடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான வணிக மாதிரியாக வலையொளித்தளம் : யாழ்ப்பாணத்திலிருந்தான வலையொளித்தளங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விடய ஆய்வு

**ரோகினி, அ., ரகுராம், சி**

ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

rohiny489@gmail.com

வலையொளித்தள அலைவரிசைகளின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் வலையொளித்தள அலைவரிசைகளை இயக்குபவர்கள் அதிகளவு வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கான அடித்தளத்தை வலையொளித்தள அலைவரிசைகள் கொண்டிருக் கின்றன. இன்று நவீன கையடக்கத் தொலைபேசிகளின் வருகையால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வலையொளித்தளத்தை நாடுபவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் வலையொளித்தள அலைவரிசைகளை வைத்திருப்பவர்களின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் பார்வையிடும் நேரமும் அதிகரிக்கின்றது. இதன்மூலம் அதிகளவு வருமானத்தை வலையொளித்தள அலைவரிசைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது. இது தொடர்பில் வலையொளித்தள அலைவரிசைகள் கொண்டிருக்கக் கூடிய உள்ளடக்கங்கள், வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தி முறைகள், வலையொளித்தளத்தை வெற்றிகரமான வணிகமாக கொண்டு செல்வதற்கு எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் என்பன தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அளவறி ஆய்வு முறையாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது யாழ்ப்பாணத்திலுள்ள வலையொளித்தளங்களின் உள்ளடக்கம் பற்றிய பெறுதிசார் ஆய்வாகவும், எண்சார் ஆய்வாகவும் அமையும். ஆய்விற்குத் தேவையான தரவுகளானவை அவதானம் மற்றும் நேர்காணல்கள் மூலம் திரட்டப்பட்டன. இவ்வாய்விற்காக யாழ்ப்பாணத்தை அடிப்படை யாகக் கொண்டு செயற்படுகின்ற வலையொளித்தள அலைவரிசைகள் மத்தியில் இருந்து செய்தி மற்றும் நடப்பு விவகாரம், சுற்றுலாவும் புதிய தரிசனமும், உணவும் சமையல் முறையும், நினைவுகளை மீட்டல், மருத்துவமும் சுகாதாரமும், ஒப்பனையும் அழகுபடுத்த லும், ஆன்மீகம் மற்றும் யாத்திரை ஆர்வம், கல்வி சார் நடவடிக்கை, பேசாப் பொருட்களைப் பேசுதல், பரிசுப் பொருட்களை வழங்குதல் போன்ற கட்டமைப்பின் கீழ் வலையொளித்தள அலைவரிசைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, வலையொளித் தளமானது வெற்றிகரமான வணிக மாதிரியாகச் செயற்படுவது எவ்வாறு என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற வலையொளித்தளங்களானவை பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொண்டாலும் தங்களுடைய வாய்ப்புக்களையும் உத்திமுறைகளையும் பயன்படுத்தி வெற்றிகரமான வணிக மாதிரியாக அதனை முன்கொண்டு செல்லுகிறார்கள் என்பது இவ் ஆய்வின் மூலமாக முடிவாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள் :** வலையொளித்தளம், வணிக மாதிரி, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழுந்த முழுநீளத் தமிழ்த் திரைப்படங்கள்

**கவினயா, தே., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kavinaya1412@gmail.com

திரைப்படம் ஒன்றிற்குத் திரைக்கதை என்பது முக்கியமானதொன்றாகும். சமூகத்தில் இருந்தும் சமூகத்தளத்தில் உருவாகும் படைப்புக்களில் இருந்தும் திரைப்படங்களுக்கான திரைக்கதைகள் பெற்றுக் கொள்ளளப்படுகின்றன. அந்தவகையில், சமூகத்தளத்தில் உருவாகும் நாவல்கள் திரைக்கதைகளுக்கான முக்கிய தோற்றுவாய்களாகின்றன. நாவல்கள் விபரிப்புத் தன்மை கொண்டனவாகவும் நாவல்களை வாசிக்கும் வாசகர் மனத்தில் காட்சிப் படிமங்களைத் தோற்றுவிக்கும் முகமாகவும் அமைந்திருப்பதால் அவற்றிலிருந்து திரைப்படத் தினைத் தயாரிப்பது என்பது பல சமயங்களில் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கிறது. ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறையிலும் இவ்வாறான போக்குக் காணப்படுகிறது. எழுத்து வடிவில் உள்ள அனைத்தையும் காட்சிகளாகக் கொண்டுவர இயலாத போதும் நாவல்கள் எவ்வாறு திரைப்படங்களாகத் தயாரிக்கப்படுகின்றன என்பது ஆராயப்படவேண்டியதாகிறது. இவ்வாறு எழுத்து வடிவம் கொண்ட நாவல்கள் காட்சி வடிவம் கொண்ட திரைப்படங்களாக நகர்கையில், இரண்டு வெவ்வேறுபட்ட ஊடகங் களுக்கு இடையிலான இயல்புகள், பாத்திர உருவமைப்பு, பாத்திர எண்ணிக்கை, மொழிநடை, கதைக்களம், கதைக்கரு, காட்சிப்பிரிப்பு, கதைச்சுருக்கம், திருப்புமுனைகள், கதையின் ஆரம்பம் மற்றும் முடிவு, ஒத்ததன்மைகள்/ஒவ்வாத தன்மை போன்றவற்றை ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறைக் களத்தின்வழி ஆராயும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. நாவல்கள் திரைப்படங்களாக மாறுகையில் நாவல்களின் இயல்புகள், கோட்பாடுகள், தனித்துவங்களுடன் திரைப்படக் காட்சிப் படிமங்கள் எவ்விதம் துணைபோகின்றன? ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழுந்த திரைப்படங்கள் அந்தந்த நாவல் களின் படைப்பாக்கக் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகின்றனவா? அல்லது அவற்றைச் சிதைக்கின்றனவா? போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். தணியாத தாகம் நாவல் *(1971)* - குத்துவிளக்குத் திரைப்படம் *(1972)*, பொன்மணி எங்கே போனாள் நாவல் *(1970)* - பொன்மணி திரைப்படம் *(1977)*, வாடைக்காற்று நாவல் *(1973)* - வாடைக்காற்று திரைப்படம் *(1978)*, ஷாமிலாவின் இதயராகம் நாவல் *(1987)* - ஷர்மிலாவின் இதயராகம் திரைப்படம் *(1993)* போன்ற நாவல்களும் திரைப்படங்களும் ஆய்வுப்பரப்பாக எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் மூலப் பிரதிகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் குத்துவிளக்கு மற்றும் ஷர்மிலாவின் இதயராகம் ஆகிய திரைப்படங்கள் மாத்திரமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவ்வாய்வானது ஒப்பீட்டு அடிப்படையில் அமைந்த எண் சார்ந்த மற்றும் பெறுதி சார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழும் முழுநீளத் தமிழ்த் திரைப்படங்கள் நாவல்களில் கூறப்பட்டுள்ள கதைச்சுருக்கம், கதைக்கரு, கதை ஆரம்பம், கதைமுடிவு, கதைத்திருப்பம், பாத்திர எண்ணிக்கை, பாத்திரக் கட்டமைப்பு கதைக்களம் போன்ற பெருமளவான விடயங்களை அப்படியே காட்சி வடிவமாக்கியுள்ளன என்பது ஆய்வின் முடிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள், நாவல்கள், காட்சி வடிவமைப்பு, திரைப்படத் தழுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பில் "சுட்டன்கள்"

**தனுஷியா, இ., பூங்குழலி, சி.**
ஊடகக்கற்கைகள் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
r.thanushiya30@gmail.com

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில், மக்கள் மத்தியில் தகவல்களை, செய்திகளை பகிர்ந்து கொள்ள பல சமூக ஊடகப்பிரயோகங்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. முகநூலில் பதிவேற்றப்படும் தகவல்கள், செய்திகளில் சுட்டன்களின்(Memes) செல்வாக்கு அதிகரித்து வந்துள்ளதை ஆய்வாளரால் அவதானிக்க முடிந்தது. பயனர்கள் மத்தியில் அதிகரித்து வரும் சுட்டன்களின் பரவுகையானது பல்வேறு கருப்பொருட்களின் (சமூகம், அரசியல், பொருளாதாரம்,பொழுதுபோக்கு,கல்வி) ஊடாக பயனர்களின் உளவியல், நடத்தை ரீதியில் அவர்கள் கொண்டிருக்கும் உணர்வு நிலைகளை வெளிக்காட்டும் வகையில் உருவாக்கப்படுவதையும், அக் கருப்பொருட்களில் கையாளப்படும் உள்ளடக்க விடய தானங்கள், மொழி, படங்கள், மற்றும் குறியீடுகள் ஆகிய உள்ளடக்கக் கூறுகள் சார்ந்து அச்சுட்டன்கள் செயற்படும் விதம் பற்றிய புரிதல் உருவாக்குநர்கள் மத்தியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற் கொள்ளப்படுகின்றது. ஆய்வு, மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பின் முகப்புத்தகத் தளத்தில் சுட்டன் பக்கங்களைக் கொண்டுள்ள, யுனி மீம்ஸ் ஸ்ரீலங்கா(Uni Memes Srilanka), சாரு மீம்ஸ்(Saru Memes), நினைச்சா கவல மீம்ஸ்(Niniacha kavala Memes), மிக்கி மீம்ஸ் (Mickey Memez) ஆகிய தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சுட்டன்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு, அவை கருப்பொருள் வகைப்பாட்டின் அடிப்படையில் அச்சுட்டன் பதிவுகளின் கூறுகள் (மொழி,படங்கள்,குறியீடுகள்) உள்ளடக் கப்பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இத் தளங்களில் ஒருவருட காலத்தில் பதிவேற்றப்பட்ட **1614**சுட்டன்கள் ஆய்வாளரால் அவதானிப்பிற்குட்படுத்தப்பட்டன, குறித்த சுட்டன்களில் இருந்து **100**மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன, நான்கு சுட்டன் உருவாக்குனர்கள், ஐம்பது முகநூல் பயனர்களின் நேர்காணல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அவை குறுக்குப்பரிசோதனை செய்து பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன. இலங்கைத்தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பில், முகநூல் பக்கங்களில் பகிரப்படும் சுட்டன்கள் பெரும்பாலும் உள்ளடக்க ரீதியில் தனிப்பட்ட ரீதியாக ஒருவரை குறிவைத்துத் தாக்குவதாகவே அமைகின்றன. சுட்டன்களில் சினிமாப்பிரபலங்களின் புகைப்படங்களே பெரும்பாலும் பிரயோகிக்கப்படுகின்றன. சுட்டன்கள் பெரும்பாலும் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் வகையிலே முன்வைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஒருவருடைய உணர்வு நிலைகள் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. சுட்டன்களின் காட்சிப்படங்கள், உண்மையை விபரிப்பனவாகவும், ஏனையவை சினிமாப்பாணியில் அமைந்த வார்ப்புருக்களைக் கொண்ட காட்சிப்படங்களாகவுமே அமைகின்றன. மொழிநடையானது, விடய ரீதியான சொற்களையும், வசன நடைகளையும் பயன்படுத்தியுள்ளதோடு, ஏனையவற்றிற்கு சினிமாப்பாணியிலான மொழிப்பாவனையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நகைச்சுவை நடிகர்களின் புகைப்படங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகின்றது. மேலும், முகநூலில் பயனர்கள் சுட்டன்களிற்கு வழங்கும் விருப்பக் குறியீடுகள்(Like),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துரைகள்(Comments) சார்ந்து பெருமளவான பயனர்கள் ஒப்பீட்டளவில் நகைச்சுவைக் குறியீட்டினை(haha) வழங்குவதுடன் குறித்த உள்ளடக்கங்கள் சார்ந்த அவர்களது எண்ணங்கள், நிலைப்பாடுகளை கேலிக்கையாகவே முன்வைத்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. சுட்டன்கள் உருவாக்குநர்களின் வயது, அவர்களின் தொழில், அவர்களின் குடும்பப் பின்னணி, சூழல் ஆகிய அனைத்துமே, அவர்களால் உருவாக்கப்படும் சுட்டன் களில் தாக்கம் செலுத்தியுள்ளன. சுட்டன் உருவாக்குநர்கள் வேறுபட்ட நோக்கங்களிற்காக அவற்றை உருவாக்கிக் கொள்கின்றனர். தனிப்பட்ட ரீதியான நோக்கங்கள் முதல் சமூகத் திற்கு ஒரு கருத்தைச் சேர்க்க வேண்டும் என்பது வரையிலும் சுட்டன் உருவாக்குநர்களின் நோக்கம் வெளிப்படுகிறது. சமூக ஊடகங்களில் அதிக நேரத்தைச் செலவிடுபவர்கள் தங்களது பதிவுகளுக்கு அதிகமான விருப்புக்குறியீடுகள், கருத்துரைகள் மற்றும் பகிர்வுகள் இடம்பெற வேண்டும் என்பதை எதிர்பார்த்தும் சுட்டன்களை உருவாக்கிக் கொள் கின்றார்கள், அதே போன்று தம்முடைய நினைவுகளை ஏனையோரிடத்தில் பகிர்ந்து கொள்வதற்கும் இச்சுட்டன்களை உருவாக்க தலைப்படுகிறார்கள். சுட்டன்களை உருவாக்கு வதற்கு சினிமா அறிவு அடிப்படையானது என்பதும் ஆய்வாளரால் கண்டறியப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** சுட்டன்கள், சுட்டன் உருவாக்குநர்கள், தமிழ் சமூக ஊடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கூத்துக்களில் பால்நிலைச் சமத்துவம் : ஓர் உள்ளடக்க ஆய்வு

**பிரதீபன், யே., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
yspradheeban@gmail.com

கூத்துக்கள் ஒரு இனத்தின் பாரம்பரியம், மரபுகள், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவே காணப்படுகின்றன. இது மட்டுமின்றி கூத்துக்கள் பல வரலாற்றுச் செய்திகளை தெரிவிப்பதாகவும் காணப்படுகின்றன. இவ்வாறாக, பண்பாட்டைப் பறைசாற்றுகின்ற கூத்துக்கள் இன்றளவும் மக்களால் அரங்கேற்றப்பட்டு, ஆடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இதில் முக்கிய விடயமாகக் காணப்படுவது, ஆரம்ப காலத்தில் கூத்தினைப் பெருமளவுக்குப் பொழுதுபோக்குப் பாங்கில் கண்டு களித்த மக்கள் பிற்பட்ட காலங்களில் தெய்வீக அம்சம் பொருந்திய கலையாகவும் சடங்குகளுடன் இணைத்தும் அவற்றை நோக்க ஆரம்பித்தனர். இதன் காரணமாகவே இன்றளவும் சாதாரண மக்கள் கூத்துக்களைச் சடங்குகளுடன் பயபக்தியுடனும் செய்து வருகின்றனர். இருப்பினும், கூத்துக்களின் அரங்கேற்றப் பொறிமுறையில் பால்நிலைச் சமத்துவமின்மை ஒரு பெருங்குறையாகவே நோக்கப்படுகின்றது. கூத்துக்களில் பெரும்பாலானவை ஆணாதிக்கத் தன்மை நிறைந்தே அமைந்துள்ளன. இக்கூத்துக்களில் பெண் கதாபாத்திரமேற்று நடிக்க வேண்டிய இடங்களிலும் ஆண்களே பெண் வேடமிட்டுக் கூத்தினை ஆடுகின்றனர். உடலியல் மற்றும் சமூகக் காரணிகளாலும் பெண்களை கூத்துக்களில் ஒதுக்கி வைக்கும் நிலை காணப்படுகின்றது. அந்தவகையில், பெண்கள் ஏன் மலையகக் கூத்துக்களில் புறக்கணிக்கப் படுகின்றார்கள்? பெண்களைக் கூத்துக்களில் ஆட வைப்பதில் காணப்படும் சவால்கள் என்ன? கூத்துக்களில் ஆர்வமுள்ளோர் புறக்கணிக்கப்படும் போது அவர்களின் மனநிலை எவ்வாறு அமையும்? போன்ற கேள்விகளுக்கு விடைகளை கண்டறியும் வகையில், சாமிமலைப் பிரதேசத்தில் காணப்படும் 26 கிராமங்களில் நடைபெறும் 3 கூத்துக்களையும், தொடர்ச்சியாக பழமை மாறாமல் செய்து வரும் 5 கிராமங்களில் கூத்துக்களைப் பயிற்றுவிக்கும் 5 அண்ணாவிமார்கள், கூத்துக்களில் பெண் பாத்திரங்களை மாத்திரம் ஏற்று நடிக்கும் 5 ஆண் கலைஞர்கள், மேடைக்கூத்துகளில் பாத்திரமேற்று நடித்த 5 பெண்களை மாதிரிகளாக கொண்ட ஓர் உள்ளடக்க ஆய்வாக இது அமைகின்றது. குறித்த மாதிரிகளிடமிருந்து நேர்காணல், குவிவுமைய கலந்துரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அந்த வகையில் ஆய்வின் முடிவுகளாக, கூத்தாடும் பெண்களை இன்றைய சமூகம் விரும்புவதில்லை, அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது, அதிலும் திருமண வாழ்க்கைக்குச் சவாலாக கூத்துக்களில் பங்கேற்றல் அமைந்து விடும், திருமணமாகிய பெண்களாக இருந்தால் குடும்பரீதியான பல முரண்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும் என்பன அறியப்பட்டன. எனவே, பெண்களின் எதிர்கால நன்மைக் கருதி அவர்களை கூத்துக்களில் இணைத்துக் கொள்வதில்லை என மக்கள் எண்ணுவது ஆய்வின் மூலம் வெளிக்கொணரப் பட்டுள்ளது. மேலும் கூத்துக்களின் "புனிதத்தன்மையினைக் கருத்திற்கொள்வதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களிடம் கூத்தாடும் அளவிற்கு உடல் வலிமை இல்லை என்பதும் பெண்களை கூத்துக்களில் உள்வாங்காமைக்கான காரணங்களாக முன்வைக்கப்படுவது தெரியவந்தது. அதேவேளை, பெண்களிடம் காணப்படும் அச்ச உணர்வு மற்றும் சபை முன்வராமை என்பனவும் அவர்களைக் கூத்துக்களில் இணைத்துக் கொள்ள முடியாமல் போனமைக்கான காரணங்களாக அறியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்** : மலையகம், கூத்துக்கள், பண்பாடு, பால்நிலைச் சமத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொடர்பாடலின் தளமாக சனசமூக நிலையங்கள்

சதங்கனி, ச. ரகுராம், சி.,[1] சிவப்பிரியா, சி[2]
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.[1]
மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.[2]
sathangani11@gamil.com

ஒரு சமூகத்தில் முன்னைய காலங்களில் சமூகத் தொடர்பாடலைப் பேணுவதில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்பட்டது. அந்தவகையில் சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலின் தளமாக இருந்ததுடன் மக்களை சமூக மயப்படுத்தும் பணியையும் ஆற்றி வந்தன. ஆனால் தற்காலத்தில் அந்த நிலை மாறி சமூகத் தொடர்பாடலை பேணுவதற்கு சனசமூக நிலையங்கள் தளமாக இருக்கின்றனவா என்பது கேள்விக்குரிய விடயமாக மாறிவிட்டது. எனவே "சமூகத் தொடர்பாடலின் தளமாக சனமூக நிலையங்கள்" எனும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக இயங்குகின்ற 10 சனசமூக நிலையங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு சமூகத் தொடர்பாடலுக்கான தளமாக அவை எவ்வாறு செற்படுகின்றன என்பது தொடர்பில் ஆய்வாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் சனசமூக நிலையங்களின் உருவாக்கத்தின் முக்கியத்துவம், சனசமூக நிலையங்கள் மக்களின் தொடர்பாடல் தளமாக எவ்வாறு பேணப்படுகின்றன, சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலுக்கு ஆற்றும் பங்களிப்புகள், சனசமூக நிலையங்கள் வழியாக சமூகத் தொடர்பாடலை மேற்கொள்ளும் போது இருக்கக் கூடிய சவால்கள், சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலுக்கு ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் என்பன தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறுதிசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்விற்கு தேவையான தரவுகளானவை அவதானம், நேர்காணல், சனசமூக நிலையம் சார்ந்து வெளிவந்த சஞ்சிகைகள் மற்றும் சனசமூக நிலையங்களினுடைய சமூக ஊடகப் பக்கங்கள் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. சனசமூக நிலையங்கள் மக்களை ஒன்றிணைத்து தொடர்பாடலை மேற்கொள்கின்றன, மக்களுடைய தொடர்பாடல் தளமாக காணப்படுகின்றன, சமூகத் தொடர்பாடலுக்கு பங்காற்றுகின்றன, சமூகத் தொடர்பாடலுக்காக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றன. என்பவற்றின் அடிப்படையில் தற்காலத்திலும் சமூகத் தொடர்பாடலின் தளமாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன என்பது ஆய்வின் முடிவாக கிடைக்கப்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள் :** சமூகத் தொடர்பாடல், சனசமூக நிலையம், யாழ்ப்பாணம், தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட புலத்தில் முகநூலைப் பயன்படுத்துபவர்கள் மத்தியில் வெறுப்புப் பேச்சுக்கள்: அதிக கரிசனைக்கு ஆளாகும் விடயங்கள் தொடர்பிலான ஆய்வு

**லக்ஷிகா, க., யூட் டினேஸ் கொடுதோர், சூ.**
ஊடகக் கற்கைகள் துறைஇகலைப்பீடம்இயாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
lakshilaxlax1998@gmail.com

இன்றைய உலகின் போக்கில் முக்கிய அங்கமாக சமூக ஊடகங்கள் மாறி உள்ள காலப் பின்னணியில் முகநூலினுடைய பாவனையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக இன்றைய உலகின் இயங்குநிலையை தீர்மானிக்கும் சக்தியாக முகநூல் மாறி வருகின்ற சூழலில் அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது. தற்காலத்தில் இணையப் பாவனை அதிகரித்துச் செல்லும் நிலையில்இமுகப்புத்தகங்களைப் பொறுத்தவரை நன்மையான விடயங்கள் இருந்தாலும் கூட ஒரு தனிப்பட்ட நபரையோ அல்லது குழுவையோ பாதிக்க கூடிய வகையில் அதிகமான வெறுப்புப் பேச்சுக்கள் தோன்று வதாலும், வெறுப்புப் பேச்சு என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய விடயப்பரப்பு என்னும் அடிப்படையிலும் அண்மைக்காலத்தில் அதிகமாகப் பேசப்படும் முக்கியமான பேசு பொருளாக அமைகின்றது. அந்தவகையில் முகநூலில் வெளிவரும் வெறுப்புப் பேச்சுக்கள் பயனர்கள் மத்தியில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன, அவை ஏனைய சமூக ஊடகங்களோடு ஒப்பிடும்போது முகநூலில் வெறுப்புப் பேச்சுக்கள் அதிகம் இடம்பெறு கின்றனவா என்பதைக் கண்டறிவதே பிரதான நோக்கமாகும். இந்த ஆய்வு பண்புசார், எண்சார் ஆய்வுமுறையியலின் அடிப்படையில் உள்ளடக்கப் பகுப்பாய்வாக மேற்கொள்ளப் பட்டது. அவதானத்தின் அடிப்படையில் முதனிலைத்தரவுகளும் பத்திரிகைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள், வலைத்தளங்கள் ஆகியன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப் பட்டன. உள்ளடக்கப் பகுப்பாய்விற்காக தரவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வின் மூலம் முடிவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் வடபுலத்தில் முகநூல் வழியாகப் பரப்பப்படும் வெறுப்புப் பேச்சுக்கள் குறிப்பிட்ட நோக்கத்தை அதாவது ஒருவரை இழிவு படுத்தும் இனம், மதம் சார்ந்த தவறான புரிதலைப் பயனர்களிடத்தில் ஏற்படுத்தல், முரண்பாடுகளைத் தோற்றுவித்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டு உருவாக்கப்படுவதுடன் அவை சமூகத்தில் பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும் அனைத்து முக நூல் பயனர்களும் வெறுப்புப் பேச்சுக்களை விரும்பியிருக்கவில்லை, என்பதுடன் சில சமயங்களில் தனிநபர்களின் வாழ்வில் அவை பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. போன்ற முடிவுகள் ஆய்வாளரினால் கண்டறியப்பட்டன வடபுலத்தில் முகநூலைப் பயன் படுத்துபவர்கள் மத்தியில் அதிக வெறுப்புப்பேச்சுக்கள் தோற்றுவிக்கப்படுகின்றது அதிலும் அதிக கரிசனைக்கு ஆளாகும் விடயங்களிலே வெறுப்புப் பேச்சுக்கள் தோற்றுவிக்கப்படு கின்றது என்பதும் வெறுப்புப் பேச்சுக்கள் பல பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதும் ஆய்வாளரினால் கண்டறியப்பட்ட ஆய்வின் முடிவாகும்.

**திறவுச்சொற்கள்:** வடபுலம், முகநூல், வெறுப்புப் பேச்சுக்கள், சமூக ஊடகங்கள், பிரஜைகள் ஊடகவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களும் சவால்களும் வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**டிலானி தே., அனுதர்ஷி, க**
ஊடகக் கற்கைகள் துறை,கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
niladilani277@gmail.com1, anutharsi@univ.jfn.ac.lk2

பிராந்திய ஊடகவியலாளர்களுக்குரிய சந்தர்ப்பங்களும், சவால்களும் வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு என்ற இவ் ஆய்வானது சம காலத்தில் முக்கியமானதொரு ஆய்வாகக் காணப்படுகிறது. இந்த ஆய்விற்காக வவுனியா மாவட்டத்தில் முழு நேரமாகப் பணியாற்றுகின்ற பிராந்திய ஊடகவியலாளர்கள், பகுதி நேர ஊடகவிய லாளர்கள் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களுக்குரிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடு வது மட்டுமல்லாது அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் ஆய்வு செய்கின்றது. இவ் ஆய்விற்காக வவுனியா மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டும் நேரடியான கலந்துரையாடல் மூலமும் கிடைக்கப் பெற்ற பதில்களை வைத்தும் குழுமையக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தரவுகள், நேர்காணல்கள் போன்ற தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்கனவே முன்வைக்கப் பட்டிருந்த கருதுகோள்கள் என்பன குறித்த ஆய்வின் முடிவினை பிரதிபலிப்பதற்கு அமைவாக வேதனம் மற்றும் அச்சுறுத்தல்கள், மொழிப் பிரச்சினை, உளவியற் பிரச்சினை, இடப்பரப்பின் அகலம், குடும்பம் சார் எதிர்ப்பு போன்றவை அதிகம் இவ் ஊடகவிய லாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக அமைவதுடன் உலகமயமாக்கலின் விளைவால் தொழில்நுட்ப வசதிகள் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளதாகவும் ஏனைய காரணிகளும் துணைக் காரணிகளாக அமைகின்றது என்கின்ற முடிவானது பெறப்பட்டது.

**திறவுச் சொற்கள்:** வவுனியா மாவட்டம், பிராந்திய ஊடகவியலாளர்கள், சந்தர்ப்பங்கள்,சவால்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன்-ரஷ்சியா யுத்தம் ஐரோப்பாவில் ஏற்படுத்திய அரசியல்-பொருளாதாரத் தாக்கங்கள்

**சஜந்தன், ச., கணேசலிங்கன், கே.ரீ.**

அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

sajanthan96@gmail.com

போர் உலகலாவிய ரீதியில் தவிர்க்க முடியாத விடயமாகும். நாடுகளுக்குள்ளும், நாடுகளுக்கிடையிலும் பல காரணங்களை அடிப்படையாகக்கொண்டு போர் நிகழ்ந்து வருகிறது. புவிசார் அரசியலை அடிப்படையாகக்கொண்டு முரண்படுதல், நாடுகளின் இறை யாண்மையில் தலையிடுவதால் முரண்படுதல், அரசியலமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முரண்டுதல் என பல்வேறு காரணங்களை அடிப்படையாக் கொண்டு நாடுகளுக் கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனடிப்படையிலேயே 2022இல் உக்ரைனுக்கும்-ரஷ்சியாவுக்கும் இடையில் போர் ஏற்பட்டுள்ளது. உக்ரைன் நேட்டோவுடன் ஒன்றிணைவது ரஷ்சியாவின் அரசியல் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் என்பதை தவிர்பதற்காகவே ரஷ்சியா உக்ரைன் மீது போரை மேற்கொண்டுள்ளது. இதனை ஒரு புவிசார் அரசியலுக்கான போராகவே பார்க்கப்படுகிறது. புவிசார் அரசியலை அடிப் படையாக்கொண்டு போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உக்ரைன் மேற்குலகத்தின் கைப்பொம்மையாகவே பார்க்கப்படுகின்றது. உக்ரைன் பிரச்சினை வெறுமனே அரசியலோடு தொடர்புடையது என்றாலும் அதற்கான அடிப்படை புவியியற் பின்னணியிலேயே தங்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்சியாவை ஒட்டியமைந்துள்ள தேசம் உக்ரைன் என்பது அதன் புவிசார் அரசியலாகும். ரஷ்சிய ஆளும் வர்க்கத்திற்கு பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உக்ரைன் வளமான நாடாக பார்க்கப்படுகிறது. உக்ரைன் எல்லைகளின் அமைவிடம், வளங்கள், சூழல் போன்ற புவிசார் விடயங்கள் அரசியல் பிரச்சினைக்கான காரணிகளாக அமைந்துள்ளன. உலகளாவிய ரீதியில் இப் போர் அதிக நெருக்கடிளை ஏற்படுத்தியுள்ளது. அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளாக ஐரோப்பிய நாடுகள் காணப்படுகின்றது. ஐரோப்பா பொருட்களின் இறக்குமதிகளுக்காக அதிகம் உக்ரைன்-ரஷ்சியாவிலேயே தங்கியுள்ளன. ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் ரஷ்சியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பொருட்களை ரஷ்யாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத சூழல் போரினால் ஐரோப்பாவுக்கு ஏற்பட்டுள்ளது. தானியப் பொருட்களுக்காக ஐரோப்பா உக்ரைனை சார்ந்துள்ளது. தொடர்ச்சியான போரினால் ஐரோப்பாவுக்கான உணவுத் தேவையினையும் ரஷ்சியாவின் ஐரோப்பாவுக்கான பொருளாதார தடையாக மாறியது. இதனால் இந்த போர் ஐரோப்பாவிற்கு எதிரானதாகவும், ஐரோப்பாவை அரசியல் பொருளாதார, நெருக்கடிக்கு உற்படுத்தியதாகவும் மாற்றியுள்ளது.

**திறவுச்சொற்கள்:** புவிசார் அரசியல், அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, ரஷ்சிய-உக்ரைன் போர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைத்தேச நாடுகளின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் தலைவர்கள்: தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னாசிய தலைவர்களை பற்றிய ஆய்வு


**கிருத்திகா, சி., கணேசலிங்கன், கே.ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kiruthika199797@gmail.com



ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகள் யாவும் பெருமளவுக்கு மேற்கு சக்திகளின் காலனித்துவத்திற்கு உட்பட்ட வரலாற்றைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. காலனித்துவ காலப்பகுதியில் இந்த நாடுகளில் அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பல மாற்றங்களை ஏற்படுத்தி இருந்த போதும் அவற்றினுடைய வளங்கள் சுரண்டப்பட்டு வந்துள்ளது. இவ்வாறாக அடிமைப்பட்ட வரலாற்றைக் கொண்டிருந்த கீழைத்தேசங் களையே கண்டு வந்த இவ்வுலகில் இன்றைய காலத்தில் மேற்கு நாடுகளுக்கு தலைமை தாங்குபவர்களாக கீழைத்தேசத்தவர்கள் குறிப்பாக தென்னாசியாவைச் சேர்ந்தவர்கள் விளங்குவதென்பது கீழை நாட்டினதும், மேற்குலகத்தினதும் வரலாற்றிலும், அரசியலிலும் புதியதொரு வழித்தடமாகும். முற்றிலும் வேறுபட்ட பாரம்பரியத்தையும், பூர்வீக வரலாற்றையும் கொண்டிருக்கும் தென்னாசியாவைச் சேர்ந்த சில ஆளுமைகள் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, நோர்வே போன்ற மேற்குலக ஐரோப்பிய நாடுகளில் பிரதான அரசியல் தலைமைத்துவ பொறுப்புகளில் காணப்படுகின்றனர். தென்னாசியாவை சேர்ந்த தலைவர்களின் தலைமைத்துவத்தையும் வழிநடத்தல்களையும் மேற்குலக நாட்டவர்களும் சர்வதேச அரங்கும் ஏற்றுக்கொள்வதென்பது உலக அரசியலுக்கு புதியதொரு விடயமாகவே நோக்கப்படுகின்றது. அத்தகைய தென்னாசிய தலைவர்களின் அரசியல் செயற்பாடுகளும், பங்களிப்புகளும் பல எதிர்பார்ப்புகளையும் தூண்டுவதோடு அனைவராலும் உன்னிப்பாக உற்று நோக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் தென்னாசியாவினை சேர்ந்த சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் ஆளுமைகளான கமலா ஹாரிஸ், ரிஷி சுனக், ஹரி ஆனந்த சங்கரி, ஹம்சாயினி குணரத்னம் போன்றோரது அரசியல் பங்களிப்புகளையும், பணிகளையும் நோக்கும் விதத்தில் ஆய்வானது அமைந்துள்ளது.



**திறவுச் சொற்கள் :** அரசியல் தலைமைத்துவம், அரசியல் பங்களிப்பு, மேற்குலக நாடுகள், கீழைத்தேச நாடுகள், தென்னாசியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மலையகத் தமிழர்கள் எதிர்கொள்கின்ற அரசியல், சமூகப்பிரச்சினைகள்: 2010க்குப் பின்னரான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**தினுஸ்ப்ரியா, வ.,கணேசலிங்கன், கே.ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
vdinush97@gmail.com

ஜனநாயக அரசுகளுக்குள் வாழுகின்ற மக்கள் சமூகம் அனைத்திற்கும் சமஅந்தஸ்து, சமவாய்ப்பு என்பன வழங்கப்பட்டு, அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இத்தன்மையானது மிகவும் பலவீனமான ஒன்றாகவே உள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மக்கள் சமூகம் அரசொன்றில் வாழும்போது அவர்கள் அந்நாட்டு பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்கள் அந்நாட்டின் சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கான வழிவகைகளை பின்பற்றுவது அரசுகளின் அடிப்படை நியதியாகும். ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் துரதிஸ்டவசமாக இலங்கையின் ஆட்சியாளர்கள் இருநூறு வருடங்களாக இலங்கையில் வாழந்துவருகின்ற மலையகத் தமிழ் சமூகத்தை அடிமைகளாக பிரயோகப்படுத்தும் அரசியலையே சுதந்திர காலத்திலிருந்து மேற்கொண்டு வருகின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகள் கூட ஒப்பீட்டளவில் பல முன்னேற்றங்களை கண்டுள்ளன. ஆனால் மலையக சமூகம் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அரசியல் மற்றும் சமூக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருக்கும் மலையக சமூகம் காலனித்துவத்திலிருந்து விடுபட்ட போதும் பின்காலனித்துவ அரசு பற்றிய கோட்பாட்டாளர் "ஹம்சா அலவி" குறிப்பிடுவது போன்று மலையக சமூகம் இன்றளவும் அடிமைத்தனத்திலிருந்து விடுபடாத நிலையிலேயே உள்ளது. இலங்கையில் 1980களுக்குப் பின் ஆயுதப்போராட்டம் எழுச்சி பெற்றதைத் தொடர்ந்து மலையகப்பகுதிகளிலும் தேசியம் சார்ந்த ஒரு விழிப்புணர்வு எழ ஆரம்பித்தது. ஈழப் போராட்ட அமைப்புக்களுடன் இணைந்து போராடிய ஒரு சூழல் காணப்பட்டது. இது பிற்காலத்தில் பிரஜாவுரிமை உள்ளிட்ட பிற சலுகைகள் வழங்கப்பட காரணமாகவிருந்தபோதும் அவை நிலையான அபவிருத்திக்கான ஏற்பாடாக அமையவில்லை. அவையனைத்தும் அவர்களை தற்காலிகமாக திருப்திப்படுத்தும் செயலாகவே இருந்தது என்பதே நிதர்சனமாகும். மலையக சமூத்தின் விழிப்புணர்வற்ற போக்கும் சாதி கட்டமைப்பின் பலவீனத்தையும் ஆட்சியாளர்கள் தமக்கு சார்பாக மிகச்சிறந்த முறையில் கையாண்டு வருகின்றனர். ஆட்சிாளர்களும், தொழிற்சங்கங்களும் முற்போக்கான வகையில் செயற்படாது மக்களின் அடிமைத்தனத்தின் தொடர்ந்தேர்ச்சியான நிலைமைக்கு தூபமிட்டு வருகின்றனர். இருநூறு வருடங்களாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத ஓர் அவல வாழ்க்கையினையே அனுபவித்து வருகின்றன. காலனித்துவக் காலப்பகுதியில் ஏனைய நாடுகளில் குடியமர்த்தப்பட்ட மக்கள் இன்று பல்வேறு துறைகளிலும் சாதித்துவர இலங்கையில் மலையகத்தமிழர்கள் தோட்டத் துறை யிலேயே முடங்கி கிடக்கின்றனர். இவர்களின் இந்த அவல வாழ்க்கைக்கு பலர் பொறுப்பு கூற வேண்டியவர்களாகவுள்ளனர். குறிப்பாக அவர்களது பிரஜாவுரிமைகள் பறிபோவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடந்தையாக இருந்த இந்தியா, அவர்களை இலங்கையில் குடியேற்றி அவர்களுக்கான எந்த உரிமையையும் விட்டுச்செல்லாத பிரித்தானியா, அவர்களிடத்தில் அடிமை அரசியலை நடாத்தி வரும் இலங்கை ஆட்சியாளர்கள் இவர்களது அவல நிலைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்பது இவ்விடத்தில் சுடடிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த அடிப்படையில் இவ்வாய்வானது மலையகத் தமிழர்களது இருநூறு வருட கால அவலநிலையை வெறும் பேசுபொருளாக கொண்டு ஆட்சியாளர்களும், ஏனைய பொதுநல அமைப்புக்களும் செயற்படாது அதற்கான யதாரத்த அம்சத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

**திறவுச்சொற்கள் :** பின்காலனித்துவ சமூகம், ஜனநாயகத்தின் பலவீனம், மலையகத் தமிழ்ச் சமூகம், உரிமை மீறல், அடிமைச்சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களும் பெண்கள் தொடர்பான மனித உரிமை மீறல்களும்

**சலாஜினி, லோ., அருந்தவராஜா.க.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
logasala55@gmail.com

*அண்மைக்காலத்தில் சர்வதேச நாடுகளுடன் தொடர்புகொண்டு அவற்றை அச்சுறுத்தி வருகின்ற அமைப்பாகத் தலிபான்கள் என்ற அமைப்பு காணப்படுகின்றது. இன்று சர்வதேச நாடுகளைத் தமது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த முக்கிய பேசுபொருளாக ஆப்கானிஸ் தான் விடயம் காணப்படுகின்றது. இதற்கு முக்கியமான காரணம் ஆப்கானிஸ்தானை தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ள தலிபான்களின் நடவடிக்கைகளாகும். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் எழுச்சியடையத் தொடங்கியதிலிருந்து உலக நாடுகளின தும் உலக மக்களினதும் கவனத்தை ஈர்த்த ஒன்றாக அது மாற்றமடைந்தது. ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தானையும் மக்களையும் பாதுகாக்கும் நோக்குடன் தலிபான்கள் தோற்றம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாகத் தீவிரவாத இயக்கமாக அறிமுகமாகிப் போராளிகளாக வளர்சியடைந்து பின்னர் ஆட்சியில் அமர்ந்த இயக்கங்கள் பல உலகில் காணப்படுகின்றன. ஆனால் போராளிகளாக அறிமுகமாகி பின்னர் ஆட்சியாளர்களாக பரிணமித்து தீவிரவாதிகளாக உலகில் அறியப்பட்டவர்கள் தலிபான்கள் மட்டுமே என்ற வகையில் இவர்கள் சிறப்பினை பெற்றுக்கொள்கின்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதனைத் தொடர்ந்து அவர்களால் முன்வைக்கப்பட்ட கடுமையான சட்டங்கள், கொடூரமான தண்டனைகள் மற்றும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளினால் ஆப்கானிஸ்தான் மக்களின் வாழ்வு இன்று கேள்விக்குறியாகியுள்ளது. குறிப்பாகப் பெண்கள் தொடர்பான மனித உரிமை மீறல்கள் உச்சம் தொட்ட தன்மையைக் காணமுடிகின்றது. பெண்களின் சுதந்திரம் மறுக்கப்பட்டும், உரிமைகள் பறிக்கப்பட்டும் அவர்களின் நிலை கவலைக்குரியதாகக் காணப்படுகின்றது. இந்நிலையினை ஐக்கிய நாடுகள் சபையின் அலட்சிய போக்கினாலும் ஏனைய நாடுகள் இதனைக் கண்டு கொள்ளாத தன்மையினாலும் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியில் பெண்கள் தொடர்பான மனிதஉரிமை மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றதனைக் காணமுடிகின்றது. இந்த ஆய்வானது முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த ஆய்வாக உள்ளது. இவ்வாய்வில் முதல் தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வின் தேவைகருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. தலிபான்களின் ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பெண்கள் தொடர்பான மனித உரிமை மீறல்களையும் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளினையும் விரிவாக ஆராய்வதே ஆய்வினது பிரதான நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** ஆப்கானிஸ்தான், தலிபான்கள், பெண்கள், மனித உரிமை மீறல்கள், தீவிரவாதிகள், சட்டங்கள், தண்டனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். டபுள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள மொழிச்சட்டம் – பாராளுமன்ற உரைகளை ஆவணப்படுத்தல்

இராசதுரை கீர்த்தனா
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rrkeerthana23@gmail.com

இலங்கையானது பல்லின கலாசாரத்தைக் கொண்ட நாடாகும். இங்கு பல இனத்தவர்கள் வாழ்வதோடு அவர்கள் பல மொழி பேசுபவர்களாகவும், பல வகையான சமய நம்பிக்கை மற்றும் பாரம்பரிய கலாசார மரபுகளை பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர். குறிப்பாக இலங்கையில் வாழும் மக்கள் மொழி ரீதியாக இரு பிரதான இனக் குழுக்களாகவும் வேறுபட்டுள்ளனர். சிங்களவர்கள் சிங்கள மொழியையும், தமிழர்கள் தமிழ் மொழியையும் தாய் மொழியாக கொண்டுள்ளதுடன் முஸ்லீம்களில் பெரும்பான்மையானோர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கணிசமான அளவினர் சிங்கள மொழியில் புலமை உடையவர்களாகவும் உள்ளனர். எவ்வாறிருப்பினும், இலங்கையர்களில் பிரதான இரு இனத்தவர்களில் அதிகமானோர் சிங்களம் அல்லது தமிழ் எனும் மொழியில் புலமை பெற்றவர்களாக உள்ளனர். அந்தவகையில் இலங்கையின் சிங்கள-தமிழ் இன முரண்பாடு என்பது சர்வதேச கவனத்தைப் பல வழிகளிலும் கவர்ந்தெடுத்ததோடு இன்றுவரை தீர்க்கப்படாதுள்ள ஒரு முரண்பாடாகவும் காணப்படுகின்றது. அரசியல், சமூக, பொருளாதார மற்றும் வெளிவாரிக் காரணிகள் என பல்வேறு காரணிகள் இலங்கையில் இன முரண்பாடு தோற்றம் பெற்று வளர்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்திருந்தன. அவற்றுள் பிரதான பங்களிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட அரசகரும மொழிகள் கொள்கை காணப்படுகின்றது. இலங்கையானது சுதந்திரமடைந்த பின்னர் மொழி அரசியல் என்பது எழுச்சி பெறத் தொடங்கியது. இதனால் இலங்கையில் அரசாங்கங்கள் முன்னெடுத்த "சிங்களத்தை மட்டும் முதன்மைப்படுத்திய அரசகரும மொழிக் கொள்கையானது சிங்கள மற்றும் தமிழ் இனக் குழுக்களுக்கு இடையேயான முரண்பாடு தீவிரமாக எழுச்சி பெறுவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்திருந்தது. அவற்றுள் முதன்மையானதாக தனிச்சிங்கள மொழிச்சட்டம் காணப்படுகின்றது. தனிச்சிங்கள மொழிச்சட்டம் அல்லது அதிகாரபூர்வமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் என்பது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் 1956 ஆம் ஆண்டு ஜூலை ஆறாம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகருமமொழி" என்ற சட்டத்தைக் குறிக்கும். இச்சட்டத்திற்கு முன்னர் நாட்டின் நீதிமன்ற, மொழியாகவும், நடைமுறைச் செயல்முறைகளிலும் ஆங்கிலமொழியே உத்தியோக பூர்வமான மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. நாடாளுமன்ற விவாதங்கள் கூட ஆங்கிலமொழியில் நடத்தப்பட்ட போது தமிழ் அல்லது சிங்களத்தில் உரையாற்ற சபாநாயகரின் விசேட அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. எனவே இவற்றை இல்லாமற் செய்யவும், தனது தேர்தல் நோக்கத்திற்காகவும் பண்டாரநாயக்காவினால் தனிச்சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிச்சட்டம் முதன்மைப்படுத்தப்பட்டது. இவ் தனிச்சிங்கள சட்ட மசோதா எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவால் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாகவும், எதிராகவும், நடுநிலையாகவும் வாதப்பிரதி விவாதங்களை இலங்கை அரசியல் தலைவர்கள் முன்வைத்திருந்தனர். இத்தகைய உரைகள் இலங்கையினது இன அரசியலை வெளிப்படுத்தியதோடு இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு தீவிரத் தன்மைக்கும் வித்திட்டது. இதன் பின்னணியில் இந்த ஆய்வானது தனிச்சிங்கள மொழிச்சட்டம் மற்றும் தனிச்சிங்கள மொழிச்சட்டத் தீர்மானம் உள்ளடக்கிய பாராளுமன்ற உரைகளையும், அவை இலங்கை அரசியலில் ஏற்படுத்திய விளைவுகளையும் முதன்மைப்படுத்துவதாக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** அரசகரும மொழி, சிங்கள மேலாதிக்கம், மொழி அரசியல், பல்லின கலாசாரம், தேசிய மொழிக் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டமைப்பும், தொழிற்பாடும் : ஒரு விபரண ஆய்வு

**டிலக்சன், சு., கணேசலிங்கன்,கே.,ரீ.**
அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
diluxan1121@gmail.com.

இலங்கையில் தேர்தல் விடயங்களுக்கு பொறுப்பாக தேர்தல் திணைக்களம் 1955 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இருந்த போதிலும் தேர்தல் திணைக்களத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் நிமித்தம் 2015 ஆம் ஆண்டு பத்தொன்பதாவது சீர்திருத்தமானது சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவினை உருவாக்கியது. இது பல அதிகாரங்கள் மற்றும் கடமைகளை பெற்றிருப்பதுடன் ஆணைக்குழுவின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி இருந்தது. பத்தொன்பதாவது சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவானது இலங்கை மக்களுக்கு தேர்தல் விடயங்கள் தொடர்பான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது என்றே கூற வேண்டும். ஏனெனில் இந்த ஆணைக் குழுவினுடைய சுயாதீனத்தன்மை என்பது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இதனைத் தொடர்ந்து அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட இருபதாம் சீர்திருத்தம் மற்றும் இருபத்தோராம் சீர்திருத்தம் போன்றன தேர்தல் ஆணைக்குழுவினுடைய சுயாதீன தன்மையினை கேள்விக்குள்ளாக்கியிருந்தது. இது ஒரு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் முறைமை ஒன்றினை நாட்டில் முன்னெடுப்பதற்கு தடையாக இருந்துள்ளது. எனவே இந்த ஆய்வின் ஊடாக நாம் தேர்தல் ஆணைக்குழுவின் சமகால கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை அடையாளம் செய்வதன் ஊடாக அதில் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறான சட்டரீதியான ஏற்பாடுகளை நாம் முன்னெடுக்க முடியும் என்பதனை அடையாளம் காணலாம். மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் உடைய கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை பலப்படுத்துவதுடன் அதன் மீதான அரசியல் தலையீடுகளை இல்லாதொழித்து நாட்டில் தேர்தல் செயன்முறைகளின் ஊடாக ஜனநாயகத்தினை கட்டியெழுப்பி பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒரு நாட்டினை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** ஜனநாயகம், அரசியலமைப்புச் சீர்திருத்தம், சுதந்திரம், இறைமை, அரசாங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டாவின் சர்வாதிகாரி இடிஅமீன் – ஒரு வரலாற்றுப் பார்வை

**ஜனனி, த. , அருந்தவராஜா.க**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thankarasa1995janani@gmail.com

*கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள ஒருநாடு தான் உகண்டா. இந்நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களின் வரிசையில் ஒருவராக இடிஅமீன் கருதப்படுகின்றார். இவர் **1971** காலப்பகுதியில் உகண்டாவில் இராணுவப்புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். இடிஅமீன் **1971**ஆம் ஆண்டு தொடக்கம் **1979**ஆம் ஆண்டு வரை உகண்டாவை ஆட்சி செய்த சர்வாதிகாரியாக காணப்படுகின்றார். இடிஅமீன் ஆட்சியில் உகண்டாவானது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக பெரும் அழிவுகளையும் மாற்றங்களையும் சந்தித்தது. **1979**ஆம் ஆண்டு இடிஅமீனின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து உகண்டா சுதந்திரம் அடைந்தது. தொடர்ந்து லிபியாவிற்கு தப்பிச்சென்ற இடிஅமீன் அங்கிருந்து சவுதிஅரேபியாவியாவின் ஜெட்டா நகரில் தஞ்சம் புகுந்தார். **2003** ஆம் ஆண்டு யூலையில் உயர் இரத்த அழுத்தம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இடிஅமீன் கோமா நிலைக்குச் சென்று **2003** ஆம் ஆண்டு ஆகஸ்ட் **16** ஆம் திகதி உயிர் துறந்தார். மனித மாமிசங்களை உண்ட சர்வாதிகாரி இடிஅமீனது ஆட்சியானது உலகையே உலுக்கிய ஒரு வரலாறாகத் தற்காலம்வரை பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆய்வின் நோக்கங்களாக உகண்டாவின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை எடுத்துக்காட்டுதல், சர்வதேசங்கள் இடிஅமீனுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய்தல், இடிஅமீனை ஒரு சர்வாதிகாரியாக இனங்காட்டுதல், இடிஅமீனின் நடவடிக்கைகளை பிற சர்வாதிகாரிகளுடன் ஒப்பிடுவதன் மூலம் அவனின் ஆட்சிமுறைகளை வெளிக்கொணர்தல் போன்றன காணப்படுகின்றன. மேலும் இவ்வாய்வின் அணுகுமுறை யானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்த விவரண மற்றும் ஒப்பியல் ஆய்வாகப் பார்க்கப்படுகின்றது. குறித்த இவ்வாய்வினை நேர்த்தியான வகையில் மேற்கொள்வதற்கு முதல்நிலை தரவுகள் என்ற வகையில் இடிஅமீன் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணல்கள், இடிஅமீனது உரைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் வரிசையில் நூல்கள் பத்திரிகைகள், கட்டுரைகள், இணையத்தரவுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**திறவுச் சொற்கள் :** இராணுவம், சர்வாதிகார ஆட்சி, கொடூரமான ஆட்சி, பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதியை நிலைநாட்டுவதில் வீட்டோ அதிகார நாடுகளின் வகிபங்கு

**றெஜிகா, அ., கணேசலிங்கம், கே. ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
regikka199616@gmail.com

உலக நாடுகளின் மத்தியிலே ஒற்றுமையை நிலவச் செய்வதிலும் உறுதியான நட்பினை வளர்த்துக் கொள்வதையும் நோக்காகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபைக்கு பிரதான இடமுண்டு. உலக அமைதியை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்துவதற்காகவும் இன்னொரு உலகளாவிய போர் ஏற்பட்டுவிடாமல் தடுப்பதனையும் நோக்காக கொண்டு தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை ஓர் அங்கமாக காணப்படுகின்றது. இதில் பாதுகாப்பு சபையானது உலகளாவிய அமைதியினை உருவாக்கும் நோக்கில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை காலத்துக்கு காலம் மேற்கொண்டு வருகின்றது. இச்சபையிலுள்ள நிரந்தர உறுப்பினர்கள் தம்வசம் வைத்துள்ள வீட்டோ அதிகாரத்தின் மூலம் உலக அமைதியானது நிலைநாட்ட முயல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. எனவே வீட்டோ அதிகாரத்தின் மூலம் எவ்வாறு ஏனைய உலக நாடுகளில் முரண்பாடுகள் இடம் பெறுவதுடன் அந்நாடுகள் எவ்வாறு தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன எனவும் வீட்டோ நாடுகள் மூலம் எவ்வாறு உலக அமைதியை நிலைநாட்ட முடியாதுள்ளது என்பதனை காலத்தின் தேவையெனக் கருதி ஆராய்கின்றது. உலக நாடுகளிற்குள்ளும் நாடுகளிற்கிடையேயும் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பிரதான காரணம் பாதுகாப்புச் சபையில் உள்ள வீட்டோ அதிகாரமே ஆகும். வீட்டோ நாடுகள் தமக்கென வழங்கப்பட்ட இந்தச் சிறப்பு அதிகாரத்தை ஏகமனதாக பயன்படுத்தும் பட்சத்தில் நாடுகளின் மத்தியில் இடம்பெறுகின்ற பிரச்சனைகளை எளிதாக தீர்த்து விட முடியும். ஆயினும் வீட்டோ நாடுகள் தமக்குள் இரு அணியாக பிளவு பட்டு செயல்படுவதன் காரணமாகவே இன்று வரை உலகளாவிய அமைதியை ஏற்படுத்த முடியவில்லை என்பதும் பிரதான காரணமாக உள்ளது. அத்துடன் உலக நாடுகள் இடையே நிலவி வருகின்ற பல்வேறுபட்டு முரண்பாடுகளை தடுப்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் பயங்கரவாதமும் வன்முறையும் உலக மக்களை அச்சுறுத்தத் தான் செய்கின்றது என்றே கூற முடியும்.

**திறவுச் சொற்கள் :** பாதுகாப்புச்சபை, உலகை அமைதி, பொருளாதாரத்தடை, அதிகாரம், உலக சமாதானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதமும் ஜே.வி.பியும் (JVP) ஒரு விமர்சன ரீதியான ஆய்வு

**பிரஷாந்தினி, மு., கணேசலிங்கன், கே.ரீ .**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
prashanthinimuniswara@gmail.com

இவ்வாய்வானது "இனவாதமும் ஜே.வி.பியும் ஒரு விமர்சன ரீதியிலான ஆய்வு; என்ற தலைப்பில் அமைகின்றது. நாகரீகம் தோன்றிய காலத்தில் இருந்து மக்கள் சமூக, கலாசார, பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற பொதுவான நோக்கங்களுக்காக கூட்டாகக் சேர்ந்து பெரிய அமைப்புகளை ஏற்படுத்தி வந்தனர். அந்த வகையில் கட்சி என்பது கூட்டு வாழ்க்கைக்கான ஓர் அமைப்பு ஆகும். அத்தோடு நிறுவப்பட்ட சமுதாயம் மட்டுமே கட்சி எனப்படுகின்றது. இவ்வாறான நோக்கில் அரசியல் கட்சி என்பது இருநூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட ஒரு நவீன ஜனநாயக நிகழ்வாக கொள்ளப்படுகின்றது. பொதுவாக கட்சிகளினை அதனுடைய நோக்கம், கொள்கை என்பனவற்றைக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் அடிப்படை மாற்றங்களையும் சீர்திருத்த சட்டங்களையும் அறிமுகப் படுத்தும் விரும்பும் அமைப்புக்களே இடதுசாரி கட்சிகள் எனப்படுகின்றன. உலகின் பெரும்பாலும் இடதுசாரி கொள்கையின் அடிப்படையிலான கட்சிகளே பரவலாக தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் இலங்கையில் தோற்றம் பெற்ற இடதுசாரி கட்சியான மக்கள் விடுதலை முன்னணியானது இலங்கையின் மூன்றாவது பெரும் சக்தியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அரசியலில் பலமான அமைப்பாக இன்றையளவும் பேசப்பட்டு வருகின்றது. இக்கட்சியானது **1965** ஆம் ஆண்டு மே மாதம் **20**ஆம் திகதி இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணியின் தலைவராக இருந்த ரோஹண விஜயவீரா அவர்களினால் உருவாக்கப்பட்டது. இக்கட்சியானது ஆரம்பம் தொட்டு அதன் கொள்கைகளில் தீவிரமான இடதுசாரி போக்குகளை கடைப்பிடித்து வந்ததோடு பின்னர் தன்னுடைய அரசியல் நலனுக்காக கிராமமட்டத்தில் உள்ள இளைஞர் சமூகத்தினை கொண்டு **1971** ஆம் ஆண்டு மற்றும் **1989** ஆம் ஆண்டுகளில் இலங்கை வரலாற்றில் மாபெரும் இரண்டு புரட்சிகளை மேற்கொண்டது. இதனால் பாரிய உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக இக்கட்சி அரசாங்கத்தினால் தடைச் செய்யப்பட்டு இதன் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. பின்னர் **1990** ஆம் ஆண்டுக்கு பின்னர் தன்னுடைய கொள்கையை மாற்றி அமைத்துக்கொண்டு மிதவாத எழுச்சியுடன் இலங்கை அரசியல் களத்தில் குதித்து ஜனநாயக முறைமையில் அரசியலில் ஈடுபட்டு வந்ததுடன் இக்கட்சியானது தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. இவ்வாறு கட்சியானது தோற்றம் பெற்றிருந்த காலப்பகுதியிலிருந்து இன்றைய காலம் வரை பலதடவை தடை செய்யப்பட்டு வீழ்ச்சி நிலையினை அடைந்திருந்தபோதிலும் இலங்கை அரசியலில் ஒரு வலுவான மூன்றாம் சக்தியாக தன்னை நிரூபித்து கொள்வதற்காக இனவாத கொள்கைகளினை வெளிப்படுத்தியும் செயற்பாடுகளை செயற்படுத்தியும் மக்களிடையே விரோதமான போக்கினை விதைத்து வருகின்றது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடைய ஜனநாயகத்திற்கு முரணான கொள்கைகளும், நடவடிக்கைகளும் இலங்கையின் இன வன்முறையினை தூண்ட செய்த ஒரு காரணிகளாக கருதப்படுகின்றன. இவ்வாறு இக் கட்சியின் கொள்கைகளும் அதன் தலைமைகளின் இனவாத செயற்பாடுகளும் குறித்து விமர்சன ரீதியான போக்கில் ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொல்:** மக்கள் விடுதலை முன்னணி, இனவாதம், புரட்சி, இடதுசாரிக் கட்சிகள், இனப்பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கான வாய்ப்புக்களும் சவால்களும்

**பவித்திரா, ர., திருச்செந்தூரன்.சி.**
*அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
pavithirap72@gmail.com

*பிரித்தானியர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் இலங்கையானது தென்னாசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் அரசியல் ஸ்திரமான நாடாகக் காணப்பட்டது. 1948 இல் சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய யாப்புருவாக்க செயல்முறைகள் தேசிய ஒருமைப்பாடு, இன நல்லிணக்கம்,ஜனநாயகம் என்றவற்றை கேள்விக்குட்படுத்துபவையாக அமைந்துள்ளன. குறிப்பாக 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பானது இலங்கையில் அடிப்படை ஜனநாயக முறைகளை கேள்விக்கு உட்படுத்துகின்றது. இன்று இலங்கை எதிர்கொள்கின்ற இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி என்பனவற்றிற்கு அடிப்படை காரணம் 1978 ஆம் ஆண்டு யாப்பினுடைய வலுவற்ற தன்மையாகும். பல்லினதன்மை யுடைய ஒரு நாட்டில் எத்தகைய விடயங்களை புறக்கணிக்க வேண்டுமோ அவ் விடயங்களை உள்வாங்கியே 1978 ஆம் ஆண்டு யாப்புருவாக்கம் இடம்பெற்றுள்ளது. இவ் யாப்பில் 21 சீர்திருத்தங்கள் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும் திருத்தங்கள் நிரந்தரத் தன்மை உடையதாக காணப்படவில்லை. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறை, பாராளுமன்ற அடிப்படை உரிமைகள், மக்கள் தீர்ப்பு, மொழி, மதம், தேர்தல் முறை உட்பட பல விடயங்களில் குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது. இதனால் இன மத முரண்பாடு, பொருளாதார பலவீனம், சமூக வேறுபாடு நிலவுகின்றது. இந்நிலையில் புதிய யாப்பு உருவாக்கத்திற்கான செயற்பாடுகள் அவசியமாகின்றது. என்பதை உணர்த்துகின்றது. அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அரசியல் யாப்பானது இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகும். இத்தகையொரு அரசியல் யாப்பினை இலங்கைக்கு கொண்டு வருவதில் பல சவால்கள் காணப்படுகின்றது. இந்த சவால்களை கடந்து இலங்கைக்கு புதியதொரு அரசியல் யாப்பினை உருவாக்குவது அவசியமாகும்.*

**திறவுச்சொற்கள்:** ஜனநாயகம், இனமுரண்பாடு, பொருளாதார நெருக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம்: 2015–2023 வரையான காலப்பகுதியை மையப்படுத்திய ஆய்வு


**பிரியந்தி, ஜெ.,கணேசலிங்கன், கே.ரீ .**

அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

jpriya0522@gmail.com



இலங்கை அரசியலில் ஆளும் வர்க்கத்தின் தலைமைத்துவம் இலங்கையின் வரலாறு முழுவதும் அதிக செல்வாக்குடையதாக விளங்குகின்றது. இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகப்போக்கினை வடிவமைப்பதில் அத்தகைய தலைமைத்துவங்களுக்கு அதீத பங்களிப்பு காணப்படுகின்றது. சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால இலங்கை அரசியல் வரலாற்றில் அரசியல் தலைமைத்துவங்கள் அதிக செல்வாக்கு பெறத்தொடங்கின. அந்த வகையில் சுதந்திர இலங்கையின் அரசியல் திருப்புமுனையின் முன்னோடியான ஐக்கிய தேசியக் கட்சி காணப்பட்டது. அதன் தலைமைத்துவங்களான டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா ஆகியயோர் இலங்கையின் இருப்பினையும் வரலாற்றையும் தனித்துவமாக மாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவமானது ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் உறவான ரணில் விக்கிரமசிங்காவிடம் உள்ளது. ரணில் விக்கிரமசிங்காவினை பொறுத்தவரை இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாகவே திகழ்ந்து வருகின்றார். 1977 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு வெற்றி தோல்விகள் மத்தியிலும் தொடர்ச்சியாக இலங்கையின் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமல்லாது ஆளுமைமிக்க அரசியல்வாதி என்ற கௌரவம் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மட்டுமே உரியதாகும். அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதி போன்ற அதிகார பதவி நிலையில் அரசியலில் பல்வேறு பதவிகளை வகித்து இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதிக முக்கியத்துவத்தை பெற்றுள்ளார். நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியிலும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதியிலும் ரணில் விக்கிரமசிங்கா தலைமைத்துவத்தினால் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு செயற்படுகின்றதைக் காணமுடிகிறது. அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, கட்சிக்குள் எழுந்த உள்ளக முரண்பாடு, தலைமைத்துவப் போட்டி ஆகிய விடயங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக கையாண்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களையும் நகர்வுகளையும் இந்த ஆய்வு இனங்காணமுயலுகிறது.



**திறவுச்சொற்கள் :** அரசியல் ஆளுமை, நல்லாட்சி அரசாங்கம், அரசியல் பொருளாதார நெருக்கடிகள், இராஜதந்திரம், வெளிநாட்டுக்கொள்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Environment, Economics, Plannaing and Development

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வீட்டிலிருந்து பணிபுரிந்தபோது எதிர்நோக்கிய சவால்கள்: கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியை அடிப்படையாக கொண்ட ஆய்வு

(வடமராட்சி வடக்கு மூன்று கிராம சேவகர் பிரிவுகளை அடிப்படையாக கொண்டது)


**கிருஷாயினி, R., கமலக்குமாரி, க.**

பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ravikrishkee@gmail.com



COVID-19 பெருந்தொற்று காரணமாக அனைத்து உலக நாடுகளும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு பேரழிவை எதிர்கொண்ட பொழுது அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாக “வீட்டில் இருந்து பணி புரிதல் திட்டம்“ காணப்படுகின்றது. இலங்கையினுடைய வேலை தளங்களுக்குப் பழக்கமற்ற புதிய நடைமுறையின் கீழ் வேலை வாழ்க்கை சமநிலையைப் பேண வேண்டிய நிலையில் கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் பெண்கள் வீட்டுத் துறையில் காணப்பட்டனர். கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் நாடு முடக்கப்பட்ட வேளை பெண்கள் வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் குடும்ப பணிகளை மேற்கொள்ளல் என்ற இரண்டு முரண்பட்ட நோக்கங்களுக்கு மத்தியில் பெண்கள் செயற்பட்டுள்ளனர். சேவைத்துறையில் பணிபுரியும் பெண்களுக்கு கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணிபுரிதல் (WFH) மற்றும் குடும்ப பொறுப்புக்கள், கடமைகள் மத்தியில் WFH திட்டத்திற்கு அமைவாக செயற்படல் என்பது சவாலானதாகும். இத்திட்டத்தின் கீழ் வினைத்திறனாக பெண்களால் பணிபுரிய முடிந்ததா என்பதனை “சுவட்” (SWOT) ஆய்வு மற்றும் காரணிப்பகுப்பாய்வு மூலம் ஆராய்வதும், பெண்களின் வேலை-வாழ்க்கை சமநிலைக்கான கொள்கை மற்றும் அது தொடர்பான தந்திரோபாயங்கள் தொடர்பான ஆய்வு இதுவரை செய்யப்படவில்லை என்பதே ஆய்வுப் பிரச்சினையாக காணப்படுகின்றது. வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டத்தினால் பெண்கள் எதிர்நோக்கிய சவால்களை அதாவது பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வு அவற்றால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிய முயன்றுள்ளது. சேவைத் துறையில் (தனியார் துறை மற்றும் அரசதுறை) பணிபுரிகின்ற 60 பெண்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட J/383,J/384 ,J/385 ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய தொண்டைமானாறு மற்றும் கெருடாவில் பிரதேசங்களை ஆய்வு பிரதேசங்களாகக் கொண்ட ஒரு குறுகிய கால ஆய்வாகும். இவ் ஆய்வுப் பிரதேசத்தில் அதிகளவான பெண்கள் அரசதுறை மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்றார்கள். சுவட் ஆய்வு, விவரணப்பகுப்பாய்வு, இணைவுக் குணகப் பகுப்பாய்வு, காரணி பகுப்பாய்வு போன்றவற்றை பயன்படுத்தி பெற்ற முடிவுகளானவை வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டம் சேவைத் துறையில் பணிபுரிகின்ற பெண்களுக்கு பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் போன்ற சவால்களை ஏற்படுத்தி இருந்திருக்கின்றது. ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் ஊழியப்படைப் பங்குபற்றலில் அதிக பெண்களை உள்ளீர்ப்பதற்கு வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டத்தினைப் பரிந்துரைப்பதாக இந்த ஆய்வு அமைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் அடுத்த தலைமுறைக்குரிய வேலைக் கொள்கைகளை வடிவமைப்பதற்கு பெண்களின் சிறப்புத் தேவைகளை கருத்தில் கொண்டு எவ்வாறு தயாராகலாம் என்பதற்கான சிறந்த நடைமுறைகளைப் பரிந்துரைப்பதே இவ் ஆய்வாகும்.

**திறவுச்சொற்கள் :** கொவிட்-19 பெருந்தொற்றுஇ வேலை வாழ்க்கை சமநிலைஇ புதிய தொழில்முறைமைஇ இணைய பாதுகாப்பு இ குடும்ப வன்முறைஇ மன உளைச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் ஈடுபாடு மற்றும் கல்விச் செயலாற்றுகைக்கு இடையிலான தொடர்பு: தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப்பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு

**துஷாந்தினி, A., கமலக்குமாரி, க.**
பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thusanthinithusa79@gmail.com

கல்வியானது மனித மூலதனத்தை பெருக்குவதோடு வருமான சமத்துவமின்மையை குறைத்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதனால் இலங்கையும் கல்வியில் கவனத்தை செலுத்தி இலவசக்கல்வியை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து வழங்கி வருகின்றது. பொருளாதாரத்தை மேம்படுத்த கல்வியின் மீதான மாணவர்களின் ஈடுபாடு என்பது முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. மீள்குடியேற்ற பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் (2022) மாணவர் களின் ஈடுபாடு குறைவடைந்து கல்விநிலை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது என்பதனை ஆய்வுப்பிரச்சினையாக கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது மாணவர்களின் ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்கும் இடையிலான பொருண்மை யான தொடர்பினை கண்டறிவதோடு மாணவர்களின் ஈடுபாட்டினுள் உள்ளடங்கும் காரணிகளினை இனங்கண்டு மாணவர்களின் ஈடுபாட்டின் அளவை மதிப்பிடுவதனை நோக்கமாகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் (2022)இல் கல்வி பயின்ற 167 மாணவர்களில் 120 மாணவர்கள் எழுமாற்றுஅடிப்படையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம்நிலைத்தரவுகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் விபரணப்பகுப்பாய்வு, இணைவுக்குணகப் பகுப்பாய்வு, காரணிப்பகுப்பாய்வு பயன்படுத்தப் பட்டதோடு SPPS(Version 20) மற்றும் EXCEL ஆகிய கணினி மென்பொருட்கள் பயன் படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களின் அறிவுசார்ந்த ஈடுபாட்டிற்கும் கல்விச்செயலாற்றுகைக்கும் இடையில் பொருண்மையான நேரான தொடர்பு கண்டு பிடிக்கப்பட்டது. மற்றும் நடத்தைசார்ந்த ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்கும் இடையில் பொருண்மையான நேரான தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் மாணவர் களின் உணர்ச்சிசார்ந்த ஈடுபாட்டுக்கும் கல்விச் செயலாற்றுகைக்குமிடையில் பொருண்மை யான தொடர்பில்லை என்பது இணைவுகுணகப்பகுப்பாய்வு, காரணிபகுப்பாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. மாணவர்களின் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்கான செயற்பாடு களை மேற்கொள்வதன் மூலம் கல்விச் செயலாற்றுகையை மேம்படுத்தல் பரிந்துரையாக முன்வைக்கப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** அறிவுசார்ந்த ஈடுபாடு, உணர்ச்சிசார்ந்த ஈடுபாடு, நடத்தைசார்ந்த ஈடுபாடு, கல்விச்செயலாற்றுகை, காரணிபகுப்பாய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனத்தின் பொருளாதாரம் : கோண்டாவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவுப் பெண்களிலிருந்தான அநுபவப் பகிர்வு

**மந்துஷா, V., நேருஜா,ந.**
பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
manthusha172@gmail.com

மக்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்டுள்ள ஒரு விடயமாக திருமணபந்தம் காணப்படுகின்றது. பொருளியல் ஆய்வுகளில் சீதனம் பற்றிய ஆய்வு மிகவும் பிரதானமாகக் காணப்படுவதோடு சமீபத்திய அதிகரிப்புடன் வரதட்சணைப் பணவீக்கம் என்று அழைக்கப் படுகின்றது. இவ் ஆய்வின் பிரதான நோக்கம் தமிழ்ப்பெண்களுக்கும் சீதனப்பொருளா தாரத்துக்கும் இடையிலான தொடர்பினை அடையாளப்படுத்துவதாகும். நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் கிழக்கு கிராமசேவகர் பிரிவை ஆய்வு பிரதேசமாக இது கொண்டுள்ளது. கோண்டாவில் கிழக்கு எனும் கிராமமானது 759 குடும்பங்களைக் கொண்டமைந்தது. இதிலிருந்து நோக்க அடிப்படையிலான வீதாசார மாதிரியெடுப்பு முறை மூலம் 80 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் ஆய்வாளனால் ஆய்வுக்களத்துக்கு நேரடியாகச் சென்று கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் யாழ் மாவட்டச் செயலக மற்றும் நல்லூர் பிரதேச செயலக புள்ளிவிபரக் கையேடுகள், கிராமசேவகர் பிரிவுகளின் கையேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவை விபரணப் புள்ளிவிபரவியல், நேரடி அவதானம் மற்றும் கலந்துரையாடல்கள், இணைவுக் குணகப் பகுப்பாய்வு, Independent Samples Test, Chi - Square Test போன்றனவும் மென்பொதியாக SPSS என்பன ஆய்வுக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப பெண்ணினுடைய தொழில் நிலை தொடர்பில் திருமணமான பெண்களில் அரைவாசிக்கு மேற்பட்ட 61.3% ஆனவர்கள் வீட்டுப் பெண்களாகவும் 32.8% ஆனவர்கள் சிறந்த கல்வித்தரத்தினைக் கொண்டிருப்பதோடு அரசஊழியர்களாகவும் காணப்படுகின்றனர். சீதனமானது பணம் மற்றும் சொத்து வடிவில் (வீடு, நிலம், கட்டிடம்) வழங்கப்பட்டுள்ளது. இணைவுக்குணகப் பகுப்பாய்வில் சீதனத்திற்கும் சேமிப்பிற்கும் இடையிலான இணைவுக்குணகம் 0.280 என்ற பெறுமதியினைக் கொண்டிருக்கின்றது. இவ்விரு மாறிகளுக்குமிடையில் பலவீனமான நேர்க்கணியத் தொடர்பானது வெளிக்காட்டப்பட்டுள்ளது. சீதனத்திற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குமிடையான தொடர்பில் இணைவுக்குணகம் 0.066 என்ற பெறுமதியில் பலவீனமான பொருளுண்மை மட்டத்தினைக் கொண்டிருக்கின்றது. சீதனம் மக்களினுடைய வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்கின்றது என அதிகமானோர் குறிப்பிட்டுள்ளனர். சீதனத்தைத் தீர்மானிக்கும் சமூக, பொருளாதார, கலாசார, உளவியல் காரணிகளுக்கு இடையிலான தொடர்பினை நோக்கும் போது பெற்றோர் எதிர்கொண்ட உளவியல் தாக்கங்களாக திருமண வயதை எட்டியும் தமது பிள்ளைகள் வாழ்க்கைப்பட முடியா திருக்கும் நிலையை எண்ணித் தவித்தல், உறவினர்கள் கடன் கொடுப்பதில் பின் நின்றமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வறுமைக்குள் தள்ளப்பட்டு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டமை போன்றன காணப்பட்டன. மணமகள் எதிர்கொண்ட உளவியல் தாக்கங்களாக கவலை, திருமண வெறுப்பு, தமது மனதுக்கு பிடித்த மணவாளனை அடைய முடியாத சூழல் காணப்படு கின்றமை போன்றன அறியப்பட்டன. இதனால் திருமணம் என்பதை வெறுக்கத்தக்க விடயமாகவே அவர்கள் கருதுகின்றனர். எனவே அதற்கான தீர்வுகளும் மக்களினுடைய வாழ்க்கைத்தர முன்னேற்றத்துக்குத் தேவையான நடவடிக்கைகளும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன. மக்களிடையே முதலீடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு திருமண விடயங்களில் ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கக் கூடிய நிறுவன அமைப்புக்களையும் உருவாக்குதல் வேண்டும். இதன் மூலம் சீதனத்தினை மையப்படுத்தியதான சேமிப்பினை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள் :** சீதனம், சேமிப்பு, திருமணம், பணம், பெண்கள், வாழ்க்கைத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தில் பணக்கூலியின் பங்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமாளிக்கும் உத்திகளும் : யஹலவெல கிராமசேவகர் பிரிவில் ஸ்பிறிங்வூட் தோட்டத்தை உட்படுத்திய ஆய்வு

**சரோஜினி, J., கமலக்குமாரி, க.**

பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sarojinijeyakumar1997@gmail.com

இலங்கையானது சுதந்திரம் அடைந்த பிறகு எதிர்க்கொள்ளும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியாக நாட்டில் தற்போது நிலவிய பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி என்பது நிதி நெருக்கடியின் விளைவாக நாடு அனுபவிக்கும் சடுதியான பொருளாதார வீழ்ச்சியும் அதன் பரவல் விளைவுகளும் ஆகும். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வாழ் மக்கள் அனைவரும் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் அதிகமாக பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். இந் நிலைக்கான பிரதான காரணம் அவர்களது கூலியாகும். பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் அவர்களது கூலியானது மாறாத நிலையில் காணப்பட வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்தும் காணப்படுகின்றன. இவ் ஆய்வின் நோக்கமானது பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் இரத்தினபுரி மாவட்டத்தில் இறக்குவானை பிரதேசத்தில் உள்ள யஹலவெல கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட ஸ்ப்ரிங்வூட் பெருந்தோட்ட குடும்பங்களின் மாறாத கூலியினால் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும் நிலை பற்றியும் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தை தொடர்ந்தும் நிலையாக வைத்துக் கொள்ள மேற்கொள்ளும் உத்திகளை கண்டறிவதாகவும் காணப்படுகின்றது. இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி அடிப்படையில் 66 மாதிரிகள் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டதுடன் தரவுகள் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் திரட்டப்பட்டன. முதலாம் நிலை தரவுகள் நேரடி அவதானம், வினாக் கொத்து, கலந்துரையாடல் என்பவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் பெருந்தோட்டத்துறை தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம், சம்பள பட்டியல்கள், கிராம சேவகர் பதிவேடுகள், முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வுகள் என்பவற்றைக் கொண்டும் திரட்டப்பட்டன. பொருளாதார நெருக்கடிக்கு பின் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் மாறாத கூலியால் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது மற்றும் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தை நிலையாக வைக்க சமாளிக்கும் உத்திகளை கையாளுகின்றனர் என்ற கருதுகோள்களை நிரூபிக்க SPSS மென் பொருளினூடக விபரண பகுப்பாய்வு முறை, PAIRED SAMPLE T TEST, வரைபடங்கள், அட்டவணைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. வாழ்க்கைத்தரத்தை அளவிட பெருந்தோட்ட மக்களின் உணவு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, எதிர்பாராத செலவுகள், வீட்டுச்செலவுகள் என பல்வேறு காரணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக ஆய்வின் முடிவு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கு மாறாத பணக்கூலி காரணம் என்பதுடன் வாழ்க்கைத்தரத்தை தக்கவைத்துக்கொள்ள பெருந்தோட்ட மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிக்கும் உத்திகளை கையாளுகின்றனர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது 2021, 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளை கால வரையறையாக கொண்டு காணப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** பொருளாதார நெருக்கடி, பெருந்தோட்ட மக்கள், மாறாத பணக்கூலி, வாழ்க்கைத்தரம், சமாளிக்கும் உத்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைக்கு பணிப்பெண்ணாக சென்றுள்ள பெண்களும் அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களும்: மாத்தளை மாவட்டம், உடகமபடஹிர, அழுத்வத்த (332E/335C) கிராமசேவகர் பிரிவினை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு

**பாலேஸ்வரி, பா., உதயராசா, சு.**
புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
balasubramaniyambaleshwary@gmail.com

*அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இலங்கையில் பல்வேறு நோக்கம் கருதி வெளிநாடுகளுக்கு இடம்பெயரும் வீதம் தற்போது அதிகரித்து வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி வேலை யின்மை பிரச்சினையை ஊக்குவித்தது. இதன் காரணமாக தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளவும் பொருளாதார ரீதியாக தேற்றம் அடையவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடுகின்ற தேவை ஏற்பட்டுள்ளது. வருடாந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வோரில் மலையகப் பெண்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது. பொருளாதார ரீதியான பிரச்சினை, வாழ்வாதார செலவின் அதிகரிப்பு மேம்படுத்தப்பட வேண்டிய வாழ்க்கைத்தரம் என்பவற்றின் காரணமாக ஆய்வுப் பிரதேசத்திலிருந்து அதிகமானோர் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்கின்றனர். பணிப்பெண்ணாக செல்வதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த போதிலும் பணிப்பெண்களாக செல்லும் பெண்களும் அவர்களின் குடும்பங்களும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இவ்வாய்வின் நோக்கங்களாக பணிப் பெண்ணாக வெளிநாட்டுச் வேலைக்குச் சென்றமைக்கான காரணங்களை கண்டறிதல், பணிப்பெண்ணாக சென்றுள்ள பெண்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளம் காணல், பணிப்பெண்ணாக சென்றுள்ள பெண்களின் குடும்பங்கள் எதிர் நோக்கும் சவால்களுக்கான தீர்வுகள், பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன முன்வைக்கப் பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசமானது மத்தியமாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் யடவத்த பிரதேச செயலகத்துக்குட்பட்ட உடகமபடஹிர, அழுத்வத்த கிராமசேவகர் பிரிவுகளாகும். இப் பிரதேசங்களிலிருந்து பணிப்பெண்ணாக சென்றுள்ள பெண்களை முழுக்குடித்தொகையாகக் கொண்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்காக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து, நோக்க மாதிரியெடுப்பு, நேர்காணல், கலந்துரை யாடல், நேரடி அவதானம் மூலம் முதலாம்நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் கிராமசேவகர் அலுவலக அறிக்கை மூலம் இரண்டாம்நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மற்றும் விபரண பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வுப் பிரதேசங்களிலிருந்து பணிப்பெண்ணாக சென்றமைக்கான காரணங்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் நேர்மறையான விளைவுகளை விடவும் எதிர்மறையான சவால்களை அதிகளவு எதிர்நோக்குகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு மூலம், பெறப்பட்ட முடிவுகளின்படி குறிப்பாக கடன்சுமை, வறுமை, பிள்ளைகளின் கல்வி மற்றும் திருமணம், குடும்ப உறவில் ஏற்படும் சிக்கல், ஆடம்பர வாழ்வு, குடும்பநலன் என்பன பெண்கள் பணிப்பெண்களாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றமைக்கான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன. மேலும், பணிப்பெண்களின் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளைக் குறைத்துக்கொள்ளல், ஆளுமையுள்ள குழந்தைகள் உருவாக்கப்படுதல் போன்ற நேர் விளைவுகளையும் பணத்தை ஊதாரித்தனமாக செலவழித்தல், பிள்ளைகள் சொற்படி கேளாது செயற்படல், வெளிநாடு சென்ற பணிப்பெண் குடும்பங்களை கவனிக்காதுவிடல், கணவன்மார்கள் மதுபானைக்கு அடிமையாகுதல், ஆடம்பர வாழ்க்கையை விரும்புதல், பிள்ளைகள் மதுபாவனைக்கு அடிமையாதல், பிறழ்வான நடத்தைக்கு உள்ளாதல், இளவயதுத் திருமணம், சமூக வலைத்தள பாவனைக்கு அடிமையாதல், போசணைக் குறைபாடு மற்றும் உளவியல் ரீதியான மனஅழுத்த பிரச்சனைகளுக்கு உட்படுவதும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட சவால்களுக்கான தீர்வுகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப் பட்டுள்ளன. தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் ஏற்படும் மறைவிளைவுகள் பற்றி முழுமையாக சிந்திக்காமல் ஆய்வுப் பிரதேசங்களிலிருந்து பெரும்பாலான பெண்கள் பணிப்பெண்களாக இடம்பெயர்கின்றனர். இவை தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதன் மூலமும் சுயதொழில் முயற்சிகளை உருவாக்குவதன் மூலமும் இப் பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் ஆளுமை, தன்னம்பிக்கை, துணிவு, மனவுறுதி என்பவற்றை வெளிக்கொணரும் வகையில் பயிற்சிப்பட்டறைகள், கருத்தமர்வுகள் நடாத்தி வலுவுள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் அவர்களின் உளப்பாதிப்புகளைக் குறைப்பதோடு புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கும் ஆளுமைப்பண்பும் தானாகவே ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உருவாகும்.

**திறவுச்சொற்கள்:** கிராமசேவகர் பிரிவு, குடும்பங்கள், சவால்கள், பணிப்பெண்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் தேயிலை நிலப்பரப்பு மாற்றம்: புவிஇடஞ்சார் தொழிநுட்ப முறையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு


**புனிதமலர், பொ., உதயராசா.சு., பத்மநாதன்.ப.**

புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ponnarmalar22@gmail.com



உலகின் அயனமண்டலப் பகுதிகளில் மிக முக்கிய பெருந்தோட்டப் பயிராக தேயிலை காணப்படுகின்றது. அயனமண்டலக் காலநிலைக்கு உட்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றமையினாலும் மண், தரைத்தோற்றம் போன்ற பொது பண்புகளுக்கு பொருத்தமான நிலப்பயன்பாடாக காணப்படுகின்றமையினாலும் இலங்கை ஆரம்ப காலத்திலிருந்தே தேயிலை உற்பத்தியில் முன்னணி நாடாக இருந்து வருகின்றது. இதனால் இலங்கை முழுவதிலும் இன்று கிட்டத்தட்ட 203,000 ஹெக்டயர் அளவில் தேயிலைப் பயிரிடப்பட்டுள்ளது. காலணித்துவ காலத்திலிருந்தே இலங்கையின் மத்திய பகுதியில் உயர்தரத்திலான தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இருப்பினும் சமீப காலமாக இத் தேயிலைத் துறை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதைக் காண முடியும். அந்த வகையில் இவ் ஆய்வானது நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் பயிரிடப்பட்டிருந்த தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்கள் காலப்போக்கில் குறைந்து சென்றுள்ளமையை ஆராய்கின்றதாக அமைந்துள்ளது. தேயிலைப் பயிர்நிலப்பரப்பின் மாற்றத்தினை அடையாளம் காணல், இவ்வாறான இழப்பிற்குச் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கண்டறிதல், இவ்வாறான இழப்பு ஏற்படுத்தியுள்ள விளைவுகளை கண்டறிதல் போன்ற நோக்கங்களைக் இவ் ஆய்வு கொண்டுள்ளது. மேலும் தேயிலை பயர்ச்செய்கை நிலம் குறைவடைந்து செல்வதை இழிவளவாக்குவதற்கு சில பரிந்துரைகளும் இணைக்கப் பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான தரவுகளை பெற்றுக்கொள்ள முதலாம் நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவதானிப்பு, அரை கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலமாக முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகள் புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள் மற்றும் இணையத்தளங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. ஆய்வில் முதல் கட்டமாக படமாக்கல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. Google Earth Pro வில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2023 இற்கான செய்தி விம்பம் மற்றும் இலங்கையின் நில அளவைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2002 நிலப்பயன்பாட்டு படங்களினை புவியியற் தகவல் ஒழுங்கு (GIS) உதவியுடன் Digitizing செய்யப்பட்டு 2002 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான தேயிலை நில இழப்பிற்கான அளவுசார் தரவு பெற்றுக்கொள்ளப்பட்டு மேலும் முதலாம் நிலைதரவுகள் எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்டன. அத் தரவுகள் SPSS மற்றும் MS EXCEL போன்ற மென்பொருற்கள் உதவியுடன் விபரணப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் அட்டவணைகளாகவும், வரைபுகளாகவும், விபரணங்களாக வும் பெறப்பட்டது. ஆய்வின் முடிவில் ஆய்வு பிரதேசத்தின் 2002 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான தேயிலை நிலப்பரப்பு மாற்றப்படங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி இவ் 21 ஆண்டுகளில் 1136.6 ஹெக்டயர் தேயிலை நிலப்பகுதி குறைந்துள்ளது. தேயிலை நிலம் குறைவடைந்தமைக்கு முக்கிய காரணங்களாக மக்கள் சுய தேவை, தொழிலாளர் பற்றாக்குறை, வேற்றுப் பயிர்ச்செய்கை விரிவாக்கம், பிராந்திய அபிவிருத்தி, நிர்வாகத்தின் அசமந்தப் போக்கு போன்றன முக்கிய மானிட காரணிகளாகவும் அதிகரித்த மழைவீழ்ச்சி, மண்ணரிப்பு மற்றும் மண்சரிவு போன்றன முக்கிய இயற்கை காரணிகளாகவும் கண்டறியப்பட்டன. இவ்வாறு தேயிலை பயிர்நிலம் குறைவடைந்து செல்கின்றமையினால் வேலை நாட்கள் குறைவடைதல், விளைச்சல் குறைவடைதல், வன விலங்குகளின் அச்சுறுத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு பிரதேச மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். மேலும் தேயிலைத் தொழிலை நம்பி வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தில் இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான விளைவுகளில் இருந்து பாதுகாப்பினைப் பெற தேயிலை நிலப்பரப்பினை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் நிறுவனத்தின் உரித்துடைமையில் காணப்படும் தேயிலைப் பயிர்செய்கையினை அரசாங்க உரித்துரிமை யாக்குவது பொருத்தமான தீர்வாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் மக்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

**திறவுச்சொல் :** நிலப்பயன்பாடு, நிலப்பரப்பு, தேயிலைப் பயிர்ச்செய்கை, புவியியல் தகவல் ஒழுங்கு, பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் கரையோர மீன்பிடி மற்றும் கடல் அட்டைப் பண்ணைச் செயற்பாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளும் சவால்களும்: யாழ்ப்பாணம் பாசையூர் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**மேரி கொன்சி, பே., அன்ரனிராஜன், அ**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
consika1997@gmail.

இலங்கையில் கடற்சூழல் முக்கியமானதொரு வளமாகும். மனிதனின் அன்றாட வாழ்வாதரத்திற்கு பிரதான வருமானத்தை ஈட்டும் பொருட்டு கடலுக்கும், மீனவமக்களின் வாழ்வதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்த பல செயற்பாடுகள் கடல் சார்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த ஆய்வில் உள்ளூர் கரையோர மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் கடல் அட்டைப் பண்ணைச் செய்கையின் கட்டமைப்பு யாது? பாசையூர் கிராமத்தின் ஆழமற்ற கரையோர வளம் இரு பிரிவு மக்களால் பயன்படுத்தப்படும் போது எத்தகைய முரண்பாடுகளையும், சவால்களையும் தோற்றுவிக்கின்றன? இவற்றால் ஏற்படும் முரண்பாடுகள், சவால்களைக் குறைக்க எவ்வாறான பரிந்துரைகளை முன்வைக்கலாம்? போன்ற வினாக்களை முன் வைத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. குறித்த பாசையூர் பிரதேசத்தில் உள்ளூர் கரையோர மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் கடல் அட்டைப் பண்ணைச் செய்கையால் ஏற்படும் முரண்பாடுகள், சவால்களை வெளிக் கொணர்ந்து, அவற்றைக் குறைக்க எவ்வாறான பரிந்துரைகளை முன்வைப்பதென்பதே ஆய்வின் நோக்கமாகும். பாசையூர் பகுதியில் காணப்படும் J/64, J/65 கிராம சேவகர் பிரிவுகளின் மொத்த சனத்தொகை 2290. இவர்களுள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் 1000 பேராகக் காணப்படுகின்றனர். இவர்களுள் 170 உள்ளூர் கரையோர மீனவர்களும், அட்டைப் பண்ணைத் தொழிலில் ஈடுபடும் 30 மீனவர்களும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இத்தரவுகள் நேர்காணல், இலக்குக் குழுக்கலந்துரை யாடல், நேரடி அவதானம் போன்றவற்றின் மூலமும் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையை பயன்படுத்தியும் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் கிராம சேவகர் அலுவலகம், கடற்தொழில் சங்கம் போன்றவற்றின் புள்ளிவிபர ஏடுகளிலிருந்தும் பெறப்பட்டு Thematic Analysis, Narrative Analysis மற்றும் **Excel** போன்றவற்றை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. இது பண்புசார் ஆய்வாகும். இவ் ஆய்வில் பெறப்பட்ட தரவுகளின்படி குறித்த பாசையூர் பகுதியில் கடல் அட்டைப் பண்ணைச் செய்கையில் ஈடுபடுபவர்கள் பொருளாதாரரீதியில் வருமானத்தைப் பெறுகின்ற போதிலும் இப்பகுதியில் உள்ளூர் கரையோர மீனவர்களுக்கும் பண்ணையாளர்களுக்குமிடையில் சூழல், சமூக, பொருளாதார காரணிகளால் பல முரண்பாடுகள் ஏற்படுவதோடு இம் முரண்பாடுகளால் மீனவர்கள் சூழலியல், சமூக, பொருளாதார ரீதியிலும் பல சவால்கள் எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. இம்முரண்பாடுகள், சவால்களுக்கான பரிந்துரைகளாக பண்ணைகளை அமைக்கும் போது கடற்சூழலுக்கு மாசுபாடுகளை ஏற்படுத்தாமலும், சரியான சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதோடு உள்ளூர் கரையோர மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாது பண்ணைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமானதாகும். இதற்கான சூழலியல், சமூக, பொருளாதார, நிறுவன ரீதியான பரிந்துரைகள் ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் குறித்த பகுதியின் மீன்பிடி மற்றும் அட்டைப் பண்ணைகள் பற்றியும், இவற்றால் மக்களுக்கிடையில் காணப்படும் பிரச்சினைகள் பற்றியும் மீனவர்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகளை குறைக்கும் நடவடிக்கைகள் பற்றியும் இதனால் அறியமுடியும்.

**திறவுச்சொற்கள்:** உள்ளூர் கரையோர மீன்பிடி, கடல் அட்டைப் பண்ணை, மீனவர்கள், முரண்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட்-19 இற்கு பின்னரான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்புக்களும் சவால்களும் கண்டி மாவட்டத்தில் மெததும்பர பிரதேச செயலக பிரிவில் மீரியகொல்ல கிராமசேவக பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு


**பத்மகாந்தி,எம்., இராஜசூரியர், எல். டி.**

புவியியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

pathmakanthi1103@gmail.com



*நலிவுற்ற நிலையில் காணப்படுகின்ற சமூகங்களில் கொவிட்-19 இன் தாக்கமானது அதிகளவிலான சமூக, பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கொவிட்-19 இற்கு முன்னரான காலப்பகுதியை விட கொவிட்-19 இற்கு பின்னர் தேயிலைத் தோட்டத்தொழிலாளர் களின் தொழில் நிலைகள், தொடர்ச்சியான வேலைவாய்ப்புகள், அதுசார் வருமானம் போன்றன மிகவும் சிக்கலான தன்மையில் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பிலான ஆய்வு என்பது அவசியமான ஒன்றாக அமைகின்றது. கண்டி மாவட்டத்தின் மீரியகொல்ல கிராமசேவக பிரிவு தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் கொவிட்-19 இற்கு பின்னரான தொழில் நிலையின் போக்குகளைக் கண்டறிதல், அத்தொழில்களின் வருமானம் சார்ந்து ஏற்படுகின்ற பாதிப்புகளை அடையாளம் காணல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டது. மீரியகொல்ல கிராமசேவக பிரிவின் தேயிலைத் தோட்டத்தொழிலாளர்கள் மொத்தக் குடிகளாக தெரிவு செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்விற்காக முதலாம்நிலைத் தரவுகள் வினாக்கொத்துப் பட்டியல், இலக்குக்குழு கலந்துரையாடல் என்பவற்றின் ஊடாக சேகரிக்கப்பட்டன. இரண்டாம்நிலைத் தரவுகள் இலங்கை தேயிலை சபையின் தேயிலை நிலப்பதிவு அறிக்கை, மெததும்பர பிரதேச செயலக அறிக்கை, கிராம நிலதாரி அறிக்கைகள் என்பவற்றின் மூலமாக சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரணபுள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டன. இவ்வாய்வின் அடிப்படையில் மீரியகொல்ல கிராமசேவக பிரிவு தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் தொழில்நிலைகளில் தளம்பல் நிலை காணப்படுகின்றது. அத்துடன் இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் தேயிலை பறித்தல் தொழிலானது முழுமையாக கைவிடப்படக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன. தொழில்நிலை மாற்றங்களில் தளம்பல் ஏற்பட்டுள்ளமையினால் வருமானத்திலும் தளம்பல் ஏற்படுவதன் காரணமாக உணவுக் கொள்வனவுகள், மாணவர்கள் கல்வி கற்பதில் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் உதவித்திட்டங்களின் கிடைப்பனவு பற்றாக்குறை, கடன் அதிகரிப்பு போன்ற சவால்களும் மேலோங்கியுள்ளன. ஆகவே ஆய்வுப்பிரதேசத்தின் தேயிலைச்செய்கை பற்றிய விடயங்களை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டுவரல், தேயிலை மீள் செய்கை உதவி திட்டம், தேயிலை புதுச்செய்கை உதவித்திட்டம், சுயதொழில் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் வருமானத்தில் தளம்பல் இன்மையை பேணவும் வறுமையை குறைக்கவும் வழிவகுக்க முடியும்.*



**திறவுச்சொற்கள்:** கொவிட்-19, நலிவுற்ற சமுதாயம், தேயிலை் தொழிலாளர்கள், தொழில் போக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் இடம்சார் பாங்கு – தெல்லிப்பளை பிரதேச செயலகர் பிரிவை அடிப்படையாகக் கொண்டது

**வைஷ்ணவி, ஞா., அன்ரனிராஜன், அ.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vaishu29navi@gmail.com

தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் நுண்மட்டங்களுக்கிடையிலான வறுமையின் இடஞ்சார் பாங்குகளை மதிப்பிடும் வகையில் ஆய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வுப்பகுதியானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவில் மீள்குடியேற்றங் களையும் கொண்டுள்ளமையால், அதிக வறுமை நிலவுகின்றது. வறுமையின் இடஞ்சார் பாங்கினை நுண்மட்ட ரீதியில் அறிவதன் மூலமாக வறுமையை குறைப்பதற்கான திட்டங்கள், கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். பிரதேச செயலக ஆண்டறிக்கை யினை தரவு மூலமாக கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட பெறுபேறு களினடிப்படையில் கள அவதானிப்பு, கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்பன மேற்கொள்ளப்பட்டன. தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 45 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இதில் மூன்று கிராம அலுவலக பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து இன்றளவும் விடுவிக்கப்படாத நிலையில் இருப்பதால் அவற்றுக்கான தரவுகள் இல்லை. ஏனைய 42 கிராம சேவகர் பிரிவுகளில் கிடைக்கப்பெற்ற தரவுகளினடிப் படையில் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிரந்தர வீட்டுவசதி, மின்சாரவசதி உள்ள வீடுகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கை, 25,000இற்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறும் குடும்பங்கள், தங்கி வாழ்வோர் எண்ணிக்கை , நிரந்தர தொழில் புரிவோர் எண்ணிக்கை, சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை போன்ற வறுமையுடன் தொடர்புடைய விடயங்கள் குறிகாட்டிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டன. தெரிவு செய்யப் பட்ட குறிகாட்டிகள் ஒவ்வொன்றும் வீச்சு சமநிலைப்படுத்தல் முறைக்கு உட்படுத்தப்பட்டு தரவு அலகு வேறுபாடு நீக்கம் முறைக்கு மாற்றியமைக்கப்பட்டன. பின்னர் குறிகாட்டிகள் கூட்டுச்சுட்டெண் பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டு இடம்சார் வறுமையின் பாங்கானது மதிப்பிடப்பட்டது. அதன் அடிப்படையில் வறுமை யின் இடம்சார் பாங்கானது அதியுயர் மட்டம், உயர்மட்டம், இடைமட்டம், தாழ்மட்டம் என படமாக்கம் செய்யப் பட்டது. அந்த வகையில் 03 கிராமசேவகர் பிரிவுகள் அதியுயர் மட்டத்திலும், 10 கிராம சேவகர் பிரிவுகள் உயர்மட்டத்திலும், 19 கிராமசேவகர் பிரிவுகள் இடைமட்டத்திலும், 10 கிராமசேவகர் பிரிவுகள் தாழ்மட்டத்திலும் காணப்படுகின்றன. இவ் ஆய்வின் மூலம் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையில் காணப்படுகின்ற வறுமையின் நுண்மட்ட ரீதியிலான இடம்சார் பாங்குகளினை விளங்கிக் கொள்ள முடிந்துள்ளது. நுண்மட்டரீதியில் வறுமை அதிகம் காணப்படும், மீள்குடியேற்றப்பகுதிகளில் முன்னுரிமை செலுத்தப்பட்டு திட்டமிடல், கொள்கைகளை சரியாக வகுப்பதன் மூலம் வறுமையின் இடஞ்சார் பாங்குகளின் வேறு பாடுகளைக் குறைத்துக்கொள்ளலாம். எனவே பிரதேச அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு நுண்மட்ட ரீதியிலான வறுமையின் இடஞ்சார் பாங்குகளின் வேறுபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** வறுமை, இடம்சார் பாங்கு, குறிகாட்டிகள், கூட்டுச்சுட்டெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி : நுவரெலியா மாவட்டத்தின் ஹய்பொரஸ்ட் கிராமத்துக்கான ஓர் ஆய்வு

**அனுஜா ச., சுதாகர் க.**
புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
anuja623kr@gmail.com

வீடு என்பது அடிப்படை உரிமையாகும். வீடமைப்பானது மக்களுக்கான பாது காப்பை வழங்குவதுடன் அவர்களுடனான இட அமைப்பினையும், அந்தஸ்த்தினையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. பொருளாதாரத்தின் முதுகெலும் பாக இருக்கின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டங்கள் வெவ்வேறு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டாலும் அவர்களுக்கான வீடானது பூரணப்படுத்தப் படாமலும் இடையில் கைவிடப்படுகின்றமையினால் மக்கள் தொடர்ச்சியாக உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்த லயத்து வரிசை வீடுகளில் இன்றும் வாழ்கின்றார்கள். இலங்கையின் மத்திய மாகாணத்தின் நுவரெலிய மாவட்டத்தின் வலப்பனைப் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஹய்பொரஸ்ட் 504-D கிராம நிலதாரிப் பிரிவிற்குற்பட்ட கிராமத்தின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஹய்பொரஸ்ட் கிராமமானது 670km ஏக்கர் பரப்பளவினை கொண்டுள்ளது. இங்கு 692 குடும்பங்களைக் கொண்டு மொத்தமாக 1055 மக்கள் தொகையினைக் கொண்டமைந் துள்ளது. வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதி வாய்ப்புக்களின் தற்போதைய நிலை யினை மதிப்பிடல். வீடமைப்பு மற்றும் உட் கட்டமைப்பு அபிவிருத்திக்கான தடைகளை அடையாளம் செய்து மதிப்பிடல். வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான உபாயத்தினை சிபாரிசு செய்தல் என்பவை ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன. இங்கு தெரிவு அடிப்படையில் 51 வீட்டுத்திட்டப் பயனாளிகளை (GIS) வரைபடமாக்கல் வழியாக ஆய்விற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இங்கு வீடமைப்புத் திட்டங்களை முழுமைப்படுத்து வதற்குத் தடையாக போதியள வான நிதியின்மையும், காணியுரிமை யின்மையும் காணப்படு கின்றது இதனால் இவ்வீட்டுத்திட்டமானது தொடர்ச்சியாக பின் தள்ளப்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் தொடர்ந்தும் உட்கட்டமைப்புக்கள் குறைந்தும், லயத்து முறையிலான வாழ்க்கை முறையிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் வினாக்கொத்து மூலமும், கிராம சேவகர், தோட்ட முகாமையாளர், தேசிய சமூக அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் பாடசாலை யின் அதிபர் போன்றோரிடம் நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்புக்களினூடாக பெறப் பட்டது. இரண்டாம் நிலை தரவுகளாக இடம் சார் தரவுகள், கிராம சேவகர் அறிக்கை, தோட்ட முகாமையாளர் அறிக்கை மற்றும் நிதி அறிக்கை பாடசாலை மாணவர்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் (PRA) மக்கள் பங்குபற்றலுடனான தரவு சேகரிப்பு நுட்பங்களை பயன் படுத்தி சேகரிக்கப்பட்டன. அவை Excel மற்றும் SPSS ஊடாக பகுப்பாய்வு செய்யப் பட்டன. மேலும் பூரணப்படுத்தப்படாத வீடமைப்புத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட பயனாளிகளின் கைகளில் ஒப்படைக்க வேண்டும், லயத்து வரிசை வீடுகளில் காணப்படுகின்ற வதிவிடத்திலுள்ள குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள் நீக்கப்பட்டு சிறந்த கட்டுமான பணிகள் இடம் பெற வேண்டும் என்பன முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** ஹய்பொரஸ்ட், லயத்து வரிசை வீடுகள். வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தின் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் கால மற்றும் இட ரீதியான பாங்கு (2005 – 2022)

**கோபினா, எம்., பத்மநாதன், பி.,இராஜசூரியர், எல்.டி.**
புவியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kobikobina2@gmail.com

*வவுனியா மாவட்டத்தின் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகப்பிரிவில் 2005 2022 வரையிலான காலப்பகுதியில் நாட்பட்ட சிறுநீரக நோயினால்* (CKDu) *பாதிக்கப் பட்டவர்களின் கால ரீதியான மற்றும் இட ரீதியான பாங்கினை கண்டறிதல் ஆகிய நோக்கத் தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் பற்றிய தரவுகள் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையின் ஆண்டறிக்கைகள் மற்றும் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக ஆண்டறிக்கை ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டன. மொத்த நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களில் (எண்ணிக்கை - 691) பால் மற்றும் வயது வேறுபாடுகளின் அடிப்படையில் 50 வீதமான நோயாளர்கள் (எண்ணிக்கை - 346) தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். நோயாளர்களின் வாழ்வாதார நடவடிக்கைகள், உள்நாட்டு இடப்பெயர்வுப் போக்குகள், உணவுப்பழக்கங்கள், ஏனைய நோய்கள், ஏனைய பழக்கவழக்கங்கள் (மதுபாவனை, புகைப்பிடித்தல்) போன்றன முதல்நிலைத் தரவுகளாக வினாக்கொத்துபட்டியல்* (schedule) *மூலம் பெறப்பட்டன. அடையாளம் காணப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் பரம்பல் பற்றிய இடம்சார், காலம்சார் படங்களானவை* Arc GIS 10.4 *மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்டன. கால ரீதியான போக்கின் படி இப் பிரதேசத்தில் 2002 2009 வரையில்* CKDu *நோயாளர்கள் குறைவாக காணப்பட்டனர்கள் ஆயினும் 2010இன் பின்னர் படிப்படி யாக இந்நோயாளர்களின் அதிகரித்த போக்கு காணப்பட்டது. மொத்த நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் 31 வீதமான நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் 61 - 70 வயதுப்பிரிவினராக காணப்பட்டனர். ஆண் நோயாளர்களின் வீதம் 74 ஆகவும் பெண் நோயாளர்கள்* 26%*மும் காணப்பட்டனர். இப்பிரதேச செயலகப்பிரிவில் 19 கிராம சேவகர் பிரிவுகளில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டார்கள். இந்நோயாளர்களில் அதிகள வானோர் ஆண்டியாபுளியங்குளம் கிராம சேவகர் பிரிவில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளார்கள். பெரியதம்பனை கிராமசேவகர் பிரிவில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் இது வரையிலான காலப்பகுதியில் அடையாளப்படுத்தப்படவில்லை. இப்பிரதேச செயலகப்பிரிவில் அடையாளம் காணப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களில்* 96% *ஆனவர்கள் நிரந்தர வதிவிடமாக இப்பிரதேச செயலகப்பிரிவினைக் கொண்டவர்களாக காணப்பட்டனர்.* CKDu *நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 82 வீதமானவர்கள் விவசாயம் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளினை மேற்கொண்டவர்களாகவும், இதில்* 67% *ஆனவர் கள் நெற்பயிர்ச்செய்கையினை பிரதான பயிராக பயிரிடுபவர்களாகவும் காணப்பட்டார்கள். இந்நோயாளர்களில் 93 வீதமானவர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களினை நுகர்பவர்களாக காணப்பட்டார்கள். இந்நோயிற்கும் அதிகரித்த போக்கிற்குமான தொடர்புகள் புவி இரசாயனவியல் ஆய்வுகள், மருத்துவ ஆய்வுகள் மூலம் அடையாளப்படுத்தப்பட வேண்டிய தேவை இப்பிரதேச செயலகப்பிரிவிற்கு காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** நாட்பட்ட சிறுநீரக நோய் நோய்த்தாக்கம், நோயாளர்கள், வெங்கல செட்டிக்குளம், வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலைப் பயிர்ச்செய்கையின் அண்மைக் காலப்போக்கு – யாழ் மாவட்டத்தின் கோண்டாவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஜெனார்த்தன், பா., பிரதீபராஜா, நா.**

புவியியற்துறை (திட்டமிடல்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Jenaak1995@gmail.com

*யாழ் மாவட்டத்தின் வலிகாம வலயத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள கோண்டாவில் பிரதேசத்தில் புகையிலை விவசாயத்தினை தமது பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட **67** விவசாயிகளும் **82** கூலித் தொழிலாளர்களும் காணப்படுகின்றனர். **2017** இல் புகையிலை உற்பத்தித் தடை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பானது குறித்த விவசாயிகள் மத்தியில் புகையிலை பயிரிடல் தொடர்பான அச்சத்தினை ஏற்படுத்தியிருந்தது. இருந்தபோதிலும் அவர்கள் புகையிலையினை பயிரிடத் தவறவில்லை. ஆனாலும் **2019** இனைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளால் குறித்த விவசாயிகள் புகையிலை உற்பத்தியில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். அந்த வகையில் குறித்த புகையிலை விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்காக ஆய்விற்கான முதல்நிலைத் தரவுகளானவை படையாக்கப்பட்ட எளிய எழுமாற்று மாதிரியெடுப்பின் அடிப்படையில் ஆய்வுடன் தொடர்புடைய புகையிலை விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகளில் முறையே **40** வீதமானோரிடமிருந்தும் புகையிலை விநியோகஸ்தர்களிடமிருந்து வசதிமாதிரியெடுப்பின் அடிப்படையிலும் கோண்டாவில் விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் மற்றும் நல்லூர் கமநலசேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்தும் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப் படாத நேர்காணல்கள் ஊடாகப் பெறப்பட்ட அதே வேளை ஆய்வு பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட கள அவதானம் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரணப்புள்ளி விபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. குறித்த புகையிலை விவசாயத்தினுடைய போக்குகளை ஆய்வு செய்வதற்காக இரண்டாம் நிலை தரவுகளானவை உள்ளூர் விவசாய சம்மேளனம் மற்றும் நல்லூர் கமநலசேவைகள் நிலையம் போன்றவற்றி லிருந்து சேகரிக்கப்பட்டு காலரீதியான போக்குப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு விபரிக்கப் பட்டன. பகுப்பாய்வுகளினடிப்படையில் இலங்கையில் **2019**இன் பின்னர் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளானவை குறித்த விவசாயிகளின் உற்பத்திச் செலவில் ஏற்படுத்திய தாக்கமானது கோண்டாவில் பிரதேசத்தின் புகையிலை உற்பத்தியை கணிசமான அளவில் வீழ்ச்சி அடைய செய்துள்ளமை புலனாகியது. மின்சாரக்கட்டணம், நிலக்குத்தகை, இரசாயன உரங்களின் விலை, விவசாய நாட்கூலி போன்றவற்றில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பானது புகையிலை விவசாயிகளின் வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு புகையிலை விவசாயிகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அத்தோடு புகையிலை விவசாயத்தில் தங்கியிருந்த கூலித் தொழிலாளர்களையும் பாதிப்படையச் செய்தது. இவ்வாய்வில் புகையிலை விவசாயிகளுக்கேயான பிரதான பிரச்சனையாக புகையிலை உற்பத்தியாளர்கள், புகையிலை விநியோகஸ்தர்கள் மற்றும் புகையிலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகள் இடையே காணப்படும் பாரிய விலை வேறுபாடுகள் அடையாளப்படுத்தப் பட்டன. குறித்த விலை வேறுபாடுகளால் தமது உற்பத்திச் செலவிற்கு ஏற்ற வருமானத்தை குறித்த புகையிலை விவசாயிகளால் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே புகையிலை விவசாயத்திற்கு பதிலாக வெங்காயம், மரவள்ளி, மிளகாய், போன்ற மாற்றுப்பயிர் முயற்சிகள் இதற்கு சிறந்த தீர்வாக அமைய முடியும்.

**திறவுச்சொற்கள் :** புகையிலை விவசாயிகள், புகையிலைக் கூலித்தொழிலாளர்கள், புகையிலை உற்பத்திச்செலவு, புகையிலை விலைவேறுபாடு, மாற்றுப் பயிர்ச்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடித்தொகை மாறுநிலையின் கால ரீதியான பகுப்பாய்வு: இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தினை அடிப்படையாக கொண்ட ஆய்வு

**நிஷாந்தனி, பொ., பாரதி, பொ.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
nishanthani228@gmai.com

குடித்தொகை என்பது மக்கள்தொகையின் அளவு, அமைப்பு மற்றும் இயக்கவியல் பற்றிய ஒரு ஆய்வு ஆகும். இக் குடித்தொகையின் மாற்றக் கூறுகளான பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு என்பவற்றின் இயங்கு தன்மை காரணமாக குடித்தொகை யானது மாற்றமடைந்து வருகின்றது. நுவரெலியா மாவட்டமானது பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பினை வழங்கினாலும் சமூக, பொருளாதார, பௌதிக ரீதியாக பல இன்னல்களை சந்தித்து வருகின்றது. இவற்றுக்கான திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள நுவரெலியா மாவட்டத்தின் கால ரீதியாக குடித்தொகை மாற்றத்தினை அளவிடுதல், குடித்தொகை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற பிரதான கூறுகளான பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு என்பவற்றின் போக்கினை மதிப்பிடுதல், குடித்தொகை மாற்றக்கூறுகளின் மாற்றங்களால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிதல் என்பன அவசியமானவை. இவ் ஆய்வுக்காக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப் பட்டுள்ளதோடு குடித்தொகை மாற்றத்துடன் தொடர்புடைய அளவீட்டு முறைகளை பயன் படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவானது பெறப்பட்டுள்ளது. அந்த வகையில் 1992-2022 வரையான காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தின் மொத்த குடித்தொகையானது மெதுவான வளர்ச்சிப் போக்கினை வெளிப்படுத்துகிறது. பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் வீழ்ச்சி அடைவதோடு சிறுவர்களை விட வயதானவர்களின் குடித் தொகை வளர்ச்சி போக்கினை வெளிப்படுத்துகிறது. பெண்களின் வயது அடிப்படையிலான கருவளவாக்க மானது 25 வயதில் இருந்து 30 வயதாக மாற்றமடைந்துள்ளதுடன் மொத்த கருவளவாக்க விகிதம் இரண்டாக காணப்படுகின்றமை யும் ஆய்வில் வெளிக்கொணரப் பட்டுள்ளது. இறப்புக்களில் சிசு மரண விகிதம் மற்றும் வயதுடையோரின் இறப்பு விகிதம் வீழ்ச்சி அடைந்து செல்வதுடன் வயதானவர்களின் இறப்பு விகிதம் மெதுவான வளர்ச்சிப் போக்கினை வெளிப்படுத்துகின்றது. இடப்பெயர்வானது 2022 ஆம் ஆண்டுகளில் அதிகரித்துள்ளதுடன் வீட்டு பராமரிப்புக்கான இடப் பெயர்வுகளே நுவரெலியா மாவட்டத்தில் அதிகம் இடம்பெறுகின்றது என்பதும் இவ் ஆய்வின் ஊடாக வெளிக் கொணரப்பட்டுள்ளது. இவ் குடித்தொகை மாற்றம் காரணமாக பல சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை நுவரெலியா மாவட்டமானது எதிர் கொள் கின்றது. எனவே நுவரெலியா மாவட்டத்தின் குடித்தொகை மாற்றத்தினால் ஏற்படும் பாதக மான விளைவுகளை குறைக்க வயோதிபருக்கான பராமரிப்பு நிலையங்களை உருவாக்குதல், சுய தொழில்களுக்கான முதலீடுகளை வழங்குதல், கல்விக்கான நலத்திட்டங்களை மேற்கொள்ளல் போன்றவாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக குடித்தொகை தொடர்பான பாதகமான விளைவுகளை குறைக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

**திறவுச்சொற்கள்:** குடித்தொகை, குடித்தொகையின் மாறுநிலை, நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு கடல் நீரேரியின் உவர்ப்பியத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் உள்ளூர் மீன்பிடிசார் வாழ்வாதாரங்களில் எதிர்நோக்கப்படும் சவால்களும்

**பகிர்தா, உ., இராஜசூரியர், எல். டி.**
புவியியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
pakirtha600@gmail.com

யாழ்குடா நாட்டின் ஏரிகளில் ஒன்றாகத் தொண்டைமானாறு ஏரி காணப்படுகின்றது. இங்கு மேற்கொள்ளப்படும் உவர் நீரை நன்னீராக்கும் தடுப்பணைச் செயன்முறை ஏரிச் சூழல் தொகுதியை மாற்றமடையச் செய்கின்றது. இம் மாற்றங்களானவை ஏரியில் காணப்படும் தாவரங்கள் (Flora), விலங்குகளில் (Fauna) ஏற்கனவே அவதானிக்கப்பட்டது. இவ் ஆய்வின் நோக்கங்களாக உவர்ப்பிய மாற்றம் காரணமாக மாறிவரும் தொண்டைமானாறு ஏரிப் பகுதியின் சூழலியல் மாற்றங்களை இனங்காண்பதும், மீன்வளங்களின் மாற்றங்களை அடையாளப்படுத்துவதும், இம் மாற்றங்கள் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதாகவும் காணப்படுகின்றது. ஆய்விற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறைக்கூடாக ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது. உவர்ப்பியத்தில் ஏற்பட்டு வரும் மாற்றம் காரணமாக ஏரிச் சூழல் தொகுதியில் தாவர இனங்களில் மாற்றம் மற்றும் மீனினங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு முதலைகளின் பெருக்கமும் கண்டறியப்பட்டது. கடல் நீரேரிப் பகுதியில் உவர்ப்பியமானது அதிகமாகக் காணப்படுகின்றபோது மருதோண்டி, வெண்ணொச்சி, விளாய், மருது, காய்விளாய், புன்னை, சிறுசவுக்கு, தான்றி ஆகிய தாவர வகைகள் காணப்பட்டன. ஆயினும், தற்போது உவர்ப்பியமானது குறைவடைந்து செல்லுகையில் கழுதைமுள்ளி, பிரமதாஞ்சு, தாளை, எருக்கலை, அடம்பன் கொடி, எருமைமுல்லை, வாகல், பார்த்தீனியம் ஆகிய தாவர இனங்களின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. மாற்றமடையாத தாவர இனங்களாக செங்கன்குப்பி, தில்லை, வெண் கண்டல், திம்பரத்தை போன்ற தாவர இனங்கள் ஏரிப் பகுதியில் நிலைத்திருக்கின்றன. கடல் நீரேரி விலங்கினங்களில் நண்டு, இறால் இனங்கள் பெரும்பாலும் அழிவடைந்த நிலையிலும் திலாப்பியா, கொடுவா, பலுகு, பாலை, கெழுறு போன்ற இனங்கள் ஏரிப் பகுதியில் அதிகரித்த நிலையிலும் காணப்பட்டன. இம் மாற்றங்களிற்கு கடல் நீரேரிப் பகுதியின் உவர்த் தன்மை குறைவே காரணமாக அமைந்துள்ளது. நண்டு மற்றும் இறாலிற்கான சந்தைகளுடன் ஒப்பிடுகையில் தற்போது ஏரிப் பகுதியில் காணப்படும் மீன்களிற்கான சந்தை வாய்ப்பும், விலைகளும் குறைவாகக் காணப்படுவதால் மீனவர்களின் வருமானம் குறைவடைந்துள்ளது. கிடைக்கப் பெறுகின்ற வருமானம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போதுமானதாகக் காணப்படாத தால் ஏரி மீனவர்கள் பல்வேறான சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆயினும் பரம்பரையாக மீன்பிடித்தொழில் செய்து வருபவர்களில் ஏறத்தாழ 80% ஆனோர் வேறு தொழில் செய்ய விரும்பாமல் தொடர்ந்து மீன்பிடியை மேற்கொள்கின்றனர், 14% ஆனோர் மீன்பிடியுடன் இணைந்து வேறு தொழில் மேற்கொள்கின்றனர். 6% ஆனோர் மீன்பிடியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டுள்ளனர். தற்போதய நிலையில் ஏரிப் பகுதியில் உயர் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இறால், நண்டு மற்றும் ஏனைய மீனினங்களை வளர்ப்பதற்கான சாதகமான பகுதிகளை இனங்கண்டு பாதுகாப்பான பண்ணைகளை அமைப்பதன் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளைத் தணிக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** தொண்டைமானாறுக் கடல்நீரேரி நன்னீராக்கர், சூழல் தொகுதி மாற்றம், தாவர விலங்கு இனங்கள், வாழ்வாதாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய மீன்பிடிக்கும் கடல் அட்டைப்பண்ணை வளர்ப்பிற்கும் இடையே உள்ள முரண்பாடுகள்: பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராஞ்சி கிராம சேவையாளர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு

**ஜட்சன்,தா., பாரதி, பொ.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tjadsan@gmail.com

பாரம்பரிய மீன்பிடியாளர்களுக்கும், கடலட்டைப் பண்ணையாளர்களுக்கும் இடையே முரண்பாடுகள் கணிசமானவளவு அதிகரித்துவருவது பல்வேறு தரப்பினராலும் அறியப் பட்டுள்ளது அவ்வகையில் இவ்வாய்வானது கடல் அட்டை பண்ணை உற்பத்தி அதிகரிப்பை அடையாளப்படுத்தல். அதனால் ஏற்படும் பாதிப்புகளை இனங்காணல். பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைக்கும் கடல் அட்டைப் பண்ணை வளர்ப்பிற்கும் இடையிலான முரண்பாடுகளை அடையாளப்படுத்தல் என்பவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவு மூலங்களாக வினாக் கொத்து மற்றும் நேர்காணல், நேரடி அவதானிப்பு என்பவற்றின் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலை தரவு மூலங்களாக கிராம சேவகர் பதிவேடுகள், மீனவர் சங்கப் பதிவேடுகள், கடல் சார் நிறுவன அறிக்கைகள் என்பவற்றின் ஊடாக பெறப்பட்ட தரவுகள் கொள்ளப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரணப் புள்ளி விபரவியல் நுட்பத்தின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. இவற்றினை அடிப்படையாக வைத்து நோக்கின் ஆய்வு பிரதேசத்தில் கடல் அட்டைப் பண்ணைகளின் அமைவு பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறாக காணப்படுவதுடன். பாரம்பரிய மீன்பிடி பிரதேசங்களை ஆக்கிரமித்து செல்லும் போக்கும் காணப்படுகின்றது. மேலும் கடலட்டைப் பண்ணைகள் மீனவர்களின் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படுகின்றன. கடலட்டைப் பண்ணையாளர்களின் செயற்பாடுகள் மீனவர்கள் மத்தியில் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. கடலட்டைப் பண்ணைகளினால் ஏற்பட கூடிய சூழல்ரீதியான தாக்கமும் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் நோக்கின் இவ் கடலட்டைப் பண்ணைகளின் பரந்துபட்ட அமைவானது மீனவர்களுக்கான இடையூறுகளை ஏற்படுத்துவதனால் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. கடலட்டைப் பண்ணைகளை மீன்பிடிக்கு இடையூறு இல்லாத பொருத்தமான இடங்களில் அமைப்பதற்கு அனுமதியை வழங்குதல், கடலட்டைப் பண்ணைகளின் பரந்துபட்ட அமைவினை சரி செய்தல், சூழலுக்கு பாதிப்பு இல்லாதவாறு கடலட்டைப் பண்ணை செய்யும் கால அளவை மட்டுப்படுத்தல், கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்திப் பண்ணையாளரிடம் பெற்று கொள்ள ஊக்குவித்தல் மற்றும் அனைத்து மீனவர்களும் பயன் பெறும் வகையில் சுழற்சி முறையில் கடலட்டைப் பண்ணைக்கான அனுமதியை வழங்கல் என்பன ஆரோக்கியமான கடல்சார் பொருளாதார வளர்ச்சிக்கு கைகொடுக்கும்.

**திறவுச்சொற்கள் :** கடல் அட்டைப்பண்ணை, பாரம்பரிய மீன்பிடி, கிராஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேசத்தின் சுகாதார பராமரிப்பு மற்றும் கல்விச் சேவைகளுக்கான இடம்சார் அணுகுதன்மை

**சபிதா, கு., சுதாகர், கு.**
புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
kukansabi@gmail.com

நுகரக்கூடிய வளங்களின் தொகுப்பே சேவை மையங்களாகும். பொருட்கள் சேவைகளினை பெற்றுக் கொள்கின்ற இடங்களே சேவை நிலையங்கள் எனப்படும். அந்தவகையில் "பூநகரி பிரதேசத்தின் சுகாதார பராமரிப்பு மற்றும் கல்விச்சேவைகளுக்கான இடம்சார் அணுகுதன்மை" எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது சேவை நிலையங்களினை அடையாளப்படுத்தல் அவற்றின் பரம்பலினை படமாக்கல் அவற்றினை அணுகுவதில் உள்ள பிரச்சினைகளினை மதிப்பிடுவதல் என்பவற்றினை நோக்கமாக கொண்டுள்ளது. பூநகரி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட மக்கள் குறித்த சேவை நிலையங்களினை அணுகுவதில் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர். இதனடிப்படையில் அப்பிரதேசத்திற்கு இவ் ஆய்வானது அவசியமாகின்றது. அளவு சார் மற்றும் பண்பு சார் ஆய்வு வடிவங்கள் இணைந்த கலப்பு முறையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலை தரவு சேகரிப்புக் கருவிகளாக நேர்காணல் மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் வைத்தியசாலை அறிக்கை, பூநகரி பிரதேச செயலக அறிக்கை, குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் கையேடு, நூல்கள், எண்ணிலக்க தரையுயர மாதிரிப்படம் (Digital Topographic Map) என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வு மற்றும் புவியியல் தகவல் ஒழுங்கு பகுப்பாய்வு முறைக்கூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. இவற்றினை அடிப் படை யாக வைத்து ஆய்வு பிரதேச சுகாதார மற்றம் கல்வி நிலையங்கள் இவற்றின் சேவை வழங்கல் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகள் என்பன இனங் காணப்பட்டுள்ளன. அத்தோடு சேவைகளினை பெறுவதில் மக்களுக்கு உடல் உபாதை, நேரவிரயம், அதிக செலவு போன்றனவும் ஏற்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. குறைந்த சேவை வழங்கும் நிலையங்கள் தரமுயர்த்தப்பட வேண்டும், புதிய நிலையங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்,குறித்த சேவை நிலையங்களினை சரியான முறையில் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்பது இவ் ஆய்வின் முடிவாக கூறப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** சேவை நிலையம், புவியியல் தகவல் முறைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாய் பகிர்வு முறைமை வாழ்வாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் : மகாஊவா தோட்டத்தை சிறப்பாக கொண்ட ஓர் ஆய்வு

**கஜானா, கி., விபுலன், பி.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Soba1619@gmail.com

இலங்கையின் பொருளாதாரத்தில் ஆடை ஏற்றுமதிக்கு அடுத்தாக இரண்டாவது தொழிற்துறையாக தேயிலை ஏற்றுமதியானது உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கும் பெருந்தோட்டத்துறையானது, பரந்த அளவிலான தேயிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தையில் அங்கீகாரத்தையும், தயாரிப்புகளுக்கு அதிக மதிப்பையும் பெற்றுள்ளது. 1.5 மில்லியன் மக்களுக்கான வேலைவாய்ப்பு, வருடாந்தம் 300மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாய் என்பவற்றின் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு பயனை வழங்குகின்ற ஒரு துறையாக காணப்படுகின்றது. 2014ஆம் ஆண்டு ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கு, மோசமடைந்து வரும் உலகப் பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கை தேயிலையை இறக்குமதி செய்யும் மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யாவில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பநிலை காரணமாக தேயிலை தொழிற்துறையின் எதிர்காலம் ஸ்திரமானதாக இல்லை. இதனைக் கருத்திற் கொண்டு பெருந்தோட்ட கம்பனிகள் தங்களின் இலாபத்தினையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து கொள்வதற்கும், உற்பத்தி செலவை குறைக்கவும் “வருவாய் பகிர்வு முறைமை” என்ற புதிய முறைமையை அறிமுகம் செய்தன. இம்முறையினால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறுப்பட்ட சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டு வருவாய் பகிர்வு முறைமைக்கான காரணத்தை கண்டறிதல், வருவாய் பகிர்வுக்கு முன்னர் எவ்வாறான நிலைமை காணப்பட்டது, என்பதை விளங்கிக் கொள்ளுதல் பகிர்ந்தளிக்கப் பட்ட தேயிலைக் காணிகளின் தன்மையை படமாக்கல், இம்முறையினால் தோட்டத் தொழிலாளிகள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல் எனும் நோக்கில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்காக முதலாம் நிலைத்தரவு களான வினாக்கொத்து, நேர்காணல், கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தி Arc 10.4 GIS. SPSS, MS Excel போன்றவற்றின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின் ஊடாக தேயிலைக் காணி பகிர்வுக்கான காரணங்களாக கம்பனிக்கு ஏற்பட்ட நஷ்டம், தேயிலைக் காணிகள் காடுகளாக மாற்றப்பட்டமை, தொழிற்சங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள், தொழிலாளர் பற்றாக்குறை போன்றனவும், தேயிலை பகிர்வினால் ஏற்பட்ட சவால்களாக குறைந்த வருமானம், அதிகரித்த காணி பராமரிப்பு மற்றும் போக்குவரத்து செலவுகள், தொழிலாளர்களின் இடப்பெயர்வு, வதிவிட வசதி பற்றாக்குறை, பாடசாலை கல்வியில் இருந்தன மாணவர்களின் இடைவிலகல், மின் கட்டணத்தை செலுத்த முடியாமை, வைத்தியசேவைகள் நிறுத்தப்பட்டமை போன்றனவும், தேயிலை காணிப் பகிர்வுக்கு முன்னர் இருந்த சமூகநல உதவித்திட்ட சேவைகள் பகிர்வின் பின்னர் நிறுத்தப்பட்டமை போன்றனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள் :** பெருந்தோட்டம், தோட்டத்தொழிலாளி, வருவாய் பகிர்வு முறை, பிராந்திய பெருந்தோட்ட கம்பனி, ஒப்பந்த விவசாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட உள்நாட்டு மீன்பிடி

ரூபிதா, இ., விபுலன், பி.
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rubirubitha1224@gmail.com

புவி மேற்பரப்பில் காணப்படும் வளங்களில் மீன்வளமானது ஒரு புதுப்பிக்கக் கூடிய வளமாக உள்ளது. அதிகரித்து வரும் சனத்தொகையின் காரணமாக இம் மீன் வளத்துக்கான அதிகரித்த கேள்வியும் காணப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக உலக நாடுகள் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் உள்நாட்டு நீர்நிலைகள் மற்றும் செயற்கையான நீர் நிலைகளில் மீன்குஞ்சுகளை வளர்த்து ஏனைய குளங்களில் வைப்பிலிடுகின்ற செயல்முறையினை மீன்பிடி மற்றும் நீரியல் வளர்ப்புத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் உள்நாட்டு மீன்பிடிக்கு வாய்ப்பாக அதிகளவான குளங்கள் காணப்படுகின்ற போதிலும் அவை பருவகாலக் குளங்களாகக் காணப்படுவதால் அனைத்துக் குளங்களிலும் நிரந்தரமாக மீன்பிடியில் ஈடுபட முடியாதுள்ளது. இங்கு பதிவு செய்யப்பட்ட ஒன்பது குளங்களில் மீன்பிடிச் சங்கங்கள் அமைக்கப்பட்டு மீன்பிடியானது இடம்பெற்று வருகின்றது. மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய ஒன்பது குளங்களைச் சேர்ந்த 658 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடி தொடர்பாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு வவுனியா மாவட்டத்தின் உள்நாட்டு மீன்பிடியின் தற்போதைய நிலையைக் கண்டறிதல், உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளப் படுத்துதல், உள்நாட்டு மீன்பிடியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்மொழிதல், ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலைத் தரவுகளாக கள அவதானிப்பு, நேர்காணல், வினாக்கொத்து போன்ற முறைகளினூடாகத் திரட்டப்பட்ட தகவல்களும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இத்துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் திணைக்களங்களில் உள்ள அறிக்கைகள், மீனவ சங்க அறிக்கைகள், மீன்பிடி தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள், பத்திரிகை, இணையத்தளங்கள் என்பன மூலம் பெறப்பட்ட தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட முடிவுகளானவை விபரணப் பகுப்பாய்வு மூலமாக விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வினூடாக உள்நாட்டு மீன்பிடியின் தற்போதைய நிலையை அறிய முடிந்ததுடன், மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகளும் கண்டறியப்பட்டன. ஆய்வு முடிவாக ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் பெரும்பாலான மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடியையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பினும் அதனை விருத்தி செய்வதற்கான தொழில் நுட்பவியல் மாற்றங்களை அறிந்திருப்பது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இதன் காரணமாக எதிர்பார்த்த அளவு உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடியாதமையினால் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி குன்றி காணப்படுகின்றமையானது கண்டறியப் பட்டது. இதனைக் கருத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இப்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு சர்வதேச அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சிறந்த தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதனூடாகவும், நவீன மீன்பிடி முறைகளை விருத்தி செய்வதனூடாகவும், மானிய உதவிகளில் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் கடன் திட்டங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமாகவும், இக்குளங்களைத் தவிர மாவட்டத்தில் காணப்படும் ஏனைய பாரிய குளங்களையும் மீன்பிடிக்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விவசாயம் மற்றும் மீன்பிடித் திணைக்களங்களும் ஒன்றிணைந்து மேற்கொள்வதனூடாகவும் மீனவர்களது வாழ்வாதாரத் தொழிலை முன்னேற்ற முடியும் என இவ்வாய்வானது பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள் :** உள்நாட்டு மீன்பிடி, மீன்வளர்ப்பு, வாழ்வாதாரம், மீனவ சமுதாயம், குளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் : நுவரெலியா மாவட்டம், வடக்கு மடக்கும்புர (468k) கிராம சேவகர் பிரிவினை அடிப்படையாக கொண்ட ஆய்வு

**சுகிந்தன்.சு., உதயராசா.சு**

*புவியியற்றுறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

suginthansugi370@gmail.com

இலங்கையில் இன்று பல குடும்பங்கள் முறையான வீட்டு வசதியின்மையினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களிலேயே வசிக் கின்றனர். இலங்கையில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல செயற்பாடுகள் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று வீட்டுத்திட்டம் வழங்குவதாகும். கிராம அபிவிருத்தியில் வீட்டுத்திட்டம் பிரதான செல்வாக்கினை கொண்டுள்ளது. மலையகப் பகுதிகளில் பெரும்பாலான மக்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட லயன் வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். இவ்வீடுகள் மிகவும் பழைமை வாய்ந்தவை ஆகும். பல இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய வசிப்பிட தேவையை நிறைவேற்றிக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். வசிப்பிடத் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக மலையகப்பகுதிகளில் பல இடங்களில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்த ஆய்வின் நோக்கங்களாக வீட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உட் கட்டமைப்பு வசதிகளை அடையாளப்படுத்தல் மற்றும் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டவர் களுக்கான வாழ்வாதாரத்தை இனங்காணல் போன்றவை காணப்படுகின்றன. ஆய்வு பிரதேசமான மத்திய மாகாண நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வடக்கு மடக்கும்புர கிராமசேவகர் பிரிவில் உள்ள மக்களிடம் நோக்க மாதிரி எடுப்பு அடிப்படையில் வீட்டுத்திட்டம் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்விற்காக முதலாம்நிலை தரவுகள் கள அவதானம், நேர்காணல், கலந்துரையாடல், கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து என்பன மூலம் சேகரிக்கப் பட்டன. பிரதேச செயலகத்தின் அறிக்கை, கிராம சேவகர் அறிக்கை என்பவற்றின் மூலமாக இரண்டாம்நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறைமைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் மக்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக குடிநீர் வசதி போதியளவு இல்லாமை, வடிகாலமைப்பு சீராக இன்மை, மலசலகூட வசதிகள் இன்மை, வீட்டின் அறைகள் போதாமை, மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்காமை, காலநிலை மாற்றக் காலங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் வருகின்றமை, வீட்டில் காணப்படுகின்ற அறைகளுக்கான கதவு இன்மை, பொருத்தமான இடத்தில் வீடு அமையப் பெறாமை, வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான வசதிகள் இன்மை, போன்ற பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறாக அடையாளப் படுத்தப்பட்ட பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக மின்சாரம் இல்லாதவர்களுக்கு மானிய அடிப்படையில் அல்லது குறைந்த செலவில் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், குடிநீர் தேவைகளை நிவர்த்தி செய்ய மேலதிக பொது நீர்த்தாங்கிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொடுத்தல், மழைக்காலங்களில் நீர் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகாலமைப்புகளை சீர்ப்படுத்தல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். வீட்டுத்திட்டத்திற்கு பொறுப்பான அமைச்சர்களும் நிறுவனங்களும் தொடர்ந்து வீட்டுத்திட்டத்தினை கண்காணித்தல் வேண்டும். மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அதற்கான தீர்வினை அரச நிறுவனங்கள் நேரடியாக மேற்கொள்கின்றபோது வீட்டுத்திட்டம் வெற்றியளிக்கக்கூடிய ஒன்றாக காணப்படும்.

**திறவுச்சொற்கள் :** வீட்டுத்திட்டம், கிராம அபிவிருத்தி, கிராமசேவகர் பிரிவு, நுவரெலியா மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2011-2023):புவியியல் தகவல் ஒழுங்கினை அடிப்படையாக கொண்டது.

**வினோதினி,.க., உதயராசா, சு.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kkvino1997@gmail.com

ஒரு நாட்டினது அனைத்து செயற்பாடுகளும் நிலத்தின் தன்மையிலும் பயன்பாட்டிலும் தங்கியுள்ளன. அந்தவகையில் நிலப்பயன்பாடு என்பது நிலத்தில் மனித நடவடிக்கை எவ்வாறு காணப்படுகிறது என்பதுடன் மனிதன் எவ்வாறு அதனைப் பயன்படுத்துகின்றான் என்பதாகும். நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பது ஆகக்குறைந்தது இரண்டு வேறுபட்ட காலப்பகுதிகளில் புவிமேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலப்பயன்பாடுகளின் வேறுபாடுகளை அடையாளம் செய்தலை குறிக்கிறது. இலங்கையின் வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வவுனியா வடக்கிலும் மீள்குடியேற்றத்தை தொடர்ந்து அபிவிருத்திப்பணிகள் மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணத்தினால் நிலப்பயன்பாட்டுமாற்றம் நிகழ்கிறது. இலங்கையின் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசெயலக பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அடையாளப்படுத்தி மதிப்பிடுதல் அவசியமாக உள்ளது. அந்த வகையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டினை படமாக்குவதுடன் நிலப் பயன்பாட்டு வகைப்பாட்டினை அடையாளம் காணல்இ நிலப்பயன்பாட்டு மாற்றங்களை மதிப்பிடுதல், இரண்டு காலப்பகுதிகளுக்கிடையேயான நிலப்பயன்பாட்டு வகைகளினது மாற்றங்களினை அவதானித்தல் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்திய காரணிகளைக் கண்டறிதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த நிலப்பயன்பாட்டு மாற்றப்பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக புவியியல் தகவல் ஒழுங்கு நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கான முதனிலைத் தரவுகள் கள அவதானம் மற்றும் நேர்காணல் என்பவற்றின் மூலம் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக உயர் தெளிதிறன் கொண்ட செய்மதிப்படம், நிலஅளவைத்திணைக்களத்தின் நிலப்பயன்பாட்டுபடம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலக புள்ளிவிபரத்தரவுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் புவியியல் தகவல் ஒழுங்கு நுட்பமுறையினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முடிவுகளாக, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவினது **2011, 2017** மற்றும் **2023** ஆம் ஆண்டுகளின் நிலப்பயன்பாட்டுப் படங்கள் உருவாக்கப்பட்டு மூன்று காலத்திற்கும் உரிய நிலப்பயன்பாட்டு படங்கள் ஒப்பீடு செய்யப்பட்டு நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் கண்டறியப்பட்டன. குறித்தவொரு நிலப்பயன் பாடு இன்னொரு நிலப்பயன்பாடாக மாறியுள்ளது என்பதை கண்டறிய நிலப்பயன்பாட்டு மாற்ற மதிப்பீட்டு அட்டவணை பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டு மாற்ற அட்டவணை மூலம் குறித்தவொரு நிலப்பயன்பாடு எந்தளவு மாற்றமடைந்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு அதிகளவிலான மாற்றங்கள் காடுகள், வீட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம், விவசாயநிலம், நீர்நிலைகள், கட்டடங்கள் போன்ற நிலப்பயன்பாட்டு வகை சார்ந்து ஏற்பட்டுள்ளன. சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக வீட்டுத்தோட்டக் குடியிருப்புக்கள், விவசாயநிலம் அதிகரித்துள்ளதுடன் காடுகள் மற்றும் நீர்நிலைகள் குறைவடைந்துள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேசசெயலக பிரிவில் 12 வருட காலப்பகுதி களுக்கு இடையில் காடுகளின் அளவே அதிகளவு குறைவடைந்துள்ளது. இந்த நிலப்பயன் பாட்டு மாற்றமானது சனத்தொகை அதிகரிப்பு, விவசாயம், குடியேற்றத்திட்டம் போன்றவற்றால் ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதான பிரச்சனைகளுக்கு தீர்வுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் துண்டாடப்படுவதனை குறைத்துக் கொள்ளல், குளங்களை ஆக்கிரமித்து வீதிவலைப் பின்னல்கள் மேற்கொள்வதனை தவிர்த்துக் கொள்ளல், திட்டமிட்ட வகையில் குடியேற்றங் களை அமைத்துக் கொடுத்தல் என்பவையே அவையாகும். எனவே இந்த ஆய்வின் மூலம் பெறப்படும் நிலப்பயன்பாடு மற்றும் நிலப்போர்வை மாற்றம் தொடர்பான தகவல்கள் இடம்சார் ரீதியில் தற்போதைய நிலைமைகளை விளங்கிக்கொள்ளவும் நிலப்பயன்பாட்டுப் பாங்குகள் தொடர்பாக அறிந்து கொள்ளவும் அதன் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் திட்டங்களை தீர்மானமெடுத்து அமுல்படுத்தவும் வழிகாட்டியாக அமையும். அத்துடன் நிலப்பயன்பாட்டு திட்டமிடல் நிலப்பயன்பாட்டு பொருத்த மதிப்பீடு போன்ற செயற்பாட்டினை மேற்கொள்ளவும் இந்த ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

**திறவுச்சொற்கள்:** நிலப்பயன்பாடு, நிலப்பயன்பாட்டுமாற்றம், நிலமூடுகை, பிரதேசசெயலாளர்பிரிவு, புவியியல் தகவல் ஒழுங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வள முகாமைத்துவத்திற்கான சமூக மட்ட ஆளுகை: பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஓர் ஆய்வு

**பகீரதி, ஆ., சுதாகர், க.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
bakeerathibakee@gmail.com

இயற்கை வளம் என்பது ஒரு நாட்டினுடைய சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சியில் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. இன்று உலகில் இயற்கை வளங்கள் துரிதமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முக்கிய காரணமாக இயற்கை வள முகாமைத்துவத்துவ ஆளுகையின் பலவீனங்கள் அமைகின்றன. இயற்கை வளங்களில் நல்ல ஆளுகை மற்றும் மோசமான ஆளுகை என்பன காணப்படுகின்றன. இலங்கையில் அதிகமாக மோசமான ஆளுகை காணப்படுகின்றது. கிளிநொச்சியில் 30 வருடகால யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகள் மோசமான ஆளுகையில் தாக்கம் செலுத்துகின்றன. பூநகரி பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட இயற்கை வள முகாமைத்துவத்தில் சமூக அமைப்புக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பன ஒன்று சேர்ந்த அமைப்புக்களின் மேலாண்மை சமூக மட்டத்தில் முக்கியமாகக் காணப்படுகின்றது. பூநகரி பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களையும், சட்டங்களையும், விதிகளையும் பட்டியல்படுத்துதல், இப்பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள், அவற்றின் பரம்பல், பயன்பாடு மற்றும் ஆளுகையை மதிப்பிடுதல், நல்ல ஆளுகை பண்புடன் இப்பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள ஆளுகை பண்புகளை மதிப்பிடுதல், மற்றும் இயற்கை வளங்களை பேண்தகு முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான சமூக மட்ட ஆளுகையை உருவாக்குதல் போன்றன ஆய்வின் நோக்கங்களாக காணப்படுகின்றன. ஆய்வுக்கான முதலாம் நிலை தரவுசேகரிப்பு நேர்காணல் மூலம் இயற்கை வளங்களுடன் தொடர்புபட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டது. இலக்கு குழு கலந்துரையாடல் ஆய்வு பிரதேசத்தில் மொத்தமாக 40 நபர்களை கொண்டு கௌதாரிமுனை, மண்ணித்தலை, முட்கொம்பன், கிராஞ்சி, வேரவில் மற்றும் ஜெயபுரம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகளாக நிலப் பயன்பாட்டு படம், குளங்கள் தொடர்பான தரவுகள், மண்ணகழ்வு தொடர்பான தரவுகள், மரம் வெட்டுதல் தொடர்பான சுற்றறிக்கைகள், மணலகழ்வு தொடர்பான சுற்றறிக்கைகள், சட்டங்கள், போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பயன்பாட்டு படம் (2020) GIS இல் பகுப்பாய்வு செய்யப்பட்டு இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை வளங்களின் இடம் சார் பரம்பல் காட்டப்பட்டுள்ளது. இயற்கை வளங்களுக்கான நல்ல ஆளுகைப் பண்புகளுடன் ஆய்வு பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நடைமுறையில் உள்ள ஆளுகை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இலக்குக் குழு கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் என்பன கருப்பொருள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பூநகரி பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்தில் இலஞ்சம் அதிகம் காணப்படுவதோடு சட்ட ஆட்சியில் பலவீனம் காணப்படுகின்றது. அரசியல் தலையீடுகள் அதிகம் காணப்படுவதோடு, மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கின்ற தீர்மானம் எடுக்கப்படுகின்றது. பொறுப்புக்குகூறலில் பலவீனம், வெளிப்படைத் தன்மையில் பலவீனம், பதிலளித்தலில் பலவீனம் போன்ற ஆளுகை பண்புகள் ஆய்வு பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகளும் பரிந்துரைகளுமாக இயற்கை வளங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படுதல், சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தல் போன்றன முன் வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள் :** ஆளுகை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, பங்குபற்றுதல், பதிலளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீடமைப்பு செயற்திட்டம்: யாழ் மாவட்டத்தில் மணியந்தோட்ட கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

ரனுசியா, ஜெ., சிறீகாந்தன்,ச.
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
jeevaranusiya96@gmail.com

*மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக வீடு அமைகின்றது. உலகின் பெரும்பாலான சமூகங்கள் அனுபவிக்கும் சிக்கலான பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தினால் பல கொள்கைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இலங்கையில் சுமார் **22** வீதமான மக்கள் வீடமைப்பு வசதிகள் இன்மையால் இன்னல்களை அனுபவித்து வருவதாக கூறிய அமைச்சர் சயித் பிரேமதாஸ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நாடளாவிய ரீதியில் **2015**ஆம் ஆண்டு தொடக்கம் **2019** வரையான காலப்பகுதி வரை காணியற்றவர்களுக்கு இலவசமாக காணிகள் வழங்கியதுடன், வீடற்றவர்களுக்கு நிரந்தர வதிவிட வசதிகளை ஏற்படுத்தும் கொள்கையின் நிமித்தம் "மாதிரி கிராமம்" என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மானிய நிதி உதவியுடன் வீடற்றவர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தினார். இத்திட்டமானது "நாட்டில் ஒரு குடிசை வீடுகளும் இருக்கக்கூடாது" எனும் தொனிப் பொருளுடன் மக்களின் செழிப்பான எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்குடன் கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்தலின் போது சயித் தோல்வியுற்றதனால் இக்கொள்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்களின் அன்றாட வாழ்வில் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியாக மாற்றங்களினையும் இது ஏற்படுத்தியுள்ளது. யாழ் மாவட்டத்தில் நல்லூர் பிரதேச பிரிவுட்குட்பட்ட மணியந்தோட்ட கிராமத்தினை ஆய்வு புலமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் முக்கிய முடிவுகளாக வீட்டினை தங்களது சொந்த செலவில் முழுமையாக கட்டியவர்களில் **15.3%**மானோரும், தமது வாழ்வாதாரம் சார்ந்து **84.7%** முழுமையாக கட்டாமல் பல சவால்களினை தமது அன்றாட வாழ்வில் அனுபவிப்பவர்களாக காணப்படுகின்றனர். இவ்வீட்டுத்திட்டம் முழுமையடையாத காரணத்தினால் ஆய்வுட்குட்பட்ட மக்களில் அதிகமானோர் **(57.6%)** வீட்டுத்திட்டம் அனுமதிக்கப்பட்ட காணியிலுள்ள தற்காலிக வீடுகளில் வாழ்வபர்களாகவும், வீட்டின் இடவசதிகளின்மையினாலும் வீடு கட்டி குறையில் உள்ளமையினாலும் வீடுகளில் தங்க முடியாது வீட்டுத்திட்ட காணியை விட்டு தள்ளிவாழ்பவர்களாக (6.8% மானோர்) வாழ்கின்றனர். வீட்டுத்திட்டத்தில் அனுமதிக் கப்பட்ட வீட்டில் வாழ்பவர்களாக 35.6% மானோர் காணப்படுகின்றனர். அதிகமானோர் முழுமையாக வீட்டை கட்டி முடிக்காது தற்காலிகமாக இருப்பிட வசதிக்காக வாழ்பவர் களாக காணப்படுகின்றனர். சமூக முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்படுகின்ற சமூகக் கொள்கையானது முன்னோக்கியதாகவும், வெளிப்புற பார்வையுடையதாகவும், புத்தாக்கத் திறன் மற்றும் நெகிழ்ச்சித்தன்மையுடையதாகவும், சான்றாதாரங்கள் அடிப்படையிலும் வீட்டுத்திட்டத்தை பெற்று கொள்பவர்கள் மட்டில் பின்னூட்டல் பெறுவதுடன் ஒவ்வொரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத்திட்ட செயன்முறைகளினூடாக எதிர்கொண்ட சவால்கள் என்பவற்றையும் கண்டறிவதுடன் அதற்கு நல்ல வழியில் தொடர்பாடல்களை ஏற்படுத்தி மதிப்பீடு செய்தால் அதனை தொடர்ந்து மீள்நோக்கி பார்த்தல் என்பவை வீட்டுத்திட்டக் கொள்ளை உருவாக்கத்தின் நல்ல செயன்முறைகளாகும். இவற்றில் ஏற்படுகின்ற தவறுகள் மக்களின் நன்மைகளுக்காக கொண்டுவரப்படுகின்ற வீட்டுத்திட்ட கொள்ளைகள் இடைநிறுத்தப்படுகின்ற வழிமுறைகளுக்குட்படுகின்றது. அவை பிற்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வினை பாதிக்கும் செயன்முறைகளாக அமைகின்றன. இவற்றினை இவ்வாய்வானது நன்கு ஆராய்கின்றது.

**திறவு சொற்கள்:** தேசிய வீடமைப்புத்திட்டம், மாதிரிக் கிராமம், வீட்டுவசதி பற்றாக்குறை, குறைந்த வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கல்விசார் மேம்பாட்டின் வாய்ப்புகளும் சவால்களும்: சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நவாலிக் கிராமப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**நிஷானி, ஜெ., பாஸ்கரன், நி.**
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
christalinnishani@gmail.com

*கல்வியானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மேல்நோக்கிய அசைவியக்கத்திற்குத் துணை நிற்கிறது. கல்வியின் ஊடாக கிராமிய மேம்பாட்டினைச் சாத்தியமாக்குவதில் கிராமியப் பாடசாலைகளின் பங்களிப்பு இன்றியமையாததாகும். கிராமப்புறத்தில் கல்விசார் மேம்பாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் அதுசார்ந்து எதிர்நோக்கப்படும் சவால்கள் என்பவற்றை இனங்காணுதலும் அச்சவால்களை வெற்றிகொள் வதற்கான பரிந்துரைகளை முன்மொழிதலை, யாழ்ப்பாணத்தின் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட நவாலிக்கிராமப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான மாதிரிகள் குடும்ப (பெற்றோரும்) மற்றும் சமுதாயமட்டம் (பாடசாலை ஆசிரியர்கள்) என்ற அடிப்படையில் அடுக்கமைந்த மாதிரி எடுப்பு* (Stratified Random Sample) *முறைமையின் அடிப்படையில் 61 மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. கலப்பு முறையில் அமைந்துள்ள இந்த ஆய்வில், முதலாம் நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளான நேரடி அவதானம், வினாக்கொத்து, நேர்காணல் என்பவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக தரவுகள், சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட மற்றும் வலயக்கல்வி அலுவலக அறிக்கை முன்னைய ஆய்வறிக்கைகள், புள்ளிவிபரவியல் அறிக்கைகள், இணையவழித்தரவுகள், பத்திரிகை செய்திகள், சஞ்சிகைகள் (மாதாந்த வெளியீடுகள்), நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு, பெறப்பட்ட தரவுகள் கணியம்சார் மற்றும் பண்புசார் ஆய்வு வடிவங்கள் இணைந்த கலப்பு முறையின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின் படி, கல்வியின் நவீனமயமாக்கல், நகரமயமாக்கல், உலகமயமாக்கல் மற்றும் குடிப்பெயர்வு அனுபவங்களால் பாரம்பரிய தொழில்முறைகளின் நிறுவனமயப்படுத்தப்பட்ட தன்மை, புதிய தொழில் வாய்ப்புகளின் விருத்தி, குடும்ப, திருமண உறவுமுறை மற்றும் பெற்றோரின் வகிபங்கு நிலைமைகளின் மாற்றப்போக்குகள் கிராமப்புற கல்வியில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், நகரத்துவ மனநிலைகளால் தூண்டப்பட்ட கிராமத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை தமது வீடுகளுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில்* (Nearest Schools) *இணைத்துக் கொள்வதனை விடுத்து புகழ்பெற்ற குறியீட்டு மாதிரிப் பாடசாலை என்ற அந்தஸ்தின் அடிப்படையில் நகர்ப்புறப் பாடசாலைகளில் இணைத்து விடுகின்ற போக்கினைக் காணமுடிகிறது. இதனால் கிராமப்புற மாணவர்களின் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிய அசைவு காரணமாக கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வரும் நிலையில் அப்பாடசாலைகள் மூடப்படும் ஆபத்துநிலை காணப்படுவதுடன், மாணவர்கள் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளை இணைத்து "குழுப் பாடசாலைகளாக்கும்* (Group-Schools)' *முயற்சிகளும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம பாடசாலைகளில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான வசதி, ஒன்று கூடுவதற்கான இடம், போக்குவரத்து வசதி, விஞ்ஞான ஆய்வுகூட வசதி, ஆசிரியர் ஓய்விடம், மற்றும் காற்றோட்டமான வகுப்பறைச் சூழல் போன்ற பௌதீக வளங்கள் குறைபாடான நிலையில் காணப்படுகின்றமை ஆய்வு முடிவின் வழியாக அறிய முடிகின்றது. இங்குள்ள பெற்றோர் பிள்ளைகளின் கல்வி மீதான ஈடுபாடு குறைந்த நிலையைக் கொண்டுள்ளனர். குறிப்பாக குடும்ப வருமானத்தில் பிள்ளைகளினுடைய கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதில் **36.36%** அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் போதிய அடிப்படை வசதிகளின்மை, கிராமிய வறுமை, குடும்ப ஒழுங்கமைவின்மை, இளைஞர்களிடையே அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் தொழிநுட்பப் பாவனை என்பன கிராமப்பாடசாலைகளின் கல்விசார் மேம்பாட்டுக்குச் சவால்களாகக் காணப்படுவதுடன் கிராமியக் கல்விசார் மேம்பாட்டுக்கான சவால்களாகவும் உள்ளன.

திறவுச்சொற்கள்: கிராமப்புறப்பாடசாலை, பெற்றோரியம், கற்றல்சார் வளங்கள், நிலைபேறான கிராமியக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான பணிகளில் பெண்கள் : கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் DASH நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றும் பெண் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**மலரினி, மு., பாஸ்கரன், நி**
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
malarinym@gmail.com

ஆபத்தான பணிகளில் ஒன்றான கண்ணிவெடி அகற்றலானது பெண்களின் "தொழில்நிலைகளில்" ஒன்றாக காணப்படுகிறது. இவ்வாய்வானது, கண்ணிவெடி அகற்றல் பெண்களின் "தொழில்-நிலைகளுள்" ஒன்றாக இருப்பதற்கான காரணங்கள், அதில் பெண்களின் வகிபங்குகள் மற்றும் அதுசார்ந்து அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் இனங்காணுதலும் அவற்றிற்கான தீர்வுகளை முன்மொழிதலும் பிரதான நோக்கமாகக் கொண்டதாகும். இவ் ஆய்வானது, கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் DASH நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றும் பெண்தொழிலாளர்களில் இருந்து நோக்கம் கருதிய மாதிரி அடிப்படையில் 50 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு, முதலாம்நிலை தரவு சேகரிப்புக் கருவிகளான வினாக்கொத்து, விடய ஆய்வு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், குவிமையக் குழுக்கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் கணியம்சார் மற்றும் பண்புசார் ஆய்வு வடிவங்கள் இணைந்த கலப்பு முறையில் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக கணியம்சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியை பயன்படுத்தி (SPSS) விபரணப்புள்ளிப் பகுப்பாய்வுக்கும் உட்பட்டு அட்டவணை, வரைபுகள், மூலம் அறிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளின் படி, ஆபத்தான பணியாகக் காணப்படும் கண்ணிவெடி அகற்றலில் பெண்களின் பால்நிலைசார் வகிபங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளதுடன், குடும்ப வறுமை, பெண்தலைமைத்துவம் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் பெண்கள் இப்பணியில் ஈடுபட்டு வருவதால், அவர்களின் தொழில்நிலைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. கண்ணிவெடி அகற்றல் தொழிலில் ஈடுபடும் பெண்களில் 48% வீதமானவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் குறைவான நேரத்தைச் செலவிடுவதாகவும், 36% வீதமானவர்கள் குடும்பத்தில் இரட்டைச் சுமையை கொண்டவர்களாகவும், 12% வீதமான பெண்கள், தமது குடும்ப அங்கத்தவர்களை பிரிந்து இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 62% வீதமான பெண்கள் ஆபத்தான இப்பணியில் ஈடுபடுவதால் சமூகப்பிரச்சினையை எதிர்கொள்பவர்களாகவும், 60% வீதமான பெண்கள் நிறுவனம்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இவர்களில் உணவுப்பழக்கவழங்கங்கள், ஆடை மற்றும் பாதுகாப்பு, உடல் ஆரோக்கியம் குறித்த பிரச் சினைகள் மற்றும் தூக்கமின்மை, இடைவேளை குறைவான நிலையில் ஓய்வற்றநிலையில் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆபத்தான பணிகளுள் ஒன்றான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்களை வெற்றி கொள்வதற்கான தனியாள், குடும்ப, சமுதாய மற்றும் நிறுவன மட்டத்திலான பரிந்துரை களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது தனிநபருக்கான பரிந்துரையாக தனியாள் நடத்தை மற்றும் உளப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தல், தொழிலில் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை உரிய முறையில் வெளிப்படுத்தல், தொழில்நுட்ப அறிவினைக் கொண்டிருத்தல், சேமிப்பு பழக்கங்களைக் கொண்டிருத்தல் போன்றனவும் பொதுமக்களுக்கான பரிந்துரையாக பெண்கள் தொடர்பில் காணப்படும் ஒரேவார்ப்பான எண்ணங்களைத் தடுத்தல், பெண்கள் செய்கின்ற சமூக நலன்சார்ந்த தொழில்களுக்கு அவர்களை ஊக்குவித்தல் போன்றனவும் அரசுக்கான பரிந்துரைகளாக குறித்த நிறுவனத்தில் பணிபுரியும் பெண்களுக்கு சில சலுகைகளை வழங்கல், குறித்த பெண்களை வலுவூட்டும் வகையில் சில உதவித்திட்டங்கள்,கடன்களை வழங்குதல் மற்றும் நிறுவனத்திற்கான பரிந்துரைகளாக பெண்களுக்கு முன்னுரிமை அளித்தல், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு அதனை சரிசெய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**திறவுச்சொற்கள் :** பால்நிலை, ஆபத்தான பணி, கண்ணிவெடி அகற்றல், வகிபங்கேற்றல், வருமானமீட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநடை வளர்ப்புசார் வாய்ப்புகளும் சவால்களும்: கரைத்துறைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட குமுழமுனைக் கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**சிவாஹரி, சி., பாஸ்கரன், நி.**
சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sivaharysivalingam@gmail.com

கால்நடைவளர்ப்பு தொடர்பில் நிலவும் வாய்ப்புக்களும் சவால்களும் தொடர்பான இவ்ஆய்வானது கரைத்துறைப்பற்று பிரதேசசெயலகத்திற்குட்பட்ட குமுழமுனைக் கிராமத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். இந்த ஆய்வானது கால்நடை வளர்ப்புக்கான வாய்ப்புக்கள் மற்றும் அதன் சவால்களினை மதிப்பிடுவதனை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது விபரண முறையிலான ஆய்வாகும். இங்கு பண்புசார், அளவுசார் ஆய்வு முறையியல் நுட்பங்கள் இணைந்த கலப்புமுறை பயன்படுத்தப்பட்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக அளவுசார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியினைப் பயன்படுத்தி யும் பண்புசார் தரவுகளின் உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டது. அட்டவணை, வரைபுகள் மூலமாக அறிக்கை செய்யப்பட்டுள்ளன. இங்கு முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து முறை, விடயஆய்வு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியினூக தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாதிரி நுட்பமானது நோக்கம் கருதிய மாதிரி நுட்பமுறை மூலமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட குமுழமுனைக் கிராம கால்நடை வளர்ப்போரினை அடிப்படையாகக் கொண்ட மாதிரி எடுப்பாக அமைகின்றது. இங்கு 50பேர் நோக்கம் கருதிய மாதிரி எடுப்பினைப் பயன்படுத்தி ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர். விடயஆய்வும், தகவல் வழங்குனருடனான நேர்காணலும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன்படி நுகர்வோர் கோட்பாடு, சூழலியல் கோட்பாடு, சமூக வலைப்பின்னல் கோட்பாடு சமூக வலுவூட்டல் கோட்பாடு என்பன மூலமும் விளக்கியிருப்பதானது ஆய்வுடன் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. எனவே இவ்ஆய்வுடன் இக்கோட் பாடுகளும் ஒத்ததன்மையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆய்வு முடிபுகளின் படி கால்நடைவளர்ப்பில் 82% ஆண்களாகவும் 18% பெண்களாகவும் ஈடுபடுகின்றனர். தொழில் நிலையினை பார்க்கும்போது கால்நடைவளர்ப்பினை பிரதானமாக 82% ஆனவர்கள் மேற் கொள்வதுடன் 18% ஆனவர்கள் விவசாயத்துடன் இணைந்து உபதொழிலாக மேற்கொள் கின்றனர். கால்நடைவளர்ப்பிலே அதிகமான அளவில் 80% ஆக மாடுகளும், 10% அளவில் கோழிகளும், 10% அளவில் ஆடுகளும் வளர்க்கப்படுகின்றது. இங்கு அதிகமான அளவில் பொருளாதார சவாலானது பிரதானமாக உள்ளது. எனவே கால்நடை வளர்ப்போரின் சவால் களைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் அதிகப்படியான பங்குபற்றல் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** கால்நடைவளர்ப்பு, கால்நடைசார் உற்பத்திகள், கால்நடை மருத்துவம், பணவீக்கம், விலையேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Health and Wellbeing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டிசம் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கான மன அழுத்தம் – யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**அபிராமி, சு., மேனகா.சி**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
abiramy2017@gmail.com

யாழ் மாவட்டத்தில் ஆட்டிசத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளினுடைய பெற்றோர்கள் பரவலாக பல்வேறு பிரதேசங்களிலும் வசித்து வருகின்றார்கள். இவ்வாறான பெற்றோர்களிடையே பிள்ளைகளின் தனிப்பட்ட நிலைமைகள் மற்றும் சமூக ரீதியிலான அழுத்த நிலைமைகள் போன்றன மன அழுத்தத்தினை தூண்டுபவையாகவும் அதிகரிப்பவையாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு இருக்கையில் பெற்றோர்கள் எதிர்நோக்குகின்ற மன அழுத்தத்தினை அளவிடல் மற்றும் அதற்குரிய காரணிகளைக் கண்டறிதலினை பிரதான நோக்காகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முதல்நிலைத் தரவுகள் பனிப்பந்து மாதிரியெடுப்பு முறை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் 79 மாதிரிகளிடம் இருந்து வினாக்கொத்து மற்றும் நேர்காணல் முறைகளின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டது. இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தரவுப்பகுப்பாய்வானது SPSS மென்பொருளைப் பயன்படுத்தி T Test, ANOVA, Correlation போன்றன மூலம் பெறப்பட்ட முடிவுகளானது விபரிக்கப்பட்டன. பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஆட்டிசம் பிள்ளைகளைக் கொண்ட ஆண்பிள்ளைகளின் பெற்றோர்களை விட பெண் பிள்ளைகளின் பெற்றோர் அதிகம் மன அழுத்திற்கு உள்ளாகுவதாகவும், பெற்றோர்களில் அதிகளவிலானோர் மன அழுத்தத்திற்கு உள்ளாகுவதாகவும், பெற்றோர்களின் பால் வேறுபாட்டிற்கும் மன அழுத்த அளவிற்கும் தொடர்புகள் காணப்படவில்லை என்பதும், ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்கள் பெற்றோருக்கான மனஅழுத்தத்தில் தாக்கம் செலுத்துகின்றது மற்றும் பிள்ளைகளின் சமூக நடத்தை, தொடர்பாடல், சமூக விருத்தி எதிர்காலம் மற்றும் கோபம், சுயதீங்கினை ஏற்படுத்தும் நடத்தை தொடர்பான விடயங்கள் போன்றன பெற்றோர்களிடத்தில் அதிகமாக மன அழுத்தத்தினை ஏற்படுத்துவதாகவும் பெற்றோரின் தொழில் நிலைமை மற்றும் மனஅழுத்தத்திற்கிடையே தொடர்புகள் காணப்படவில்லை போன்றன முடிவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. குறித்த காரணங்களினால் பெற்றோர்களுக்கு ஏற்படும் அதீத மன அழுத்தத்தினை குறைப்பதற்கு தொடர்புடைய தரப்புக்களான பெற்றோர்களும் சமூகமும் விழிப்புணர்விற்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

**திறவுச் சொற்கள் :** ஆட்டிசம், ஆட்டிசம் பிள்ளைகளின் பெற்றோர், மன அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Forms of Gender-Based Violence and its Associated Factors among Same-Sex Relationship: A Study Based on Sri Lanka

**Sharmila, S., Menaka, S.**
Department of Philosopy (Psychology), University of Jaffna
sharmivani1@gmail.com

This study examines the forms of gender-based violence and its associated factors among same-sex relationships in Sri Lanka. This research seeks to investigate forms and factors of gender-based violence within same-sex relationships. The study employs a multifaceted approach, aiming to measure distinctions among personal factors and various violence forms. Additionally, it endeavors to shed light on the discernible impact of these forms of violence, contributing to a deeper understanding of this critical societal issue, using a sample of eighty-three individuals chosen using the snowball method. The study uses a self-made questionnaire with open-ended, likert scale and demographic questions. It also makes use of both qualitative and quantitative methods. Furthermore, interviews were carried out. The statistical analyses, which were made possible by SPSS version 21, included factor analysis, ANOVA, T-Test, regression and descriptive statistics. The results indicate varying impacts on gender-based violence within same-sex relationships: family impact stands at 23%, followed by stigma and discrimination at 22%, cognitive and societal impact at 19%, and psychological factors at 17%. age, gender, district, religion, employment status, marital status, length of relationship and educational attainment are some of the factors that contribute to this violence. The significant value of 0.0206 for the difference between gender-based violence and personal factors suggests a statistically noteworthy distinction. Furthermore, the impacts of family, society, stigma and discrimination, cognitive and psychological factors, all with a significant value of 0.000, underscore their substantial influence on gender-based violence within same-sex relationships. These findings contribute to a robust understanding of the interconnected factors at play in this context. Subsequent investigations will focus on different manifestations of gender-based violence within same-sex relationships.

**Keywords**: Same-sex relationship, Gender-based violence, Factors, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்குற்ற நடத்தையினை ஏற்படுத்தும் உளவியல் சார் காரணிகளும் அதனை சீர்த்திருத்தப் பள்ளியில் கையாளும் நுட்பங்களும்: பதுளை மாவட்டத்தில் இயங்கிவரும் தல்தென இளங்குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளியை அடிப்படையாகக் கொண்ட உளவியல் ஆய்வு

**வினோதர்ஷினி, உ., மேனகா, சி.**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
udayavino97@gmail.com

*இன்றைய சமூகத்தில் குற்றங்களானது பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் குறிப்பாக இளம் வயதினரால் மேற்கொள்ளப்படும் குற்றங்களானது உலக நாடுகளை பொறுத்தமட்டில் பாரிய சவாலாக காணப்படுகின்றது. குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தம் நிறைவடைந்து ஐக்கிய நாடுகள் சபை உருபெற்ற காலம் முதல் இளம் குற்றவாளிகள் தொடர்பில் அதிக கவனத்தை உலக நாடுகள் செலுத்தி வருகின்றது. அந்தவகையில் இலங்கையில். இளவயதினர்கள் கடந்த இரண்டு தசாப்த வருடங்களுடன் ஒப்பிடும்போது அதிக எண்ணிக்கையானோர் இவ்வருடம் உள்வாங்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் தல்தென சீர்திருத்தப்பள்ளியில் காணப்படும் 256 இளம் குற்றவாளிகள் இலங்கையில் 25 மாவட்டங்களை சார்ந்தவர்களாக இருப்பதோடு இனம், மதம், மொழி என வெவ்வேறுபட்ட ஆளுமை பண்பு நிலைகளைக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தல்தென சீர்திருத்தபள்ளியில் காணப்படும் இளங்குற்றவாளிகளிடையே குற்ற நடத்தையினை ஏற்படுத்தும் உளவியல் காரணி, அறிகை காரணி, உறவு காரணி மற்றும் நடத்தைக் காரணி என நான்கு காரணிகளையும் இவர்களை கையாளுவதற்கு தல்தென இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் பயன்படுத்தப்படும் உளவியல் மற்றும் நடத்தைசார் நுட்பங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் குறித்த சீர்திருத்தப் பள்ளியில் முழு குடித்தொகை மாதிரி எடுப்பு முறையை பயன்படுத்தி 256 இளங்குற்றவாளிகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளனர். மேலும் இதில் முதல்நிலை இரண்டாம்நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு ஆய்வின்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தரவுகள் மற்றும் தகவல்கள் பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்வு முறைக்கும், அளவு சார் தரவுகள் விவரண புள்ளி விவரவியல் ரீதியான முறையில் மென்பொதி (SPSS) முறையை பயன்படுத்தித் தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வாய்வானது இளங்குற்ற நடத்தையை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை சமூகத்திற்கு வழங்குவதோடு இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்காக சீர்த்திருத்தப்பள்ளிகளில் பயன்படுத்தப் படும் நுட்பங்களை மேம்படுத்தவும் இவ்வாய்வானது முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது டன் வருங்காலத்தில் இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வோருக்கு இலகுவாக அமையும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள் :** இளங்குற்றவாளிகள், சீர்த்திருத்த பாடசாலை, கையாளும் நுட்பங்கள், உளவியல் காரணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Covid-19 பின் பொருளாதார நெருக்கடியால் நெற்செய்கையாளர்கள் எதிர்கொண்ட மனச்சோர்வும் அதனுடன் தொடர்புடைய காரணிகளும் : வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு

**கிருபாகரன், ச., அபிராமி, இ.**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
skirupakaransky@gmail.com

உலகளாவிய ரீதியில் நெல் உற்பத்தியானது இன்றியமையாத ஒரு பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்றது. நெல் இன்று ஆசியாவின் பிரதான உணவாக மாறியுள்ளது. ஆனால், விவசாய நாடான இலங்கை தற்காலங்களில் ஏனைய நாடுகளில் இருந்து அரிசியின் இறக்குமதியை எதிர்பார்க்கும் துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் ஆய்வு பிரதேசமான வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி பிரதேசமானது ஒரு விவசாய பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் நெற்செய்கை யானது பல பௌதீக, சமூக, பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டி னாலேயே தீர்மானிக்கப்படுகிறது. அந்தவகையில் இவ்வாய்வானது, கோவிட்-19 பின் பொருளாதார நெருக்கடியால் நெற்செய்கையாளர்கள் எதிர்கொண்ட மனச்சோர்வும் அதனுடன் தொடர்புடைய காரணிகளை அடையாளம் காணுவதை நோக்கமாக கொண்டுள்ளது. ஆய்வானது வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 20 கிராமசேவையாளர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 18வயதிற்கு மேற்பட்டவர்கள் எளியஎழுமாற்று மாதிரி எடுப்பின் அடிப்படையில் 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டனர். விவசாயிகளிடமிருந்து தரவுகள், வினாக்கொத்து மற்றும் (PHQ-9) அளவுகோல் மூலமாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபரப் பகுப்பாய்வு (SPSS) மென்பொருளின் ஊடாக விபரண பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பரிசீலனை, இணைவுப்பரிசீலனை ஆகிய நுட்பங்களை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பிற்செலவுப் பரிசீலனை அடிப் படையில் நோக்குகின்ற போது உரவிலையேற்றமானது -43.9% இணைவு நிலையையும் -18.4%மான தாக்கத்தினையும் பொருண்மை பெறுமானம் 0.000 ஆனது பொருண்மை மட்டம் 0.05 விட குறைவாகவும் உரத்தின் விலையேற்றம் ஒரு அலகினால் மாற்றமடையும் போது நெற்செய்கையாளர்களின் மனச்சோர்வு 0.516 இனால் மாற்றமடையும் என்கின்ற முடிவையும், கிருமிநாசினி 22% இணைவுநிலையும் -3.9% தாக்கத்தினையும் பொருண்மை மட்டம் 0.05 விட பொருண்மை பெறுமானம் 0.28 ஆக உள்ளதால் தாக்கம் செலுத்துவ தாகவும் விலையேற்றம் ஒரு அழகினால் மாற்றமடையும் போது மனச்சோர்வானது 0.27 மாற்றமடையும் என்கின்ற முடிவையும், எரிபொருளானது 0.05 விட 0.343 ஆக காணப்படுவதால் பிற காரணிகளின் செல்வாக்கால் குறைந்த தாக்கத்தையும் இணைவையும் குடும்ப வருமானப் பொருண்மை மட்டம் 0.05 விட அதிகமாக 0.128 உள்ளதால் பிற காரணிகளின் செல்வாக்கினால் குறைந்த தாக்கத்தையும் இணைவையும் கடனானது 28.9% இணைவையும் 7.4% தாக்கத்தினையும் பொருண்மை மட்டம் 0.05 விட குறைவாக 0.04 ஆக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவதால் தாக்கம் செலுத்துவதாகவும் கடன் ஒரு அலகினால் மாற்றமடையும் போது மனச்சோர்வானது *0.675* என்ற முடிவையும், சந்தைப்படுத்தல் பிரச்சினை பொருண்மை மட்டம் *0.05*ஐ விட பொருண்மை பெறுமானம் *0.358* அதிகமாக காணப்படுவதால் பிறகாரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும், காலநிலைமாற்றம் *0.099* காணப்படுவதால் இது பொருண்மை மட்டத்தை விட அதிகமாக காணப்படுவதால் பிறகாரணிகளின் செல்வாக்கினாலும் தாக்கம் செலுத்துகிறது. இணைவுப்பரிசீலனை பார்க்கும் போது நெற்செய்கையில் ஈடுபடும் காலம் அடிப்படையில் *0.05* விட குறைவான பொருண்மை பெறுமானம் *0.275* ஆக காணப்படுவதாலும் வயது பொருண்மை மட்டம் *0.05* விட பொருண்மை பெறுமானம் *0.208*ஆகவும் கல்விநிலை *0.05* விட *-.417* குறைவாக காணப்படுவதாலும் வயது, கல்விநிலை நெற்செய்கையில் ஈடுபடும் காலம் என்பவை நெருங்கிய தொடர்பினையும் விலையேற்றம், கடன் என்பவை தாக்கத்தினையும் குடும்பவருமானம் சந்தைப்படுத்தல்,காலநிலை உள்ளிட்ட காரணிகள் பிறகாரணிகளின் செல்வாக்கினால் குறைந்த அளவிலான தாக்கத்தை செலுத்துவதாகவும் காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட காரணிகளால் குறித்த பிரதேச மக்கள் 43% வீதமானோர் குறைந்த அளவிலான மனச்சோர்விற்கு உள்ளாகியுள்ளார்கள் என்ற முடிவு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** கோவிட்-19, பொருளாதாரநெருக்கடி, விவசாயம், நெற்செய்கையாளர், மனச்சோர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்பட்ட வலிநோயாளிகளின் வலியேற்பு நிலையும் அதனுடன் இணைந்த காரணிகளும்

**கோவர்த்தனி, ச.. மேனகா, சி.**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kovarthanishanthirasekaram@gmail.com

"நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு நிலையும் அதனுடன் இணைந்த காரணிகளும்" என்ற தலைப்பில் இவ்வாய்வானது யாழ்ப்பாண பொது வைத்தியசாலையில் நாட்பட்ட வலிக்கான சிகிச்சைகளினை பெற்றுக் கொள்ளும் நான்கு சிகிச்சை பிரிவுகளி லிருந்து ஆய்வொழுக்க மட்டுப்பாடுகள் காரணமாக 25 மாதிரிகள் வீதம் 100 மாதிரிகள் நோக்க மாதிரியெடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு குறுக்குவெட்டு ஆய்வு வடிவமைப்பினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது இவ் ஆய்வின் நோக்கம் நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு நிலையினை அளவிடுவதுடன் அவ் வலியேற்பு நிலையுடன் தொடர்புடைய காரணிகளை ஆராய்வதுமாகும். ஆய்வு கருவிகளாக நாட் பட்ட வலி ஏற்றுக்கொள்ளும் வினாத்தாள் ( Chronic pain acceptance questionnaire) மற்றும் நோயாளி அடையாளப்படிவ வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வின் துணை அளவுகோள்களில், வலியினை உணரும் போது கூட இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கான பங்கேற்பாளர்களின் சராசரி, துணை மதிப்பெண் 4.0380 ஆகவும், வலியினை தவிர்ப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்பது பயனற்ற உத்தி என்று ஏற்றுக் கொள்வதுடன் தொடர்புடையதற்கான அளவுகோலுக்கான சராசரி துணை மதிப்பெண் 4.0380 ஆகவும் காணப்பட்டதுடன் வலியேற்பின் மொத்த அளவில் அவர்களின் சராசரி மதிப் பெண்ணானது, 4.2235 ஆக காணப்பட்டதுடன் இது இவ் நாட்பட்டவலி நோயாளிகளின் வலியேற்பு அளவானது மிதமான நிலையில் இருப்பதையும் கண்டறிந்தது, மேலும் வலி யேற்றுக் கொள்ளலுடன் தொடர்புடைய காரணிகளில் குடும்பப் பொறுப்புக்கள் ( $P <0.01$) திருமண நிலை($P <0.05$) கல்வி நிலை($P <0.05$) தொழில் நிலை($P <0.05$) வலியினை அனுபவிக் கும் காலகட்டம் ($P<0.01$) குடும்பத்தின் பொருளாதார நிலை ($P<0.01$) ஆன்மீக நம்பிக்கை ($P <0.01$) ஆகியவற்றின் அடிப்படையில் பங்கேற்பாளர்களின் மொத்த மதிப் பெண்கள் மற்றும் அவர்களின் துணை மதிப்பெண்களில் புள்ளிவிபர ரீதியான வேறுபாடுகள் மற்றும் தொடர்புகள் காணப்பட்டதுடன் குடும்ப ஆதரவு ($P >0.01$) அடிப்படையில் புள்ளி விவர ரீதியாக குறிப்பிடத்தக்க தொடர்புகள் எதுவும் கண்டறியப்படவில்லை. மேலும் நாட்பட்ட வலி நோயாளிகளின் வலியேற்பு அளவில் குடும்ப ஆதரவு எதிர்மறையான விளை வினைக் கொண்டிருந்தது. எனவே இவை தொடர்பில் நாட்பட்ட வலி நோயாளிகளின் குடும்பத் தினருக்கு விழிப்புணர்வினை அதிகரிக்க செயற்பாடுகளினை திட்டமிடுவதுடன் எதிர் காலத்தில் நாட்பட்ட வலி நோயாளிகளின் குடும்பத்தினரும் உளவளத்துணைக்கு உள் வாங்கப்பட வேண்டும். மேலும் இதே போன்ற ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட வேண்டும்.

**திறவுச் சொற்கள் :** நாட்பட்ட வலி, வலியேற்றுக்கொள்ளுதல், நாட்பட்ட வலியேற்றுக் கொள்ளுதலுடன் தொடர்புடைய காரணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்தியும், உளநன்னிலையும்

**ஜெபகீர்த்தனா, ம., கஜவிந்தன்.க.**
மெய்யியல்துறை (உளவியல்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mjebakeerthana@gmail.com

பிணச்சீரமைப்புத் தொழிலாளர்கள் சமூகத்திற்கு ஒரு அத்தியவசிய சேவையை வழங்குகின்றனர். அதாவது இறந்தவர்களின் உடலைப் பாதுகாத்து அடக்கம் தகனம் செய்யத் தயார் செய்கின்றார்கள். அதுமட்டுமன்றி இறந்த உடல் விரைவாக சிதைவதைத் தடுத்து அதனைப் பாதுகாக்க உதவுகின்றார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இத்தொழிலானது குறைந்த அளவிலான தொழிலாளர்களை உள்ளடக்கி காணப்படு கின்றது. இதற்குக் காரணம் இத்தொழில் பற்றிய தவறான புரிதல் ஆகும். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் குறித்த தொழிலை மேற்கொள்பவர்களின் வாழ்க்கைத் திருப்தி உளநன்னிலையுடன் எத்தகைய தொடர்பைக் கொண்டுள்ளதென்பதை கண்டறிவது மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்தி உயர்வானதாகக் காணப்படுகின்றதா?, பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் உளநன்னிலை உயர்வானதாகக் காணப்படுகின்றதா?, பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும் உளநன்னிலைக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றதா? போன்ற வினாக்களின் ஊடாக பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும் உளநன்னிலைக்கும் இடையில் எத்தகைய தொடர்புகள் காணப்படுகின்றது என்பதைக் கண்டறியும் நோக்கத்தின் அடிப்படையில் பிணச்சீரமைப்புத் தொழிலாளார்கள் பனிப்பந்து மாதிரியெடுப்புமுறை மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வுக்கு 60 மாதிரிகள் உள்ளடக்கப்பட்டனர். உள்ளடக்கப்படும் அனைவரிடமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு பண்புசார், அளவுசார் காரணிகள் ஆய்வு செய்யப்பட்டன. முதல்நிலைத் தரவுகளாக ஆய்வாளனால் பிணச்சீரமைப்புத் தொழிலாளரின் வாழ்க்கைத் திருப்தியை அளவிட "Satisfaction With Life Scale" பயன்படுத்தப்பட்டது. மேலும் பிணச்சீரமைப்புத் தொழிலாளர்களின் உளநன்னிலையை அளவிட ஆய்வாளானால். "Psychological Wellbeing Scale" பயன்படுத்தப்பட்டது. மாதிரிகளால் வழங்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் பகுப்பாய்வானது Statistical Package For The Social Science (SPSS-21) முறைமைகளினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அவை அட்டவணைகள், விளக்கப்படங்கள் மூலம் காட்சிப் படுத்தப்பட்டன. மேலும் Correlation, Anova, Standard Deviation, Mean, Descriptive Statistics, T-Test ஆகிய முறைகளின் வாயிலாக தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இத்தகைய தரவுப் பகுப்பாய்வு மற்றும் கருதுகோள் பகுப்பாய்வின் மூலம் திடமான முடிவுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் பிணச்சீரமைப்பு தொழிலாளர்கள் வாழ்க்கைத்திருப்தியை அதிகம் உணர்கிறார்கள் என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலை உயர்வாக காணப்படுகின்றது என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் பொருளாதார நிலை வாழ்கைத் திருப்தியில் அதிகளவு தொடர்புறுகின்றது என்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலையில் வருமானம் தாக்கம் செலுத்துகின்றது என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகள் பெறப்பட்டன. இதில் பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் வாழ்கைத் திருப்திக்கும் உளநன்னிலைக்கும் இடையில் தொடர்புகள் காணப்படவில்லையென்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களில் திருமணமானவர்களை விட திருமணமாகாதவர்கள் அதிக வாழ்க்கைத் திருப்தியுடன் காணப்படவில்லையென்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும் பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் வயதிற்கும் இடையில் தொடர்பு காணப்படவில்லையென்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலையில் வேலை அனுபவம் தாக்கம் செலுத்தவில்லை யென்றும், பிணச்சீரமைப்பு தொழிலாளர்களின் உளநன்னிலைக்கும் தொழிலாளர்களின் திருமணநிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படவில்லையென்றும் முடிவுகள் பெறப்பட்டன. ஆய்வு முடிவுகளாக, பிணச் சீரமைப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திருப்திக்கும், உளநன்னிலைக்கும் இடையில் தொடர்புகள் காணப்படவில்லையென முடிவுகள் பெறப்பட்டன. தொழில் ரீதியாக இலைமறை காயாக வேலை செய்தாலும் நல்ல வருமானம் வாழ்க்கைத் திருப்தியையும், உள நன்னிலையையும் தருவதாகக் குறிப்பிட்டனர். மாதாந்த சம்பளத்துடன் மேலதிக வேலை, சாப்பாட்டுச் செலவு, அதிக பிணங்களுக்கு மேலதிக சம்பளம் என்பன கவர்ச்சியாகக் கிடைக்கப்பெறுவதால் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு உள நன்னிலையையும் பேணிக்கொள்ள முடிவதாக முடிவுகள் கிடைக்கப்பெற்றன.

**திறவுச் சொற்கள் :** பிணச்சீரமைப்புத் தொழிலாளர்கள், வாழ்க்கைத் திருப்தி, உளநன்னிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற தாய்மார்களின் 06 – 16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள்

**நிலுக்சி, சு., கஜவிந்தன்,க.**
மெய்யியற்றுறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
subramaniyamnilukshi44@gmail.com

*இலங்கையில் வறுமை, குடும்பச் சுமை, பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பின்மை, தங்கி வாழ விரும்பாமை போன்ற பல காரணங்களினால் பெண்கள் தொழில் செய்ய தூண்டப்படுகின்றனர். அந்தவகையில் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேச சபைக்குட்பட்ட 254C கிராம சேவைக்குட்பட்ட பெட்டிகலை எனும் கிராமத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு பணிப்பெண்களாக சென்ற தாய்மார்களின் 60 குடும்பங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப் பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினா கொத்து பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல் ஆய்வு முறைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்களின் மூலம் பெறப்பட்ட கணியம் சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல; (SPSS) ஊடாக விவரணப் புள்ளியியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. தாய் குடும்பத்தை விட்டுப் புலம்பெயர்ந்து செல்வதனால் பிள்ளைகள் பல்வேறு வகையான உளவியல் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அதிலும் அதிகளவிலான பிள்ளைகள் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்ளுதல், தம்மை தாழ்வாக நினைத்தல், கல்வி ரீதியாக இடைவிலகல், கல்வி அடைவுகளில் பாதகமான நிலையினை அடைதல், மொழி மற்றும் புறந்தள்ளுகை போன்ற அவர்கள் அடையும் தாக்கங்கள் உளவியல் ரீதியாக பல அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** மத்திய கிழக்கு நாடுகள், தாய்மார்கள், உளவியல் பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக சிற்றூழியர்களிடையேயான மன அழுத்தம் – யாழ் பல்கலைக்கழகத்தை அடிப்படையாக கொண்டது

**சஜினிகா.ப , மேனகா .சி**

கட்டுரை ஆசிரியர், பொதுக்கலை மாணவி, "துணை ஆசிரியர், விரிவுரையாளர்"

உளவியல்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

sajinika1998@gmail.com

*இன்றைய காலகட்டத்தில் அதிகரித்த வாழ்க்கைச் செலவால் வீட்டில் உள்ள அனைவருமே உழைக்க வேண்டிய நிலைப்பாடு காணப்படுகின்றது. அது மட்டுமன்றி இலங்கையில் உள்ள வறுமை ,குடும்ப சுமை, வேலைவாய்ப்பின்மை ,தங்கி வாழ விருப்ப மின்மை, பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணங்களால் குடும்பத்தில் உள்ள எல்லோரும் தொழில் செய்ய தூண்டப்படுகின்றனர். அந்தவகையில் இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் வேலையில் ஈடுபடும் வேளையில் வேலைப்பளு, சக ஊழியர்களின் செயற்பாடு, உடல் சோர்வு, குடும்ப சுமை. அதிக நேரம், சக ஊழியர்களின் செயற்பாடு போன்றவற்றால் அதிக மான மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இதனை ஆராயும் பொருட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன அழுத்தம் பற்றி மில்லர் (1990) கூறுகையில் அதீத சுமை அல்லது குறைவான சுமை ஒரு சக்தி வாய்ந்த தகவல்களை கூறும் போது அதை கேட்கும் போதும் நாம் அதனை செய்து விடுவோமோ என்று எண்ணும்போதும் மன அழுத்தம் ஏற்படும் எனக் கூறியுள்ளார். மேலும் நாட்டில் தொழில் புரிவோர் மன அழுத்தம் காரணமாக பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். இருந்தபோதிலும் அதை கட்டுப்படுத்தி தங்களது தொழிலை சிறப்பாக மேற்கொள்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். மன அழுத்தத்தினை தெளிவுபடுத்தி அதனை கட்டுப்படுத்த உதவுவதே இவ் ஆய்வின் பிரச்சனையாகக் காணப்படுகின்றது. மேலும் யாழ் பல்கலைக்கழகச் சிற்றூழியர்களின் மத்தியில் நிலவும் மன அழுத்தத்தினை ஆராய்தலே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களில் 60 சிற்றூழியர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப் பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல் அடிப்படையாகக் கொண்ட வினா கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டது. ஆய்வு ஒழுக்கவியலானது ஆய்வின் அனைத்து கட்டங்களிலும் முறையாக பின்பற்றப்பட்டது. வினாக்கொத்து மூலம் கணியம் சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளி விபரவியல் மென்பொறி* (SPSS Version 21 ) *ஊடாக விபரணப் புள்ளி விவரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. [illegible]டய ஆய்வு முறைகள், நேர்காணல் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்க பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இவ் ஆய்வில் மன அழுத்தம் என்றால் என்ன, அதன் வகைகள், தொழில்சார் மன அழுத்தம் பற்றி அறிமுகம், மன அழுத்தம் எதனால் ஏற்படுகின்றது, அதனை கட்டுப்படுத்துவது எப்படி? மன அழுத்தத்தின் குணம் குறிகள், அதனை ஏற்படுத்தும் காரணிகள், மன அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்கான நுட்ப முறைகள் போன்றவைகளும் காணப்படுகின்றன. மேலும் எதிர்காலத்தில் தொழில் சார் மன அழுத்தம் பற்றி ஆய்வினை மேற்கொள்வர்களுக்கு இவ் ஆய்வு ஒரு வழிகாட்டியாக அமைகின்றது.*

**திறவுச் சொற்கள் :** சிற்றூழியர் , மன அழுத்தம் , உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Panel of Reviewers

Snr. Professor K. Visakaruban : Department of Tamil
Professor. K. Arunthavarajah : Department of History
Professor K. T. Ganeshalingam : Department of Political Science
Professor. S. Krishnarajah : Professor (History)
Rev. Professor J. C. Paul Rohan : Department of Christian & Islamic Civilization
Professor (Ms). S.Sivasubramaniyam: Department of Tamil
Professor. K. Suthakar : Department of Geography

Dr. A. Antony Rajan : Department of Geography
Dr. K. Kajavinthan : Department of Philosophy
Dr. T. Karunakaran : Department of ELT
Dr. Mrs. K. Karunaanithy : Department of Economics
Dr. S. Muhunthan : Department of Hindu Civilization
Dr. K. Navadharshani : Department of Drama & Theater Arts
Dr. N. Piratheeparajah : Department of Geography
Dr. P. Pushparatnam : Retd. Professor (History)
Dr. K. Rathitharan : Department of Drama & Theater Arts
Dr. R. Sanjayan : Department of Law
Dr. P chanthirasegaram : Department of Saiva siththantham
Dr. T. Selvamanoharan : Department of Saiva Siththantham
Dr. K. Shanmuganathan : Department of ELT
Dr. Mrs. S. Srimuralitharan : Department of Hindu Civilization
Dr. S. Srikanthan : Department of Sociology
Dr. V. Suntharesan : Retd.. Professor (DELT)
Dr. Mrs. S. Uthayarajah : Department of Geography

Rev. Fr. Antonine Jeevendra Paul : O.M.I
Rev. Fr. M. V. Ravichandran : Department of Christian & Islamic Civilization

Mrs. S. Arulanantham : Department of History
Mrs. M. Bakeerathan : Department of ELT
Mr. N. Baskaran : Department of Sociology
Mr. E. Cumaran : Department of Tamil
Mrs. Kosalai Mathan : Department of Law
Ms. K. Navakulan : Department of Linguistics
Ms. N. Neruja : Department of Economics
Mr. S. Nirosan : Department of Philosophy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Mrs. S. Poongulaly | : Department of Media Studies |
| Mr. K.L. Ramanan | : Department of ELT |
| Mr. S. Ramanarajah | : Department of Hindu Civilization |
| Mrs. A. Rajkumar | : Department of Philosophy |
| Ms. Sivapiriya Sriram | : Department of Languages and Communication Studies, Trincomalee Campus. |
| Mrs. S .Sajitharan | : Department of History |
| Mrs. M. Sivakaran | : Department of Philosophy |
| Mr. T. Thileepan | : Department of Philosophy |
| Mrs. P. Vipulan | : Department of Geography |

**Action Committee Members Appointed by the Dean/ Faculty of Arts**

Mrs.C.A.Hensman
Mrs.T.Kirushanthan
Mrs.L.Riophilla
Mrs.T.Gorden
Mrs.A.Sasikaran
Mr.R.Thanushan
Mrs.A.Thanushan
Mr.T.Ajanthakumar
Mrs.J.Gugathasan
Ms.H.S.Samaradiwakara
Ms.P.Ramanadhan
Ms.P.Kulasingam
Mrs.S.Senthooran


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 Years of Academic Pursuits

1974 - 2024

University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org